# பிள்ளையார் புராணம்



மணிமேகலைப் பிரசுரம்

ஆ. நடராசா
சுன்னாகம்,

௩

ஆ. நடராசா
பண்ணாகம்

# பிள்ளையார் புராணம்

ஆக்கியோர் :

மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர் :

லேனா தமிழ்வாணன், எம்.ஏ.

POOBALASINGHAM BOOK DEPOT
340, SEA STREET,
COLOMBO-11

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண்: 1447
4, தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை-600 017
போன்: 442926
ஃபேக்ஸ்: 044-446082

முதல் பதிப்பு : 1984

இரண்டாம் பதிப்பு: 1994

விலை : ரூ. 36-00

ரூபாய் முப்பத்து ஆறு

அச்சமைப்பு:
வைகை அச்சகம்
30 பத்மநாபநகர்
சூளைமேடு சென்னை 94

## விற்பனையாகின்றன!

### புராணங்கள்—Mythology

| | |
|---|---|
| சிவ புராணம் | 25.00 |
| விஷ்ணு புராணம் | 27.00 |
| சூரிய புராணம் | 10.00 |
| கந்த புராணம் | 65.00 |
| அனுமார் புராணம் | 21.00 |
| நாரதர் புராணம் | 18.50 |
| திருவிளையாடற் புராணம் | 35.00 |
| மார்க்கண்டேயர் அருளிய புராணம் | 14.00 |
| தேவி பாகவதம் | 18.00 |
| ஐயப்பன் புராணமும் பாடல்களும் | 22.00 |
| பரந்தாமனின் பத்து அவதாரங்கள் | 30.00 |
| மகாபாரதம்—பாகம் I | 31.00 |
| பாகம் II | 42.00 |
| மகாபாரத உபதேசக் கதைகள் | 9.00 |
| மகாபாரதச் சிறுகதைகள் | 13.00 |
| புராணச் சிறுகதைகள் | 12.00 |
| திருப்பதி வெங்கடாசலபதியின் வரலாறும் வழிபாட்டு முறைகளும் | 10.00 |

### பக்தி—Spiritual

| | |
|---|---|
| பக்த விஜயம் | 11.50 |
| கீதை காட்டும் பாதை | 23.00 |
| காஞ்சிப் பெரியவர்களின் வரலாறு | 11.00 |
| சந்தியாவந்தனம் செய்வது எப்படி? | 7.00 |
| ஸ்ரீ ராகவேந்திரரின் வரலாறும் மகத்துவமும் | 15.50 |
| அறுபத்துமூவரும் பன்னிரு ஆழ்வாரும் | 29.50 |
| அஷ்டலட்சுமிகள் வரலாறும் வழிபாடும் | 17.00 |
| தெய்வ நம்பிக்கையும் தெளிவுமிக்க வாழ்க்கையும் | 8.00 |
| இந்துப் பண்டிகைகளின் வரலாறும் வழிபாட்டு முறைகளும் | 7.00 |
| ஆன்மிகச் செல்வர்கள் வாழ்வில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகள் | 11.75 |
| எந்தக் காரியம் வெற்றி பெற எந்தக் கடவுளை எப்படி வணங்க வேண்டும்? | 23.00 |

# இதர நூல்கள்!

## பக்திப் பாடல்கள்

| | |
|---|---|
| பக்தி பஜனைப் பாடல்கள் | 25.00 |
| ஸ்தோத்திரக் களஞ்சியம் | 14.50 |
| ஸ்தோத்திர மாலை | 13.00 |
| அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் மாலை | 11.50 |
| தாயுமானவர் பாடல்கள் | 15.00 |
| திருமுறை திவ்யப் பிரபந்தத் திரட்டு | 9.50 |
| கல்ப பூஜை அர்ச்சனைகள் | 20.00 |
| இராமலிங்க சுவாமிகளின் திருவருட்பா | 31.00 |
| திருப்பாவை, திருவெம்பாவை —மூலமும் தெளிவுரையும் | 10.00 |
| அபிராமி அந்தாதி - மூலமும் உரையும் | 7.00 |
| சக்தி வாய்ந்த சண்முகக் கவசம் | 10.00 |
| சௌந்தர்ய லஹரி, கனகதாரா ஸ்தோத்திரம் —மூலமும் தெளிவுரையும் | 17.00 |
| ஆதிசங்கரர் அருளிய சுப்ரமண்ய புஜங்கம் | 6.00 |
| துன்பம் தீர்க்கும் துதிப் பாடல்கள் | 12.00 |
| திருவாசகம் | 25.00 |

## இசை—Music

| | |
|---|---|
| இராக, தாள வகைகளைத் தெரிந்து கொள்ளுங்கள் | 25.00 |
| கர்நாடக இசையை முறைப்படி பாடக் கற்றுக் கொள்ளுங்கள் | 20.00 |
| தமிழிசைக்குத் தரமான பாடல்கள் | 19.00 |
| புகழ்பெற்ற கீர்த்தனைகள் | 16.00 |
| தமிழ் மும்மணிகளின் கீர்த்தனைகள் | 8.50 |
| வில்லுப்பாட்டின் கதை | 8.00 |
| இசைத் துணைவன் (அரசுத் தேர்வு விதிமுறை திட்டத்திற்கேற்ப எழுதப்பட்டது) | 18.00 |
| 1500 இராகங்களின் ஆரோகணம், அவரோகணங்கள் | 16.00 |
| குரல் வளம் பெறுங்கள் | 9.50 |
| 100 இராகங்களுக்கான எளிய ஆலாபனை | 21.00 |

## இசைக் கலைஞர்கள்—Musicians

| | |
|---|---|
| உலகப் புகழ்பெற்ற பாப் பாடகர்கள் | 21.50 |
| தென்னிந்திய இசைக் கலைஞர்கள் | 15.00 |
| இசைஞானி இளையராஜா | 18.00 |
| சங்கீத சாகரம் யேசுதாஸ் | 15.00 |

உ

# பிள்ளையார் புராணமும் பிள்ளையார் சுழியும்

எதை எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழியை (உ)ப் போட்டுவிட்ட பிறகுதான் எழுதத் தொடங்க வேண்டும். எந்தச் செயலைச் செய்வத் தொடங்கினாலும் பிள்ளையாரை நினைத்து, வணங்கி, வழிபட்டு வேண்டிக் கொண்ட பிறகுதான் அந்தச் செய லையும் செய்யவேண்டும் என்பன நம்மவர் நம்பிக்கை. எந்தத் தெய்வத்தைப் பூசை செய்ய விரும்பினாலும் முதலில் பிள்ளையாரைப் பூஜித்த பிறகே மற்ற தெய் வங்களைப் பூஜிக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் தான் எந்தக் காரியத்தையும் குறைகள், தடைகள், தாமதங்கள் இன்றி விரைவாகப் பூர்த்தி செய்ய முடியும் என்பதும் நம் மக்களிடையே நிலவி வரும் நம்பிக்கை ஆகும்.

பிள்ளையார் இந்து சமயத்தவர்க்குப் பொது வானவர். சைவ சமயச் சார்புடைய அவரை, வைணவ சமயத்தினரும் தங்களது வைணவத் திருக்கோயில் களிலும் எழுந்தருளச் செய்து, வழிபட்டு வருகின் றார்கள். ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்கநாதர் ஆலயத்திலும் காஞ்சிபுரம் பெருமாள் கோயிலிலும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலிலும் அவருடைய விக்கிரகங்கள் அமைக்கப் பெற்று, வைணவர்கள் விநாயகப் பெருமானை "தும்பிக்கை ஆழ்வான்" என்று பெயரிட்டு வணங்கி வழிபட்டு வருகின்றனர்.

## பிரம்ம தேவன் காட்டிய நைமிசாரண்யம்

உலகங்களையும் உயிரினங்களையும் படைத்த பிரம்ம தேவனின் உறைவிடமாக விளங்குவது- சத்திய

லோகம். அந்த உலகம், கோடி சூரிய ஒளிமயமாகத் திகழ்வதாகும். அங்கு முன்பு ஒருநாள் தேவாதி தேவர்களும் அருந்தவ முனிவர்களும் புடைசூழ, பொன்னொளி வீசும் மண்டபத்தின் முகப்பில், நவ ரத்தின மணிமயமான ஆசனத்தில் கலைமகளோடு பிரம்ம தேவன் மகிழ்ச்சியாக அமர்ந்திருந்தார்.

அப்போது, முனிவர்கள் அனைவரும் ஒன்றுகூடி சத்தியலோகத்திற்கு வந்து பிரம்ம தேவனை வணங்கி பின்வருமாறு விண்ணப்பஞ் செய்தனர்.

"தேவ மூர்த்தியே! நாங்கள் இத்தனைக் காலமாக இல்லறத்தில் ஈடுபட்டு வந்தோம். இனி நாங்கள் இல்லற வாழ்க்கையையும் மற்றுமுள்ள பந்தபாசங் களையும் துறந்து, இறையருளில் திளைத்து, அருந் தவங்கள் புரிந்து, முக்தியை அடைய விரும்புகிறோம். எங்கள் விருப்பம் நிறைவேறத்தக்க வகையில், அமை தியாக நாங்கள் தவஞ்செய்யத் தகுந்த அருமையான தொரு இடத்தைத் தாங்கள் மனமுவந்து வகுத்துத் தரவேண்டும்."

அவர்களின் விண்ணப்பத்தைக் கேட்ட நான்முகன் மனம் கனிந்து ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்து அதை ஒரு வட்டிலாக்கி, நிலத்தின் மீது உருட்டிவிட்டார். பிறகு அவர், முனிவர்களை நோக்கி "முனிவர்களே! இதோ உருண்டு செல்லும் இந்தத் தர்ப்பைப் புல்லை நீங்கள் பின் தொடர்ந்து செல்லுங்கள். இது எந்த இடத்தில், மேலே செல்லாமல் நின்றுவிடுகிறதோ அந்த இடம்தான் நீங்கள் தவஞ்செய்வதற்குச் சிறந்த இடமாகும். அத்தகைய தூய்மையான புனிதத் தலத்தில் நீங்கள் தங்கியிருந்து தவங்களைச் செய்து முக்தியை அடைவீர்களாக!" என்றார்.

தவ முனிவர்கள், பிரம்மதேவனை வணங்கி விடை பெற்று உருண்டு ஓடிச்செல்லும் வட்ட வடிவமான

அந்தத் தர்ப்பையின் பின்னாலேயே தொடர்ந்து சென்றார்கள். ஒரு குறிப்பிட்ட தூரம் வரையில் சென்றதும் அந்தத் தர்ப்பைச் சக்கரம் அதற்கு மேல் செல்லாமல் அங்கேயே நின்றுவிட்டது. அந்தத் தர்ப்பைச் சக்கரம் நின்ற இடத்திலேயே முனிவர்கள் அனைவரும் தங்கியிருந்து முறை பிறழாமல் தவஞ் செய்து வந்தார்கள். தர்ப்பைப் புல்லுக்கு 'நேமி' என்ற மற்றொரு பெயருண்டு. தர்ப்பை நேமியாகக் குறிப்பிடப்பட்டதாகையால் அந்த இடத்திற்கு நைமிசாரண்யம் என்ற பெயர் உண்டாயிற்று.

அந்த வனத்தில், அந்தணர்கள் * முத்தீ வளர்த்து நான்கு வேதங்களையும் ஓதினர். ஐம்புலன்களையும் அடக்கி ஆறு தொழில்களையும் புரிந்து, ஏழு வகைப் பிறவிகளையும் நீத்து எண்வகை யோகங்களில் அமர்ந்திருந்தார்கள். முனிவர் கூட்டங்களில் சடைமுடி தரித்து, புலித்தோல் உடுத்தி, உத்திராட்ச மாலையணிந்து, யோகத்தில் ஆழ்ந்திருந்தார்கள். வேத அத்தியயனம் செய்யும் முனிவர்களும் ஆகம நெறிகளை ஆராய்கின்ற ஆன்றோர்களும் ஒரு நியமத்தைக் கடைபிடித்து அதன் வழி நிற்பவர்களும் வேள்விகளைச் செய்து முடிப்பவர்களுமாகிய அந்த நைமிசாரண்யத் தலமெங்கும் நிறைந்திருந்தனர்.

அந்த நைமிசாரண்ய வனத்தில், சவுனக முனிவர் என்பவர் சந்திர வேள்வி என்ற மாபெரும் யாகம் ஒன்றைச் செய்யத் தொடங்கினார். யாகத்தைக் காண்பதற்காகத் திருநீறு பூசிய திருமேனியர்களும், உருத்திராட்ச மாலையணிந்த மாமுனிவர்களும், கமண்டலம் ஏந்தியவர்களும் மேலும் எண்ணற்ற முனிவர்களும் அங்கு வந்து கூடியிருந்தனர். அவர்களில் ஒருவராக சூதமாமுனிவர் என்பவரும் அங்குவந்து சேர்ந்தார். அவர் பதினெண் புராணங்களையும் நன்றாகக் கற்றுணர்ந்தவர். காலனைக் காலால் உதைத்த பரமதேவனின் திருவடிகளையன்றி வேறு எந்தக் கடவுளை

யும் மதியாதவர் அவரைக் கண்டதும் மற்ற முனி வர்கள் அனைவரும் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். சூதமாமுனிவரை வணங்கி அவர் அமர்வதற்குத் தக்க ஆசனத்தை அமைத்தனர். அதன்மீது அமரச்செய்து பலவிதமான உபசாரங்களைச் செய்து, பூஜித்து மந்தி ரத்துடன் மலர்களால் வழிபட்டனர். அமுதளித்து இளைப்பாறச் செய்தார்கள். பிறகு, முனிவர்கள் அனை வரும் சூதமாமுனிவரை நோக்கி, "சுவாமி! மாபெரும் தவமுனிவர்களாலும் போற்றிப் புகழத்தக்க தங்களை நாங்கள் இவ்விடத்தில் தரிசிக்கப் பெற்றதே, நாங்கள் செய்த • நற்பாக்கியமாகும். இந்தத் தரிசனச் சிறப்பால், எங்களுக்குக் கிடைத்திருக்கிற நன்மைகள் பல தொன்றுதொட்டு எங்களைப் பிழிந்து வாட்டிவரும் மாயை அகன்று போய்விட்டது! வேதங்களை ஓதுவதால் ஏற்படுகின்ற பயன்களையெல்லாம் நாங்கள் அடைந்து விட்டோம். எங்கள் பிதிர்களும் ஜீவன் முக்தர்கள் ஆகி விட்டார்கள். பெருந்துன்பங்களை ஊட்டுகிற உடல் வாதனையும் இன்றோடு நீங்கிவிட்டது. சுவாமி! தாங்கள் முன்பு ஒருசமயம் எங்களுக்கெல்லாம் பதி னெண் புராணங்களையும் கூறியருளினீர்கள். இப்போது சவுனக முனிவர் செய்யத் தொடங்கியிருக்கும் இந்த வேள்வி முடிவதற்குப் பன்னிரண்டு ஆண்டுகள் செல்லும். ஆகையால் அதுவரையில் தங்களிடமிருந்து புராணக் கதை அமுதங்களைக் கேட்க அகமிக மகிழ்ந்து, நற் பயனையும் அடைய விரும்புகிறோம். ஆகவே, அத் தகையதொரு புராணத்தை எங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுகிறோம் என்று மிகவும் பக்தியுடன் வேண்டினர்.

சூதமாமுனிவர் புன்னகையுடன் "உன்னதமான தவ முனிவர்களே! விதைகளை விதைக்காமல் அவற்றின் பலன் களை அறுவடை செய்ய முடியாது. அதுபோல வித்துக்கு வித்தான சிவபெருமானை மனதில் விதைத்துத் துதிக் காதவர்கள் எவருமே நல்வினைகளை அடையமாட்டார் கள். நீங்களோ நடுநிலை பிறழாத நல்லறிவுடையவர்கள்.

கொடிய செயல்கள் எதையுமே செய்யாதவர்கள். நாளுக்கு நாள் கொழுந்து விட்டு ஒளிரும் சிவபக்தியைக் கொண்டவர்கள். அந்தச் சிவபக்தியினால்தான், எந்தக் காலத்திலும் மாற்றமடையாத மனவுறுதியையும் நீங்கள் அடைந்திருக்கிறீர்கள். அத்தகைய நீங்களே என்னிடம் ஒன்றை விரும்பிக் கேட்கிறீர்கள். உங்களுடைய அந்தக் கோரிக்கையை நான் குறைவின்றி நிறைவேற்றிவைக்கவேண்டும். நீங்கள் நல்ல ஒழுக்கங்களுடன், நல்ல புத்தி கூர்மையையும் கொண்டவர்கள். நல்ல தவம் செய்து உமையொருபாகனான சிவபெருமானிடம் பக்தி என்ற கப்பலில் ஏறியிருக்கிறீர்கள். அந்தக் கப்பலின் உதவியால் புராணம் என்ற கடலினை உற்சாகமாகக் கடந்து செல்லாமலிருப்பீர்களா? சொந்தம் என்றும், பகைமை என்றும் பாராமல், விருப்பு வெறுப்பு ஏதுமின்றி, எந்த உயிர்களிடத்தும் கருணை கொள்ளும் தூய்மையான உள்ளம் படைத்த நீங்கள் ஒரு காரியத்தை விரும்புவீர்களானால், அது நிறைவேறி நற்பயன்களையே எல்லோருக்கும் தரும். சிவபெருமானின் பக்தி ரசத்திலேயே ஊறித் திளைத்துப் போயிருக்கும் என்னிடத்தில் நல்லதொரு விஷயத்தை மதித்துக் கேட்டீர்கள். புண்ணிய பயன்களையே சொல்ல விரும்பும் எனக்கு மீண்டும் மீண்டும் அந்த விருப்பமே அதிகரிக்கச் செய்யத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள். உங்கள் விருப்பம் முழுமையாக நிறைவேறத்தக்க ஒரு புராணம் இருக்கிறது. அந்தப் புராணம் பிறந்த வரலாற்றை சொல்கிறேன் கேளுங்கள்! என்று சூதமாமுனிவர் கூறத் தொடங்கினார்.

## புராணம் பிறந்த வரலாறு

முக்கியமான புராணங்கள் பதினெட்டாகும். அவை; பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிடியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமைமகை

வர்த்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், காருடம், பிரம்மாண்டம்.

இந்தப் பதினெண் புராணங்களையும் நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பதினெண் புராணங்களையும் ஆதியில், கைலாயபதியான சிவபெருமான் நந்திதேவருக்குச்சொல்லியருளினார். நந்திதேவர் அவற்றை சனற்குமார முனிவருக்கு உபதேசித்தார். அந்த முனிவரிடமிருந்து வியாச முனிவர் அந்தப் புராணங்களைக் கேட்டு இந்த உலகமெங்கிலும் அவற்றைப் பரவச் செய்தார். அதைப் போலவே, வெவ்வேறு பரம்பரை வழியாக உபதேசம் பெற்ற இன்னும் சில முனிவர்களும் அந்த மஹாபுராணங்களுக்கு உப புராணங்களாக மேலும் பதினெண் புராணங்களை இயற்றினார்கள். அவை சனற்குமார புராணம், சசிவதர்ம புராணம், துருவாச புராணம், நாரத புராணம், கபில புராணம், அவுசன புராணம், சௌமிய புராணம், வருண புராணம், காளி புராணம், வாசிட்டமிலிங்க புராணம், மானவ புராணம், சௌர புராணம், சாம்பேச புராணம், பார்க்கவ புராணம் என்று வழங்கப் பெறுகின்றன. இந்தப் பதினெண் உப புராணங்களில் பார்க்கவ புராணமே முதன்மையானதாகத் திகழ்கிறது.

இந்தப் பார்க்கவ புராணத்துப் பிரணவப் பொருளாகவும் பேதாபேதப் பொருளாகவும் அப் பிரணவத்தினின்று வேறுபட்ட பேதப் பொருளாகவும், அவை அனைத்தையும் கடந்து நிற்கும் ஏக தத்துவப் பொருளாகவும், பிரம்மானந்த ரூபமாகவும் விளங்கும் விநாயகப் பெருமானின் மகிமையை விளக்கிக் காட்டியிருப்பதால் இதை விநாயக புராணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் புராணம் விநாயகரைப் பற்றிய புராணம் என்றாலும் விநாயகரை நாம் "பிள்ளையார்" என்றும் வழங்கிறோம். இந்தப் புராணத்தை "பிள்ளையார் புராணம்" என்றும் வழங்கலாம்.

முன்பு ஒரு காலத்தில் பிரம்மதேவர் அநேக தவங்களைச் செய்து, அந்த தவ முயற்சியினால், கைலாயத்திலுள்ள முக்கண் பெருமானிடத்து பிள்ளையார் புராணத்தை உபதேசமாகக் கேட்டார். பிறகு பிரம்மதேவர், தம்மை அன்போடு பூசித்த வியாச முனிவருக்கு இந்தப் புராணத் தைக் கூறினார்.

பிறகு வியாச முனிவர் வாயிலாக பிருகு முனிவர் இந்தப் புராணத்தைக் கேட்டு அகமகிழ்ந்து தேவாமிர்தத் தைப் போன்ற இந்தப் புராணத்தை எல்லோரும் பயன் படுத்துவதற்காக, இதனை உபாசனா காண்டம், லீலா காண்டம் என்று இரு காண்டங்களாகப் பிரித்து இரு நூற்று ஐம்பது அத்தியாயங்களாக்கிப் பன்னீராயிரம் சுலோகங்களாய் இந்தப் புராணத்தைப் பாடி முடித்து ஒரு புராணமாக்கினார். இந்தப் புராணம் பிருகு முனிவரால் இயற்றப்பட்டதால் அந்தப் புரா்ண கர்த்தாவின் பெயரைக் கொண்டே இது பார்க்கவ புராணம் என்று வழங்கப் பெறுகிறது.

இந்தப் புராணத்தின் கதாநாயகர் விக்னேஸ்வரப் பெருமானாகிய கணேச மூர்த்தியாவார். இதனைக் காணபத்திய மகிமையென்று யாவரும் பின்பற்றி பெறு தற்கரிய பேறுகளையெல்லாம் அடைகிறார்கள்.

சவுனகர் முதலிய முனிவர்களே! பார்க்கவ புராணம் என்ற "பிள்ளையார் புராணம்" பிறந்த வரலாறு இதுவே யாகும். தேவர்கள் முதலிய அளவற்ற ஆன்ம கோடிகள் விநாயகப் பெருமானைப் பலவாறாகப் பூசித்து வழிபட் டார்கள். அத்தகைய பக்திக்கு கணேசர் மனமிரங்கி கருணையோடு அற்புதக் காட்சிகளைக் காட்டி அவர்கள் விரும்பிய வரங்களையெல்லாம் தந்து மனம் மகிழ்வித் தார். அத்தகையவர்களின் சரிதங்களே இந்தப் புராணத்

தில் நிறைந்திருப்பதால் இந்தப் புராணத்தை விரும்பிப் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் சித்தி விநாயகரின் திருவருளால் சித்திக்கும்!

## உபாசனா காண்டம்

சிவநேச செல்வர்களே! ஞான முனிவர்களே! பூவுலகில், சௌராஷ்டிரம் என்னும் வளமான நாடு ஒன்றுண்டு. அந்த நாடு, நீர் வளமும் வயல் வளமும் குடி வளமும் நிறைந்து எல்லாச் செல்வங்களுக்கும் உறைவிட மாக விளங்கிவந்தது. அந்த நாட்டிலே தேவ நகரம் என்ற பட்டினம் ஒன்று உண்டு. அங்கே கோட்டைகளும் கொத் தளங்களும் புதுமையான மாட மாளிகைகளும் கூடகோபு ரங்களும் நந்தவனங்களும் நாலாவிதமான மண்டபங் களும மலர்த் தடாகங்களும் நிறைந்து விளங்கின. அந்த நாட்டைச் சோமகாந்தன் என்ற மாமன்னன் நீதி வழுவாமல் ஆட்சி செலுத்தி வந்தான். அவன் கருணையில் பெருங்கடல்; பொறுமையில் பூமி; அறிவில் பிருகஸ்பதி; புகழில் சூரிய சந்திரன்; அழகில் மன்மதன்; செல்வத்தில் குபேரன்; கலையாற்றல்களில் ஆதிசேடன்; வள்ளல் தன்மையில் வானத்து கார்மேகம்; வீணா கானத்தில் விண்ணவர்களையும் மிஞ்சியவன்.

அவன் நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்து நடுநிலை பிறழாமல் அரசியல் துறையில் உலக மன்னர் களையும் அடக்கி ஆளும் வல்லமையுடன் தன்னிகரற்று விளங்கி வந்தான். அவனுடைய மந்திரிகள் ஐவரும் ஐம்புலன்களைப் போல இயங்கி வந்தார்கள். அவனிடம் ஆறாயிரம் தேர்களும், பதினாயிரம் யானைகளும், இருபதினாயிரம் குதிரைகளும், எண்ணற்ற காலாட் படைகளும் இருந்தன. இவற்றுக்கும் மேலாக கற்பில்

அருந்ததியையும் அழகில் இரதி, ரம்பை, இலக்குமி முதலானவர்களையும் மிஞ்சத்தக்க வகையில் சுதன்மை என்ற மனைவியொருத்தி அவனுக்கு வாய்த்திருந்தாள்.

அவள் வயிற்றில் ஏமகண்டன் என்னும் குமாரன் ஒருவன் பிறந்தான். அவன் பதினாயிரம் யானைகளுக் குரிய பலத்தைப் பெற்றவன். பகைவரைப் பயமுறுத்தும் பலசாலியாக விளங்கி வந்தான்.

சகலவிதமான செல்வங்களோடும் புகழோடும் சோம காந்தன் அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிந்து வரும் காலத்தில், அவன் செய்த தீவினைகளின் விளைவாக அவனது உடம்பெங்கும் 'குட்டம்' என்ற தொழுநோயால் பாதிக்கப்பட்டு மிகவும் வருந்தி வந்தான். எத்தகைய மணிமந்திர மருந்துகளாலும் அந்தக் கர்ம வியாதி குணமடையவில்லை.

ஒரு நாள், அந்த வியாதியின் வேதனையைப் பொறுக்க முடியாமல் சோமகாந்தன் பெரிதும் மனமுடைந்துபோய் தன் அரசவையை அடைந்து, தனது மந்திரிகளையெல் லாம் அவசர அவசரமாக அழைத்துவரச் சொல்லி ஏவலாளர்களுக்குக் கட்டளையிட்டான். சிறிது நேரத்திற் கெல்லாம் மந்திரிகள் சபா மண்டபத்திற்கு வந்து மன்னனை வாழ்த்தி வணங்கிவிட்டு தத்தமது இருக்கை யில் அமர்ந்தார்கள்.

சோமகாந்த மாமன்னன், அவர்களை நோக்கி பெரும் துக்கத்தோடும் வேதனையோடும் கூறலானான்.

"அரச பக்தியிலும் பற்றிலும் சிறந்த அமைச்சர்களே! நான் இதுவரை அரசாண்டு வந்த காலத்தில் என்னை எதிர்த்துப் போர் தொடுக்க வந்த பகைவர்களையெல்லாம் வென்று நீதி நெறி சிறிதும் பிறழாமல் அரசியலை நடத்தி வந்தேன். உற்றார் உறவினர்களுக்கெல்லாம் நன்மை

களைச் செய்தேன். பிரயாணிகள் மகிழ்ச்சியடைவதற்காக நாடெங்கும் நெடுஞ்சாலைகளையும், வழியிலே இளைப்பாறி இன்புறத்தக்க இடங்களையும் அமைத்தேன். இத்தகைய அளவற்ற அறப்பணிகள் பலவும் செய்தேன். ஆனாலும் என் உடலில் பரவி, என் உள்ளத்தையெல்லாம் அணு அணுவாக வருத்தித் துன்புறுத்தும் இந்தத் தொழு நோயைப் போக்கும் வழியை அறியாமல் நான் தத்தளிக்கிறேன். இந்தக் கொடிய நோயால் என் உருவம் சிறிது சிறிதாக நலிவிக்கப்பட்டு என் உடலே அழகற்றுவிட்டது. முன்பெல்லாம் எனது உடல் சந்திரனின் ஒளியைப் போல அழகாகவும் கண்களுக்குக் குளுமையாகவும் இருந்த காரணத்தால்தான் நான் சோமகாந்தன் (சந்திரகாந்தன்) என்று அழைக்கப் பெற்றேன். இப்போதோ என்னுடைய அதே உடல் விகாரமாகி இருண்ட தோற்றத்தைஅடைந்து விட்டது. இனி இதிலிருந்து விடுபடும் எண்ணம் கொள்ளாமல் இந்த நோயின் கொடிய துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நான், இனியேனும் என் உயிரை வன்முறையாகவேனும் விட்டுவிடவேண்டும். பெண்ணின்பத்தை அளவு கடந்து நுகர்ந்த நான், தேவேந்திரனுக்குச் சமமாக இன்புற்று வாழ்ந்து வந்தேன். முன்பு அரச போகத்தின் கேளிக்கைகளிலே ஊறித் திளைத்து மகிழ்ந்து வந்த நான், இப்போது என் உடலின் வனப்பு எல்லாம் மங்கியொழிய நேரிட்டது. அருவருக்கத்தக்க எனது தோற்றத்தைக் கண்டு நானே வெட்கித் தலை குனிகிறேன். இனிமேலும் நான் அரசனாய் வாழவோ, அரசுப் பொறுப்பை ஏற்று நடத்தவோ விரும்பவில்லை! முடியைத் துறந்து, துறவறம் ஏற்று வனவாசம் புரிவதுதான் நல்லது. எனது ஒரே மகன் ஏமகண்டனுக்கு முடிசூட்டி விட்டுக் கானகத்துக்குப் போய்விட வேண்டும் என்று நான் முடிவுசெய்துவிட்டேன். அமைச்சர்களே! என் மகன் ஏமகண்டன் என்னைவிடச் சிறந்தவன். அவனுக்கு நீங்கள் அரசுப் பொறுப்புகளிலும் அரசியலிலும் உற்ற

துணையாக இருந்து, என்னிலும் அவனை மதித்து சிறப்பளிக்க வேண்டும்" என்று கூறினான்.

சோமகாந்த மன்னன் இவ்வாறு கூறியதும் அமைச்சர் களும் மற்றவர்களும் மிகவும் மன வருத்தமடைந்தார்கள். அப்போது அரசன் தன் உள்ளத்தில் உண்டாகிய துக்கத் தினாலும் உடலில் உண்டான வியாதியாலும் சோர்வுற்று அப்படியே மூர்ச்சியாகி மயங்கிக் கீழே விழுந்தான். அதைக் கண்டு அவையிலிருந்தோரும் அமைச்சர்களும் திடுக் கிட்டுத் துயரமடைந்து, அரசனருகில் வந்து புலம் பினார்கள். வேந்தனின் செவிகளில் சங்கு வைத்து ஊதி குளிர்ந்த சந்தனத்தை அவனுடல் மீது பூசி, சிகிச்சை களும் உபச்சாரங்களும் செய்தனர். அதனால் அரசன் சோமகாந்தன் மூர்ச்சை தெளிந்து மெல்ல எழுந்து அமர்ந்தான். அவனது மனம் இடைவிடாமல் சிவபெரு மானின் திருவடிகளையே தியானித்துக் கொண்டிருந்தது.

அப்போது அமைச்சர்கள் அரசனை வணங்கி "மன்னர் பெருமானே! இது நாள்வரை எங்களையெல்லாம் தாய் தந்தையைவிட மிக அன்போடும் பரிவோடும் பாதுகாத்து வந்த தங்களுக்கு இத்தகைய தொழுநோய் கண்டதுன்பத் தினால் துறவறம் பூண்டு வனவாசம் செய்யவேண்டும் என்று சொல்கிறீர்கள்; உங்களை மட்டும் அங்கே அனுப்பி விட்டு நாங்கள் இங்கேயே எங்கள் வீடுகளில் இன்பத் துடன் வாழ்வது அறமாகுமா? அவ்வாறு வாழ எங்களால் தான் முடியுமா? தங்கள் குமாரர் ஏமகண்டரே அறம், பொருள் என்ற இரண்டையும் சம்பாதித்தும் பூவுல கத்தின் எட்டுத் திசைகளிலும் தமது செங்கோலைச் செலுத்தி, நீதி தவறாமல் ஆட்சி செய்யும் ஆற்றல் மிகுந்தவர். அவர் செய்யும் அரசாட்சிக்கு மற்றவர்களின் துணை அவசியமே இல்லை. அதனால் நாங்களும் மன்னர் பெருமானோடு துறவற வனத்துக்கு வருவது என்று தீர்மானஞ் செய்துவிட்டோம். இனி உங்கள்

திருமகனுக்கு பட்டஞ் சூட்டி, அரசுப் பொறுப்பையும் அதிகாரத்தையும் அவரிடத்தில் ஒப்படைத்துவிடுங்கள்!'' என்று மனமுருக விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

இந்தச் செய்திகளையெல்லாம் அந்தப்புரத்திலிருந்த அரசனின் மனைவியான சுதன்மை அறிந்தாள். உடனே, அவள் மனம்பொறாமல், சரேலென எழுந்து ஓடோடி அரசவைக்கு வந்து, தன் கணவனை வணங்கி "என்னுயிர்க் கணவரே! பகைவரையெல்லாம் பணியவைக்கும் ஆற்றல் வாய்ந்தவரே! இப்போது நீங்கள் என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள். என்னை விட்டு விட்டுத் தாங்கள் மட்டுமே தனியாக வனம் போவதா! ஈருடலும் ஓருயிரும் போல வாழ்ந்து வந்த நாம் இப்போது உங்களைப் பிரிந்தால் நான் உயிர் தரிப்பேனா? இதுவரை நான் உங்களுக்குச் செய்து வந்த பணிவிடைகளில் ஏதேனும் குற்றம் இழைத்தேனா? அப்படியிருந்தால் அதை எடுத்துச் சொல்லி என்னைத் திருத்த முயலுங்கள். என்னைத் தனிமையில் விட்டுச் செல்ல ஒரு போதும் நினைக்காதீர்கள். மணாளனோடு மனம் ஒருமித்த மனைவியருக்கு தங்கள் கணவரின் அருகிலேயே இருந்து பணிவிடைகள் புரிவதிலும் அவரது மனங்கோணாமல் நடந்து கொள்வதிலும் தான் சொர்க்கமும் நற்பாக்கியங்களும் அடங்கியிருக்கின்றன. அது அரசன் மனையாயினும் வனமாயினும் எங்கேயிருந்தாலும் ஒன்றுதான். ஆகவே, உங்களைப் பிரிந்து நான் தனித்து வாழ்ந்திருக்க மாட்டேன்" என்று கண்ணீர் பொழிய துக்கம் தாளாமல் பொருமி முறையிட்டாள்.

"மணாளரே! தாங்கள் விரும்பியபடியே நமது மகன் ஏமகண்டனுக்கு முடிசூட்டி, அரசுப் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, நாமிருவருமே வனவாசத்துக்குச் சென்றுவிடலாம்!" என்று அவள் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள். அதைக் கண்டதும் இளவரசன் ஏமகண்டனும் அரசனை வணங்கி மற்றவர்களைப்போல வேதன்னை

யும் கானகத்துக்கு அழைத்துச்செல்லும்படி வேண்டினான். தாய் தந்தையாகிய இருவரையும் பிரிந்துவிட்டுப் பொறுப்பை ஏற்க அவனும் விரும்பவில்லை.

அதனால் மன்னன் சோமகாந்தன், தன் குமரனை நோக்கி, "ஏமகண்டா! தாய் தந்தையரின் கட்டளையை மீறாமல் கடைப்பிடிப்பதுதான் புத்திரனுக்கு உரிய கடமை யாகும்! ஆகவே நீ எனது கட்டளைப்படியே இந்த அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அமைச்சர்களின் ஆலோ சனையோடு அரசாட்சி செய்யவேண்டும். அதுவே எனது புத்திரன் என்ற முறையில் உனக்குள்ள முதற்கடமை என்று கூறி, மேலும் பல ஆறுதல்களையும் சொல்லி, அவனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான்.

## சோமகாந்தனின் அரசியல் அறிவுரைகள்

மாமன்னன் சோமகாந்தன், தன் அருகில் ஏமகண் டனை அமர்த்திக் கொண்டு, ஆதரவாக அரச காரியங் களைப் பற்றி நீதி நூல்களில் கூறப்பட்டிருப்பவைகளை யெல்லாம் முறையாகக் கூறினான்.

"என் அருமை மகனே! உலகத்து மக்கள் அனைவரும் கடைப்பிடித்து அமைதியாக வாழ்வதற்கும் வாழ்விலே உயர்ந்து விளங்குவதற்கும்தான் அறநெறிகளும் அரசியல் நெறிகளும் வகுக்கப்பட்டுள்ளன. அவை எண்ணிறந்தவை. அவற்றைக் கண்ணும் கருத்துமாய் மேற்கொள்ள வேண்டும்.

"மகனே! மனம் ஒன்றி அறநெறியைக் கடைப்பிடிப்ப தால்தான் செல்வமும் இன்பமும் மலைபோலவும் கடல் போலவும் பெருகிப் பயன் அளிக்கும். அறநெறிப் பழக்கத் தால், உனது உள்ளம் விசாலமடைந்து, அன்பு எங்கும் பரவுவதால் உண்மையான இன்பத்தை அனுபவிக்கலாம்.

அறத்தை மறந்துவிட்டால், துன்பமும் கேடும்தான் உண்டாகும். அறங்கள் அனைத்திலும் இல்லறம் சிறந்தது.

"மனைவியுடன் கூடியிருந்து ஒருவன் இல்லறத்தை நடத்திவரவேண்டும். நற்குணமுடைய பிள்ளைகளைப் பெறுதல் வேண்டும். இடம், பொருள், ஏவல் ஆகிய எல்லாமே இருந்த போதிலும் உண்மையான அன்பு இல்லாவிட்டால் எலும்பில்லாத உடல் போலாகிவிடும். ஆதலினால், நீ எல்லா உயிர்களிடத்தும் எப்போதுமே அன்பு கொண்டிருத்தல் அவசியமாகும். காலத்தால் செய்த நன்றியை மறவாமை, எப்போதும் நன்மையையே செய்தல், பொறுமை, உயிரினும் மேலான ஒழுக்கமுடைமை, ஆகியவற்றையெல்லாம் பேணி வளர்க்க வேண்டும். புறங்கூறுதல், கடுஞ்சொற்களைப் பேசுதல், பயனில்லாத சொற்களைச் சொல்லுதல் முதலானவற்றை ஒழிக்க வேண்டும். ஈகைத் திறன், தாராள மனப்பான்மை, புகழ் ஆகியவற்றை நீ வளர்த்துக் கொள்ளவேண்டும்.

"ஒருவன் அறநூலின்படி அறநெறிப்படி அரசாள வேண்டுமாயின், அமைச்சு, நாடு, அறம், பொருள், படை, நட்பு ஆகிய ஆறும் அத்தியாவசியமான அங்கங்களாகும். மக்களின் குறைகளை அவ்வப்போது கேட்டு, ஆவன செய்து, நீதி தவறாமல், குற்றவாளிகளைத் தண்டித்து, திருடர், குறும்பர் முதலியவர்களிடமிருந்து மக்களைப் பாதுகாத்து செங்கோல் செலுத்தி ஆட்சி புரியவேண்டும். மகனே! உயர்ந்தவர்களைப் பாரபட்சமின்றி நட்புடன் பாவித்துவரவேண்டும். எல்லோரிடத்தும் முகமலர்ச்சியுடன் பழகவேண்டும். நீ குற்றம் புரியாமல் நன்றாக நடந்து கொண்டுதான், பிறரது குற்றங்களை நீக்க வேண்டும். உன்னை நீயே ஒருபோதும் தற்பெருமையுடன் புகழ்ந்து பேசிக்கொள்ளாதே! அகம்பாவம் அழிவைத் தரும். பகைவரைக் காலமறிந்தும் பயனைக்

கருதியுமே வெல்லவேண்டும். இவ்வாறு அறவழியிலே அரசியலை நடத்தி வந்தால் அத்தகையவனின் செங்கோலும் அறமுமே அரசனைக் காக்கும். இல்லையென்றால் அதர்மமே அவனை அழித்துவிடும்.

"மகனே! இதுபோன்ற அரசியல் இலக்கணங்கள் பலவும் உண்டு. அவற்றை அறநூல்களில் படித்துத் தெரிந்து கொள்வாயாக!" என்று சோமகாந்தன் தன் அரசிளங்குமாரனான மகன் ஏமகண்டனுக்குப் போதித்துவிட்டு அரசவைக்கு வந்து, தமது குமாரனின் பட்டாபிஷேகத்திற்கு ஒரு நல்ல நாளைக் குறிக்கச் செய்து உத்தராயண புண்ணிய காலமான தை மாதத்தில் குமரன் ஏமகண்டனையும் அவன் மனைவியையும் அரியணையில் ஏற்றி வைத்துப் பின்னர், அமைச்சர் முதலானவர்களுக்குக் கூறவேண்டிய கட்டளைகளையெல்லாம் கூறிவிட்டுத் தன் மனைவியோடு கானகத்துக்குப் புறப்பட்டான்.

## சோமகாந்தனின் துறவறம்

சோமகாந்த மன்னனும் அவனது மனைவியும் வனவாசஞ் செய்வதற்காக அரண்மனையிலிருந்து புறப்பட்டனர். சோமகாந்தன் நகரத்தின் கடைசி வாசலை நீங்கி நான்கு கூப்பிடும் தூரம் சென்றதும் அங்கு ஒரு குளுமையான ஒரு பொய்கைக் கரையில் தங்கினான்.

அப்போது அரசன், தன்னைப் பின் தொடர்ந்து வந்தவர்களை நோக்கி "நீங்கள் எல்லோரும் ஏன் வீணாக என்னோடு வனத்திற்கு வரவேண்டும். நீங்கள் திரும்பிச் சென்று உங்கள் வாழ்க்கையைத் தொடருங்கள்!'' என்றான்.

அப்போது அமைச்சர் முதலானவர்கள் அளவு கடந்த துக்கத்தோடு கண்களில் கண்ணீர் பெருக, அரசனை

நோக்கி "அரசே! நகரத்திற்கு முற்பிறவியிலும் இந்தப் பிறவியிலும் தாங்கள் ஏராளமான புண்ணியங்களைச் செய்திருக்கிறீர்கள். ஆகையால் எந்தப் புண்ணியத் தீர்த்தத்தினாலோ எந்தத் தவமுனிவராலோ தங்கள் உடம்பை பீடித்திருக்கும் வியாதியானது விரைவில் நீங்கி விடும். அதுவரையில் நாங்கள் அனைவரும் தங்களுடன் வனத்திலிருந்து தக்க பணிவிடைகளைச் செய்து, பிறகு உங்களுடனேயே நகரத்திற்குத் திரும்பி விடுகிறோம்!" என்றார்கள்.

அரசன் அவர்களை நோக்கி "பெருமக்களே! உலகத்தில் ஒருவன் தான் பிறந்த பயனையடைய வேண்டுமாயின் முதலில் இல்லற ஒழுக்கங்களைத் தவறாமல் கடைப்பிடித்த பிறகுதான் துறவறத்தைப் பூண்டு, வனத்திற்குச் செல்லவேண்டும் என்று தரும நூல்கள் சொல்லுகின்றன. அதை நான் மறந்ததால்தான் இந்தத்தொழு நோய் என்னைப் பிடித்துவிட்டது. அதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். என் மகன் என்னைவிடச் சிறப்பாக அரசாண்டு, உங்களைப் பாதுகாத்துப் பெருமபுகழை யடைவான் ஆகையால் நீங்களனைவரும் திரும்பவும் நகரத்திற்குச் சென்று நலமுடன் வாழுங்கள்" என்று கட்டளையிட்டான். அரசனது கட்டளையை மீறமுடியாமல் அனைவரும் மௌனமாக இருந்தார்கள். அப்போது அரசகுமாரனான ஏமகண்டன் தன் பெற்றோர்களின் மீது கொண்டிருந்த அளவற்ற பாசத்தினால் கண்களில் கண்ணீர் மல்க நின்று கொண்டிருந்தான்.

அரசன் சோமகாந்தன் தன் மைந்தனை நோக்கி, "மகனே! ஏன் வருந்துகிறாய்! இல்லறத்தில் இருப்பவர்கள் வயோதிகப் பருவமடைந்ததும் வனவாசம் செய்வது முன்னோர்கள் வகுத்த முறைமை. அதன்படிதான் நாங்கள் இருவரும் வனவாசம் செல்கிறோம். தாய் தந்தையரின் சொல்லைத் தட்டாமல் நடந்து கொள்வது புத்திரர்களின்

கடமையாகும். ஸ்ரீராமன் தன் தந்தையின் கட்டளைப் படி வனவாசம் சென்றான் அல்லவா! இப்போது நீ எனது கட்டளைப்படி மகிழ்வுடன் அரசாளச் செல்வாயாக!'' என்று ஆறுதல் கூறினான்.

ஏமகண்டன் தன் பெற்றோர்களை வணங்கி, ஆசீர் வாதங்களையும் பெற்றான்.

பிறகு ஏமகண்டன் இதயத்தை ஓரளவு தேற்றிக் கொண்டு அமைச்சர்கள், பொதுமக்கள் முதலானவர் களுடன் தனது நகரத்திற்குத் திரும்பிச் சென்றான். அங்கு சென்றதும் அவன் எப்போதும் விநாயகப் பெருமானாகிய பிள்ளையாரைப் பூஜித்து நீதிநெறி தவறாமல் அரசாட்சி நடத்தி வந்தான்.

சோமகாந்த மன்னனும் அவளது மனைவி சுதன்மையும் அந்தப் பொய்கைக் கரையை விட்டு நீங்கி, வனத்தை நோக்கிச் செல்லும்போது அவர்களிருவருடன் கபலன், ஞானகம்மியன் என்ற அமைச்சர்கள் இருவரும் பின் தொடர்ந்து சென்றனர். சோமகாந்தன் அவர்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு ஒரு வனத்தை யடைந்து அங்கு வனவாசமிருக்கத் தொடங்கினார். கிழங்கு, காய்கறிகள் முதலானவற்றை இரு மந்திரிகளும் சேகரித்துக் கொண்டு வந்து கொடுக்க, அவற்றை அரசனும் அவனது மனைவியும் உண்டு உயிர் வாழ்ந்தார்கள்.

பின்னர் ஒருநாள் சோமகாந்தன் செய்த தவப்பயனின் விளைவாகவும் அவனுடைய குமாரன் ஏமகண்டன் இடைவிடாமல் பிள்ளையார் பூசை செய்து வரும் சிறப்பாலும் சோமகாந்தனின் குழுவினர்கள் தவஞானியான பிருகு முனிவரின் ஆசிரமத்திற்கு அருகே வந்து சேர்ந்தார்கள்.

அந்தச் சோலைக்கு அருகில்தான் பிருகுமுனிவரின் ஆசிரமமும் இருந்தது. அவர்கள் இயற்கையின் அழகை யெல்லாம் கண்டு மகிழ்ந்து "நமது அரண்மனையும் கூட இச் சோலைக்கு ஈடாகாது!" என்று வியந்தார்கள். அவன் மனைவி சுதன்மை அவன் அருகிலேயே அமர்ந்து இணை பிரியாமல் காவல் புரிந்து கொண்டிருந்தாள். துணையாக வந்த அமைச்சர்கள் இருவரும், அவர்கள் சாப்பிடுவதற்குத் தேவையான ஆகார வகைகளைத் தேடிக் கொண்டு வருவதற்காக வனத்தினுள்ளே சென்றிருந் தார்கள்.

அப்போது அரச குமாரனைப் போன்ற அழகும் ஒளியும் பொருந்திய பாலகன் ஒருவன் தண்ணீர் எடுத்துப் போவதற்காக அந்தத் தடாகத்துக்கு வந்தான். அவனைப் பார்த்ததும் சுதன்மை மிகவும் வியப்படைந்து "குழந்தாய்! புலி, சிங்கம் முதலான கொடிய பயங்கரக் காட்டு மிருகங் கள் சஞ்சரிக்கக்கூடிய இந்தக் காட்டிற்கு வர எவருமே பயப்படுவார்கள். சாதுப்பிள்ளையான நீ பயமில்லாமல் தன்னந்தனியாகத் துணிச்சலுடன் உலவுகிறாயே! நீ யார்? பெயர் என்ன? உன்னைப் பெற்றெடுத்த பெற்றோர் யார்? இந்த காட்டிற்கு நீ வந்த காரணம் என்ன? என்று கேட்டாள்.

அதற்கு அச் சிறுவன் "அம்மா! நான் ஒரு முனிவரின் குமாரன். என் தந்தையின் பெயர் பிருகு முனிவர், என் தாயாரின் பெயர் புலோமை. என் பெயர் சரவணன். நான் இந்தத் தடாகத்தில் தண்ணீர் எடுத்துப் போவதற் காக வந்தேன்" இதுதான் என்னைப்பற்றிய விவரங்கள் என்று இனிமையான குரலில் கூறினான். பிறகு அவன் ஆச்சரியத்துடன் சுதன்மையை உற்றுப்பார்த்து, "அம்மா! உங்கள் வரலாறு என்ன? உங்களுக்கு இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது? மலர்மகள் போன்ற பேரழகு வாய்ந்த நீங்கள், இத்தகைய கொடிய பெருவியாதி பிடித்தவரோடு

இந்தக் காட்டிற்கு வந்த காரணம் என்ன? சொல்லுங்கள்" என்று ஆவலோடு கேட்டான்.

அவ்வாறு அவன் கேட்டதும், சுதன்மை கண்களில் கண்ணீர் பெருக, தங்கள் நிலைமை நடப்புகள் அனைத்தையும் முனி குமாரனிடம் எடுத்துரைத்தாள்.

அதைக் கேட்டதும் பிருகு முனிவரின் மைந்தன் அவர்களுடைய நிலைமைக்காக மனம் வருந்தி, அறிவோடு பல ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, தண்ணீர் மொண்டு கொண்டு தனது ஆசிரமத்துக்குச் சென்றான்.

## பிருகு முனிவர்

பிருகு முனிவர் காட்டில் இல்லறத்தில் வாழ்ந்து கொண்டே அரிய தவம் செய்து வந்தார். வழக்கமாகத் தண்ணீர் எடுத்துக் கொண்டு வரும் நேரத்தைவிடத் தன் மகன் சரவணன் அன்று நெடுநேரம் தாமதித்து வந்ததைக் கண்ட பிருகுமுனிவர் அவனை நோக்கி, "மகனே! இன்று நீ இவ்வளவு நேரம் கழித்து வருவதற்கு காரணம் என்ன? உன் முகம் ஏன் கவலையால் வாடியிருக்கிறது? சென்ற இடத்தில் என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

அதைக் கேட்ட சரவணன், தடாகக் கரையில் சோலை நிழலில் தான் கண்ட காட்சியினையும், பேரழகியான சுதன்மையிடம் கேட்டறிந்த செய்திகளையும் அவர்களின் சோக வரலாற்றையும் தன் தந்தையிடம் விளக்கமாகக் கூறினான்.

பிருகு முனிவர் உள்ளம் உருகி கருணையுள்ளத்துடன் "மகனே! அவர்களிருக்குமிடத்திற்கு இப்போதே நீ சென்று அவர்களை இங்கே நமது ஆசிரமத்துக்கு அழைத் கொண்டு வா!'' என்றார்.

உடனே சரவணன் விரைந்து சென்று அந்த அரச தம்பதிகளைச் சந்தித்து "என் தந்தை உங்கள் மீது கருணை கொண்டு உங்களை அழைத்துவரச் சொன்னார்!" என்றான்.

அப்போதே வியாதி நீங்கிவிட்டது போன்ற நினைப்புடன் அரசன் சோமகாந்தனும் அரசி சுதன்மையும் அமைச்சர்கள் இருவரும் மனம் மகிழ்ந்து, உற்சாகத்துடன் சரவணனைப் பின் தொடர்ந்து பிருகு முனிவரின் ஆசிரமத்துக்கு நடந்து சென்றனர்.

அந்த ஆசிரமத்தைச் சுற்றிலும் காட்டு மிருகங்கள் உட்படச் சகல உயிரினங்களும் ஒன்றுக்கொன்று பகையில்லாமல் அன்புடன் உறவாடிக்கொண்டிருந்தன. மான் குட்டிகளுக்குப் புலி தன் பாலை ஊட்டிக்கொண்டிருந்தது. சிங்கத்தின் பிடரி மயிரை யானைத் தன் துதிக்கையால் கோதிச் சிக்கெடுத்தது. பாம்புகளுக்கு மயில்கள் இரை தேடிக் கொடுத்தன. அதுமட்டுமின்றி ஆறு பருவங்களும் நலம் விளைவித்தன. மரம், செடி, கொடிகள் எல்லாம் எப்போதும் துளிர்த்துப் பூத்தும் காய்த்தும் பழுத்தும் குலுங்கின. எண்ணிறந்த முனிவர்கள் பிரும தேவனுக்கு சாம வேதம் ஓதியபடியே சூழ்ந்திருக்க, அவர்களிடையே பிருகு முனிவர், புலித்தோலாசனத்தில் வீற்றிருந்தார்.

இவற்றை யெல்லாம் கண்ட சோமகாந்தனும் சுதன்மையும் அமைச்சர் இருவரும் பிருக முனிவரின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். பிருகு முனிவர் அவரவர்க்கு ஆசீர்வாதங்களைச் செய்து, கருணை விழிகளால் சோமகாந்தனை ஏறிட்டு நோக்கினார்.

சோமகாந்தன் அளவுகடந்த அன்புள்ளத்துடன் அவரை மீண்டும் பணிந்து எழுந்தான். அவன் கண்களிலிருந்து மகிழ்ச்சிப் பெருக்கினால் நீர் சொரிய, உடம்பெல்லாம் மயிர்க்கால்கள் சிலிர்க்க நெட்டுயிர்ப்புற்று வியர்க்க, அனலில் அகப்பட்ட வெண்ணெயைப் போல உருகினான்.

"சுவாமீ! நான் முந்திய பிறவியில் தீவினையின் பயனாக இந்தப் பிறவியில் பொல்லாத நோய்க்கு ஆளாகி னேன் என்றுதான் இதுவரையில் நான் நினைத்திருந் தேன். ஆனால் இப்போது யோசிக்கும்போது, நான் செய்ததெல்லாமே நல்வினைகள்தான் என்று தோன்று கின்றன. ஏனென்றால் தங்களுடைய புனிதத் திருவடித் தாமரைகளை வணங்கவே எனக்கு இந்த வியாதி வந்தி ருப்பதாகத் தோன்றுகிறது! தங்களுடைய கருணை மயமான தரிசனம் இன்றைய தினம் கிடைத்ததால், என்னுடைய இம்மை, மறுமை, உம்மை என்னும் முப்பிறவிகளும் தூய்மை அடைந்துவிட்டன. தங்க ளுடைய திருவடித் தாமரைகளைச் சரணடைந்தவர் களுக்கு இனியொரு குறையும் இருக்க முடியுமோ? என் உடம்பைப் பிடித்துத் தொல்லை தரும் இந்தப் பொல்லாத கரும வியாதி தொலைவதற்காக நானும் எத்தனையோ மருந்துகளும் மந்திரங்களும் தான தருமங்களும்கையாண்டு பார்த்தேன். எந்த ஒரு நன்மையும் ஏற்படவில்லை இனி தங்கள் கருணை நோக்கு ஒன்றினால் மட்டுமே என் வியாதி நீங்கும்.

இயற்கையிலேயே பகைமையுடைய மிருகங்களும் கூட தங்களுடைய கருணைமயமான ஆசிரமம் அமைந் துள்ள இந்தக் காட்டிலே பகையின்றி அன்போடுஉறவாடு கின்றன. ஆகையால், தங்களை அடுத்துள்ள எனக்கும் என்னைத் துன்புறுத்திவரும் இந்தப் பொல்லாத வியாதி யும் நீங்கிவிடும் என்பதில் எனக்கு ஐயம் எதுவுமில்லை" என்று சோமகாந்தன் கூறினான்.

பிருகு முனிவர், மீண்டும் சோமகாந்தனைக் கருணை யுள்ளத்துடன் பார்த்துவிட்டு சிறிது நேரம் ஆழ்நிலைத் தியானத்தில் ஆழ்ந்தார். பிறகு அவர் தமது ஞானதிருஷ்டி யினால் அரசனுக்கு அந்தக் கொடிய வியாதி வந்த கார ணத்தைத் தெரிந்துகொண்டு "அரசே! தூய்மைத் திருவடிவமான கடவுளின் திருவருளால் உன் எண்ணம்

விரைவில் நிறைவேறப் போகிறது. இனி நீ உனது கவலையை நீக்கிவிட்டு, உனது வழிப் பயணத்தின் களைப்பு நீங்க எனது ஆசிரமத்திலேயே ஓய்வெடுத்துக் கொள்வாயாக!'' என்றார்.

முனிவருடைய மனக்குறிப்பை அறிந்த அவரது சீடர்கள், சோமகாந்தன் குழுவினரை உள்ளே அழைத்துச் சென்று, நறுமணத் தைலங்களைக் கொடுத்து அவர்களை நீராடச் செய்து, அறுசுவையுடன் கூடிய நான்கு வகை உண்வுகளையும் அவர்களுக்கு வழங்கி விருந்தோம்பினர். அரசன் முதலானோர் உணவருந்தி மகிழ்ச்சியுடன் பிருகு முனிவரைப் போற்றிப் புகழ்ந்து அன்றிரவு அமைதியுடன் உறங்கினர்.

## சோமகாந்தனின் முற்பிறவி

மறுநாள் காலையில் சோமகாந்தனும் அவனைச் சேர்ந்தவர்களும் கண்விழித்து எழுந்து நாட்கடமையெல்லாம் நிறைவேற்றிவிட்டு, ஐம்புலன்களையும் ஒரு வழிப் படுத்தி பிருகு முனிவரிடம் வந்து இரு கரங்களையும் குவித்துத் தரையில் விழுந்து வணங்கி எழுந்தார்கள். அப்போது, விநாயகப் பெருமானின் திருவடிகளை இடைவிடாமல் வணங்குகின்ற பிருகு முனிவர் அரசனின் உடலையும் உள்ளத்தையும் வாட்டி வருத்தும் தொழு நோயை நீக்கி, அவனுக்கு அருள்செய்ய வேண்டும் என்று எண்ணினார்.

அரசனை ஒரு சிறந்த ஆசனத்திலே அமரச்செய்து, அவன் தனது முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளைப் பற்றி அவனுக்கு எடுத்துரைக்க விரும்பினார். முதலாவதாக அவன் முற்பிறவியில் செய்த தீவினைகளைப் பற்றிக் கூறினார்.

சோமகாந்த மன்னனே! நீ உனது முற்பிறப்பில்விந்திய மலைக்கு அருகேயுள்ள கொல்லம் என்ற பட்டிணத்தில் சிந்திருபன் என்ற வைவியனுக்கும் சுலோசனை என்ற மங்கைக்கும் புத்திரனாகப் பிறந்தாய். காமந்தன் என்று

உனக்குப் பெயர் வைத்தார்கள். நீ உனது வாலிப வயதில் குடும்பினி என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு, ஏழு ஆண, ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்று நல்ல வாழ்க்கையை அனுபவித்து வந்தாய். சிறிது காலத்தில், உனது தந்தை மரணமடைந்தார். உன் தாயும் உன் தந்தையைப் பினபற்றினாள்.

அதற்குப்பின் உனக்கு அறிவுரை வழங்குவதற்கு எவருமே இல்லாததால் நீ உன் மனம் போன போக்கில் பெண் இன்பத்தில் மூழ்கினாய். விலைமகளிரின் மயக்கத்தில் கெட்டழிந்தாய். உன் மூதாதையர்கள் தேடி வைத்திருந்த செல்வங்களையெல்லாம் செலவிட்டு அழித்துவிட்டாய். நீ செய்வது சிறிதும் தருமமல்ல என்று உன் மனைவி பலவாறு சொல்லியும் கேளாமல் ஆபரணங்கள், வீடுகள், நிலங்கள், முதலிய அனைத்தையும் விற்று தாசிகளுக்குக் கொடுத்து வந்தாய். பிறகு அவர்களுக்குக் கொடுப்பதற்கு எதுவுமில்லாமல் நீயே தரித்திரனாகிவிட்டாய். அப்போதும் நீ மற்றவர்களிடம் யாசகம் வாங்கி அதனால் கிடைத்து வந்த பொருளையும் விலைமாதர்களுக்கே கொடுத்து வந்தாய். பிறகு சூதாடியும் களவாடியும் வழிப்பறி செய்தும். பெண்களின் ஆபரணங்களையும் அவர்களிடமிருந்து வன்முறையில் பறித்து அந்தப் பரத்தையருக்குக் கொடுத்து இன்பம் நுகர்ந்தாய்.

அதுமட்டுமின்றி குடும்பப் பெண்களைக் கெடுத்தும் பலவகையிலும் காமாந்தகாரத்தில் மூழ்கி, தீயவன் என்ற பெயரெடுத்து அலைந்தாய். இவற்றையெல்லாம் கண்டு, உன் மனைவி மனம் பொறுக்காமல் துக்கப்பட்டு தன்னைப் பாதுகாப்பவர்கள் எவருமின்றி, பசியால் பலநாள்கள் பட்டினி கிடந்தாள். அதற்கு மேலும் துன்பங்களைப் பொறுக்கமாட்டாமல் உன்மீது அவளும் வெறுப்படைந்து, உன்னைப் பிரிந்து தனது தாய்வீட்டுக்குப்போய்விட்டாள்.

அதற்குப்பிறகு நீ மதுவருந்தினாய், உன் விருப்பப்படியெல்லாம் தீவினைகளைப் புரிந்து வந்தாய். உன்னுடைய தீச் செயல்கள் அதிகரிக்கவே. அந் நகரத்து அரசன், உன்னை நகரத்தைவிட்டே வெளியேறும்படி துரத்தி விட்டான் அதனால் நீ காட்டுக்குச் சென்று அங்கிருந்து கள்வர்களுடன் சேர்ந்துகொண்டு, அந்த வழியாகப் போகிறவர்களையும் வருகிறவர்களையும் வழிப்பறி செய்து கொலையும் கொள்ளையுமாகச் செய்துவந்தாய். இவ்வாறு நீ திரிந்துவந்த காலத்தில் ஒருநாள் அந்தக் காட்டுவழியாக கணவர்த்தன் என்ற பிராமணன் ஒருவன் வந்தான். வழக்கமான உனது சுபாவப்படி நீ அவனை வழிமறித்து, அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, அவனைக் கொலை செய்ய முயன்றாய். அவனோ உன்னைக் கண்டதும் எமதூதர்களைக் கண்டது போலப் பயந்து நடுநடுங்கி, பெருமூச்சிவிட்டு—

"அப்பா! நான் பிராமணன் என்னைக் கொன்று விடாதே! பிதிர்களுக்குச் செய்யவேண்டிய கருமங்களுக்காக ஒரு மகனைக்கூட நான் இன்னும் பெறவில்லை. அதற்காக ஒரு கன்னியை நான் மணந்துகொண்டேன். அவளோ புத்திரப் பேறின்றி மடிந்துபோனாள். இப்போது மற்றொருத்தியை மணந்திருக்கிறேன். அவளோ புத்திரனைப் பெறமுடியாத இளம் பருவத்தினளாக இருக்கிறாள்! அவளுக்கும் என்னைவிட்டால் வேறு எந்த ஆதரவும் இல்லை. ஆகவே என்னை உனது தண்பனாக ஏற்றுக் கொள். என்னைக் கொல்லாமல் உயிருடன் விட்டுவிடு. அதற்காக என் கைப் பொருள்களையெல்லாம் மறைக்காமல், உன்னிடம் கொடுத்துவிட்டு நான் உயிர் பிழைத்துக் கொள்கிறேன். எனக்கு உயிர்ப்பிச்சை கொடு!" என்று கெஞ்சிக் கதறி உன்னை வேண்டினான்.

ஆனால் நீயோ, கொலை கொள்ளை முதலியவற்றை செய்யத் துணிந்தவனாகையால், நீ சிறிதும் மனமிரங்

காமல் அவனை கழுத்தை நெறித்தே கொன்றுவிட்டாய். உடனே உன்னை 'பிரம்மஹத்தி' பழி பிடித்துக் கொண்டு விட்டது, அதிலிருந்து ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாகக் கழியும்படி நீ பற்பல துன்பங்களை அனுபவித்து வரலானாய்! ஆனால் இத்தகைய தீவினைகளினூடேயும் உனக்கு ஒரு புண்ணிய பலனும் கிட்டியது. அந்தப் புண்ணிய பலத்தினால்தான் நீயும் ஒரு அரசனாகப் பிறந்தாய்!" என்று கூறி பிருகு முனிவர் நிறுத்தினார்.

அதைக் கேட்ட அரசன் "மாமுனிவரே! அந்தப் புண்ணிய பலனையும் தாங்கள் மனமுவந்து தெரிவிக்க வேண்டும்!" என்று கேட்டான்.

பிருகுமுனிவர் தொடர்ந்தார்.

"அரசே முற்பிறவியில் நீ, 'பிரம்மஹத்தி' பழியுடன் பல துன்பங்களையும் அனுபவித்து அந்தக் காட்டிலேயே அலைந்து திரிந்துகொண்டிருந்தாய். அப்போது உனது உடலில் நடுக்கம், இளைப்பு, தாகம் போன்ற கொடிய நோய்கள் ஏற்பட்டன. அதிவிரைவில் கிழத்தன்மையையும் தள்ளாமையையும் அடைந்தாய். உன்னைக் கவனித்துக் கொள்ள எவருமே இல்லை. அதனால் உனக்கு உன் மனைவியின் நினைவு வந்தது. நீ அவள் வீட்டிற்கு ஒரு தூதுவனை அனுப்பிவைத்தாய். அந்தத் தூதுவன் இரவோடு இரவாகச் சென்று நீ காட்டில் தன்னந்தனியனாகப் படுகின்ற துன்பங்களனைத்தையும் உன் மனைவியிடம் எடுத்துரைத்தான். அவற்றையெல்லாம் கேட்ட உன் மனைவி முதலானவர்கள் மிகவும் பயமும் பீதியும் அடைந்தனர். இந்தச் செய்தியை நகரத்து அரசன் அறிந்தால் உன் குடும்பத்தைச் சேர்ந்த அவர்களனைவரையும் கூட தண்டித்து வதைப்பான் என்று நினைத்து அவர்கள் நடுங்கினார்கள்.

அதனால் அவர்கள், நீ அனுப்பிய தூதுவனிடம், "இதையெல்லாம் வெளியே வேறுயாரிடமும் சொல்லாமல்

சீக்கிரம் போய்விடு!" என்று கூறி, அவனைப் பயமுறுத்தி உன்னிடமே திருப்பி அனுப்பிவைத்தனர். திரும்பிவந்த தூதுவன் நடந்தவற்றை உன்னிடம் சொன்னான். அதைக் கேட்ட நீ, இனி என்ன செய்வது என்று மிகவும் வேதனைப் பட்டு வருந்தினாய். அந்த சமயத்தில்தான் நீ முற்பிறப்பில் செய்த ஒரு நல்வினைப் பயன் உன்னை நெருங்கி வந்து கொண்டிருந்தது.

அப்போது நீ, தங்கியிருந்த காட்டின் வழியாக வேதியன் ஒருவன் வந்தான். உன்னுடைய வரலாறு இன்னதென்று தெரியாத அந்த வேதியன் உன்னிடம் வந்து யாசகம் கேட்டான். அவனுக்கு நீ ஆடையாபரணங் களையும் பொருள்களையும் தானஞ்செய்து இன்னும் அனேக வேதியர்களையும் உன்னிடம் தானம் பெற்றுக் கொள்ள அழைத்துவரும்படி கூறினாய். அதுபோலவே, அந்த வேதியனும் பல இடங்களுக்குச் சென்று பல வேதி யர்களை உன்னிடம் யாசகம் வாங்குவதற்கு அனுப்பி வைத்தான். அவர்களும் உன்னை யாரென்று தெரிந்து கொள்ளாமலேயே உன்னிடம் தானம் வாங்குவதற்காக வந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் நீ பக்தியோடு கும்பிட்டு நின்றாய்! ஆனால் அந்த வேதியர்களோ, உன்னைப் பார்த்ததுமே நீ எத்தகைய கொலை பாதகன் என்பதை அடையாளம் புரிந்துகொண்டு மனம் வருந்தி—

"ஐயா! பஞ்சமாபாதகனான உன்னை அண்டியவர் கள், உன்னைக் கண்ணால் கண்டவர்கள், உன் பெயரை வாயால் சொன்னவர்கள் அத்தனை பேருக்கும் உனது பாவங்கள் தொற்றிக்கொண்டு அவர்களை நாசக்குழியில் தள்ளிவிடுமே! அத்தகைய உன்னிடமிருந்து நாங்கள் எவருமே தானம் வாங்கிக் கொள்ளமாட்டோம். உனக்கு உண்மையிலேயே தானதருமம் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் ஒரு காரியம் செய்! இந்தக் காட்டில்

விநாயகப் பெருமானின் கோயில் ஒன்று அடிமுதல் முடிவரை முற்றிலும் செடிகொடிகளால் மூடப்பட்டு சிதில மடைந்து கிடக்கிறது. அந்தப் பிள்ளையார் திருக்கோயி லைப் புதுப்பித்து அதையே உனது தரும கைங்கரிய மாகக் கருதி பிள்ளையார் பெருமானின் பேரருளைப் பெற் றுக் கொள்வாயாக!" என்று கூறிவிட்டு, அந்த வேதியர்கள் தானம் வாங்காமலேயே திரும்பிச் சென்றார்கள்.

அதற்குப் பிறகு, ஆதிநாளிலிருந்து நீ செய்துவந்த பாவங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக உன் நினை வில் பேருரு எடுத்து காட்சி தந்து, உன்னைப் புழுப் போல தகிக்கவைத்தன. உன்னிடம் தானதர்மம் வாங்கு வதுகூட பாவம் என்று வேதியர்கள் கூறிச் சென்றதையும் நினைத்து நீ மிகவும் மனம் வருந்தினாய். அதற்கெல்லாம் கழுவாய் தேட ஒரே ஒரு வழிதான் இருந்தது.

சகல வினைகளையும் விலக்கிக் காத்து அருள் செய் பவர் விக்கினேஸ்வரரான 'பிள்ளையார்' தான் என்பதை நீ புரிந்து கொண்டாய். அவருடைய திருக்கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவதைவிடச் சிறந்த தருமம் வேறு எதுவு மில்லை என்று நீயே தீர்மானித்துக் கொண்டாய். அது வரையில் துன்மார்க்கத்தினால் சேர்த்து வைத்திருந்த பொருள்களையெல்லாம் எடுத்துக் கொண்டு, விநாயகரின் பழைய ஆலயத்திற்குப் பயபக்தியுடன் வந்து, அங்கு வீற் றிருந்த யானைமுகப் பெருமானாகிய பிள்ளையாரைத் தரி சித்து உன் மனத் துயரங்களையெல்லாம் அவரிடத்தில் வாய்விட்டுச் சொல்லி கதறி அழுது பலமுறை கும்பிட்டு ஆனந்தப் பரவசமடைந்தாய்.

பிறகு கற்சிற்பங்களையும் ஆலயமமைக்கும் கலைஞர் களையும் வரவழைத்து பிள்ளையாருக்குக் கோயில் கட்டு வித்தாய். தங்கத்தால் கர்ப்பக்கிரகம் அமைத்து அதன் முகப்பில் இரத்தினங்களை அமைத்து வெள்ளி, பொன் முதலான உலோகங்களால் மண்டபங்கள் எழுப்

பினாய். கோயிலைச் சுற்றிலும் உயரமான தூண்களை எழுப்பி நான்கு புறமும் கோபுரங்களும் நான்கு தடாகங்களும் அமைத்தாய். மாடவீதிகள், வீடுகள், மாளிகைகள் முதலானவற்றையும் அமைத்தாய். தங்கத்தாலும் வெள்ளியாலும் கோயிலுக்குத் தேவையான பாத்திரங்கள், வாகனங்கள், குடைகள், பல்லக்குகள் முதலியவற்றைச் செய்தாய். வேதியர்களைக் குடியேற்றி பிள்ளையாருக்கு பூசை, ஆராதனை நடத்தி வரும்படி ஏற்பாடு செய்தாய். திருவிழாக்கள் கொண்டாடினாய். உனது வாழ்நாள் முழுமையும் விநாயகர் பூஜையிலேயே கழித்து வரும்போது, உனக்கு முடிவு காலம் வந்து நீ இறந்தும் போய்விட்டாய்.

பிறகு எமதூதர்கள் உன்னைய் எமலோகத்துக்கு அழைத்துச் சென்றனர், யமதர்மராசனுக்கு முன்பு உன்னை நிறுத்தி வைத்தார்கள்.

யமதர்மன் தனக்குள்ளாகவே உன்னைப் பற்றி ஆலோசித்தான்.

நீ அளவற்ற பாவங்களைச் செய்திருந்த போதிலும் உனது அந்திம காலத்தில் விநாயகக் கடவுளின் ஆலயத் திருப்பணி செய்த ஒரே புண்ணியத்தால், பஞ்சுப்பொதியில் தீப்பொறி பற்றி ஒழிந்து போவது போல, உன்னுடைய பாவங்களனைத்தும் மறைந்தொழிந்தன. இருந்தாலும், நீ செய்த தீவினைகளுக்குரிய பலன்களையும் நீ அனுபவித்து ஆக வேண்டும் என்று யமதர்மராசன் முடிவு செய்தான். எனவே உன்னுடைய அடுத்த பிறவியில் பாவத்தையும் புண்ணியத்தையும் முதலிலோ, அல்லது பிந்தியோ அனுபவிக்க வேண்டும் என்று விதி நிச்சயிக்கப் பட்டது.

நீயோ உன் அடுத்த பிறப்பில் புண்ணியத்தை முதலில் அனுபவித்து விட்டபிறகு பாவத்துக்கு ஏற்ற பலன்களை

பின்னர், அனுபவிக்க விரும்புவதாக யமதர்மனிடம் சொன்னாய். அதன்படியே இந்தப் பிறவியில் அமைந்து விட்டன. அதாவது இந்தப் பிறவியில் நீ ஒரு மன்னனாகப் பிறந்து, உனது முற்பிறவி புண்ணிய பலன்களையெல்லாம் முன்னதாக அனுபவித்து விட்டு, இப்போது உனது தீவினைகளின் பயனாக இந்தக் கொடிய வியாதியை இப்போது அனுபவிக்கிறாய்! இந்தக் கொடிய வியாதி நீங்குவதற்கும் விநாயகப் பெருமானைத்தான் நீ வழிபட்டு வர வேண்டும்!'' என்று பிருகு முனிவர் கூறி முடித்தார்.

## மன்னனின் சந்தேகமும் தண்டனையும்

இவ்வாறு பிருகு முனிவர், சோமகாந்த மன்னன் மீது கருணை கொண்டு, விநாயகரின் மகிமையைப் பற்றி எடுத்துரைத்ததும், அவர் கூறியவை அனைத்துமே உண்மைதானா என்ற சந்தேகம் சோமகாந்தனுக்குத் தோன்றியதால் அவன் அவநம்பிக்கையோடு மனங்குழம்பினான். உடனே அவனது உடலிலிருந்து ஆயிரக்கணக்கான வலியன் பறவைகள் எழும்பிக் கிளம்பி வந்து, வைரம் போன்ற தமது கூர்மையான அலகுகளால் தொழுநோய் பீடித்திருந்த அவன் உடல் எங்கும் குத்திக் கீறி அவனுடலின் தசைகளைப் பிய்த்துப் பிடுங்கித் தின்னலாயின! அதனால் ஏற்பட்ட பயங்கர வலி வேதனையைத் தாங்கமாட்டாமல் சோமகாந்த மன்னன் பிருகு முனிவரின் கால்களில் விழுந்து வணங்கி—

"அருந்தவ முனிவரே! அபயம்! அபயம்! எனக்கு தங்களைத் தவிர வேறு கதியில்லை. தவமேருவே, புண்ணிய மூர்த்தியே! தங்களைத் தூரத்திலிருந்து தியானஞ் செய்தாலும் தங்களுடைய கருணையும் ஆதரவும் கிட்டுமே. அப்படியிருக்க தங்களையே சரணடைந்

திருக்கும் எனக்கு மட்டும் இத்தகைய தொல்லைகள் ஏற்படலாமா? என் நோயுற்ற உடலைக் கொத்தித் தின்னும் கொடிய பறவைகள் தருகின்ற வேதனையை என்னால் தாங்க முடியவில்லையே. இதைப் பார்த்துத் தாங்களும் சும்மா இருப்பீர்களா? கருணை காட்டுங்கள். என் வேதனையைத் தீர்த்தருளுங்கள் என்று அழுது துடித்தான். அவன் படும் துன்பத்தைக் கண்டு அவனது மனைவி சுதன்மையும் மனம் வருந்திக் கண்ணீர் வடித்த வண்ணம் பிருகு முனிவரின் காலடியில் வீழ்ந்து வணங்கி "கருணாமூர்த்தியே! எனக்கு மாங்கல்யப் பிச்சை கொடுத்து என் கணவரைக் காப்பாற்றுங்கள்!" என்று வேண்டினாள், அங்கிருந்தவர்கள் அனைவரும் பிருகு முனிவரை வேண்டி, மன்னனைக் காப்பாற்றும்படி விண்ணப்பித்தார்கள்.

இவ்வாறு அனைவருமே வேண்டியதால், பிருகு முனிவர் மனமிரங்கி, மன்னனை நோக்கி "மன்னவனே! நான் சொன்னவற்றை உண்மையென்று நம்பாமல் சந்தேகப்பட்டதால்தான், உனக்கு இத்தகைய துன்பங்கள் நேர்ந்தன. இனிமேலாவது நான் கூறுவதை நம்பு. நம்பினால் நீ துன்பம் நீங்கிப் புனிதமடைவாய்!" என்று கூறிவிட்டு. மன்னனைத் துன்புறுத்திக் கொண்டிருந்த வலியன் பறவைகளை நோக்கி, அவர் ஒரு ஓங்காரம் செய்தார். அந்த ஓங்கார ஒலி கேட்டு, அந்தக் கொடிய பறவைகள் மன்னனின் உடலைக் கொத்துவதைவிட்டு வான வெளியை நோக்கிப் பறந்து சென்றன. அதற்குப் பிறகுதான் சோமகாந்த மன்னன் பிருகு முனிவர் கூறிய தன்னுடைய முற்பிறவி வினைகளையெல்லாம் உண்மையென்று மனப்பூர்வமாக நம்பி மனம் மகிழ்ந்தான்.

பிருகு முனிவர், தமது கமண்டலத்தில் நன்னீர் நிரப்பி, விக்னேசுவரப் பெருமானை மனதில் தியானித்து, "விநாயக மூர்த்தியே! பிள்ளையார் பெருமானே! இந்த அரசனின் உடலை இதுவரையிலும் வாட்டி வருகின்ற

தொழுநோயை விலக்கி அருள் செய்ய வேண்டும் என்று மனமுருகப் பிரார்த்தித்து, விநாயகர் மந்திரத்தை நூற்றியெட்டு முறை செபித்து, பிறகு தமது கமண்டலத்திலிருந்த புனித நீரை மந்திரித்து, அதில் சிறிது நீரைத் தம் கையில் வார்த்துக் கொண்டு அதை சோமகாந்த மன்னனின் தொழுநோய் பிடித்திருந்த உடல் மீது தெளித்தார்.

உடனே, சோமகாந்தன் முற்பிறவியில் செய்த பாவங்கள் அனைத்தும் ஒன்றாகச் சேர்ந்து திரண்டு ஒருபயங்கர பூத உருவமாக மன்னன் உடலிலிருந்து வெளி வந்தது. ஏழுபனை உயரமும் அதற்கேற்ற பருமனும் அடர்த்தியாகக் குத்திட்டு நிற்கும் சடைகளும், இருளைப் போன்ற கருத்த நிறமும் மேலெழும்பி வளைந்த கோரைப்பற்களும், குழி விழுந்த விழிகளும், சிவந்த நீண்ட கால்களும் கொண்ட அந்தப் பயங்கரபூதம், தன் பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டும் கண்களை கனல் தெறிக்க உருட்டிப் பார்த்துக் கொண்டும் இடிமுழக்கமிட்டதைப் போல தன்னிரு தோள்களைத் தட்டிக் கொண்டும் சோமகாந்த மன்னனை நோக்கி-

"அடே, படுபாதகஞ் செய்த வீரனே! முன் காலத்தில் உன்னுடைய ஆயுத பலத்தை என்னிடம் காட்டினாயே இப்போது உன் வலிமையை என்னிடம் காட்டு பார்க்கலாம்!" என்று பயங்கரமாகக் கூச்சலிட்டு, அதியுக்கிரமாக எதிர்த்து நின்றது.

பிருகு முனிவர், அந்தப் பயங்கர பூதத்தை நோக்கி, "பூதமே, நீ யார்? உனது சரித்திரம் என்ன? நீ ஏன் சோமகாந்தனை எதிர்த்துப் பயமுறுத்துகிறாய்!" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பூதம் "சுவாமி! முன்பு ஒரு காலத்தில் பிராமணனாகப் பிறந்த என்னை இந்தப் படுபாவி கொலை செய்து விட்டான். அதனால் தான் நான் இவனை

பிரம்மஹத்தி தோஷமாக இதுவரை பீடித்துக் கொண்டிருந்தேன். இப்போது நீங்கள் இவன் உடல் மீது தெளித்த புனித நீரினால் நான் இவனது உடம்பை விட்டு வெளிப் பட்டேன். இப்போது எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. இந்த வினாடியே இந்த அரசனையும் இவனது மனைவி யையும் இவனுடைய அமைச்சர்களையும் கொன்று தின்று என் பசியை ஆற்றிக் கொள்கிறேன். அதற்கு நீங்கள் அனுமதியளியுங்கள்!'' என்று கேட்டது.

அதைக் கேட்ட பிருகு முனிவர் அந்தப் பூதத்தை நோக்கி, பூதமே! அவசரப்படாதே! உனக்கு நான் நன்மை யைத்தான் செய்வேன். அதுவரை, நீ, எதிரே இருக்கும் அந்த மரப்பொந்தின் உள்ளே புகுந்து கொள்!'' என்று சொல்லி ஆசிரமத்தின் எதிரே தழைத்தோங்கி வளர்ந் திருந்த ஒரு மாமரத்தினைச் சுட்டிக் காட்டினார். அந்தப் பூதமும் அவர் கூறியவாறே அந்த மரப்பொந்தினுள்ளே புகுந்து கொண்டது. அடுத்த கணமே அந்தப் பச்சை மரம் தீப்பற்றி எரிந்து சாம்பலாயிற்று.

பிறகு அந்தப் பூத சரீரத்திலிருந்த ஆன்மாவானது மிகவும் சௌந்தர்யத்துடன் கூடிய ஒரு தேவனுடைய வடிவத்தில் மாறி பிருகு முனிவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி பின்வருமாறு கூறியது:

"கருணை மிக்க முனிவரே! முன்பொரு சமயம் அந்தப் பாவி, என்னைக் கொன்று ஒழித்துவிட்டான். அந்த மரணத்தினால் இடைவிடாமல் பெருந் துன்பத்தோடும், துயரத்தோடும் பேயாக அலைந்து கொண்டிருந்த எனக்கு தங்கள் காட்சியால் பேறு கிட்டியது என்று அந்த தேவன் ஆனந்தத்துடன் கூறினான். அப்போது விநாயகக் கடவு ளின் ஏவலினால் வானத்திலிருந்து ஒரு தெய்வீக விமானம் பூமியில் வந்து இறங்கியது. உடனே அந்த விமானத்தில்

தேவ வடிவம் பெற்ற அந்த ஜீவாத்மா ஏறிக்கொண்டதும் அந்த விமானம் மேலே எழும்பிப் பறந்து போய்விட்டது. இந்த அற்புதங்களையெல்லாம் பிருகு முனிவரின் ஆசிரமத்திலிருந்த சோமகாந்த மன்னனும் அவனைச் சேர்ந்தவர்களும் பார்த்துப் பரவசமடைந்து, பக்தியுடன் பிருகு முனிவரைப் பணிந்து போற்றினார்கள்.

அப்போது பிருகு முனிவர் சோமகாந்த மன்னனை நோக்கி "மன்னனே! உன்னைப் பிடித்திருந்த தோஷம் இப்போது உன்னை விட்டு விலகிச் சென்றுவிட்டது. இனி உன் உடலைப் பீடித்திருக்கும் தொழுநோயை நீக்குவதற்குரிய வழியையும் சொல்கிறேன். கவனமாகக் கேள்! முக்கண் படைத்த யானைமுகக் கடவுளும் என்னை முழுமையாக ஆண்டருளும் பிள்ளையாரின் புராணத்தை நீ கேட்பாயானால், உன்னுடைய துன்பங்களும் உன்னை விட்டு விலகிப் போகும். புராணத்தைக் கேட்கும் புண்ணியத்தாலேயே உன்னுடைய நோயும் உன்னை விட்டு நீங்கும். உன்னுடைய வியாதிக்கு இதைவிட மேலான மருந்து வேறு ஒன்றும் இல்லை."

இந்தப் பிள்ளையார் புராணம், வியாதிகளை நீக்குவதோடு ஏழு பிறவிகளின் பாவங்களையும் ஒழித்து, வேண்டிய வரங்களையும் நலங்களையும் தந்து இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை தருவதாகும்.

அதைக் கேட்ட சோமகாந்தன் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்து, பிருகு தீர்த்தத்தை மும்முறை வலம் வந்து அதில் நீராடி முறைப்படி நித்திய நியமங்களையெல்லாம் செய்துவிட்டு விநாயகரின் மகிமைகளைக் கேட்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். அந்தக் கணத்திலேயே அவனுடலில் ஒட்டியிருந்த தொழுநோய் ஒழிந்துவிட்டது வியாதி நீங்கிய அவன் தன்னுடலைப்

பார்த்து மகிழ்ச்சியடைந்தான். பிறகு பிருகு முனிவரைப் பணிந்து "மகாமுனிவரே! தங்களுடைய கருணையினால் தான் அரும்பெரும் பயன்களை நானடைநதேன். இதற்காகத் தங்களுக்குக் காணிக்கையளிக்கக் கூடிய பொருள் என் ஆத்மாவைத் தவிர வேறு எதுவுமில்லை. முனிவரே பிள்ளையார் புராணத்தைக் கேட்க வேண்டும் என்று நான் நினைத்தவுடனேயே என்னை பீடித்திருந்த கொடிய வியாதி விலகிப் போய்விட்டது. இனிமேல் தாங்கள் பிள்ளையார் பெருமானின் புராணத்தை முழுமையாகக் கூறியருள வேண்டும்" என்று விணணப்பித்தான்.

உடனே பிருகு முனிவர், தாயன்பு போன்ற கருணையுடன் அவன் உடலைத் தழுவிக் கொடுத்து ஓர் ஆசனத்தில் அவனை அமர்த்தினார். முனிவரின் அன்புக்கரம் பட்ட மகிமையினால் சோமகாந்தனின் தேகம் முன்பு இருந்ததைவிட அழகும் சாந்தியும் கவர்ச்சியும் பெற்று விளங்கியது. அதைக் கண்டு சோமகாந்தனின் மனைவியும் அமைச்சர்களும் ஆனந்தமடைந்தார்கள். அதற்குப் பிறகு பிருகு முனிவர், பிள்ளையார் பெருமானின் மகிமைகளையெல்லாம் சோமகாந்தனான மன்னனுக்கும் அங்கிருந்த மற்றவர்களுக்கும் எடுத்துரைக்கத் துவங்கினார்.

## வேதவியாசரின் கதையும் அவரது மனக்குழப்பமும்

முன்னொரு காலத்தில் பூலோகம், சுவர்க்கலோகம், பாதாள லோகம் ஆகிய மூன்று உலகங்களிலும் உயிர்கள் செய்த கர்மவினைகளின் காரணமாக, மக்களிடையே தெய்வ நம்பிக்கை குறைந்து, இறைவனின் வழிபாடுகளும் குறைந்தன. வானவர், தவமுனிவர்கள், மானிடர் ஆகியவர்களின் அறிவு, வேத வழிகளிலிருந்தும் நீதி

நெறிகளிலிருந்தும் வழுவியது. மக்கள் தங்களுடைய அறியாமையினால், மனித சக்தியையும் மீறிய தெய்வசக்தி ஒன்று இருப்பதையே நம்ப மறுத்தார்கள். உலக வாழ்க்கை முறைக்குத் தேவையான உலகியல் நூல்கள் காட்டும் வழி ஒன்றையே உண்மையான அறிவு என்றும் ஆகாரம், ஆடையலங்காரம் ஆண் பெண் கூடி மகிழும் சிற்றின்ப கேளிக்கைகளைத் தவிர வேறு மோட்சம் என்று ஒன்று இருப்பதாக நினைப்பதையே அறியாமை யென்றும் கருதினார்கள். இதனால் மக்கள் தங்கள் மனம் போன போக்கில் பலவிதமான பழக்கங்களையும் பாவங்களையும் துணிந்து செய்யலானார்கள்.

இதையெல்லாம் கண்ட திருமாலும் நான்முகனும் மிகவும் மனம் வருந்தி, சிவபெருமானின் கருணையின்றி, இந்த கேடு நிலை மாறாது என்று நிச்சயித்து, அவர்கள் இருவரும் கைலாசத்துக்குச் சென்று, சிவபெருமானை வணங்கினார்கள்.

சிவபெருமான் அவர்களுக்கு ஆசனமளித்து அவர்கள் தம்மிடம் வந்த காரணம் என்னவென்று கேட்டார்.

அப்போது திருமாலும் நான்முகனும் பூவுலகத்துள் அன்றைய நிலைமையை விளக்கிச் சொல்லிவிட்டு "எம் பெருமானே! பூலோக வாசிகள் பிறவிக் கடலை நீந்திக் கடக்கும் வழிதெரியாமல், வேதகரம வரை முறைகளை மீறி பொய்யான வழிகளைப் பின்பற்றி தீவினைகளில் பரவி உழன்று பலவாறாகவும் அலைந்து மயங்குகிறார் கள். ஆகையால் தேவரீர் மனமிரங்கி உயிர்களின் மதி மயக்கத்தை அகற்றி தங்கள் திருவடித் தாமரைகளை அடையும் முக்திநெறியை அவர்களுக்குத் தாங்களே அறிவித்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்தார்கள்.

இந்த விண்ணப்பத்தைக் கேட்டு சிவபெருமான் திருமாலை நோக்கி "திருமாலே! நீ உனது கலைகளில்

ஒன்றைக்கொண்டு பூலோகத்தில் அவதரித்து, பல வாறாகச் சிதறிக் கிடக்கும் வேதங்களைத் திரட்டி அவை களை நான்கு வேதங்களாக வகுத்து, தகுதி வாய்ந்த முனிவர்களுக்கு அவற்றை உபதேசம் செய்வாயாக. அந்த முனிவர்கள் சிற்றறிவு வாய்ந்த ஆன்ம கோடிகளைப் புண்ணிய சீலர்களாக மாற்றி மோட்சமடைய வழிகாட்டு வார்கள். எனது பெருமைகளை எடுத்துக் கூறும் சிவாகமங்கள் இருபத்தெட்டையும் மகாபுராணங்கள் பதினெட்டையும் நாம் நமது நந்திக்கு உபதேசித்திருக் கிறோம். நந்தி, சனற்குமாரனுக்குப் போதித்திருக்கிறான். அவற்றை நீ சனற்குமாரனிடம் உபதேசமாகப் பெற்று பூமியில் பரவச் செய்து சகலரும் அறிவு விளங்கச் செய் வாயாக!" என்றார்.

வேதங்களை நான்காக வகுத்த வேதவியாசன், சனற் குமாரரிடம் சென்று, பதினெண் புராணங்களையும் அவரிடம் கற்றுத் தேர்ந்து, அவற்றை மக்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் வடமொழிச் சுலோகங்களாக இயற்றும் இலக்கியப் பணியில் ஈடுபட்டார்.

ஆனால் அவர் அந்த இலக்கியப் பணியைத் தொடங்குவதற்கு முன்னால் முழுமுதற் கடவுளான விநாயகப் பெருமானை நினைத்து, பிள்ளையார் சுழியைப் போட்டுவிட்டு புராணங்களை எழுதத் தொடங்கவில்லை. எல்லாருமே வழிபடத்தக்க கடவுளாக வும், ஒருவர் தம்மை நினைத்து செய்கின்ற காரியங்களை எல்லாம் சிறிதும் விக்கினமின்றி செயலாற்றி வைக்கும் விக்கினேசுவரரும், அழிவுக்கு அழிவு செய்யும தும்பிக்கை யுடைய பிள்ளையாரைப் பற்றி, தம் மனத்தில் நினைக் காமல் வேதவியாசன் தமது பணியைத் தொடங்கிய தால, விக்கினங்கள் பலவும் தோன்றின. விநாயகரின் அருளின்றி வேதவியாசரால் ஒரு சுலோகத்தையும் ஒழுங்காக எழுத முடியவில்லை. இதனால் மனக் குழப்பமடைந்த அவர், அவ்வாறு ஏற்பட்ட தமது மனக்

குழப்பத்திற்குக் காரணம் என்ன என்பதை அறிந்துகொள் வதற்காகவும் பிரும்ம தேவரைச் சந்தித்து விளக்கம் கேட் கவும் சத்திய லோகத்திற்குச் சென்று பிரும்ம தேவரை வணங்கி நின்றார்.

பிரும்ம தேவர், ''வேத விநாயகரே! நீர் வந்தகாரணம் என்ன?" என்று கேட்க, அதற்கு வேத விநாயகர், "படைப்புக் கடவுளே! பூலோகத்தில் சிலர் தெய்வ நம்பிக்கையற்ற நாத்திகர்களாகவும் வேதநெறிகளை நிந்திப்பவர்களாகவும் இருப்பதால் மக்கள் மனக் குழப்ப மடைந்துள்ளார்கள். அவர்களைச் சீர்திருத்தி நல்வழிப் படுத்த வேண்டிய நான், பதினெண் புராணங்களையும் எழுத நினைத்தேன். ஆனால் எழுத ஆரம்பித்தவுடனேயே எனது மனமும் அறிவும் மந்தமடைந்து, பித்தம் பிடித்தவனைப் போல மயங்கி மனநிதடுமாறுகிறேன். நான் ஏதாவது தவறு செய்தேனா என்று எனக்கே தெரிய வில்லை. எனது அறியாமை நீங்குவதற்கு உரிய வழி யென்ன? அதைத் தாங்கள்தான் அன்புடன் விளக்க வேண்டும்" என்று கேட்டார்.

பிரும்மதேவர் சிறிதுநேரம் தியானம் செய்துவிட்டு, பிறகு தமது ஞானதிருஷ்டியினால் காரணத்தைத் தெரிந்து கொண்டு, வேதவியாச முனிவரை நோக்கி புன்னகை செய்து "வியாசனே! எவ்வளவுதான் அறிஞனாக இருந்த போதிலும் வல்லமையாளராக இருந்தாலும் அநாதியாக வும் அகண்ட ஆனந்த உருவாகவும் இருந்து அழிவினுக் கும் அழிவைச் செய்யவல்ல விநாயகப் பெருமானின் கருணையில்லாவிட்டால், அவர்கள் எடுத்த காரியம் எதுவும் நிறைவேறாது. அதற்கு மாறாக அவர்கள் சோர்வுற்றுப் போய்விடுவார்கள். பிரணவ சொரு பியாகவும் முழுமுதற்கடவுளாகவும் விளங்கும் விநாயகரை முதலில் வணங்காததால், எத்தனையோ காரியசித்தியை அடையாமல் பரிகாசத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஆகையால் பிரவணத்தை முதலாகக் கொண்ட வேதங் களை நீர் முன்பு வகுத்தபோது பிரணவத்தை உச்சரித்துத் தான் வேதம் ஓதுவது வழக்கம்.

ஆகையால் பிரணவப் பொருளான விநாயகர் அந்தப் பிரணவ மந்திரத்தால் தம்மைத் துதித்ததாக கருதியதால் தான் விக்கினம் எதுவுமின்றி உமக்கு அருள்புரிந்தார். இதனால்தான் பெரியோர்கள் எல்லா மந்திரங்களுக்கும் "ஓம்" என்ற சொல்லை முதல் மந்திரச் சொல்லாக அமைத்துள்ளார்கள். வேதங்களாலும் அளவிட்டுரைக்க முடியாதவர்—விநாயகர். இந்திரனும் பிரும்மனாகிய நானும் திருமாலும் உருத்திரரும்கூட, அந்த விநாயகனின் ஆக்ஞையை மீறாமல் அவரைத் தொழுகிறோம். அத்தகைய தலைமைக் கடவுளான அவரே, ஒன்றைச் செய் பவரும் ஒன்றை நீக்குபவரும், ஒன்றைவிட்டு ஒன்றை முடிப்பவரும் தம்மை நினையாதவருக்கு இடையூறு செய்பவருமாவார். ஆகையால் அத்தகைய முழு முதற் கடவுளான விநாயகரை, நீ மனத்தில் கொண்டு நினைக்காமலும் வாயால் வாழ்த்தாமலும் உடலால் வணங்காமலும் அறிவின் அகம்பாவத்தால் நீயாகவே புராணம் எழுத ஆரம்பித்தாய். அதனால்தான் உனக்கு இத்தனை மனக் குழப்பங்களும் இயலாமையும் இடையூறு களும் ஏற்பட்டன. இனியாவது அந்த யானை முகத்து விநாயகரை வணங்கி, "பரம தயாநிபதியே எல்லாவற் றையும் உணர்ந்த வேழமுகத்தோனே! என் அபசாரத் தைப் பொறுத்தருள்வீர்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டு, பூசை செய்வாயாக.

இல்லையென்றால், நீயாகவே சுயேச்சையாகவே ஒரு புராணத்தை எழுத நினைத்தாலும், ஆயிரம் கோடி கற்ப காலமானாலும் உன்னால் அந்தப் புராணத்தின் முதல் பாடலைக் கூட எழுத இயலாது, இனி அவனைத்

துதிக்க வேண்டிய மந்திரங்களைச் சொல்கிறேன். கேட்டு கொள்.

அம் மந்திரங்களாவன: ஓம் சுமுகாய நம: ஓம் ஏக தந்தாய நம: ஓம் கபிலாய நம: ஓம் கஜகர்ணகாய நம: ஓம் லம்போதராய நம: ஓம் விநாயக நம: ஓம் விக்கின ராஜாய நம: ஓம் கணபதியே நம: ஓம் தூமக்கதவே நம: ஓம் கணாதியக்ஷாய நம: ஓம் பாலச்சந்திராய நம: ஓம் கஜானனாய நம: ஓம் வக்கிரதுண்டாய நம: ஓம் சூர்ப்ப கண்ணாய நம: ஓம் ராம்பாய நம: ஓம் ஸ்காந்தபூர்வ ஜாய நம: இவ்வாறு விநாயகரை நினைத்து, அவருடைய பதினாறு துதிப்பெயர்களையும் உன் வாயினால் சொன்னாலும் காதுகளால் கேட்டாலும் திருமணம், வித்தை, கல்வி, சுபம், சுகம், வேள்வி, போராட்டத்தில் வெற்றி முதலிய அனைத்துமே நினைக்கும் முன்பே நிறைவேறி விடும் ஆகையால், அத்தகைய விநாயகரை வழிபட்டு, உன் அறிவை மயக்கிய மாயத்திரையை அகற்றிக் கொண்டு, நீ மேற்கொண்டுள்ள நற்பணியை நிறை வேற்றிப் புகழையும் பெருமையையும் அடைவாயாக!'' என்று பிரம்மதேவர் வேதவியாசருக்குக் கூறினார்.

## வியாசர் பெற்ற உபதேசமும் கலிகால நடப்புகளும்

இவ்வாறு, பிரும்மதேவர் கூறியவை அனைத்தை யுமே உண்மை என்பதை உணர்ந்த வேதவியாசர், விநாயக மந்திரங்களைப் பிரும்மதேவரிடமே உபதேசம் பெற வேண்டும் என்று விருப்பம் கொண்டு, உள்ளத்தில் ஆனந்தம் பொங்க, பிரும்மதேவரை மீண்டும் வணங்கி, "நான்முகக் கடவுளே! பிரணவ வடிவமாக விளங்கும் விநாயகப் பெருமானை வழிபடக்கூடிய விதிமுறைகள் என்ன?" என்று கேட்டார்.

அதற்குப் பிரும்மதேவர் பின்வருமாறு கூறினார்.

"கணேச ஆகமத்தில் எண்ணற்ற கோடி மந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவற்றுள்ளே ஆறு எழுத்து (சடாக்ஷரம்) மந்திரமே மேலானது. அதைவிட உயர்வானது ஏகாக்ஷர மந்திரமாகும். அதுவே ஓம்கார மந்திரமாகும். அந்த ஏகாக்ஷர மந்திரத்தை எப்படிச் சொல்லி வணங்க வேண்டும் என்பதையும் உனக்குச் சொல்லுகிறேன். நீ நீர்துறைக்குச் சென்று நீராடி, அந்தணர்களுக்கு விதிப்படி செய்யவேண்டிய தீக்ஷை முதலானவற்றைச் செய்து அந்த மகாமந்திரத்தைத் தியானம் செய்ய முனைய வேண்டும். தூய்மையான ஓரிடத்தில் அமர்ந்து, மந்திர நீரைத் தெளித்துப் பூதசுத்தி, மந்திர சுத்தி முதலிய சுத்தங்களைச் செய்து, அகம், புறம் உள்ளடக்கும் பிராணயாம நிலையில் அமர்ந்து, இந்த மந்திரத்தைத் தியானிக்க வேண்டும். இந்த மந்திரத்திற்குரிய விநாயக மூர்த்தியின் திருவுருவம் முழுவதையும் மனத்தில் நிறுத்தித் தியானம் செய்ய வேண்டும்.

இவ்வாறு தினந்தோறும் கணேசரைப் பூசித்து, அந்த மகா மந்திரத்தை உன்னால் இயன்ற அளவு செபித்து உருவேற்றி வருவாயானால் எங்கும் நிறைந்திருக்கும் விநாயகப் பெருமான் கோடி சூரியர்கள் ஒரே சமயத்தில் உதயமானதைப் போல சோதி மயமான தமது உருவத்தோடு உன் முன்பு தோன்றி உனக்குக் காட்சியளிப்பார்.

விநாயகரின் ஏகாக்ஷர மந்திரத்தை, கடவுள் பக்தியுடையவர்களுக்கும் தயை தாட்சண்யம், கருணை, நல்லொழுக்கம் நிறைந்த உத்தம சீலர்களுக்கும் உபதேசிக்க விரும்பினால், அந்த மந்திரத்தை விதிமுறைப்படி தீட்சை செய்து உபதேசிக்க வேண்டும். அத்தகைய உபதேசத்தைச் செய்தவர்களும் உபதேசத்தைப் பெற்றவர்களும் உயர்ந்த பதவிகளையடைந்து பேரின்ப வீடு பெறுவார்கள். இத்தகைய விநாயகர் பூசை விதிமுறைகளை

சிவபெருமான் எனக்குக் கருணைகூர்ந்து உபதேசித்தருளி னார். அவற்றையெல்லாம் நானும் உனக்கு உபதேசம் செய்தேன்'' என்றார்.

நான்முகனிடம் இவ்வாறு உபதேசம் பெற்ற வியாச முனிவர் அகமும் முகமும் மலர்ந்து "நான்முகக் கடவுளே! கணேசமூர்த்தியை வழிபட்டு நற்கதியடைந்தவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் தாங்கள் அன்புகூர்ந்து எனக்குச் சொல்லியருள வேண்டும்!'' என்று வேண்டினார்.

அதற்குப் பிரும்மதேவன், "வியாசமுனிவனே! பிள்ளையாரைப் பணிந்து வழிபட்டு நற்பேறு பெற்றவர்களும் பிள்ளையாரின் திருவிளையாடல்களும் எண்ணிறந்தவை. என்றாலும் அவற்றில் ஒரு சிலரின் சரித்திரங்களை மட்டும் நான் இப்போது உனக்குச் சொல்லுகிறேன்!" என்று கூறிவிட்டு, விநாயகரின் திருவருள் பெற்ற மெய்யன்பர்களின் வரலாறுகளையும் பிள்ளையாரின் திருவிளையாடல்களையும் வியாச முனிவருக்கு விவரித்துக் கூறினார்.

## கலியுகமும் விநாயகர் அவதாரமும்

வரவிருக்கும் கலியுகத்தில், மக்கள் அறநெறிகளை விட்டு வழிதவறிச் செல்வார்கள். வருணாசிரம தர்மங்கள் எல்லாம் கெட்டு, அதர்மம் மேலோங்கும். மற்ற உயிர்களுக்குப் பல வகையிலும் தீங்கிழைத்தல்; மற்றவர்களின் கடினமான உடல் உழைப்பையும் ஆன்மீக உழைப்பையும் சுயநலத்துக்காகப் பயன்படுத்தல்; கல்வி, கேள்விகளையும் நல்ல ஒழுக்கங்களையும் மீறி நடத்தல்; தானம், தருமம், தவம், தியானம் முதலியவற்றைக் கைவிடுதல், குருதட்சினை நியாயமான கூலி முதலியவற்றைக் கொடுக்காமல் வஞ்சித்தல்; அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் ஒழுக்கங்களையும் வெறுத்து ஒதுக்குதல், கூடிக்குலாவுதல், அசுத்த நீர், எச்சில், மலம், சிறுநீர் என்ற நால்வகை

அசுத்தங்களையும் பொருட்படுத்தாமல் நடந்துபோதல். தெய்வங்களை வழிபடும் இடத்திற்குப் போகும்போதும் அசுத்தமான இடத்தில் சஞ்சரித்த பிறகும் ரோமத்தைக் கழித்த பிறகும், இழிந்தவர்களைத் தூண்டிய பிறகும் ஆண் பெண் கலவியை நடத்திய பிறகும் சுத்தமாக நீராடிக் குளிக்காமல் இருத்தல்—

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களையும் அறிந்தவரை உத்தமர்கள், பசுக்கள், சந்திர சூரியர் முதலியவற்றைப் போற்றாமல் புறக்கணித்தல், அரசன், ஆசிரியர், அன்னை, தந்தை மூத்தவர் எனப்படும் ஐம்பெரும் குமாரர்களையும் பேணாதிருத்தல், அவர் களைப் போற்றி வணங்காமலும் உணவு உண்ணுதல், பெரியவர்கள், விருந்தாளிகள், பசுக்கள், தனது வேலை யாட்கள் தனது பிள்ளைகள் ஆகியோருக்கு உணவிடாமல் புறக்கணித்தல் பெரியோரிடமிருந்து ஒரு பொருளை வாங் கும்போது ஒரு கையினாலேயே வாங்குவதும் கொடுப்பது மான அவமதிப்பு, அலட்சியம், எவரிடமும் வெறுப்பும் எரிச்சலும் காட்டுதல், அந்திப்பொழுதில் ஒளிதரும் விளக் கைக் கும்பிடாதிருத்தல், இரு பெரியவர்களின நடுவே குறுக்கிட்டுச் செல்லுதல்—

புல்வெளி நிலம், சாணம், மயானவழி, புண்ணிய தீர்த்தம், தெய்வீகத் திருக்கோயில்கள், நிழல், பசுக்கூட் டம் நிற்கும் இடம், சாம்பல் முதலானவற்றின் மீது எச்சில் உமிழ்தல், சிறுநீர் கழித்தல்கள், களவு, சூது, கோரம், கொலை என்னும் பஞ்சமா பாதகங்களையும் மனங்கூசா மல் செய்தல், பொய் சாட்சி கூறுதல், பேராசையால் பிறர் பொருளைக் கவர நினைத்தல், பிறருடைய சிறப்பைக் கண்டு பொறாமையும் துவேஷமும் அடைதல், தன்னலம், ஜீவஹிம்சை, தன் சுவைக்காக பிற ஜீவன்களை வதைத் தல். நெருப்பைத் தாண்டுதல், தன் தலையில் தேய்த்து வழிந்து வரும் எண்ணெயைத் தன்னுடம்பிலேயே தேய்த்

துக் கொள்ளுதல், தனது தீவினைக் குற்றங்களைப் பிறரிடம் மனங் கூசாமல் சொல்லிப் பெருமை பாராட்டிக் கொள்ளுதல், தன் மனைவியைப் பிறரிடத்தில் பிதற்றுதல், தன் தொடையில் வைத்து அன்னத்தைப் புசித்தல், பிறரைத் துன்புறுத்தி இன்பமடைதல், தன்னைத்தானே வதைத்துக் கொள்ளுதல், கால்விரலால் நிலத்தைக் கீறுதல், ஆடையில்லாமல் புனித நீர் நிலைகளில் இறங்குதல், கொடியவர்களோடு கூடியிருத்தல், மெய்யறிவுகளைப் புறக்கணித்தல், பெரியோரின் இருக்கைகளை உதைத்து அவமதித்தல், காரணமில்லாமல் சிரித்தல்—

நெல், நகங்களையும் ரோமங்களையும் பற்களினால் கடித்தல், பெரியவர்களை அவமதித்து மோசம் செய்தல், பொய் பேசுதல், நெருப்பில் இரு கால்களையும் பொசுங்க விடுதல், நல்லவர்களைக் கெட்டவர்கள் என்று கூறி இகழ்ந்து பேசுதல், காலோடு காலைத் தேய்த்துக் கழுவுதல், இடது கையால் தலையைத் தொடுதல், உணவுண்ணும் பாத்திரத்திலேயே துப்புதல், பாழடைந்த வீட்டில் படுத்து உறங்குதல், சுடுகாட்டுப் புகையில் நிற்றல், மயிர், கரி, எலும்பு, சாம்பல், முள் முதலியவற்றைத் தண்ணீரில் போடுதல் நெருப்பை தொப்புழுக்குக் கீழே பிடித்து, நெருப்பில் எச்சிலை உமிழ்தல், நீரை ஊற்றி நெருப்பை அணைத்தல், துணியினாலும் முறத்தினாலும் நெருப்பை விசிறி அனல் மூட்டுதல், நின்றவாறும், படுத்தவாறும் சிரித்தவாறும் சாப்பிடுதல்—

சாம்பல் கரி, செங்கல், குறிப்பிடப் பெறாத மரக்குச்சிகள் முதலியவற்றால் பல் துலக்குதல், முதல்நாள் சமைத்த சாதம், பழங்கறி, முட்டை, சுரைக்காய், முதலியவற்றைச் சாப்பிடுதல், மதுபானத்தை விற்றல், மதுபானம் அருந்த இணங்குதல், மதுவருந்துவோருடன் கூடியிருத்தல், சிவனையும் சிவனடியார்களையும், வேதம். சிவாகமம்

ஸ்மிருதி, புராணம் முதலான மேன்மை வாய்ந்த வித்தை களையும் விபூதி,ருத்திராட்சங்களையும் இகழ்ந்துரைத்தல், பொழுது விடிவதற்கு முன்னதாகக் கண்விழித்து எழுந்திரா மல் படுக்கையிலேயே படுத்திருத்தல், தன் மனைவியோடு சேரக்கூடாத நாள்களிலும் மாதவிலக்கு நாள்களிலும் அவ ளுடன் கூடி மகிழ்தல், மனைவியுடன் கூடி மகிழவேண்டிய நாள்களில் கூடி மகிழாதிருத்தல், திருமணம், தெய்வீக பூசை சிரார்த்தம், திருவிழா, வேள்வி முதலானவற்றைச் செய்யும் நாள்களில் விருந்தாளிகளுக்கு உணவளிக்காமல் இருத்தல், பலர் நடுவே பிறரைப் பழித்துரைத்தல், புறங் கூறுதல், நம்மைவிடக் கீழானவரையும் வறுமையானவர் களையும் அவமதித்து வழிமுறை இகழ்ந்து பேசுதல், நையாண்டி செய்தல், வஞ்சனை, இச்சகம், பயனில சொல்லுதல், நாடிவந்தவரை வரவேற்று புன்சிரிப்புடன் இன்சொல் கூறாமல் உள்ளம் நையச்செய்தல், தனது குலத்திற்கோ அல்லது குடும்பத்துக்கோ ஒவ்வாத தொழில் களைச் செய்தல், எரிந்துகொண்டிருக்கும் தீபத்தை வாயி னால் ஊதி அணைத்தல், பழிபாவங்களுக்கு அஞ்சாமல் இருத்தல்—

தனக்கு ஒருவர் அளித்த உணவை இகழ்ந்து பேசுதல், தான் செய்த தானதர்மத்தையும் விரதங்களையும் தானா கவே புகழ்ந்து பேசுதல், தனக்குக் கிடைக்கமுடியாததைக் குறித்துப் பேராசைப்படுதல், தான் இழந்த பொருளையே நினைத்து ஓயாமல் வருத்தமடைதல், கீழோருக்குத் தனது எச்சிலைக் கொடுத்தல், நம்பிக்கைத் துரோகம் செய்தல், அடைக்கலப் பொருளை அபகரித்தல் ஆகிய கணக்கி லடங்காத தீய செயல்கள் பலவற்றையும் செய்து, நோய், வறுமை முதலிய துன்பங்களிலும் சிக்கல்களிலும் தத்த ளித்தவாறு வாழ்வார்கள்.

அத்தகைய கலியுகத்தில், வேத ஆகமநெறிகள் யாவும் சின்னாபின்னமாகிவிடும். நீதி நெறிகள் நிலை தவறிப்

போகும். அதனால் தேவர்கள் அனைவரும் துன்ப மடைந்து கலியுக முடிவில் விக்கின ராஜரின் திருவடி களைப் பணிந்து வணங்கி 'பக்தியோடு தோத்திரம் செய்து நன்மைசெய்ய வேண்டுவார்கள். அதற்குப் பிள்ளையார் கருணை கூர்ந்து தாமிர வர்ணத்துடன் கூடிய மகோற்கட விநாயகராக திருஅவதாரம் செய்வார்.

அவரது இரண்டு திருக்கரங்கள் ஒன்றில் தாமரை மலரையும் மற்றொரு கையில் வாளாயுதத்தையும் ஏந்தி கறுப்பு நிறக் குதிரையின் மேல் அமர்ந்து கணக்கற்ற போர்க் கருவிகளுடனும் நால்வகைச் சேனைகளுடனும் பூலோகத்திலுள்ள அதர்மக்காரர்களையும் தீயவர் களையும் அழிப்பார். அதற்குப் பிறகு கிருத யுகத்தில் தருமதேவதை நான்கு பாதங்களுடன் உலாவுவாள். அதனால் அந்த யுகத்தில் எந்தவிதக் குறையும் நிகழாது.

ஆகையால், வேதவியாசனே! இதுவரையில் நான் சொன்னவற்றைக் கொண்டு திருப்தியடைவாயாக! ஏனென்றால் மகா கணபதியான பிள்ளையாரின் திருவிளை யாடல்களில் ஒரு பகுதியைக்கூட நம்முடைய ஒரு பிறவி முழுமையும் இடைவிடாமல் எடுத்துச் சொன்னால்கூட அதற்கு ஒரு முடிவே கிடையாது.

பிள்ளையாரின் சரித்திரங்களைக் கேட்கும் போது, மத்திம குணத்தினர் அவையெல்லாம் உண்மையோ அல்லது பொய்யோ என்று மனக் குழப்பமடைவார்கள். உத்தம குணமுடையவர்கள், எல்லாமே உண்மைதான் என்று புரிந்து கொள்வார்கள். இவைகளை உண்மை என்று நம்பாதவர்கள் அதிகக் கொடுமையான இருபத்து எட்டுக் கோடி நரகங்களிலும் அநேக முறைகள் விழுந்து விழுந்து துன்புறுவார்கள். ஆகையால் பிள்ளையார் பெரு மானாகிய விநாயகப் பெருமானை நீயும் வணங்கி வழிபடு

வாயாக! என்று வேதவியாச முனிவருக்கு, நான்முகப் பிரம்மன் கூறினார்.

## புராணங்கள் பிறந்த கதை

அதற்குப் பிறகு, வேதவியாச முனிவர் பூவுலகத்திற்குத் திரும்பி வந்து, மிருக நடமாட்டமும் வேறு எந்த விதமான தொந்திரவுமில்லாத ஒரு கானகத்தில் விநாயகப் பெருமானின் ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்த வண்ணம் பன்னிரண்டு ஆண்டுகள் வரை இடைவிடாமல் கடுந்தவம் புரிந்து வந்தார். வியாசமுனிவருடைய தவத்தையும் பக்தியையும் மெச்சிய விநாயகப் பெருமான் அவருக்குக் காட்சி தந்தார். ஒரே சமயத்தில் கோடி சூரியர்கள் ஒன்றாக உதயமானதைப் போல ஒளி பொருந்திய செந்தூர மேனியோடும் சிவந்த ஆடையோடும் சிவந்த பூமாலைகளுடனும் சிவந்த ஆபரணங்களுடனும் செஞ்சாந்துப் பூச்சுடைய தும்பிக்கை முகத்தோடும் அவர் விளங்கினார். அவரது திவ்வியத் திருமேனியின் உக்கிரத்தைப் பார்க்கப் பயந்த வேதவியாச முனிவர் தம்மிரு கண்களையும் இறுக மூடிக்கொண்டார்.

அதைக் கண்ட விநாயகப் பெருமான் "பராசர முனிவரின் மைந்தனே! அஞ்சாதே! இத்தனைக் காலமாக எவரை உன் மனத்தில் நினைத்து கடுந்தவம் புரிந்தாயோ அது நான்தான்! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்!'' என்று அன்புடன் கூறினார்.

வியாச முனிவர் கண்களைத் திறந்து பிள்ளையாரின் தரிசனத்தைக் கண்டு அவரது திருவடிகளில் பலமுறைகள் விழுந்து வணங்கித் துதித்து, தம்மிரு கரங்களையும் தலைமேல் குவித்து, நாக்குழற கண்களில் ஆனந்தக் கண்ணீர்

பெருக, உடல் முழுவதும் மயிர்க்கால்கள் சிலிர்க்க, பிள்ளையாரின் பெருமைகளைக் கணக்கற்ற வேதாகம சுலோகங்களாகப் பாடிப்புகழ்ந்து—

"சகல காரணகர்த்தாவே! முழுமுதற் கடவுளே! உமது திருவடிகளை அடியேன் தரிசித்த இந்தக் கணமே உத்தமனானேன். இனியாவது என்னுடைய குறைகளை நீங்கச் செய்து எனது அறிவு மயக்கத்தையும் பாசப் பிணைப்பையும் போக்கி, என் மனத்தில் எப்போதும் தங்களைப் பூசிக்கும் பக்திப் பாவத்தையளித்து மெய்ஞான சுகத்தையும் தந்து எப்போதும் என் இதயத்தில் தாங்கள் குடியிருக்க வேண்டும். இவைகளைத் தவிர நான் எழுதத் துவங்கும் பதினெட்டு புராணங்களையும் எவ்வித இடையூறும் விக்னமும் ஏற்படாமல், தெளிவான அறிவோடும் இயற்றும்படியான ஆற்றலைத் தந்தருள வேண்டும்!'' என்று வேண்டினார்.

பிள்ளையாரும் அவருக்கு அவ்வாறே வரமளித்து "பதினெட்டுப் புராணங்களைத் தவிர, மேலும் பல உப புராணங்களையும் இயற்றும் வல்லமையைப் பெறுவாய்!" என்று ஆசி கூறி, வியாசரின் இதயகமலத்தில் குடியேறினார். "அதனால் வேத வியாசர் வாக்கு வன்மையும், எழுதும் திறமையும் பெற்று, தமக்கு பிள்ளையாரின் தரிசனம் கிடைத்த இடத்தில் ஒரு கோயிலையும் கட்டி, அதில் விநாயகப் பெருமானை வேத முறைப்படி பிரதிஷ்டை செய்து, விதிப்படி பூசைகள் செய்து வழிபட்டு சதா சர்வ காலமும் விநாயகப் பெருமானையே தம்முடைய மனத்திலே தியானித்து அவரது பேரருளைப் பெற்று உலகத்திலுள்ளவர்கள் வியந்து பாராட்டத்தக்க பதினெண் புராணங்களையும் குறைவின்றி இயற்றினார்'' என்று சோமகாந்த மன்னனுக்கு பிருகு முனிவர் கூறினார்.

## சோமகாந்தன் முக்தியடைதல்

சோமகாந்த மன்னனுக்கும் அவனைச் சேர்ந்தவர் களுக்கும் விநாயகரின் மகிமையையும் புராணங்கள் தோன்றிய வரலாற்றையும் பிருகு முனிவர் விரிவாகக் கூறிவிட்டு "சோமகாந்த மன்னனே! நீயும் அந்த விநாயகப் பெருமானை வழிபட்டு, உனது விருப்பங்களை நிறைவேற் றிக் கொள்வாயாக!'' என்று கூறினார்.

அவர் கூறியவாறே, சோமகாந்தன் பிருகு முனி வரின் ஆசிரமத்திலேயே தங்கியிருந்து தினந்தோறும் பிள் ளையார் புராணத்தைப் பாராயணம் செய்தும் கணபதி மந் திரங்களைச் சொல்லி பிரார்த்தனை செய்தும், பிருகு முனி வரின் திருவடிகளை வணங்கியும் நாள்களைக் கழித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு ஓராண்டு காலம் சென்றதும் சோமகாந் தனின் பக்தியைப் பாராட்டிய விநாயகப் பெருமான் தேவ கணங்களை அழைத்து "பக்தனாகிய சோமகாந்தனை இவ்விடம் அழைத்து வாருங்கள்" என்று கட்டளை யிட்டார்.

உடனே தேவகணங்கள், ஜோதிமயமாக ஒளிவீசும் ஒரு தெய்வ விமானத்தைக் கொண்டு வந்து பிருகு முனிவரின் ஆசிரமத்தின் முன்பு நிறுத்தினார்கள். அதைக் கண்ட பிருகு முனிவர், புன்னகையுடன் சோமகாந்தனை அழைத்து "அரசே! உன் பக்திக்கு மெச்சிய விநாயகர், உனக்கு விமானம் அனுப்பியுள்ளார். இந்த விமானத்தில் நீயும் உனது மனைவியும் உனது அமைச்சர்களும் ஏறிய மர்ந்து, அவருடைய உலகத்திற்குச் சென்று, நித்தியா னந்த அனுபவத்தில் லயித்திருப்பீர்களாக!" என்று வாழ்த்தியருளினார்.

சோமகாந்தன் அவரது திருவடிகளை வணங்கி "வார்த்தையால் விவரிக்க முடியாத ஆனந்த ரூபரான விநாயகர் அடியேனிடம் காட்டிய திருவருளுக்கு நான் என்ன கைமாறு செய்ய வல்லேன். தாங்கள் அன்புடன் காட்டிய வழியினாலன்றோ நான் கணேசரின் திருவருளைப் பெற்றேன். எனது கொடிய நோயும் என்னை விட்டு நீங்கப் பெற்றேன். தங்களால் எனக்குக் கிடைத்த பெருவாயவை நினைக்கும்போது தங்களைத் தவிர எனக்கு வேறு என்ன பந்த பாசப் பற்று உண்டு!" என்று ஆனந்தப் பரவசமுடன் கூறினான். அவனைத் தேவகணங்கள் பார்த்து "நீ பிள்ளையார் புராணத்தைக் கேட்ட புண்ணியச் சிறப்பினால்தான் வினாயகமூர்த்தி அருள்கூர்ந்து உன்னைத் தமது உலகத்துக்கு அழைக்கும் உன்னத பேறு பெற்றாய்!" என்றார்கள்.

அதற்குப் பிறகு சோமகாந்தன் பிருகு முனிவரையும் தேவகணங்களையும் தேவ விமானத்தையும் கும்பிட்டு விட்டு தன் மனைவியுடனும் அமைச்சர்களுடனும் விமானத்தில் ஏறியமர்ந்தான்.

அவர்களைச் சுமந்து சென்ற அந்த விமானம் வானவெளியில் பறந்து சென்றுகொண்டிருந்தது. அப்போது சோமகாந்தனின் தலைநகரம் கீழே தூரத்தில் காணப்பட்டது. அதைக் கண்டதும் அவன் மனைவியான சுதன்மை தன் கணவரை நோக்கி "நாதா! இப்போது அரசாளும் நமது புதல்வன் ஏமகண்டனைப் பார்க்காமல் நம்மால் போக முடியுமா? நம் வரவை எதிர்பார்த்து அவன் ஆவலுடன் காத்திருப்பானே! நாம் அவனைப் பார்க்காமல் விண்ணுலகத்திற்குச் சென்றால் அவன் ஏமாந்து மண்ணுலகத்தில் பெருந் துக்கத்தோடு வருந்துவான். ஆகவே நாம் அவனைப் பார்த்துவிட்டு அதன்பிறகு போவது நல்ல

தல்லவா?" என்று புத்திர பாசத்துடன் கண்ணீர் பெருகக் கூறினாள்.

அவள் கூறியதைக் கேட்டு, விமானத்தை ஓட்டிச் சென்ற தேவகணங்கள் மனமிரங்கி "உமது மகன் ஏமகண்டனும் விநாயகக் கடவுள் மீது அளவில்லாத பக்தி யுடையவனாகவும் வேதாகம முறைப்படியும் கணேச பூசையை தினந்தோறும் செய்து பரிபக்குவம் அடைந் திருக்கிறான். ஆகையாலும், நீங்களும் அவனைப் பார்த்து விட்டுச் செல்ல விரும்புவதாலும், நாங்கள் இந்த விமா னத்தை அவனிருக்கும் நகரத்துக்கு வெளியே ஒருபுறமாக நிறுத்துகிறோம். நீங்கள் உங்கள் புத்திரனை இங்கு வர வழைத்துப் பார்த்துவிட்டு, மனத்தைத் திருப்திப்படுத்திக் கொண்ட பிறகு, மறுபடியும் நாம் புறப்படலாம்!'' என்றார்கள். விமானத்தை தேவநகரத்தின் வடக்குத் திசையில் ஒருபுறமாக நிறுத்தினார்கள்.

சோமகாந்தன் மகிழ்ச்சியடைந்து, தம்முடன் வந் திருந்த அமைச்சர்கள் இருவரையும் ஏமகண்டனிடம் அனுப்பினான். அமைச்சர்கள் ஏமகண்டனின் அரண் மனைக்குச் சென்றதும் ஏமகண்டன் திகைத்தான். வன வாசத்திற்குச் சென்ற தனது தாய் தந்தையர் இருவரும் வராமல் அவர்களுடன் சென்ற அமைச்சர்கள் இருவர் மட்டுமே வனவாசத்திலிருந்து திரும்பி வருகிறார்களே! வனவாசம் சென்ற தனது பெற்றோர்கள் உயிருடன் இருக்கிறார்களோ இல்லையோ! என்று மனங்கலங்கி "என் தாய் தந்தை எப்படியிருக்கிறார்கள்!" என்று அமைச் சர்களைக் கேட்டபின், அமைச்சர்கள் இருவரும் வனத்தில் நடந்தவைகளையெல்லாம் ஏமகண்டனிடம் கூறி, அவனது பெற்றோர்கள் இருக்குமிடத்திற்கு அழைத்துச்சென்றனர். ஏமகண்டன் தனது அமைச்சர்களும் குடிமக்களும் தன் னைப் பின் தொடர்ந்துவர, சோமகாந்த மன்னனைச் சந்திப்பதற்குச் சென்றான்.

மன்னனைக் கண்டதும் மகிழ்ச்சியுடன், அவனது பாதங்களில் விழுந்து வணங்கினான் ஏமகண்டன். அப்போது சோமகாந்தனும் சுதன்மையும் இளவரசனை வாரியெடுத்து மார்பில் அணைத்து தழுவிக் கொண்டார்கள். மன்னன் இளவரசனிடத்தில், பிருகுமுனிவரின் ஆசிரமத்தில் நடந்தவைகளையும் தனது தொழுநோய் முழுமையாகக் குணமானதையும் சொல்லிவிட்டு, தெய்வ விமானத்தின் மூலம் விநாயகரின் உலகத்திற்குச் சென்று கொண்டிருப்பதாகவும் போகும் வழியில் அவனைப் பார்க்க ஆசைப்பட்டு விமானத்தை நகர எல்லையில் நிறுத்தியதையும் கூறிவிட்டு "இனிமேல் எங்களைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நீதி நெறி தவறாமல் ராஜ்யத்தை ஆண்டு வருவாயாக! என்று வாழ்த்தினான். பின்னர், மன்னனைப் பிரிந்து செல்ல விரும்பாத குடிமக்களும் இளவரசனும் மன்னனை நோக்கி, இந்தப் பூலோக வாழ்க்கையில் எங்களுக்குப் பற்றுமில்லை; பாசமுமில்லை. இங்கு துக்கத்தைத் தவிர சுகமெதுவுமில்லை. எனவே, நீங்கள் செல்லும் பிள்ளையாரின் பேரின்ப உலகத்திற்கே நாங்களும் வருகிறோம்!'' என்றார்கள்.

குடிமக்களின் விருப்பத்தையும் தன் மகனின் விருப்பத்தையும் சோமகாந்தன் சிந்தித்துப் பார்த்துவிட்டு "எனது அன்பிற்குரியவர்களே! உங்களையும் விநாயகக் கடவுளின் உலகத்திற்கு அழைத்துச் செல்வதற்கு எனக்கு எந்தவிதமான அதிகாரமுமில்லை. கணேசரின் திருவருளால் நான் அந்த நிலையை அடைய முடிகிறதே தவிர, நினைத்தவுடன் அந்த நிலையை அடைய முடியாது. இப்போது நம்மால் செய்யக்கூடியது எதுவுமில்லை!'' என்றான்.

இவ்வாறு இளவரசனும் சோமகாந்தனும் குடிமக்களும் வருந்தி வாடக் கண்ட தேவ விமானிகள் சோமகாந்தனை நோக்கி—

"மன்னரே! உமது மகன் ஏமகண்டன் விநாயகப் பெருமானை பூசை செய்து பரிபக்குவ நிலையை அடைந் திருக்கிறான். ஆகையால், அவன் இந்த விமானத்தில் ஏறி வருவதற்குத் தகுதியுடையவன்தான். ஆனால் இந்த நகரத்து குடிமக்களோ! தேவாதி தேவரான விநாயகரின் மகிமைகளைக் கேட்டறிந்தவர்களல்லர்; அவற்றையெல் லாம் இப்போது அவர்களுக்குச் சொல்வதற்கு நமக்கும் நேரமில்லை. ஆயினும் விநாயகப் பெருமானின்மகிமைகள் முழுவதையும் கேட்டதனால் அடையக்கூடிய பலன்களை பெறுவதற்கும் நுட்பமான வழியும் உள்ளது அது தீவினைகளையெல்லாம் தீர்த்து சுகமளிக்கும் வழியாகும். அதன் சூட்சுமத்தை இப்போது சொல்லுகிறேன். காசி என்ற வடநாட்டுப் புண்ணிய க்ஷேத்திரத்திலுள்ள சப்தா வாணம் என்று சொல்லப்படும் ஏழு பிரகாரங்களில் ஐம்பத் தாறு விநாயகர்களின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளன. விநாயகரின் ஐம்பத்தாறு திருப்பெயர் களையும் நாங்கள் இப்போது உங்களுக்குச் சொல்லு கிறோம். அந்தப் பெயர்களை இந்த நகரத்து மக்கள் கேட்பார்களானால், அவர்கள் மிகவும் உன்னத நிலையை அடைவார்கள்!" என்று கூறி விநாயகரின் ஐம்பத்தாறு வடிவங்களின் பெயர்களையும் அவ் வடிவங்கள் அமைந் துள்ள காஷிக்ஷேத்திரத்தின் சுற்றுப் பிரகாரங்களைப் பற்றியும் கூறினார்கள்.

"நற்குடிமக்களே கேளுங்கள்! முதலாவது ஆவரணத் தில் துண்டி விநாயகர், துர்க்கை விநாயகர், அர்க்க விநாயகர், பிரசன்ன விநாயகர், வீம விநாயகர், சந்திர விநாயகர், இரண்டாவது சுற்றில் சித்ரூப விநாயகர், லம்போதர விநாயகர், கூபதந்த விநாயகர், சலாடக விநாயகர், குலப்பிரிய விநாயகர், சதுர்த்தி விநாயகர், பஞ்சமி விநாயகர், முண்ட விநாயகர், சமுஷித விநாயகர், விடங்க விநாயகர், நிச விநாயகர், ராஜபுத்திர விநாயகர்,

பிரணவ விநாயகர், உப்தாப விநாயகர் என்று பதினான்கு விக்கிரகங்களும் மூன்றாவது சுற்றுப் பிரகாரத்தில், வஞ்சிர துண்ட விநாயகர், ஏக தந்த விநாயகர், திரிமுகவிநாயகர், பஞ்சமுக விநாயகர், ஹேரம்ப விக்கின ராஜ விநாயகர், வரத விநாயகர் ஆகிய எட்டு விக்கிரகங்களும், நான்காவது ஆவரணத்தில் ஏகோப்யப்பிரத விநாயகர், சிங்க முக விநாயகர், கூர்திதாக்ஷ விநாயகர், நிப்பிரசாத விநாயகர், சிந்தாமணி விநாயகர், தந்த வக்கிர விநாயகர், அபிசாண்டி விநாயகர், ஊர்த்துவ தாண்ட முண்ட விநாயகர் என்று எட்டு முகூர்த்தங்களும், ஐந்தாவது பிரகாரத்தில், மணிகண்ட விநாயகர், ஆசாரசிருஷ்டி விநாயகர், கசகர்ண விநாயகர், கண்டார விநாயகர், சுமங்கலி விநாயகர், மந்திர விநாயகர் என்று ஆறு மூர்த்தங்களும் ஆறாவது ஆவரணத்தில், மோதக விநாயகர், சுமுக விநாயகர், துன்முக விநாயகர் கணபலி விநாயகர், அபர விநாயகர், ஆக்கின விநாயகர், துவார விநாயகர், அவிமுக்த விநாயகர் என்று எட்டு முகூர்த்தங்களும், ஏழாவது சுற்றுப் பிரகாரத்தில் ஆமோதக விநாயகர், பாகீரத விநாயகர், அரிச்சந்திர விநாயகர் என்று ஆறு மூர்த்தங்களும் என ஐம்பத்தாறு மூர்த்தங்கள் என்ற பிள்ளையாரின் திருநாமங்களை அந்தத் தேவவி மானிகள் எடுத்துச் சொன்னார்கள். அந்தத் திருநாமங் களைக் கேட்டதுமே, ஏமகண்டனும் அங்கிருந்த அனை வருமே தெய்வ சரீரத்தைப் பெற்றார்கள். அவர்களும் சோமகாந்த மன்னனுடனேயே விமானத்தில் விநாயகர் உலகத்தைச் சேர்ந்தார்கள். அங்கு விநாயகரின் சாருப பதவியைப் பெற்று வாழ்ந்திருந்தார்கள்.

இந்த மாபெரும் புராணத்தை எழுதி வைத்திருக்கும் வீட்டில் அஷ்ட ஐசுவரியமும் பொங்கிப் பொழியும். இதைத்தவிர பேய் பிசாசுகள், செத்த சடலங்கள் பாலக் கிரக தோஷம் முதலிய தீயவைகள் விநாயகர் அருளால்

விலகும். இந்தப் புராணத்தைப் பிள்ளையாரின் சந்நிதியின் முன்பாக அமர்ந்து பிரியமாகக் கேட்பவர்களுக்கு, அவர்கள் கொலை, களவு, கள்குடித்தல், குருநிந்தை, பொய்சொல்லுதல் போன்ற தீவினைகளிலிருந்தும் விடுபட்டு, அழகு, குணம், ஆயுள், குலம், சம்பத்து, செல்வம், வித்தை அறிவு ஆகிய எட்டுவிதி பாக்கியங்களையும் அடைந்து இனிமையாக வாழ்வார்கள்.

இந்தப் புராணத்தைக் கன்னிப்பெண் கேட்டால் அவள் நல்ல கணவனையடைவாள். மலடி கேட்டால் அழகான குழந்தைச் செல்வங்களைப் பெறுவாள். வறுமையிலுள்ளவன் கேட்டால் செல்வந்தனாவான். கல்வியறிவில்லாதவன் கேட்டால் கல்வியில் சிறப்படைவான்.

இந்தப் புராணத்தைப் படிப்பது, இதன் நன்மைகளைக் கேட்பது, இறை பூசை செய்வது, தங்கள் கையால் எழுதி தக்கவருக்குக் கொடுப்பது, மற்றவரைக் கொண்டு எழுதச் செய்வது ஆகிய புண்ணியங்களில் ஏதாவது ஒரு புண்ணியத்தை மட்டும் விட்டுவிடாமல் பாதுகாப்பவன் எவனோ, அவன் சிவனாரின் திரிசூலத்துக்கும் மாயனாரின் சக்கராயுதத்திற்கும் காலதேவனின் பாசத்திற்கும் நடுங்க மாட்டான்.

சௌனகாதி முனிவர்களே! ஐம்புலன்களையும் ஒருமைப்படுத்தி வென்று மேலான தவங்களைச் செய்த பெருமையை உடையவர்களே! பிள்ளையார் புராணத்தைக் கேட்ட மகத்துவத்தால் வேதவியாச முனிவரும் சோமகாந்த மன்னனும் அடைந்த மேன்மைகளைச் சொன்னேன். இனி இந்தப் பெருமை வாய்ந்த பிள்ளையார் புராணத்தை பிருகுமுனிவர் கூறியபடி மும்மூர்த்திகளும் வணங்கிய வரலாறுகள் கூறுகிறேன் கேளுங்கள் என்று

சூதமுனிவர், தம்மைச் சூழ்ந்திருந்த முனிவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

## வக்கிரதுண்ட விநாயகரும் மும்மூர்த்திகளும்

முன்பொரு காலத்தில் ஒரு பிரம்மப் பிரளயம் உண்டா யிற்று. அப்போது துவாதச ஆதித்தர்கள் என வழங்கும் தாத்துரு, சக்கரன், அரியமன், விஷ்ணு, அம்சுமான், இரணியன், பகவான், விவச்சுவான், பூடாசவித்துரு, துவஷ்டன் என்ற பன்னிரண்டு சூரியர்களும் ஒரே காலத்தில் உதித்து தொடர்ந்தாற்போல் ஒரு நூறாண்டுகள் பூவுலகினை உஷ்ணத்தால் தகித்து எரித்தனர். மழையே இல்லாமல் பெரும் வறட்சி ஏற்பட்டது இதனால் பூவுலகத்தைத் தாங்கிக் கொண்டுள்ள ஆதிசேஷன் என்ற நாகராஜனின் ஐந்து தலைகளையும் அந்தக் கொடிய வெப்பம் தகித்தால், அவனுடைய முகங்களிலிருந்து காளகூட விஷாக்கினி தோன்றியது. அந்த விஷாக் கினியும் சூரியாக்கினியும் ஒன்று சேர்ந்து ஆதிசேஷனை யும் பன்னிரு சூரியர்களையும் பூவுலகத்திலுள்ள உயிரினங் கள் அனைத்தினையும் எரித்துப் பொசுக்கிச் சாம்ப லாக்கின. அவ்வாறு சாம்பலாக்கிய அக்கினியிலிருந்து சப்த மேகங்களும் தோன்றி ஒரு நூறாண்டுகள் வரை யானைத் துதிக்கையிலிருந்து வீசியது போன்ற ஓயாத பெருமழை பொழிந்து எங்கும் தண்ணீர் வெள்ளம் நிறைந்து பெருகியது. அந்த நீரும் நெருப்பும் ஒன்றாகச் சேர்ந்து, காற்றினால் நிலைநிறுத்தப் பெற்று அதிலிருந்து வடவாமுகாக்கினி தோன்றி, அந்த நீரையெல்லாம் உட்கொண்டுவிட்டது. பிறகு அந்த வடவாமுகாக்கினி பிரசண்ட வாயுவில் ஒடுங்கியது. அந்தப் பிரசண்ட வாயு

ஆகாயத்தில் ஒடுங்கியது. ஆகாயமோ ஆன்மாவில் ஒடுங்கியது. ஆன்மா, பிரும்மாவிடம் ஒடுங்கியது. பிரும்மா விஷ்ணுவிடம் ஒடுங்கி, விஷ்ணு ருத்திரனில் ஒடுங்கி, ருத்திரன் மகேஸ்வரனிடத்தில் ஒடுங்கினார். பின்னர், மகேஸ்வரன் சதாசிவத்தில் ஒடுங்கி, சதாசிவம் விந்துவில் ஒடுங்கி, விந்து நாதத்தில் ஒடுங்கி, நாதம் சக்தியில் ஒடுங்கி, சக்தி சிவசக்தியில் ஒடுங்கி, சிவம் பரத்தில் ஒடுங்கி, பரம், பராபரத்தில் ஒடுங்கியது. அந்தப் பராபரம்தான் முற்றும் கடந்த தத்துவமுடிவில் பரப் பிரம்ம சொரூபமாகி நிற்பதாயிற்று.

அந்த பிரும்மம் பை, முட்டை, வித்து, வியர்வை என்ற நால்வகைத் தோற்றமாகவும், தேவர், மக்கள், விலங்கு, பறவைகள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரங்கள் என்ற ஏழுவகைப் பிறப்பாகவும் எண்பத்து நான்கு நூறா யிரம் யோனி பேதங்களாகவும் உள்ள ஆன்மாக்களை யெல்லாம் தம்முள் ஒடுக்கிக் கொள்வார். அந்த ஆத்மாக் கள் எல்லாம் அதன் செய்வினைகளுக்கு ஏற்ப தேகங் களை எடுத்து தாயின் கர்ப்பப்பையில் இருக்கும்போது படுகின்ற துன்பம் பிறப்பு, இறப்புகளினால் உண்டாகும் துன்பம், யம தண்டனைகளால் படுகின்ற குளிர், வெப்பம், மழை, காற்று, மின்னல் இடி முதலியவற்றால் ஏற்படும் துன்பமான உடலாலும், உள்ளத்தாலும் விளையும் துன்பங்களை விட்டு, சற்று ஓய்வெடுக்கும்படியாக தம்முன் சிறிதுகாலம் ஒடுக்கி வைத்துக் கொண்டிருந்தார்.

பிறகு பிரளயம் நீங்கியதும் முன்பு போலவே, அந்த ஆன்மாக்களுக்கு, உடல், மனம், இடம், அனுபவிக்கப் பெறும் பொருள் எனப்படும் அனைத்து நலங்களையும் கொடுத்து, கன்மங்களைக் கொடுத்து, முடிவில் பந்த பாசங்களை நீக்கி, முக்தியில் சேர்ப்பிப்பதற்காக, மீண்டும் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களை

யும் நடத்த முன் வந்த ஆதி பரம்பொருளான விநாயக மூர்த்தியான வக்கிரதுண்ட விநாயகராகத் தோன்றினார்.

இராசதம் சாத்துவீதம் தாமஸம் என்ற தமது முக்குணங்களிலிருந்தும் முறையே பிரம்மன், விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும் உதிக்கும்படி செய்து, அவர்களுக்குரிய உருவையும் ஞானத்தையும் வழங்கினார். அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட மும்மூர்த்திகளும், தங்களைப் படைத்தருளிய பரப்பிரம்ம சொரூபம் இன்னதென்று அறியவேண்டும் என்ற ஆவலுடன் எங்கும் தேடினார்கள். ஆனால் அவர்களால் அந்தப் பரம் பொருளைக் காண முடியவில்லை. எனவே அவர்கள் ஆயிரம் தேவ ஆண்டுகள் வரையில் அருந்தவமிருந்தார்கள். அதனால் பரப்பிரம்ம வடிவமான வக்கிரதுண்ட விநாயகர் அவர்களுக்குக் காட்சியளிக்க விரும்பினார்.

கோடி சூரியப் பிரகாசத்தைக் காட்டிலும் அதிகமான ஒளி வீசும் திருவுருவம் எடுத்து, நவரத்தின மகுடம், குண்டலம், தோள்கவசம், சரப்பளி, பதக்கம், பசதச்சிலம்பு முதலிய நவரத்தின ஆபரணங்களைப் பூண்டு, துதிக்கையும், நீண்டு வளர்ந்த தந்தங்களும், மதம் பொழி முகமும், கத்தி கேடயம், வில்வேல் என்ற படைகளைத் தரித்திருக்கும் நான்கு திருக்கரங்களும், தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளும் சந்திரஹாரத்தையும் கொன்றை மலர் மாலையையும் தரித்திருக்கும் அழகான மார்பும் சகல உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதில் சாம்பலாக்கி விடக்கூடிய நெற்றிக் கண்ணும் கொண்டு அவர் காட்சியளித்தார்.

அத்தகைய வக்கிரதுண்ட விநாயகப் பெருமானைக் கண்டதும் மும்மூர்த்திகளும் அளவற்ற அன்பும் பக்தியும் கொண்டு தங்கள் கரங்களைச் சிரம்மீது குவித்து வக்கிரதுண்ட விநாயகரைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து, பூமியில்

விழுந்து வணங்கி, மெய்சிலிர்க்க ஆனந்தப் பரவசத்தோடு பின்வருமாறு துதிக்கலானார்கள்.

"பிரம்மமாய், ஒளியாய், நிராபரமாய், பெரியதாய், தரணி முதலிய தத்துவமெல்லாம் கடந்த தத்துவமாய் விளங்கும் விநாயகரே உமது பாதமலர்களைப் பணிகிறோம். அறிவானந்த உருவே! உலக காரண காரியமாய் உயிர்க்கு உயிராய் ஒளிரும் கணபதியே! உமது கழல்களைக் கும்பிடுகிறோம். சகல உலக ஆதார நாயகா! உமது திருவடிகளைக் கண்டவர்களெல்லாம் எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் விடுபட்டு, ஆனந்த மயமான பேரின்ப வாழ்வினைப் பெறுவார்கள். அடியார்களான நாங்கள் உம்மைச் சரணடைகிறோம். இனி எங்களைக் காத்தருள்வது உங்கள் கடமை!" என்று வணங்கிப் போற்றினார்கள்.

உடனே எங்கும் நிறைந்தவரும், எல்லாம் அறிந்தவருமான கணேசமூர்த்தி, மும்மூர்த்திகளையும் அன்பு ததும்பப் பார்த்து "மெய்யன்பர்களே! உங்களுடைய துதிகளைக் கேட்டு மகிழ்ந்தேன். இனி உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்!" என்றார்.

மும்மூர்த்திகளும் அவரை வணங்கி "பரப்பிரம்ம வடிவமானவரே! உமது திருவடிகளில் எங்களுக்குத் திடமான பக்தியுண்டாகும்படி வரம் அளித்து தாங்கள் செய்யவேண்டிய பணியினையும் கூறியருளினால் அந்தப் பணியைச் சிரமேல் தாங்கி நாங்கள் செய்துவரக் காத்திருக்கிறோம்" என்று வேண்டினார்கள்.

விநாயகர் மகிழ்ந்து "முக்குண ஸ்வரூபிகளே என்னிடம் உங்களுக்கு நிலையான பக்தி பெருகும்படி வரம் அளித்தேன. இனி நீங்கள் செய்யவேண்டிய தொழில்களையும் சொல்கிறேன். பிரும்ம தேவனே! நீ சகல சீவராசிகளைப் படைத்து, படைப்புத் தொழிலை

மேற்கொள்வாயாக! விஷ்ணுவே! நீ சாத்வீக குண வழி யிலிருந்து யாவற்றையும் காத்துவரும் காத்தல் தொழி லைச் செய்து வருவாயாக! எனது சாத்வீக குணத்தில் தோன்றிய உருத்திரனே! நீ தாமச வழியிலிருந்து அனைத் தையும் அழிக்கும் தொழிலைச் செய்து வருவாயாக! என்று கூறி, வேதாகமப் புராணக் கலைகளையெல்லாம் கொண்டு அனைத்தையும் காத்தருளும் ஆற்றலை மகாவிஷ்ணு வுக்கும், ஏகாட்சர மந்திரம், ஷடாட்சர என்ற ஓரெழுத்து, ஆறெழுத்து மந்திரங்களைக்கொண்டு எங்கும் தானாக இயங்கி, எல்லாவற்றலையும் அழிக்கும் ஆற்றலை உருத்திர மூர்த்திக்கும் வழங்கினார்.

அப்போது, பிரும்மதேவன் விநாயகமூர்த்தியை வணங்கி "கருணாமூர்த்தியே! சகல புவனங்களையும், அநேக கோடி உயிரினங்களையும் படைக்கும் பணியை எனக்குத் தந்தருளினீர். அன்புகூர்ந்து அவைகளை நான் எவ்வாறு சிருஷ்டி செய்வது என்பதையும் எனக்குக் கூறி யருள வேண்டும்!'' என்று வேண்டினார்.

உடனே வக்கிரதுண்ட விநாயகர் அருள் சுரந்து "நான்முகனே! நீ என்னுடைய வயிற்றினுள்ளே புகுந்து அங்கிருக்கும் சகல உலகங்களையும் கண்டு அந்த மாதிரி யாகவே உனது படைப்புத் தொழிலைச் செய்து வருவாயாக!'' என்று கூறி தமது தும்பிக்கையிலுள்ள துவாரத்தின் வழியாக பிரம்மதேவனை எடுத்து விழுங்கி னார். அந்தக் காட்சியைப்பார்த்த பரந்தாமனும் பரமேஸ் வரனும் வக்கிரதுண்ட விநாயகரை வணங்கி வழிபட்டு கைகூப்பி நின்றார்கள். அவர்களையும் விநாயகர் தமது துதிக்கைத் துவாரத்தின் வழியாக விழுங்கினார். மும் மூர்த்திகளும் அவரது வயிற்றினுள்ளே இருந்து பார்த்த போது அதில் கணக்கில் அடங்காத உலகங்கள் அடங்கி யிருப்பதைக் கண்டார்கள்.

விசுவரூப வடிவமுடைய வக்கிரதுண்ட விநாயகரின் வயிற்றின் உள்ளேயிருந்து சராசரப் பிரபஞ்சங்களையும் பார்த்துவிட்ட மும்மூர்த்திகள் மீண்டும் வெளியில் வர முயன்றனர். அவர்களால் வெளிவரமுடியாததால், அவரது வயிற்றினுள்ளே இருந்தவாறு விநாயகப் பெருமானையே வேதங்களால் போற்றி வணங்கினர். அவர்கள் துதிப்பதைக் கேட்டதும் வக்கிரதுண்ட விநாயகர் மும் மூர்த்திகளாகிய பிரும்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவர்மீதும் கருணைகொண்டு, பிரும்மதேவனை தமது துதிக்கையிலிருந்தும் திருமாலையும் சிவனையும் தம் இரு காதுகளிலிருந்தும் வெளியில் வரவழைத்துவிட்டு, அவர்கள் தம்மைப் பார்ப்பதற்கு முன்னதாகவே அவர் மறைந்து விட்டார்.

## பிரும்ம தேவனின் முதற் படைப்பு

பிரும்மன், திருமால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்தி களும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழில்களையும் புரியவேண்டும் என்று நியமித்த வக்கிரதுண்ட விநாயகர். விசுவரூபம் எடுத்துத் தமது வயிற்றினுள்ளே சகல புவன சராசரங்களும் அமைந் திருப்பதைக் காட்டி, மறைந்த பிறகு பிரும்மதேவர் உலகங்களையும் உயிரினங்களையும் படைக்க ஆரம்பித் தார்.

அப்போது அவர் எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம் பித்தாலும் முதன் முதலாக விநாயகப் பெருமானை மனத் தில் தியானித்துதான் ஆரம்பிக்க வேண்டும் என்றும்

அப்படிச் செய்தால், தான் கைக்கொண்ட காரியம் விக்கினம் இன்றி நிறைவேறும் என்பதைச் சிறிதும் உணராமல் தானாகவே எல்லாவற்றையும் படைத்து விடமுடியும் என்று அகம்பாவம் கொண்டு, பிரும்ம தேவன் படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கினார். அவர் படைத்தவற்றுக்கெல்லாம் அவர் நினைத்த உருவங்கள் உண்டாக வில்லை. மூன்று கண்கள், இரண்டு முகங்கள், நான்கு தலைகள், ஐந்து காதுகள், ஆறு கால்கள் ஏழு கைகள் இப்படியான பல்வேறு விகாரமான உருவங்களும் வடிவங்களும் உண்டாயின.

அவற்றைக் கண்ட பிரும்மன், தான் நினைப்பது ஒன்றாகவும் நடப்பது வேறாகவும் இருப்பதைக் கண்டு மனம் குழம்பித் திகைத்தார். அவர் படைத்த விகாரமான உருவங்கள் எல்லாம் உயிர் பெற்று அவரையே ஏளனமும் நையாண்டியும் செய்யத் தொடங்கின. அவற்றில் சில அவரைப் பார்த்து இடிஇடியெனச் சிரித்தன. சில பெருங்கூச்சலிட்டன. சில அவரைப் பிடிக்கவும் அடிக்கவும் கிள்ளவும் இழுத்துத் தள்ளவும் செய்தன. சில விழிகளை உருட்டிப் பார்த்துப் பயமுறுத்தின. சில பழித்தன. இவற்றையெல்லாம் கண்ட நான்முகனின் புத்தியே குழம்பியது. அவர் சிந்தித்தார்.

"இத்தகைய விக்கினங்கள் உண்டாவதற்குக் காரணம் என்ன?" என்று எண்ணி மனத்திற்குள்ளேயே வருந்தினார். அப்போதுதான் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. வக்கிரதுண்ட விநாயகரை முதலில் நினைக்காமல் தான் என்ற கர்வத்துடன் படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கிய காரணத்தினால்தான் அத்தகைய விக்கினங்கள் தோன்றின என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று.

உடனே அவர் மனம் தேறி உடனடியாக நீராடித் திருநீறணிந்து தமது படைப்புத் தொழில் சிறப்பாக நிகழ

வேண்டும் என்று பிள்ளையார் பெருமானைத் தியானித்து பிரும்மதேவன் தவம் புரியலானார். யோக நிலையில் அமர்ந்து அவர் தவம் செய்யும் போது மெய்சிலிர்க்கும் காட்சியொன்று அவருக்குத் தோன்றியது. ஏழுகடல்களும் ஒன்றாகக் கலந்து ஓடும் மாபெரும் வெள்ளத்தில் ஆல மரத்து இலையொன்று அந்தத் தண்ணீரில் மிதந்து வந்தது. அந்த ஆல இலையின் மீது குழந்தையொன்று படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அதன் அருகில் சென்ற பிரும்ம தேவன் தம் கையை வீசியதும் அந்தக் குழந்தை உறக்கத்திலிருந்து கண்விழித்துக் கொண்டு யானைமுகமுள்ள விநாயகரின் உருவமாக மாறியது. பிள்ளை வடிவத்திலிருந்த குழந்தை விநாயகராக மாறியதும், பிரும்ம தேவன் பிள்ளையாரின் திருவடிகளைச் சரணடைந்து "பிள்ளையார் பெருமானே! விக்னேசுவரா! இனியும் விக்கினங்கள் எதுவும் நேராதவாறு எனது படைப்புத் தொழிலை நான் செய்ய அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினார்.

"நான்முகப் பிரும்மனே! என்னை முதலில் நினைத்து என்னாலேயே எல்லாச் செயல்களுமே நடக்க வேண்டும் என்று எண்ணாமல் உன் செயலாலேயே எல்லாம் முடியும் என்று நினைத்ததால்தான் விக்கினங்கள் அனைத்தும் விளைந்தன. இனிமேல் என்னை உன் மனதில் நினைத்து எனது ஏகாட்சர மந்திரத்தைப் பத்து லட்சம் முறைகள் உருவேற்றி முடித்தால் நான் உமக்குக் காட்சி தந்து மற்றவைகளைச் சொல்லுகிறேன் என்று அந்த மந்திரத்தை உபதேசம் செய்துவிட்டு மறைந்தார்.

பிரும்ம தேவர் ஆனந்தப் பரவசத்துடன் விநாயகரைத் துதித்துப் போற்றினார். விநாயகர் அவர் மீது கருணை கொண்டு "நான்முகனே! நீ விரும்பிய வரத்தைக் கேட்பாயாக என்றார்.

பிரும்ம தேவர் பக்திப் பரவசத்துடன் "கருணைமிக்க கடவுளே! தங்களுடைய திருவடிகளை நான் எப்போதுமே மறக்காமல் இருக்கவும் சகல உலகங்களையும் விக்கினம் இல்லாமல் படைக்கக் கூடிய சக்தியையும் அடியேனுக்கு தந்தருள வேண்டும்!" என்றார்.

விநாயகர் அவரை நோக்கி "பிரும்மனே! என்னிடமுள்ள எண்ணற்ற ஆற்றல்களில் கிரியா சக்தி, ஞான சக்தி (செயலாற்றல், அறிவாற்றல்) ஆகிய இரண்டு சக்திகள் உண்டு அந்தச் சக்திகளை நீ தியானித்து உனது படைப்புத் தொழிலை நடத்தி வருவாயாக!" என்று கூறி மறைந்தார்.

அதற்குப் பிறகு, நான்முகன் அவ்விரண்டு சக்திகளும் தம்மிடம் வரவேண்டும் என்று தியானித்து தவம் செய்தார் அதன் விளைவாக, ஒப்புவமையற்ற பேரழகு வாய்ந்த சித்தி, புத்தி என்ற இரண்டு கன்னிப்பெண்களாக அந்தச் சக்திகள் இரண்டும் அவர் எதிரே தோன்றினார்கள். அவ்விரு கன்னியரையும் பிரும்ம தேவன் வணங்கி "என் தவ மகிமையினால் தோன்றிய மங்கையர்களே! எனக்கு எந்தக் காலத்திலும் இடையூறு ஏற்படாதவாறு காத்தருள் செய்ய, நீங்கள் இருவருமே என்னுடையசெல்வ புத்திரிகளாக இருந்து வரவேண்டும்!" என்று வரம் கேட்டார். அவ்விரு சக்திகளும் அவ்வாறே இருப்பதாகக் கூறி வரம் அளித்தார்கள்.

பிரும்ம தேவன் அவர்களது வரத்தைப் பெற்றதற்கு மகிழ்ச்சியடைந்து சித்தி, புத்தி ஆகிய இரு மங்கையரின் நடுவிலே விநாயகர் அமர்ந்திருப்பதைப் போல பாவனை செய்து தியானம் செய்து தனது படைப்புத் தொழிலை ஆரம்பித்தார்.

அப்போது அவர் தனது மனத்தினால் ஏழு புத்திரர்களைப் படைத்து அவர்களை நோக்கி, குமாரர்களே!

"நீங்கள் எழுவரும் இந்த உலகத்தைப் பழுதின்றிப் படைப்பீர்களாக!" என்று உத்திரவிட்டார். அதற்கு அவர்கள் இசையவில்லை. அவர்கள் தவம் செய்வதில் விருப்பங் கொண்டு முக்தி நிலையை அடைந்தார்கள். அதற்குப் பிறகு சனசர், சனந்தனர், சனாதனர், சனத்குமார் என்ற நால்வரையும் நாரத முனிவரையும் உண்டாக்கினார். சகல சராசரங்கள் அனைத்தையும் நான்முகன் படைத்தார். அன்றிலிருந்து இந்த உலகம் பரமசிவன் பரந்தாமன், பிரும்மன், நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம், திக்குப் பாலகர்கள், மனுக்கள், தவமுனிவர்கள், இயக்கர்கள், விலங்குகள் மற்றுமுள்ள உயிரினங்கள் என்ற இருபத்தியொரு பிரிவுகளுடன் இயங்கலாயிற்று.

## பிள்ளையாரின் திருமணம்

பிரும்ம தேவனின் இரண்டு புதல்வியருமான சித்தியும் புத்தியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து திருமணம் செய்து கொள்ளத் தக்க பருவ வயதையடைந்தனர். அந்தப் பெண்கள் இருவருக்கும் திருமணம் செய்ய நினைத்த பிரும்மன், தனது சித்தத்தில் சிந்திருந்த விநாயகப் பெருமானுக்கே சித்தி புத்தி என்ற இரு பெண்களையும் திருமணம் செய்து வைக்க விரும்பினார். எனவே. நாரத முனிவரை திருக்கயிலாயத்திற்கு அனுப்பி திருமணம் பேசி வரும்படியாக அனுப்பி வைத்தார்.

அந்தச் சமயத்தில் ஒரு காரணத்தின் நிமித்தமாக விநாயகர் கயிலை மலையில சிவபெருமானின் புத்திரராக அவதரித்திருந்தார். அங்கு, பொன்மயமான சபா மண்டபத்தில் நவரத்தினங்களால் இழைக்கப் பெற்ற சிம்மாசனத்தில் விநாயகர் அமர்ந்திருந்தார். பூத கணங்களும் தேவகணங்களும் புடை சூழ்ந்திருந்த

கணேசரைத் தரிசிப்பதற்காக நாரத முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் தம் கையில் ஏந்தியிருந்த யாழின் நரம்புகளை மீட்டி, இசையமுதத்தைப் பொழிந்தவாறு விநாயகப் பெருமானின் பெருமைகளைப் பாடிய வண்ணம் அவரை நோக்கி 'விநாயகப் பெருமானே! உம்மிடமிருந்து நான் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. எனது தந்தையான பிரும தேவர் தமது தியானத்தின் விளைவாகத் தோன்றிய சித்தி புத்தி என்ற தமது புத்திரிகள் இருவரையும் உமக்கே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். உமக்குப் பொருத்தமான அவ்விரு மங்கையரின் அதியற்புத அழகை என்னால் அளவிட்டு கூற இயலாது. என்றாலும் என்னால் முடிந்த வரையில் அவர்களுடைய அங்க லாவண்ணியங்களை உள்ளங்கால் முதல் உச்சி வரை வருணித்துச் சொல்கிறேன். தயவு செய்து கேட்க வேண்டுகிறேன்.

அப் பெண்களின் உள்ளங்கால்கள் மிகவும் மென்மையானவை. அனிச்ச மலர்கள் பட்டாலும் வெம்பிக் குழையும். அவ்வுள்ளங்கால்களில் மச்ச ரேகை, கோடி ரேகை, கவிகை ரேகை, சங்க ரேகை, சக்கர ரேகை, முதலிய ரேகைகள் அமைந்து அழகான செந்தாமரை மலர்களைப் போல அமைந்துள்ளன. கால்விரல்கள் பவளங்களைப் போலவும் கால்விரல்களின் நகங்கள் செங்கழுநீர் மலர்களை விடவும் சந்திரனை விடவும் அழகானவை.

உந்தி வலம் சுழித்து ஒளிவீசும். நெஞ்சம் ஒரே மாதிரியான இரண்டு தாமரை மொட்டுக்களைப் போல அமைந்து மார்பு முழுவதும் நிறையப் பருத்துப் பூரித்து நிமிர்ந்திருக்கும். மூங்கில்களைப் போன்ற தோள்கள். மகர வீணைக்கு இணையான முன்னங்கைகள். முயலின் வயிற்றைப் போன்ற உள்ளங்கைகள். மலர் மொட்டுகளைப் போன்ற விரல்கள். கிளி வாய் போன்ற அழகான

விரல் நகங்கள். கூனலில்லாத கவர்ச்சியான முதுகு. மூன்று ரேகைகள் பொருந்திய அழகிய கண்டம்.

இன்பமூட்டும் இனிய மோவாய். பவளத் துண்டு களைப் போன்ற செவ்விதழ்கள். மயில் இறகின் அடியை யும் வெண் மணிகளையும் முல்லை மொட்டுகளையும் போன்ற பல் வரிசைகள். மிருதுவான நாக்கு, வனப்பான பவள வாய். அதில் மெல்லியதொரு புன்னகை. எள்ளுப்பூப் போன்ற நாசி! நீலமணி போல செவ்வரி படர்ந்த நீண்ட விழிகள். வில்லைப் போன்ற புருவங்கள். பூவிதழ்க் காதுகள். பிறை நிலா நெற்றி. குளிர்ந்த ஆகாய கங்கையில் மலர்ந்த தாமரை போன்ற முகம். பூங்கொத்துகள் நறுமணம் வீசும் கறுத்து அடர்ந்த கூந்தல். இன்னும் அந்தச் சுந்தரப் பெண்களின் அழகுப் பொலிவுகளையும் வனப்பின் சாயல்களையும் எவ்வளவு தான் வருணித்தாலும் முழுமையாக எவராலும் வருணிக்க இயலாது. நேரில் பார்த்துத்தான் உணரமுடியும் என்று கூறிவிட்டு நாரத முனிவர் புன்னகை செய்தார். அவர் கூறியதையெல்லாம் கேட்ட விநாயகர் திருமணத்திற்குச் சம்மதித்து விடை கூறினரர்.

உடனே, நாரதர் பிரும்ம லோகம் சென்று சித்தி புத்தி ஆகிய இரு பெண்களையும் சந்தித்து அவர்கள் இருவரையும் விநாயகப் பெருமான் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார் என்பதைக் கூறிவிட்டு, பிரும்ம தேவரிடமும் விநாயகரின் திருமண ஒப்புதலையும் தெரி வித்தார். அதைக் கேட்ட பிரும்ம தேவர் தமது பெண் களின் திருமணத்தை நடத்த வேண்டும் என்று எண்ணி மாப்பிள்ளை விநாயகரின் பெற்றோர்களான சிவ பெருமானும் பார்வதியும் இருக்குமிடம் சென்று திருமணத்திற்கு அவர்களுடைய ஒப்புதலைப் பெறவேண் டும் என்று கயிலை மலையை அடைந்தனர்.

கைலாயத்தில் சிவபெருமான், நான்முகன் வந்த காரணத்தை அறிய வேண்டி "நான்முகா! இங்கு வந்த காரணம் என்ன?'' என்று கேட்டார். அதற்குப் பிரம்மன் "ஐயனே! மும்மூர்த்திகளையும் உருவாக்கி, முத்தொழில் களையும் நடத்தி வரச் செய்தவர் விநாயகராவார். அவர் இப்போது தமது புத்திரராகவும் மணப் பருவத்தினராகவும் இருப்பதால் அவருக்குத் திருமகளும் நாணத்தக்க பேரழகிகளான சித்தி, புத்தி என்ற எனது புத்திரிகள் இருவரையும் திருமணம் செய்து கொடுக்க நான் விரும்பு கிறேன். அதற்கு தங்களுடைய சம்மதத்தைப் பெறு வதற்காகவே இங்கு வந்தேன!" என்றார்.

அவர் கூறியதைக் கேட்ட சிவபெருமான் புன்னகை யுடன் தமது மனைவி பார்வதி தேவியின் திருமுகத்தைப் பார்த்தார். பார்வதி தேவியோ புன்னகையுடன் நான் முகனை நோக்கி "சித்தி, புத்தி என்ற உமது புத்திரிகளை எமது விநாயகனுக்குத் திருமணம் செய்வதால் யாவருக் கும் நன்மையே விளையும். எனவே, விரைவில் திருமணத்தை நடத்தி விடலாம்!'' என்று தனது இசைவைத் தெரிவித்தாள்.

அவர்களுடைய சம்மதத்தைப் பெற்ற பிரம்ம தேவன் பெரிதும் மகிழ்ச்சியடைந்து உமாமகேஸ்வரர்களிடம் விடைபெற்று விநாயகரிடமும் அறிவித்து விட்டு தமது சத்தியலோகத்தை அடைந்தார்.

பிள்ளையாரின் திருமண ஏற்பாடுகள் அனைத்தும் அதிமும்முரமாக நடைபெற்றன. சகல தேவர்களும் தேவேந்திரனும் சகல மன்னாதி மன்னர்களும் தவ முனிவர்களும் மற்றுமுள்ள யாவரும் தத்தமது குடும்பத் தாருடன் விரைவில் வரவேண்டும் என்று சத்திய லோகத்து தேவர்கள் திருமண அழைப்பிதழ்களை சகல உலகங்களுக்கும் கொண்டு சென்றனர்.

தேவ சிற்பியான விசுவகர்மாவும் பிரம்ம தேவனின் கட்டளையை ஏற்று சொர்க்க லோகம் போன்ற பெரிய தொரு அழகிய நகரத்தையே தன்னுடைய ஆற்றலால் நிருமாணித்தார். அந்த நகரத்தைச் சுற்றிலும் உயரமான மதில்களையும் கோபுரங்களையும் எழுப்பினார். திருமண விழாவைக் காண வருபவர்கள் உற்சாகத்தோடு தங்கு வதற்கேற்ற மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களை யும் உருவாக்கினார். விசாலமான அகன்ற வீதிகள் இடை யிடையே சரித்திரக் கூடங்கள், சலவைக்கல் மண்டபங்கள், சந்திரகாந்தத் திண்ணைகள், பண்டார அறைகள், மலர்த் தடாகங்கள், நல்ல நீர் ஓடைகள், கனிவளச் சோலைகள், பரிமள நந்தவனங்கள் எல்லாம் அமைக்கப் பெற்றன.

பிறகு அந்த நகரத்தின் நடுவில் மணச் சடங்குகளை நடத்துவதற்கேற்ற ஒரு கல்யாண மண்டபத்தைச் சிறப் பாக உருவாக்கி, அதன் நடுவில் நவரத்தின மயமான சிம்காசனம் ஒன்றையும் அதைச் சுற்றி விருந்தினர்கள் அமரும் பீடங்களையும் பலவித கலைநுட்பங்களுடன் அமைத்து, தங்க மயமான அந்த மண்டபத்தின் மேற் பரப்புகளில் பட்டுகளால் ஜோடனை செய்து விதானங் களில் மலர் மாலைகளும் முத்து மாலைகளும் மயிற்பீலி களும் தொங்கவிடப் பெற்றன.

நவமணிகள் இழைத்த சுவர்களிலும் பெரும் பெரும் தூண்களிலும் பொற்பாவைகள் சித்திரப் பதுமைகள், பிரதிபிம்பக் கண்ணாடிகள், முதலியவை நிலைநிறுத்தப் பெற்றன. அந் நகரம் முழுவதும் பந்தல்கள் போடப் பட்டன. வாழை, கமுகு, தென்னங்குலைகள் முதலிய வற்றால் பந்தலின் முகப்புகளும் மற்ற பக்கங்களும் அழகாக அலங்கரிக்கப் பெற்றன. தெருக்களில் எல்லாம் புழுதியடங்க பனிநீர் தெளிக்கப் பெற்றன. முற்றங்கள் எங்கும் சந்தனக் குழம்பினால் மெழுகி, பல விதமான வினோதமான கோலங்கள் இடம்பெற்றன.

பாலிகைக் கலசம் முதலிய மங்களங்கள் வரிசைப்படுத்தப் பெற்றன. திருவிளக்கு, குடவிளக்கு, சரவிளக்குகள் எல்லாம் ஆங்காங்கே அமைக்கப்பட்டன. இவ்வாறு ஒரு மாபெரும் நகரத்தையே நிர்மாணித்ததும் பிரும்ம தேவர் மகிழ்ந்து ஆகாய கங்கையை வருவித்து தருப்பை, சமித்து, மாவிலை முதலிய ஓமப் பொருள்களைச் சேகரித்தார்.

இவ்வாறு கல்யாண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தபோது, தேவதூதர்களிடமிருந்து அனைவருமே விநாயகரின் கல்யாண வைபவத்தைக் காண, சத்திய லோகத்தை நோக்கிப் புறப்படலானார்கள்.

முப்பத்துமுக்கோடி தேவர்களும் சந்திரர் சூரியர் முதலிய நவக்கிரகங்களும் நாற்பத்தெண்ணாயிரம் மாமுனிவர்களும், கருடர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலிய விண்ணுலக வாசிகளும் மண்ணுலக வாசிகளும் பாதாள வாசிகளும் நாகநாதன் போன்ற நாகவேந்தர்களும் மற்ற தீவாந்தரங்களில் வசிப்போர் அனைவரும் தங்கள் மனைவி மக்கள் சுற்றத்தினர் புடைசூழ ஏராளமாக திரண்டு பிள்ளையாரின் திருக்கல்யாண மகோத்சவத்தைத் தரிசிக்க மிகவும் உற்சாகத்தோடு விரைந்து வந்தார்கள்.

அவர்களுக்கு வேண்டிய சகல விதமான ஆபரணங்களையும் உணவுவகைகள் முதலானவற்றையும் கொடுத்து வருவதற்காக சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, பஞ்சதரு, காமதேனு என்பனவற்றுக்கு பிரம்ம தேவன் கட்டளையிட்டிருந்தார். அவையும பிரம்மனின் கட்டளைப்படி வந்தவர்களுக்கெல்லாம் அவர்கள்வேண்டிய சகலசெல்வங்களையும் வாரிவழங்கின. அந்த நகரத்திற்குக் கல்யாண நகரம் என்று பெயரிட்டனர். அங்கு எங்கு பார்த்தாலும் ஆடல்பாடல்களும் கேளிக்கைகளுமாக ஒரே கோலாகலமாக விளங்கியது. பன்னிரண்டு சூரியர்களும் சந்திரர்

களும் ஜோதிவிளக்குகளும் கூடியிருந்ததால் இரவு பகல் என்ற வித்தியாசமே அங்கு தெரியவில்லை.

திருமண ஏற்பாடுகள் முழுமையாகவும் திருப்தியாக வும் முடிந்தவுடன் நாரத முனிவர் மிகவும் உற்சாகத்தோடு கைலாயமலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி, அவரிடம் திருமண ஏற்பாடுகளைப் பற்றி கூறி உடனடி யாகப் புறப்படும்படி வேண்டினார். சிவபெருமான் தமது பிள்ளையான பிள்ளையாரை அழைத்து "குழந்தாய், பிரம்மனுடைய பெண்களான சித்தி, புத்தி ஆகிய இரு வரையும் உனக்கு மணம் முடிக்க சகல ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது விரைவில் நீ திருமணக்கோலம் பூண்டு புறப்படு" என்றார்.

உடனே தந்தையின் வாக்கை சிரமேற் கொண்ட விநாயகர் புனித கங்கையில் நீராடி வந்து அலங்காரங் களைச் செய்து கொள்ளலானார். இடையிலே பட்டுப் பீதாம்பரமும் கைகளிலே பொன்னாபரணங்களும் மார் பிலும் தோள்களிலும் வாசனைத் சந்தனப்பூச்சும் தலை யிலே நவரத்தின மணிகள் பதித்த பொன்முடியும் அதைச் சுற்றிலும் கொன்றை மாலைகளும் கழுத்திலே முத்து மாலைகளும் மார்பிலே நவமணி ஆபரணங்களும் காது களில் மகரகுண்டலங்களும் கைகளிலே கடகங்களும் விரல் களில் மோதிரங்களையும் இடையிலே உதரபந்தனமும் கால்களிலே சிலம்புகளும் பூண்டு, நெற்றியிலே திருநீறு பூசி அதன் நடுவில் வாசனை கலந்த குங்குமத் திலக மிட்டு கண்டவர்கள் வியக்கத்தக்க வண்ணம் மணமகன் கோலத்தில் பிள்ளையார் மாப்பிள்ளையாராகக் காட்சி யளித்தார்.

தேவர்களும் சிவபெருமானும் பார்வதியும் மாப்பிள்ளை விநாயகரின் அலங்காரங்களையும் அவரது கண்கொள்ளா அழகினையும் பார்த்து பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

பிறகு விநாயகப் பெருமான் ஐராவதம் என்ற வெள்ளை யானையின் மேலேறியும், சிவபெருமானும் பார்வதியும் ரிஷப வாகனத்தில் ஏறியும், முருகன் மயில் வாகனத்திலே ஏறியும் மணமகளின் வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

பூதகணங்களும் தேவகணங்களும் அவர்களைப் புடை சூழ்ந்து சென்றன. மாப்பிள்ளை விநாயகர் மணக்கோலத் துடன் தேவர்கள், பூதகணங்கள் புடைசூழ தமது தாய் தந்தையருடன் ஆகாயவழியே வருவதைக் கண்ட பிரம்ம தேவரும், தேவர்களும் அவர்களை மகிழ்ச்சியுடன் எதிர் கொண்டு வரவேற்று கற்பக மலர்களைத் தூவி அர்ச்சித்து வணங்கினார்கள். பிறகு மாப்பிள்ளை விநாய கரை இராஜவீதி வழியாக ஊர்வலமாக அழைத்துச் சென்று திருக்கல்யாண மண்டபத்தில் அமர்த்தினார்கள். பிரம்ம தேவன் மனைவியான கலைமகள் கங்கை நீரினால் மாப்பிள்ளை விநாயகரின் பாதங்களில் நீர்வார்க்க, நான் முகன் அவரது பாதங்களைப் பெரும் வணக்கத்தோடு கழுவி மெல்லிய ஆடையினால் துடைத்தார்.

அந்தப்புரத்தில் அழகுப் பதுமைகளாக காட்சியளிக்கும் சித்தி, புத்தி என்ற இருமணப் பெண்களையும் சரஸ்வதி, இந்திராணி, இலக்குமி, அனுசூயை, அதிதி, அருந்ததி என்ற ஆறு மாதர்களும் வாழ்த்தினார்கள். மணப்பெண் களை இரத்தின ஆசனத்தில் அமர்த்தி தெய்வ மங்கையர் திருமஞ்சனம் ஆட்டலானார்கள். பிறகு புனுகு முதலிய முப்பத்திரண்டு பொருள்களுடன் கஸ்தூரி முதலிய ஐவகை வாசனைப் பொருள்களையும் சந்தனக் குழம்பும் கலந்து பக்குவமாகக் காய்ச்சிய பரிமளத் தைலத்தை மணப்பெண்களின் கூந்தலில் தடவிச் சில மங்கல மங்கை யர்கள் மங்கல வாழ்த்துகள் பாட நலுங்கிட்டார்கள். யானை களின் மத்தகங்களின் மீது பொற்குடங்களில் கொண்டு வந்த கங்கை நீரை ஊற்றி திருமஞ்சனமாட்டிய பிறகு,

மெல்லிய ஆடைகளால் ஒற்றி ஈரம் போகத் துடைத்துப் பட்டாடைகளை உடுத்திவிட்டார்கள்.

கூந்தலுக்கு அகிற்புகை காட்டி சீப்பினால் வாரி இரத்தினமாலைகள், மலர்மாலைகள் சூட்டிக் கொண்டை யிட்டார்கள். பல வகையான ஆபரண வகைகளை அணி வித்து மணப் பெண்களின் இயற்கையழகுக்கு ஈடாக, செயற்கை அலங்காரங்களைச் செய்ய இயலாமல், அவர் களது இயற்கை அழகை எடுத்துக் காட்டும் வண்ணம் இடுப்பு முதல் தோள் வரையில் மெல்லிய ஆடையை அணி வித்தனர். சித்தி என்ற பெண்ணுக்கு இலட்சுமி, அதிதி இந்திராணியும்; புத்தி என்ற பெண்ணுக்கு அனுசூயையும் அருந்ததியும் அலங்காரம் செய்தனர். பார்வதியின் அருகே வந்து "தேவி தாங்கள் சொன்னபடி மணப் பெண் களுக்கு எல்லா அலங்காரங்களையும் செய்து விட்டோம்" என்றார்கள்.

பிறகு இன்னிசைக் கருவிகள் முழங்க, மணப்பெண் களை நவமணிப் பல்லக்கில் ஏற்றி, தேவ கன்னியர்களும் மங்கையரும் புடைசூழ, கல்யாண மண்டபத்தை அடைந் தனர். திருமணத்தை நடத்தும் குருவாக, ஞானமுனிவர் அமர்ந்து தர்ப்பை, வெண் பொரி முதலான பொருள் களுடன் முகூர்த்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந் தனர். சித்தி, புத்தி என்ற மணப்பெண்கள் இருவரையும் விநாயகரின் அருகில் இருபுறமும் அமர்த்தினார்கள்.

மணச்சடங்குகள் யாவும் முறைப்படி நடந்தன. பிறகு பிரம்ம தேவர் தமது புத்திரிகளான சித்தி புத்திகளின் கைகளை எடுத்து விநாயகரின் கைகளில் சேர்த்து "நான் வளர்த்த என் செல்வங்களை ஏற்றருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு தன் மனைவியான சரஸ்வதி கங்கை நீரை வார்க்க கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

வாழைப் பழம், கனிவர்க்கங்கள், கருப்பஞ்சாறு, பசும் பால், தேன், கற்கண்டு, முதலியவற்றைப் பொற்கிண்ணங் களில் நிரப்பி 'புசித்தருள வேண்டும்' என்று நிவேதனம் செய்தார்.

பிறகு தேவர்களும் முனிவர்களும் மற்றவர்களும் போற்றி செய்ய இன்னிசை வேதங்கள் முழங்க ஓமத்தீயி லிருந்து எடுத்த மைக்குழம்பை விநாயகரின் நெற்றியிலும் இட்டு பிறகு விநாயகரைக் கொண்டே மணப்பெண்களின் நெற்றியிலும் அதை இடச் செய்து திருமணச் சடங்குகளை யெல்லாம் முறைப்படி செய்து முடித்தனர். பிறகு மகாகண பதிக்கு மகாவிஷ்ணுவே மாப்பிள்ளைத் தோழராக இருந்து கைகொடுத்து அவரை ஆசனத்திலிருந்து எழுப்பினார். மணப்பெண்களான சித்தி புத்தியின் விரல்களைப் பற்றிக் கொண்டு மும்முறை தீ வலம் வந்தார். மணப்பெண்களின் பாதங்களைத் தமது கைகளால் தூக்கி நிலத்திலிட்டு, பிறகு அம்மி மீது வைத்து அருந்ததியைப் பார்த்தார். இவ்வாறு தேவர்கள் சாட்சியாகத் திருமணம் நிகழ்ந்தது. விநாயகர், தம் மனைவியர் இருவருடனும் பெற்றோர் களான பார்வதி பரமேஸ்வரரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். தாய் தந்தையர்கள் மணமக்களை ஆசீர் வதித்தனர்.

விநாயகரின் திருமண வைபவங்கள் அனைத்தும் நிகழ்ந்து நிறைவேறப் பெற்றதும் தேவர்களும் திருமணத் திற்கு வந்தவர்கள் அனைவரும் உமாமகேஸ்வரரையும் மாப்பிள்ளை விநாயகரையும் வணங்கிவிட்டுத் தமது இருப் பிடங்களுக்கு விடைபெற்றுச் சென்றனர். அதன் பிறகு சிவபெருமானும் பார்வதியும் மற்ற தேவ கணங்களும் புடை சூழ மணவாளரான மகா கணபதியை அழைத்துக் கொண்டு திருக்கயிலை அடைந்தனர். மாப்பிள்ளை விநாயகரும் தமது இருப்பிடத்திற்குச் சென்று புத்திளம் மனைவியரான சித்தி புத்திகளுடன் கூடி மகிழ்ந்து கொண் டிருந்தார்.

# மது கைடவர் போரில் திருமால் தியானித்த மந்திரம்

முன்பொரு காலத்தில் திருப்பாற்கடலில் ஆதிசேஷன் மீது மகாவிஷ்ணு படுத்து ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோது அவருடைய இரு காதுகளிலிருந்தும் மது கைடவர் என்ற இரண்டு அசுரர்கள் தோன்றினார்கள். அந்த அசுரர்கள் பயங்கரமான தோற்றமும் வலிமையும் கொண்டவர்கள். அவர்கள் மகாவிஷ்ணுவிடம் தோன்றியிருந்தாலும் அவரையே மதிக்காமல் தேவர்களையும் முனிவர்களையும் பூவுலகில் வாழ்ந்த மனிதர்களையும் இம்சித்து வந்தார்கள். பிரும்மனையும் சிறைப் பிடிக்கச் சென்றார்கள்.

பிரும்ம தேவன் அவர்களுக்குப் பயந்து விநாயகரை தியானித்த வண்ணம் சிந்தித்தார். அந்த அசுரர்கள் இருவரும் திருமாலிடத்திலிருந்து தோன்றியவர்களாகையால் அவர்களைத் திருமாலைக் கொண்டே போரிடச் செய்து அழிக்கவேண்டும் என்று எண்ணி பாற்கடலுக்கு விரைந்து சென்றார்.

அப்போது திருப்பாற்கடலில் திருமால் அனந்த சயனத்தில் படுத்து, அறிதுயிலிலிருந்தார். எவருடைய நித்திரையையும் கலைக்கக் கூடாது என்று வேதாகமங்கள் குறிப்பிடுவதால், திருமாலின் தூக்கத்திற்குக் காரணமாக இருந்த நித்திராதேவியைத் துதித்து திருமாலைவிட்டு நித்ராதேவியை நீங்கும் வண்ணம் பிரார்த்தனை செய்தார். உடனே நித்ரா தேவி திருமாலின் கண்களைவிட்டு விலகிச் சென்று விட்டாள். திருமாலும் நித்திரையிலிருந்து கண் விழித்து எழுந்தார்.

அப்போது மது கைடவரால் வேதனைப்பட்டு ஓடிவந்த தேவர்களும் அங்கு வந்து அசுரர்களால் தங்களுக்கு

ஏற்பட்ட துன்பங்களை எடுத்துக் கூறி அந்த அசுரர்களை அழிக்கும்படி வேண்டினார்கள். பிரும்ம தேவர் நாராயணனை நோக்கி "நாராயணரே! தாங்கள் உறங்கும் போது, தங்கள் காதுகளிலிருந்து தோன்றிய மதுகைடவர் என்ற அரக்கர்கள்தாம் கொடியவர்களாக மாறி பலரையும் துன்புறுத்தி வருகிறார்கள். அவர்களிருவரையும் நீங்கள்தான் அழித்து எங்களைப் பாதுகாக்க வேண்டும்" என்று வேண்டினார்.

உடனே மஹாவிஷ்ணு தமது ஆயுதங்களுடன் போருக்குப் புறப்பட்டு சங்கநாதம் செய்தார். அந்தப் பேரொலியைக் கேட்டு அந்த அசுரர்கள் இருவரும் இரு மலைகளைப் போல திருமாலின் எதிரே வந்து கடுமையாக போரிடத் தொடங்கினார்கள். நீண்ட காலம்வரை திருமாலுக்கும் அந்த அசுரர்களுக்கும் கடலிலேயே பெரும் போர் நிகழ்ந்தது. நீண்ட காலமாகப் போர் நிகழ்ந்தும் மகாவிஷ்ணுவினால் அந்த அசுரர்களை வெற்றியடைய முடியவில்லை. திருமாலே மிகவும் சோர்ந்து களைத்து விட்டார். எனவே அவர் கந்தர்வ வேடத்தில் எவரும் அறியாதவாறு திருக்கயிலை மலைக்குச் சென்று சிவபெருமானிடம் ~~சென்று~~ நடந்தவற்றை முறையிட்டார்.

அவர் நடந்தவற்றைக் கூறியதும் சிவபெருமான் திருமாலை நோக்கி, "நாராயணா! மதுகைடவருடன் நீர் போர் செய்யப் புறப்பட்டபோது விக்கினங்களைப் போக்கி அருளும் விநாயகனை முதலில் நினையாமல் சென்றதால் தான் போரிலே புறமுதுகு காட்டிவர நேரிட்டது. இனியாவது நீர் முதலில் பிள்ளையாரை வணங்கி துதித்து அதன்பிறகு பகைவர்களை வென்று வெற்றியுடன் விளங்குவீராக. விநாயகரை வணங்கி அழைக்க வேண்டிய மந்திரங்கள் ஏராளமாக இருந்தாலும் அவற்றில் உமது வெற்றிக்கு ஏற்ற ஒரு மந்திரமும் இருக்கிறது. அதுதான்

ஆறெழுத்து மந்திரமாகும் என்று கூறி அந்த மந்திரத்தை முறைப்படி திருமாலுக்கு உபதேசித்தார். திருமாலும் பெருமகிழ்ச்சியோடு அந்த மந்திர உபதேசம் பெற்ற பிறகு பூவுலகத்தை அடைந்து ஒரு பொய்கையில் நீராடி பூமியை மந்திர நீர் தெளித்து சுத்தம் செய்து புலித்தோலாடையில் அமர்ந்து அந்த மந்திரத்தையே செபித்து விநாயகப் பெருமானை பல ஆண்டுகள் பூசித்து வந்தார்.

அவருடைய பிரார்த்தனைக்கு மனமகிழ்ந்த விநாயகப் பெருமான் திருமாலின் எதிரே தோன்றி தரிசனம் தந்து "நாராயணரே! என்னைக் குறித்து பூசை செய்யும்படி கயிலைநாதர் சொல்வதற்கு முன்னேயே நீர் என்னை வணங்கி போர்க்களத்திற்குச் சென்றிருந்தால் உமது பகைவரிடம் தோல்வியடைந்திருக்க மாட்டீர்கள். நடந்தவை நடந்ததாக இருக்கட்டும். இப்போது நீங்கள் என்னிடம் விரும்பும் வரம் யாது!" என்று கேட்டார்.

அதற்குத் திருமால், "மகாகணபதியே! மகாபாதகர்களான மது கைடவர் என்ற அசுரர்களைக் கொன்று வீழ்த்தும் படியான வலிமையை எனக்குத் தந்தருளவேண்டும். அவ்விரு அசுரர்களையும் தவிர, மற்ற அசுரர்கள் எவராயினும் என்னிடம் அகப்பட்டால் அவர்களை வீழ்த்தி வெற்றியடையும்படியான வரத்தையும் எனக்கு வழங்கியருள வேண்டும்" என்று வேண்டினார்.

உடனே விநாயகப் பெருமான் அவருக்கு அருள்புரிந்து "நாராயணா! பகைவரை வென்று ஒழிக்கும் பெரும் வலிமையும் எவரும் போற்றிப் புகழும்படியான பெருமையும் எதை நினைத்தாலும் அதை நிறைவேற்றும்படியான ஆற்றலும் உமக்குக் கொடுக்கிறேன். உம்மை எதிர்த்துப் போர் புரிந்த அந்த மது கைடவர் அசுரர்கள் இப்போது வஞ்சகமாக தலைமறைவாக இருக்கிறார்கள். ஆகையால்

என்னுடைய ஆறெழுத்து மந்திரத்தை தியானித்துக் கொண்டு நீங்கள் போருக்குச் சென்றால் அவர்கள் உங்கள் கண்களின் எதிரே தோன்றுவார்கள்" என்று கூறி மறைந்தார்.

பிறகு திருமால் கணேசமூர்த்தியின் கருணையை எண்ணி பக்திப் பரவசமடைந்து தமக்கு விநாயகர் தரிசனம் தந்த இடத்தில் பளிங்குக் கற்களால் நான்கு கோபுரங்களையுடைய ஆலயம் ஒன்றை அமைத்து அங்கு விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்து தூபதீப ஆராதனைகளைச் சிறப்பாகச் செய்து பூசித்து வந்தார். அவரது விருப்பத்தை நிறைவேற்றியபடியால் அந்தக் கணபதிக்கு 'சித்தி கணபதி' என்றும் அந்தக் கோயிலுக்கு சித்திகேந்திரம் என்றும் பெயர் உண்டாயிற்று. சித்தி கணபதியைத் தியானித்துக் கொண்டு சென்ற திருமாலின் எதிரே, மறைந்திருந்த மது கைடவர்கள் தோன்றினர். அவர்கள் திருமாலை ஏளனம் செய்தனர். போருக்குப் பயந்து ஓடிய கோழை என்றும் தங்களுடன் போரிடச் சக்தியிருந்தால் போரிடும்படியும் எக்காளமிட்டார்கள். உடனே திருமாலும் அவர்களுடன் போர் செய்யப் புறப் பட்டார். நீண்ட நேரம் அசுரர்களும் திருமாலும் போரிட் டும் வெற்றி தோல்வி ஏற்படாமல் இருந்தது. முடிவில் விநாயகரின் ஆறெழுத்து மந்திரத்தை ஜெபித்த வண்ணம் தமது சக்கராயுதத்தை எடுத்து அந்த அசுரர்கள் மீது வீசினார். அந்தச் சக்கராயுதம் அந்த அசுரர்கள் இருவரை யும் பல துண்டங்களாக அறுத்தெறிந்தது.

மது கைடவ அசுரர்களை மகாவிஷ்ணு கொன்று ஒழித்து வெற்றியடைந்த காட்சியைத் தேவர்கள் அனை வரும் கண்குளிரக் கண்டு ஆகாயத்திலிருந்து மலர்மாலை பொழிந்தார்கள். அசுரர்களுக்குப் பயந்து அத்தனை நாள்

களும் தலைமறைவாக இருந்த பிரம்மதேவனும் அந்த அசுரர்களைத் திருமால் அழித்து விட்டார் என்பதை அறிந்து தமது மறைவிடத்திலிருந்து வெளியே வந்து திருமாலை வணங்கினார். அப்போது திருமால் புன்னகை யுடன் பிரும்ம தேவனை நோக்கி "நான்முகனே! என் வெற்றியின் இரகசியம் என்ன தெரியுமா?" என்று கேட்டு தமது இரகசியம் முழுவதையும் பிரும்ம தேவரிடம் கூறி "நீரும் சித்தி கேந்திரம் என்ற அந்த விநாயகப் பெரு மானின் திருத்தலத்துக்குச் சென்று கணேசரை பூசித்து சித்தி பெறுவீராக" என்றார். நான்முகனும் திருமால் கூறியவாறே அந்தப் புனிதத் திருத்தலத்திற்குச் சென்று விநாயகப் பெருமானை பக்திப் பரவசத்துடன் வணங்கித் துதித்து அவரது திருவருளால் பல வரங்களையும் பெற்று மகிழ்ந்தார்.

## வீமராசனுக்கு விஸ்வாமித்திரர் கூறிய பிள்ளையார் பூசை மகத்துவம்

முன்பு ஒரு காலத்தில் விதர்ப்ப தேசத்தில் கவுண்டின் யம் என்ற நகரம் இருந்தது. அந்த நகரத்தை வீமராசன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் வேத நெறிகளில் சிறந்தவன். தான தருமம் செய்பவன். வீரதீரம் மிகுந் தவன். மன்மதனுக்கு நிகரான அதியற்புத அழகு வாய்ந் தவன். அவன் பகைவர்களை வென்று வெற்றிவாகை சூடியவன். அவனுடைய மனைவியான சாருகாஷினி என்பவள் கற்பு நெறியில் அருந்ததியையும் விஞ்சக் கூடியவள். இல்லற தருமத்தை ஒழுங்காக உள்ளன்போடு நடத்துபவள். அத்தகைய மனைவியோடு வீமராசன் சகல விதமான செல்வ போகங்களையும் அனுபவித்து வந்தான். ஆயினும் அவனுக்கு நீண்ட காலமாக புத்திரபாக்கிய மில்லை. அதற்காக அவன் எத்தனையோ தான தர்மங்

களைச் செய்தும் இடைவிடாமல் தெய்வங்களைவழிபட்டும் வந்தான்.

அவனுடைய பிள்ளையில்லாக் குறை நீங்கவில்லை. புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 'புத்' என்ற நரகம் தான் கிடைக்குமே தவிர வேறு நல்ல கதி கிடைக்காது என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருப்பதால் அவன் தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்று ஞானிகளை அணுகித் தவம் செய்ய விரும்பினான். எனவே, அவன் தனது அமைச்சர்களிடம் அரச பதவியையும் பொறுப்புகளையும் ஒப்படைத்துவிட்டு தன் மனைவியுடன் தனது தேசத்தை விட்டு காட்டுக்குச் சென்று அங்கேயே தங்கி வனவாசம் புரிந்து வந்தான்.

அப்போது ஒருநாள் அவன் முற்பிறவியில் செய்த நல்வினையின் பயனாக விசுவாமித்திர முனிவரின் ஆசிரமத்தின் அருகே செல்லும்படியான வாய்ப்புக் கிட்டியது. அந்த ஆசிரமத்தின் சுற்றுப்புறச் சூழல்கள் அனைத்தையும் இயற்கையின் எழில்மிக்க காட்சிகளையும் கண்டு மகிழ்ந்த வீமராசனும் அவனது மனைவியும் முனிவர்களின் ஆசிரமங்களைக் கண்டனர். அந்த ஆசிரமங்களில் வசித்து வந்த அருந்தவ முனிவர்களின் ஒழுக்கத்தையும் பக்தியையும் அவர்கள் தினந்தோறும் செய்து வரும் வேள்வி யாவும் கண்ட அரச தம்பதிகள் மனமகிழ்ச்சியடைந்தனர். பிரம்மாண்டமான தமது அரண்மனை கூட அந்த ஆசிரமங்களுக்கு இணையாகாது! என்று எண்ணி காட்டு வழியே நடந்து சென்றபோது, புலித்தோலாசனத்தின் மீது அமர்ந்திருந்த விசுவாமித்திர முனிவர் தமது சீடர்களுக்கு வேதநெறிகளைப் போதித்து வருவதைக் கண்டனர். அவருடைய காலடியில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள்.

அவர்களைக் கண்ட விசுவாமித்திரர் "உங்களுக்குப் புத்திரப்பேறு உண்டாகட்டும்" என்று வாழ்த்தி விட்டு "அரசே! நீ யார்? உன் மனைவியோடு என் ஆசிரமத்தைத் தேடி வந்த காரணம் என்ன?" என்று கேட்டார்.

வீமராசன் அப்போதே தனக்குப் புத்திரச்செல்வம் கிடைத்துவிட்டதைப் போன்று பெருமகிழ்ச்சியடைந்து, தன்னுடைய வரலாறு முழுவதையும் தனக்குப் புத்திர பாக்கியம் ஏற்படவில்லை என்ற மனக்குறையையும் எடுத்துக் கூறினான். 'தவஞானியே! தங்களைத் தரிசித்தவுடனேயே எனக்குப் புத்திரப் பாக்கியம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் தைரியமும் அடைந்துவிட்டேன். வேதாகம ஞானத்திலும் தவயோக சாதனைகளிலும் தயை தாட்சன்யத்திலும் உன்னதமான விரத வைராக்கியத்திலும் வேள்விகளைச் செய்வதிலும் தங்களுக்கு நிகரானவர்கள் எவருமேயில்லை. தாங்கள் எனக்கு அளித்த ஆசீர்வாதம் வீணாகாது. தாங்கள் முக்காலமும் அறிந்த ஞானியர். ஆகையால் கடந்த பிறவிகளில் நான் செய்த தீவினைகளை எனக்கு எடுத்துச் சொல்லி அவற்றிலிருந்து நான் விடுதலையடைந்து புண்ணியசாலியாகி புத்திர பாக்கியம் அடையும் வழி வகைகளைக் கூறியருள வேண்டும்" என்று வேண்டினார்.

விசுவாமித்திர முனிவர் அரசனின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி தமது ஞான திருஷ்டியினால் வீமராசனின் முற்பிறவி வினைகளையெல்லாம் உணர்ந்து அரசனை நோக்கி "வீமராசனே! உனது அரச பரம்பரையில் வழிவழியாக வந்த உனது முன்னோர்கள் அனைவரும் நாள் தவறாமல் பிள்ளையார் பூசை செய்து வழிபட்டு விநாயகரின் திருவருளால் சகல விதமான காரிய சித்திகளையும் அடைந்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் நீயோ உன் மனைவியின் மீது வைத்த அளவு கடந்த

ஆசையினால் அந்த விநாயகப் பெருமானைப் பூசை செய்யாது வாளாயிருந்துவிட்டாய். அதனால்தான் உனக்குப் புத்திர பாக்கியமே ஏற்படாமற் போய்விட்டது. ஆகையால், இனிமேலாவது அந்த விநாயகப் பெருமானை வணங்கி நீங்கள் இருவருமே சேர்ந்து தினந்தோறும் பக்தி சிரத்தையுடன் 'பிள்ளையார் பூசை' செய்து ஆராதித்து வந்தால் நீங்கள் பல நாள்களாக விரும்பிவரும் புத்திர பாக்கியத்தை நிச்சயமாக அடைவீர்கள்" என்றார்.

அதற்குப் பிறகு வீமராசனின் முன்னோர்கள் விநாயகப் பெருமானை தங்கள் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு பயனடைந்த வரலாறுகளையெல்லாம் விசுவாமித்திர முனிவர் அரசனுக்குக் கூறத் தொடங்கினார்.

## தக்கன் பெற்ற பேறு

"பாரத தேசத்தில் கர்நாடக மாநிலத்தில் பானு என்ற நகரத்தில் உன்னுடைய ஏழாவது தலைமுறையைச் சேர்ந்த சந்ததியில் வல்லவபன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் மனைவியின் பெயர் கமலை. அவர்களுக்கு மகன் ஒருவன் பிறந்தான். அவன் பிறந்தபோதே குருடாகவும் செவிடாகவும் ஊமையாகவும் இருந்ததுடன் உடல் எங்கும் குட்ட நோய் கொண்டு சீழும் இரணமுமாக பார்க்கவே சகிக்க முடியாத தோற்றத்துடன் விளங்கினான். அவனது நிலையைக் கண்ட பட்டத்து அரசியின் தாயுள்ளம் மிகவும் துயரத்திலாழ்ந்தது. "ஐயகோ! இப்படிப்பட்ட ஒரு பிள்ளை எனக்குப் பிறந்திருப்பதைவிட பிறவாமலேயே இருந்திருக்கலாம். இத்தகைய துன்பத்தைக் கடவுள் எனக்கு ஏன் தான் விதித்தாரோ?" என்று அவள் மனத்துயரம் தாங்காமல் கண்ணீர்விட்டுக் கதறியழுதாள்.

அரசனும் அவளைப் போலவே மனங்கலங்கினான் என்றாலும், முன் பிறவியில் செய்த ஊழ்வினைப் பயனால் தான் அத்தகைய துன்பம் நேரிட்டது என்றும், அதற்காக வருந்துவதால் பயன் ஏதுவுமில்லை என்றும் தனக்குத் தானாகவே மனத்தை தேற்றிக்கொண்டு, தன் மனைவியை நோக்கி "கமலையே! வீணாகத் துயரப்பட வேண்டாம். நமது மகன் இப்போது இப்படியிருந்தாலும் நாளடைவில் அவனுடைய நோய் நீங்கி அவனது அங்கங்கள் எல்லாம் பூரணவடிவம் பெற்று சகல பெருமை களையும் பெற்ற சிறந்ததொரு மகனாக அவன் திகழக் கூடும். எனவே, அதற்காக நம்மாலான மருந்து, மாயம் போன்ற பரிகாரங்களையும் தவ விரதங் களையும் தானதருமங்களையும் நாம் சாஸ்திர விதிப்படி செய்ய முயல்வோம்" என்று ஆறுதல் கூறினான்.

பிறகு சோதிட வல்லுநர்களை அழைத்து மகனின் ஜாதகத்தைக் கவனித்து அந்தக் குழந்தைக்கு 'தக்கன்' என்ற பெயர் சூட்டினான். பிள்ளைக்குப் பன்னிரண்டு வயது முடியும்வரை அவனது நோய்கள் நீங்குவதற்காக ஏராளமான பொருட்செலவு செய்து கணக்கிலடங்காத பரிகாரங்களையும் செய்தான். என்ன செய்தும் தனது புதல்வனின் கொடிய வியாதி நீங்காததைக் கண்டு மிகவும் வெறுப்படைந்து விட்டான்.

ஒருநாள் அவன் மிகவும் கோபத்துடன் தன் மனைவியை அழைத்து "கமலையே நமது மகனின் கொடிய நோயைத் தீர்க்க இத்தனை நாளாக ஏராளமான பொருள் செலவுகளைச் செய்தும் எத்தனையோ தவ விரதங்களை நாம் மேற்கொண்டும் அவற்றினால் எந்த வொரு பயனும் நன்மையும் ஏற்படவில்லை. இதனால் நமது உடலும் மனமும்தான் வாடுகின்றன. இதுவரை இவன் நமக்குக் கொடுத்து வந்த கஷ்டங்கள் போதும். இனிமேலும்

இவன் இங்கேயே தங்கியிருந்தால் எனது துயரம் அதி கரிப்பதோடு நம்மிடமுள்ள மற்ற பொன் பொருள் திரவி யங்கள் எல்லாமே இவன் பொருட்டு தீர்ந்து போய் விடும். ஆகையால் ஒரு விநாடிகூட நீயும் உனது மகனும் இங்கு தங்கியிருக்கக் கூடாது நீங்கள் இருவரும் உடனடியாக இந்த அரண்மனையைவிட்டு இப்போதே வெளியேறி எங்காவது போய்விடவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

தனது கணவனின் ஈவு இரக்கமற்ற வார்த்தைகளைக் கேட்ட கமலை திடுக்கிட்டு மனம் பதைபதைத்து, தங்களை இம் மாதிரி கண்டிப்பாக அரண்மனையைவிட்டு வெளி யேற்றக்கூடாது என்று அரசனிடம் பலவாறாக மன்றா டியும் கெஞ்சிக் கேட்டும் அரசன் தனது வெறுப் பினால் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளாமல் அவர்க ளிருவரையும் தனது அரண்மனையிலிருந்து வெளி யேற்றிவிட்டான்.

அரண்மனையை விட்டுத் தனது புதல்வனுடன் வெளி யேறிய அரசி கமலை தனது விதியை நொந்து கொண்டு "விதி என்னும் தேவதையே! இனி நானும் என் மகனும் என்ன செய்வோம்? எங்கே செல்வோம்?'' என்று கதறி யழுது பின்னர் அழுது புலம்புவதால் பயன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை என்பதை உணர்ந்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ஒரு கானகத்தை நோக்கி நடந் தாள். கடவுளின்மீது எல்லா பாரத்தையும் போட்டு விட்டுத் தன்னுடைய சின்னஞ்சிறு பாலகனுடன் காடு களில் சஞ்சரித்து வந்தாள். அப்போது அந்தக் காட்டில் புகுந்த வழிப்பறித் திருடர்கள் கமலை அணிந்திருந்த நகைகளையும் ஆபரணங்களையும் கொள் ளையடித்து கொண்டு அவளையும் அவளுடைய புத்திர னையும் அங்கிருந்து துரத்திவிட்டார்கள்.

இதனால் கமலையும் அவள் மகனும் பசியாலும் தாகத்தாலும் வாடி வதங்கி பற்பல துன்பங்களை

அனுபவித்தனர். பிறகு அவர்கள் ஓர் ஊரினுள்ளே சென்றார்கள். கமலை தன் மகனை ஒரு கோயிலினுள்ளே தங்கவைத்துவிட்டு கிராமங்களுக்குச் சென்று பிச்சை எடுத்து வந்து தன் புத்திரனுக்கு கொடுத்து தானும் உண்டு உயிர் வாழ்ந்து வந்தாள்.

ஒருநாள் அவள் வழக்கம் போல பிச்சையெடுக்க குண்டினபுரம் என்ற ஊருக்குத் தன் மகனுடன் சென்றாள். அப்போது அவள் செய்த நல்வினைப் பயனானது அவளை நெருங்கி வந்ததைப் போல அந்தக் கிராமத்தையடுத்த காட்டிலிருந்து முத்கலமுனிவர் என்ற தவமுனிவர் அவர்களுக்கு எதிரே வந்தார். அவர் விநாயகப் பெருமானிடம் அளவற்ற பக்தியுடையவர் தினந்தோறும் பிள்ளையார் பூசை செய்பவர். அந்த முனிவரின் உடலில் படிந்து வந்த காற்றானது அரசியுடன் வந்து கொண்டிருந்த தக்கனின் மீது பட்டதும் அந்த விநாடியே அவனைப் பீடித்திருந்த தொழுநோய் நீங்கியது. ஊமை வாய் திறந்து பேசவும், செவிட்டுக் காதுகள் கேட்கவும், குருட்டுக் கண்கள்திறந்து பார்க்கவும் முடிந்தது.

மன்மதனோ, முருகனோ, திருமாலோ, என்று நினைக்கும் அளவுக்கு தக்கன் பேரழகும் புதிய வனப்பும் வளமையும் மிக்க இளைஞனாக விளங்கினான். கமலை தனது மகனின் புதிய மாற்றத்தையும் அழகையும் நோய் நீங்கி குறைகள் எல்லாம் நீங்கியதையும் கண்டு அக மகிழ்ந்து தன் மகனை உச்சிமோந்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய அவனை அணைத்துக் கொண்டாள்.

தன்னையும் தன் மகனையும் அரசன் அரண்மனையிலிருந்து விரட்டி வெளியே அனுப்பியதால்தான் தன் மகனின் கொடிய நோய் விலகியது என்றும் தெய்வத்தின் திருவருளையன்றி அத்தகைய நன்மை தனக்கும் தன்

மகனுக்கும் ஏற்பட்டிருக்க முடியாது என்றும் நம்பிய அவள் தன் மகனை நோயிலிருந்து காப்பாற்றிய தெய்வத்தின் திருவருளைப் போற்றினாள். தன் கணவனான வல்லபன் மீது அவளுக்கு ஏற்பட்ட வெறுப்பு மாறி, ஆசையும் ஆர்வமும் பொங்கின.

இந்த அற்புதக் காட்சியைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்த குன்டினபுரத்துப் பொதுமக்கள், அவர்கள் இருவரையும் வரவேற்று உபசரித்து அறுசுவை உணவளித்து அவர்கள் தங்குவதற்குரிய வசதிகளையும் அளித்தனர்.

இவ்வாறு அவர்கள் இருவரும் குன்டினபுரத்தில் இருக்கும் ஒருநாள் ஆதிசைவர் ஒருவர் தம் எதிரே வருவதைக் கண்டு அவரை இருவரும் கும்பிட்டார்கள். அந்தப் பெரியவர் அரசியையும் தக்கனையும் ஆசீர்வதித்து கணேசரின் ஆறெழுத்து மந்திரத்தை அவர்களிருவருக்கும் உபதேசித்துவிட்டு மறைந்தார். அன்று முதல் தாயும் மகனும் நாள் தவறாமல் பிள்ளையார் பூசை செய்வதுடன் அந்த மந்திரத்தையும் இடைவிடாமல் செபித்து வந்தனர்.

அவர்களுடைய பக்திக்கு மெச்சிய விநாயகப் பெருமான் அவர்களுக்கு ஒருநாள் தரிசனம் தந்தார். அந்தக் காட்சியைக் கண்ட தாயும் மகனும் பெருவியப்பும் பக்தியும் கொண்டு விநாயகப் பெருமானை வலம் வந்து வணங்கிப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவர்களுடைய பக்தியைக் கண்டு மகிழ்ச்சியடைந்த விநாயகர், தமது உருவத்தை மாற்றி முத்கலமுனிவரின் தோற்றத்தில் காட்சியளித்து தக்கனை நோக்கி "பிள்ளாய்! உனது புகழ்மொழிகளை கேட்டும் பக்தியையும் கண்டும் நான் மகிழ்ந்தேன். இனி நீ விரும்பும் வரங்களை கேள்! தருகிறோம்!'' என்றார்.

தக்கன் விநாயகரை வணங்கி "தேவாதி தேவனே! நான் இருக்குமிடத்தில் அஷ்டஐசுவரிய பாக்கியங்களும் நிறைந்திருக்க வேண்டும். பெயருடனும் புகழுடனும் நான் வாழ்ந்திருக்க வேண்டும்" என்று வேண்டினான்.

அப்போது விநாயகர் அவனை நோக்கி "எனது திருவடிகளில் நீங்காத அன்பும் பக்தியுடைய முத்கலன் என்ற முனிவனின் உருவத்திலேயே நான் இப்போது தரிசனம் அளித்தேன். அவன் உருவத்தில் கலந்து வந்த காற்றினால்தான் உன்னை வாட்டி வதைத்த கொடிய வியாதியையும் ஊனங்களையும் நீங்குமாறு செய்தேன். இனி நீ அந்த முனிவனைச் சரணடைந்தால் உனது விருப்பங்களை அந்த முத்கல முனிவனே முடித்து வைப்பான். அதற்குப் பிறகு நீயும் தேவேந்திரனைப் போன்று சகல சுகபோகங்களிலும் திளைத்து சீரும் சிறப்புமாக வாழ்வாயாக!" என்று வாழ்த்திவிட்டு மறைந்துவிட்டார்.

## தக்கனும் முத்கல முனிவரும்

இவ்வாறு விநாயகப் பெருமான் தங்களுக்கு வரமளித்து மறைந்தவுடன் அவன் மீண்டும் விநாயகப் பெருமானைத் தரிசிக்க விருப்பம் கொண்டு தக்கன் தன் தாயை விட்டு அந்த வனம் முழுதும் சுற்றினான். அந்த வனத்தில் திரியும் யானைகளையெல்லாம் வணங்கித் துதித்தான். இந்நிலையில் அவர்கள் இருவரும் முத்கல முனிவர் வசிக்கும் வனத்திற்கே வந்து சேர்ந்தனர். அங்கு ஒரு ஆசிரமத்தில் கருணையே உருவமான சீடர்கள் சூழ்ந்திருக்க கதிரவனைப் போன்று அவர்கள் மத்தியிலே முத்கலமுனிவர் அமர்ந்திருந்தார். அவர் எதிரில் விநாயகப் பெருமானின் அழகிய விக்கிரகம் அமைந்திருந்தது. தக்கன், அவருடைய திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

அப்போது முத்கல முனிவர் அவனை நோக்கி "பக்தனே! உன் பெயர் என்ன? ஊர் எது? உனது வரலாறு என்ன?" என்று கேட்டார்.

தக்கன் நடந்தவையெல்லாம் ஒன்று விடாமல் முத்கல முனிவரிடம் கூறி முடித்து, விநாயகப் பெருமானைத் தரிசித்த விவரத்தையும் அவரிடத்தில் கூறி "அந்த விநாயகப் பெருமானின் உத்தரவினால்தான் நான் தங்களை நாடி வந்திருக்கிறேன். தும்பிக்கை முகத்தோடு எனக்குக் காட்சியளித்த விநாயகர். தம்முடைய உருவத்தை மாற்றிக்கொண்டு மக்களுடைய திருவுருவத்திலேயே எனக்குக் காட்சியளித்ததால் அந்தக் கடவுளுக்கும் தங்களுக்கும் உருவ அமைப்பில் வித்தியாசமே இல்லை. எனவே தங்களுடைய ஆசியினால் எனக்கு இந்தப் பூவுலக வாழ்க்கை ஆனந்தமாக அமைவதுடன் என்றும் நீங்காத பிள்ளையார் பக்தியுடையவனாக இருக்கும்படி தாங்கள் தான் எனக்குத் திருவருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினான். அதைக் கேட்ட முத்கல முனிவர் தக்கனை நோக்கி "மகனே! நீ உண்மையிலேயே ஒரு பாக்கியசாலி! பல நாள் தவங்களை இயற்றியும் தான தருமங்கள் பலவற்றைச் செய்தும் எனக்கு அந்த விநாயகப் பெருமான் காட்சியளித்ததில்லை. அத்தகைய விநாயகப் பெருமானை நீ உன்னுடைய மனம், வாக்கு, காயம் என்ற முக்காரணங்களாலும் முனைந்து நீ சந்தித்து இருக்கிறாய். அதனால் உனக்கு நிகரானவர் எவருமில்லை. உனக்கு இனிமேல் நான் செய்ய வேண்டிய உதவி என்னவாகத்தான் இருக்க முடியும்" என்று கூறி தக்கனுக்கு கணேசரின் ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்து மகிழ்ச்சியுடன் அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு ஆனந்த பரவசமடைந்தார்.

இந்த நிலையில், தனது மைந்தனை வெகுநேரமாகக் காணாமல் கானகம் எங்கும் தேடிய கமலை கருணையே

வடிவமாகத் திகழும் முத்கல முனிவரிடத்தில் தக்கன் தங்கியிருப்பதைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்து அவளும் அந்த அருந்தவ முனிவரை வணங்கித் துதித் தாள்.

முத்கல முனிவர் அரசி கமலையை நோக்கி "உத்த மியே! நீயும் உன் மகனும் விநாயகப் பெருமானின் திருவரு ளுக்குப் பாத்திரமாகிவிட்டவர்கள். அதனால்தான் சகல விதமான தீவினைகளும் அவரது திருவருளால் உங்களை விட்டு நீங்கிவிட்டன. நான் உனது மகனுக்கு விநாயகப் பெருமானின் ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்திருக் கிறேன் அந்த மந்திரத்தை செபித்து சித்தி பெற்ற பிறகு உனது மகன் தேவேந்திரனைப் போன்று இந்த உலகத் தில் ஒரு சக்கரவர்த்தியாகத் திகழ்வான். இனிமேல் நீங்கள் இருவருமே கவலைப்பட வேண்டாம் என்று கூறி அவர்களிருவருக்கும் விடைகொடுத்து அனுப்பி வைத்தார்.

இவ்வாறு கூறிய விசுவாமித்திரர் அந்த தக்கனின் முற்பிறவி கதையையும் கூறலானார்.

## வல்லாளன் பெற்ற வாழ்வு

எல்லாவிதமான வளமைகளும் நிறைந்த சிந்து தேசத் தில் பல்லி என்னும் பட்டினத்தில் கல்யாணன் என்ற வைசியன் ஒருவன் தன் மனைவி இந்துமதியுடன் வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு வல்லாளன் என்ற மகன் பிறந் தான். அவன் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மாய் வளர்ந்து சிறு பிள்ளைப் பருவத்தை அடைந்தான்.

வல்லாளன் தன் அண்டை அயலிலுள்ள சிறு பிள்ளை களுடன் சேர்ந்து மரங்களடர்ந்த தோப்புகளில் விளை யாடிக் கொண்டிருப்பான். ஒருநாள் அவன் வழக்கம் போல

விளையாடி வரும்போது தோப்பிலிருந்த ஒரு கல்லை எடுத்து அந்தக் கல்லையே பிள்ளையாரின் திருவுருவமாகப் பாவித்து நல்ல நீரால் நீராட்டி நறுமண மலர்களால் பயபக்தியுடன் அர்ச்சனை செய்து பூசித்தான். பிறகு தினந்தோறும் தோப்புகளில் விளையாடி முடித்ததும் வீடு திரும்புவான். நாளுக்குநாள் அவன் பிள்ளையார் பூசையை சிறப்பாகச் செய்துவந்தான்.

ஒருநாள் அதிகாலையில் வல்லாளன் தனது தோழர்களை அழைத்துக்கொண்டு தோப்பிற்குச் சென்று பூசை செய்ய ஆரம்பித்து அன்று பிள்ளையாருக்குத் திருவிழா நடத்த விரும்பினான். மற்ற தோழர்களை ஏவி காட்டிலுள்ள தென்னை ஓலைகளையும் மரக் கம்புகளையும் கொண்டு பந்தல் போட்டு, பூக்களால் அதை அலங்கரிக்கச் செய்தான். விநாயகருக்கு அபிஷேகம் செய்வதற்கான பொருள்களைச் சேகரிக்கவும் சந்தனம் அரைக்கவும் பஞ்சாமிர்தம் தயாரிக்க பழங்களைப் பறித்து வரவும் ஏற்பாடு செய்தான். நைவேத்தியப் பொருள்களையெல்லாம் மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து தயாரித்தான். இவ்வாறு பூசை செய்து அந்தத் தெய்வீகக் கல்லை வலம் வந்து வணங்கினான்.

இதுபோல விடியற்காலையில் ஆரம்பித்து பிள்ளையார் பூசை அஸ்தமனமான பிறகும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தது. இருட்டிய பிறகும் தொடர்ந்தது. வல்லாளனும் அவனுடன் இருந்த சிறுவர்களும் பசி, தாகம் என்பதையே மறந்து தங்கள் விளையாட்டிலேயே மனம் ஒன்றிப் போயிருந்தனர். அதனால் அவர்கள் அனைவரும் காலை உணவு, மதிய உணவு எதுவும் சாப்பிடாமல் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் செல்லவேண்டும் என்ற நினைவே இல்லாமல் இருட்டும் வரையில் தோப்பிலேயே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஊரிலே அவரவர்கள் வீட்டுக் குழந்தைகளைக் காணா மல் பெற்றோர்கள் தவித்தார்கள். தங்கள் பிள்ளைகளை அழைத்துச் சென்ற வல்லாளன் இன்னும் வீடு திரும்ப வில்லை என்று தெரிந்ததும் அவர்களனைவரும் வல்லாள னின் வீட்டுக்கு வந்து அவனது பெற்றோர்களை நோக்கி "உங்கள் பிள்ளையால் எங்கள் வீட்டுப் பிள்ளைகள் எல் லாம் கெட்டுப் போகிறார்கள். அவர்களையெல்லாம் அதிகாலையிலேயே அழைத்துச் சென்றவன் இன்னும் அவர்களை வீட்டிற்கு அனுப்பாமல் விளையாடிக் கொண் டிருக்கிறான். உங்கள் பிள்ளையை நீங்கள் கண்டித்து அடக்காவிட்டால் நாங்கள் அரசனிடம் முறையிட்டு உங்களை ஊரைவிட்டே துரத்தி விடுவோம்" என்று கூச்சலிட்டார்கள்.

அவர்கள் கூறியதைக் கேட்ட கல்யாணனுக்கு வல்லாளன்மீது அடங்காத கோபம் உண்டாயிற்று. அவன் அளவு மீறிய ஆவேசத்துடன் வீட்டு மூலையில் சார்த்தி வைத்திருந்த ஒரு நீண்ட தடியை எடுத்துக்கொண்டு தன் மகன் விநாயக பூசை செய்து கொண்டிருந்த தோப்பை யடைந்தான். அங்கு வல்லாளன் மற்ற சிறுவர்களுடன் விநாயகருக்குத் திருவிழா நடத்தி விளையாடிக் கொண் டிருப்பதைக் கண்டு அவனுக்கு வந்த கோபத்தில் அங்கு போடப்பட்டிருந்த பூப்பந்தலையெல்லாம் பிய்த்து எறிந்து அதன் நடுவில் வல்லாளன் அன்புடன் பூசித்த பிள்ளையார் கல்லையும் எடுத்து எறிந்துவிட்டு பிறகு தன் மகனை பிடித்திழுத்து தன் கையிலிருந்த தடியி னால் அவன் உடலில் இரத்தம் கசிந்து பெருகும்படி நையப் புடைத்தான்.

அடிகளைத் தாங்காமல் கதறி அழுத வல்லாளனை மேலும்மேலும் அடித்ததால் அவனின் பிஞ்சு உடலிலிருந்து இரத்தம் கசிந்தது. அவன் வலி தாங்க முடியாமல்சோர்ந்து தள்ளாடி மயக்கமடையும் நிலையை அடைந்தான்.

அப்போதும் அவன் தந்தையின் ஆவேசம் தீரவில்லை. அடிபட்டு குற்றுயிரும் குலையுயிருமாக இருக்கும் தன் மகனை ஒரு மரத்துடன் சேர்த்து இறுகக் கட்டிப் போட்டு விட்டான்.

"அப்பா! அப்பா! என்னை இப்படிக் கட்டிப் போட்டுப் போகாதீர்கள் அப்பா!" என்று ஈனக்குரலில் கெஞ்சினான், பிறகு மயக்கமடையலானான்.

அதற்கெல்லாம் மனமிரங்காத கல்யாணன் "ஏய் வல்லாளா! உண்மையிலேயே நீ பிள்ளையாருக்குப் பூசை செய்திருந்தால் அவரே வந்து உன் கட்டை அவிழ்த்து விடட்டும்! இனிமேல் அவரே உனக்கு சோறும் தண்ணீரும் உன் கையிலே கொடுத்து உன் உயிரைக் காப்பாற்றட்டும். இனிமேல் நீ வீட்டிற்கு வந்தால் செத்துத்தான் போவாயே தவிர வாழமாட்டாய்!'' என்று ஏளனமாகக் கூறிவிட்டுப் போனான்.

மயக்கம் தெளிந்த வல்லாளன் வேறு வழியின்றி விநாயகப் பெருமானை நினைத்து "பிள்ளையாரே! உம்மையே நம்பியிருக்கும் எனக்கு இத்தகைய துன்பம் வரலாமா? உமது பக்திக்கு நான் ஆட்பட்டவன் என்பது உண்மையானால் நான் உமக்காகக் கட்டிய பூப்பந்தலை எவன் ஒருவன் சிதைத்தானோ, நான் பிரதிஷ்டை செய்த உமது திருவுருவத்தை எவன் ஒருவன் சிறிதும் பயமின்றி வீசி எறிந்தானோ, எவன் என்னைச் சிறுவன் என்றும் பாராமல் தான பெற்ற மகனாயிற்றே என்றும் பாராமல் என் உடம்பில் இரத்தம் கசியும்படி அடித்துக் கொடுமை செய்து என்னை இந்த மரத்திலே கட்டி வைத்து விட்டுப் போனானோ, எவன் உம்மை மதிக்காமல் இகழ்ந்து பேசினானோ அந்தக் கொடியவன் இந்தக் கணத்திலே குருடனாகி, செவிடனாகி, ஊமையாகி, உடலெங்கும் அழுகிய தொழுநோய் கொண்டு அதுவே

சீழும் இரத்தமும் ஒழுக நாள் முழுதும் துன்பப்படக் கடவானாக" என்று மனமாரச் சாபமிட்டான்.

பிறகு தன்னுடல் மரத்தில் கட்டப்பட்டிருப்பதையும் தன் பரிதாப நிலையைப் பற்றியும் சிந்தித்தான். "என் உடலை மட்டும்தானே கயிற்றால் கட்டியிருக்கிறான். என் உள்ளத்திற்கு எந்தவிதக் கட்டும் போடவில்லையே!" என்று நினைத்து தன் மனத்தினுள் விநாயகரையே உறுதியாகத் தியானித்து உயிரைவிடச் சித்தமானான்.

இந்த நிலையை அறிந்த விநாயகப் பெருமான் மன முருகி தமது பக்தனைக் காப்பாற்ற மனமுவந்து அந்தணச் சிறுவனைப் போல மாறுவேடம் பூண்டு வல்லாளன் எதிரே வந்து அவனைக் கட்டியிருந்த கட்டும், அடியுதைகளினால் ஏற்பட்டிருந்த காயங்களும நீங்குமாறு செய்தார். அதைக் கண்ட வல்லாளன் "ஆஹா, அந்தணச் சிறுவனாக வந்திருப்பவரே என்னை ஆட் கொள்ள வந்த விநாயகப் பெருமான்" என்று நினைத்து அவனது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி "சகல புவன கர்த்தாவே இன்று முதல் எனக்குத் தாய், தந்தை, சுற்றம் எல்லாம் நீரேயன்றி வேறொருவரில்லை!" என்று துதித் தான்.

அப்போது அந்தணச் சிறுவராக வந்திருந்த விநாயகப் பெருமான் வல்லாளனைக் கட்டித் தழுவிக்கொண்டு "பக்தனே! என்னை உதாசீனம் செய்து அவமதித்த பரமாத்மாக்களும் என் பக்தர்களுக்குத் துன்பமிழைத்த கொடியவர்களும் கொடூரமான நரகங்களில் தள்ளப் பட்டு தாளமுடியாத வேதனைகளை அனுபவிப்பதோடு இம்மையிலும் மறுமையிலும் கொடிய வியாதிகளால் அவஸ்தைப்படுவார்கள். ஆகையால் நம்மிருவருக்கும் கேடு விளைவித்த கல்யாணனுக்கு நீ அளித்த சாபத் தின் வேதனை பீடிக்கும்படிச் செய்துவிட்டேன். இனி

உனக்கு எந்தவிதத் துன்பமுமில்லை. நீ விரும்பும் வரங்களைக் கேள்" என்றார்.

அவரது வார்த்தைகளைக் கேட்ட வல்லாளன் மகிழ்ச்சியடைந்து "பிள்ளையார் பெருமானே! எப்போதும் உமது பாத கமலங்களில் எனக்கு நிறைந்த பக்தியைத் தந்தருள வேண்டும். இந்த இடத்தில் நீங்கள் கோயில் கொண்டருள எச் சமயத்திலும் நீங்கமற நிறைந்திருந்து பக்தர்கள் கோரும் வரங்களை நிறைவேற்ற வேண்டும்'' என்றும் வேண்டினான்.

விநாயகர் வல்லாளன் வேண்டிய வரத்தையளித்து "வல்லாளா, இந்த இடத்தில் 'வல்லாள கணபதி' என்ற பெயரில் நான் கோயில் கொள்வேன்! மூவுலகத்தைச் சேர்ந்தவர்களும் இந்த இடத்திற்கு வந்து பூஜித்துச் செல்வார்கள்'' என்று கூறிவிட்டு உலகத்தினர் அனைவரும் வணங்கி வழிபடத் தக்க வகையில் வல்லாள கணபதி என்ற திருப்பெயரில் ஒரு விக்கிரக வடிவமாக மாறியமர்ந்தார்.

## வல்லாளனின் முக்தி

விநாயகப் பெருமான் விக்கிரக வடிவம் கொண்டு அங்கு வல்லாள கணபதியாக அமர்ந்திருப்பதைக் கண்ட வல்லாளன் மிகவும் பக்தியுடன் அவரை வணங்கி மீண்டும் பூப்பந்தல் வேய்ந்து. தினசரி பூசை செய்து வரலானான்.

இது இப்படியிருக்க வல்லாளனை அடித்து உதைத்து மரத்தில் கட்டிப் போட்டுவிட்ட அவனது தந்தை கல்யாணன் வீடு நோக்கிச் செல்லும் வழியில் தன் குமாரன் இட்ட சாபத்தினால் கண்கள் குருடாகி, காதுகள் செவிடாகி, வாய் ஊமையாகி, தொழு நோய் கொண்டு வீடு

செல்லும் வழி தெரியாமல் திசை தப்பி மதிமயங்கிய நிலையில் கிடந்தான். அவனைத் தேடிவந்த இந்துமதி அவனது நிலையைக் கண்டு திகைத்து திடுக்கிட்டாள். தன் மகனைத் தன் கணவன் அடித்து நொறுக்கி மரத்தில் கட்டிப்போட்டு வந்த செய்தியைச் சிறுவர்கள் மூலம் கேட்டறிந்த அவள் புத்திர பாசத்தால் துடிதுடித்து கண்ணீர் விட்டு அழுதாள். இப்போது கணவனுக்கு நேர்ந்த கதியைப் பார்த்ததும் அவள் தன் கணவனை வீட்டில் சேர்த்துவிட்டு வல்லாளனைத் தேடிக் கொண்டு காட்டுக்குச் சென்றாள்.

அங்கு வல்லாளனின் உடம்பில் ஒரு இரத்தக் காயமும் இல்லாமல் பக்தி சிரத்தையோடு பிள்ளையார் பூசை செய்வதைக் கண்டதும் இந்துமதி அளவு கடந்த ஆனந்தமும் வியப்புமடைந்து மற்றவர்கள் மூலமாக விசாரித்ததில் தன் பிள்ளை செய்யும் பிள்ளையார் பூசையால்தான் அத்தகைய அற்புதம் நிகழ்ந்திருக்கிறது என்பதை அறிந்தாள்.

அவள் அன்புடன் தன் மகன் வல்லாளனை இறுகத் தழுவிக் கட்டியணைத்து கன்னங்களில் முத்தமிட்டு "என் அருமை மகனே! பிள்ளைப் பருவத்திலேயே உனக்கு விநாயகக் கடவுள்மீது அளவு கடந்த பக்தியிருப்பதைக் கண்டு என் மனம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது. ஆனால் பூசை நேரம் போக மற்ற நேரத்திலாவது உலக வழக்கப்படி வீட்டிற்கு வந்து வேளா வேலைக்கு ஆகாரம் நித்திரை செய்வது தானே நல்லது. என்னையும் உன் தந்தையையும் அறவே மறந்து விட்டு எந்த நேரத்திலும் தனித்திருப்பது நன்றாக இருக்குமா? திடீரென்று எந்தக் காரணமுமின்றி கண் தெரியாமலும் காது கேளாமலும் வாய் பேசாமலும் உடம்பு முழுதும் தொழு நோய் கொண்டு வீட்டிலே மயங்கிக் கிடக்கிறார். உனக்கு அவர்

இழைத்த கொடுமையினால் தான் அவருக்கு இத்தகைய பரிதாபமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்ன இருந்தாலும் அவர் உன்னைப் பெற்ற தந்தையல்லவா உன் கோபத்தை நீக்கி உன் தந்தையின் துன்பங்கள் தீரும்படியான வழிவகைகளை நீதான் தேட வேண்டும். அதன் மூலம் என்னுடைய துக்கத்தையும் நீயே தான் தீர்க்க வேண்டும்'' என்றாள்.

"விக்கினேஸ்வரராகிய பிள்ளையார் பெருமானால் தான் சகல விக்கினங்களும் நீங்க முடியுமே தவிர மனிதர்களால் எதுவும் செய்ய இயலாது. அவரவர் செய்த பாவ புண்ணியங்களை அவரவரே தான் அனுபவிக்க வேண்டும் என்பது இயற்கை நியதி! என் தந்தை நான் உருவாக்கிப் பூசித்த பிள்ளையார் திருவுருவத்தை வீசி எறிந்து என்னையும் கருணையே இல்லாமல் துன்புறுத்தி விட்டார். அதனால் அவருக்கு இத்தகைய தொழு நோய் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிறவியில் மட்டுமின்றி அடுத்த பிறவியிலும் இந்த வினையை அவர் சில காலம் அனுபவித்துத் தீருவார். அம்மா! அடுத்த பிறவியில் நீ, வல்லவராசனுடைய மனைவியாக கமலை என்ற பெயரில் பிறப்பாய். அப்போது என் தந்தையான கல்யாணர் இதே வியாதியோடு உனக்குப் புத்திரனாகத் தக்கன் என்ற பெயரில் பிறப்பார் என்று கூறி மறுபிறப்பில் நடக்கப் போவதையெல்லாம் வல்லாளன் தன் தாயிடம் எடுததுக் கூறினான். அவற்கு மேல் அவன் தாய் அவனுடன் பேசாமல் மனம் வருந்தியவளாய் தன வீட்டிற்குச் சென்றாள்.

வல்லாளன் அந்தக் காட்டிலேயே வல்லாள கணபதியின் திருக்கோயிலைக் கட்டி பூசித்து வந்தான். அவனது பக்தியைக் கண்டு மெச்சிய விநாயகப் பெருமான் தமது விமானத்தை அங்கு அனுப்பி அவனைத் தமதுலகத்திற்கு அழைக்கும்படி தேவர்களுக்குக் கட்டளையிட்டார். பிறகு வல்லாளன சகல மரியாதைகளுடன் வானவெளியில்

தெய்வீக விமானத்தில் பறந்து சென்று கணேசருடைய உலகத்தை அடைந்து அவரது திருவடிகளில் பேரின்ப வாழ்வைப் பெற்றான். இந்த நிகழ்ச்சிகளைக் கேள்வி யுற்ற அந்த நகரத்து மக்கள் அனைவரும் அந்த இடத்தில் விநாயகப் பெருமானுக்கு அழகிய திருக்கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து 'வல்லாள கணபதி' என்று அப் பெருமானை வழங்கலாயினர்.

வல்லாளனின் வாக்குப் படியே அவன் தந்தை அந்தப் பிறவி முழுவதும் தொழு நோயினால் அங்கம் புண்ணாகி அளவற்ற துன்பங்களை அனுபவித்து வந்தான். அவ னுக்கு முன்னதாகவே உயிர் நீத்த இந்துமதி மறு பிறவியெடுத்து கமலை என்ற பெயரில் வல்லாளராசனுக்கு மனைவியானாள். அவர்களுக்கு தக்கண் என்ற பெயரில் அவர்களுடைய புத்திரனாக கல்யாணன் தொழு நோயுட னேயே பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் துன்பமடைந்து கடைசியில் முத்கல முனிவரால் ஏகாக்ஷர உபதேசம் பெற்று சுகவாழ்வடைந்தான்.

## தக்கன் பெற்ற அரசாட்சி

முத்கல முனிவரின் ஆசியைப் பெற்ற தக்கனும் அவனு டைய தாயான கமலையும் புறப்பட்டுச் செல்லும் வழியில் கவுண்டின்ய நகரத்துக்கு அருகில் ஒரு குளுமையான நந்த வனத்தையும் குளத்தையும் குளத்தின் கரையில் பழைமை யானதொரு பிள்ளையார் கோயிலையும் கண்டனர்.

உடனே அவ்விருவரும் பக்திப் பெருக்குடன் அந்தக் கோயிலுக்குச் சென்று பிள்ளையாரை வழிப்பட்டார்கள். முத்கல முனிவர் உபதேசித்த ஏகாட்சர மந்திரத்தை தக்கன் பன்னிரண்டு ஆண்டு காலம் இடைவிடாமல்

செபித்து தூபதீப நைவேத்தியங்களுடன் பிள்ளையாரை இருபத்தோரு நாள் பூசை செய்தான்.

அன்றிரவு நான்காவது சாமத்தில் தக்கன் கனவொன்று கண்டான். நீண்ட துதிக்கையில் பூமாலை ஏந்தி வரும் மத யானை ஒன்று அவன் கழுத்தில் பூமாலையைச் சூட்டி அவனைத் தன் முதுகில் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு பட்டினத்தினுள்ளே பிரவேசிப்பதாகக் கனவு கண்ட தக்கன் கண் விழித்து அந்தக் கனவைத் தன் தாயிடத்தில் சொன்னான்.

அந்தக் கனவைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து "மகனே! இன்றோடு நமது துன்பங்கள் அனைத்தும் நீங்கி விட்டன. நீ அரசனாகப் போகிறாய்!" என்று அந்தக் கனவின் பலனைத் தன் மகனிடம் சொன்னாள்.

அச் சமயம் கவுண்டின்யபுரத்தின் அரசனாகிய சந்திர சேனன் என்பவன் அன்று காலையில் எந்தவிதக்காரணமும் இல்லாமல் திடீரென்று இறந்து விட்டான். அந்த அரசனுக்குப் பிள்ளைப்பேறே கிடையாது. அதனால் அவன் மனைவி ஆற்றொணாத துயரத்தோடு அழுது புலம்பினாள். பின்னர் அரசனுக்குரிய ஈமக்கிரியைகளை நடத்தி முடித்தனர். பின்னர் அந்த நாட்டின் அரசராக யாரை நியமிக்கலாம் என்பதைப் பற்றி அரசியும் அமைச்சர்களும் ஆலோசித்தனர்.

அப்போது முத்கல முனிவர் அங்கு வந்து "அமைச்சர்களே! பட்டத்து யானையை அலங்கரித்து அதன் துதிக்கையில் ஒரு பூ மாலையை அளித்து அதனைக் கட்டவிழ்த்து விடுங்கள். அந்த யானை எவருடைய கழுத்தில் தன் துதிக்கையிலுள்ள பூமாலையைப் போடுகிறதோ அவனே இந்த நாட்டின் அரசனாவான்" என்று கூறினார்.

அவர் கூறியதைக் கேட்டு அனைவரும் வியந்தனர். உடனே சகனம் என்ற யானையை அலங்கரித்து அரசியின் முன்னால் நிறுத்தினார்கள். அரசியும் தன் கணவன் மார்பில் சூடும் பொன் மாலையொன்றை எடுத்து யானையின் துதிக்கையில் வைத்து "இந்த நாட்டை ஆளத்தக்கதொரு அரசனை நீயே மாலையிட்டு அழைத்து வா!" என்று கட்டளையிட்டாள்! அமைச்சர்களும் அந்த யானையைப் பின் தொடர்ந்து சென்றனர்.

அந்த யானை தன்னிச்சையாக வீதிகளின் வழியே கம்பீரமாக நடந்து சென்று தன் எதிரில் வருவோரையெல்லாம் சீறித்தள்ளி விட்டு கோட்டை வாசலைவிட்டு நாட்டின் எல்லையை அடைந்து பின்னர் அங்கிருந்த வனத்துக்குள்ளே சென்று முத்கல முனிவரின் ஆசிரமத்தின் அருகே வந்து நின்று அங்கிருந்த தக்கனின் கழுத்தில் பொன் மாலையைச் சூட்டிவிட்டு பிளிறியது.

தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். அமைச்சர்களும் பொது மக்களும் தக்கனை மனமார வாழ்த்தி அந்த இடத்திலேயே அரசனுக்குரிய ஆடையாபரணங்களையெல்லாம் தக்கனுக்கு அணிவித்தார்கள். தக்கன் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று அவரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துவிட்டு பிறகு தன் தாயைத் தங்கள் பல்லாக்கில் ஏற்றி அமரச் செய்து அவன் பட்டத்து யானை மேல் ஆரோகணித்து சுற்றிலும் அமைச்சர்களும் பொது மக்களும் திரண்டு வர, ஆடல் பாடல் வாத்திய முழக்கத்துடன் அரண்மனைக்குச் சென்றான். அங்கு தக்கனுக்கு முடி சூட்டப் பெற்றது. தக்கன் அரசனானான். பின்னர் தக்கன் முத்கல முனிவரைப் பூசித்து அவருக்குரிய காணிக்கைகளை வழங்கிச் சிறப்பாக அரசாட்சி புரிந்து வந்தான்.

அச்சமயத்தில் தக்கனுடைய தந்தையும் கர்நாடக தேசத்து அரசனுமாகிய வல்லவராசன் தனது குமாரன் நோய் நீங்கி பெயரும் புகழுமாக விதர்ப்ப தேசத்தை அரசாட்சி செய்து வருவதை அறிந்து அளவற்ற மகிழ்ச்சி யடைந்து தனது அரண்மனையை விட்டுத் தூரத்திய தன் மகனையும் தன் மனைவியையும் காண்பதற்காக மிக்க ஆவலுடன் தனது படை வீரர்கள் சூழ விதர்ப்ப தேசத்தை யடைந்து தன்குமாரனைக் கண்டு தான்செய்த கொடுமை களுக்காக வருந்தி தன் மகன் விநாயகரின் திருவருளால் அடைந்த மேன்மையைப் பாராட்டி மகிழ்ந்தான்.

அப்போது வீரசேனன் என்ற அரசனுக்கு திருமகளைப் போன்ற அழகான பெண் ஒருத்தி இருந் தாள். அவள் திருமண வயதை அடைந்து பருவப் பூரிப் புடன் அழகிலும் அறிவிலும் சிறந்து விளங்கி வந்தாள.

ஒருநாள் வீரசேனனின் கனவில் விநாயகப் பெருமான் தோன்றி "அரசனே! உன் மகள் முற்பிறவியில் செய்த நல்வினைகளின் பயனாக அவளை தக்க மன்னன் திருமணம் செய்து கொள்வான். அவர்களுடைய திருமணத்தை விரைவில் செய்து முடிப்பாயாக!'' என்று கூறி மறைந்தார்.

அதன்படியே வீரசேன மன்னன் தன் மகளை தக்க மன்னனுக்கு மிகவும் சிறப்பான முறையில் திருமணம் செய்து கொடுத்தான். அதன் பின்னர் தக்க மன்னனுக்கு விநாயகரின் அருளால் பிரகற்பானு என்ற மகன் பிறந் தான். அவனுக்கு கட்கதரன் பிறந்தான் அவனுக்கு சுபாலன் பிறந்தான். சுபாலனுக்கு ஏகாகரன் பிறந்தான். அவனுக்கு வபுத்திரனும் அந்த வபுத்திரனுக்கு சித்திர சேனனும் பிறந்தான். அந்த சித்திரசேனனுக்குத்தான் வீமராசனாகிய நீ பிறந்தாய்.

"தக்கன் முதலாக உன் தந்தை வரை உனது பரம்பரையில் தோன்றிய அனைவரும் விநாயகப் பெருமானை அளவற்ற பக்தியோடு வழிபட்டு வந்ததால்தான் சகல நற்பயனையும் அடைய முடிந்தது. ஆனால் நீயோ அதை மறந்துவிட்டாய். அதனால்தான் உன்னுடைய வம்சம் விளங்க உனக்கு ஒரு புத்திரன் பிறக்கவில்லை. நீ உன்னுடைய ராஜ்யத்துக்குத் திரும்பிச் சென்று விநாயகரையே பூசித்து வந்தால் உனது குறை விரைவில் நிறைவேறிவிடும்" என்று விசுவாமித்திர முனிவர் சொல்லி விட்டு வீமராசனுக்கு விநாயகரின் ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்தார். அதற்குப் பிறகு வீமராசனும் அவனது ராணியும் விசுவாமித்திர முனிவரிடம் ஆசிபெற்று அக் கானகத்தை விட்டு நீங்கி தங்கள் நகரத்தையடைந்தனர்.

தங்கள் நாட்டின் அரசனும் அரசியும் மறுபடியும் திரும்பி வருவதைக் கண்ட கவுண்டினபுரத்து மக்களும் அமைச்சர்களும் மன்னனை எதிர்கொண்டு வரவேற்று அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

அரண்மனையில் வீமராசனும் அவனது மனைவியும் அந்த நகரத்தில் முன்பு தக்கனால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற பிள்ளையார் கோயிலுக்குச் சென்று வேதாகம முறைப்படி தினசரி பூஜைகளை சிறப்பாகச் செய்து வந்தான். ஏகாட்சர மந்திரத்தை அவனும் அவனது மனைவியும் இடைவிடாமல் செபித்து வந்தனர்.

அவர்களுடைய பக்திக்கு மகிழ்ந்த விநாயகப் பெருமானின் திருவருள் கிட்டியது. வீமராசனின் மனைவி சாருகாசினி கருத்தரித்து உரிய காலத்தில் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அந்தப் பிள்ளைக்கு வீமராசன் ருக்மாங்கதன் என்று பெயரிட்டான். குழந்தை ருக்மாங் கதன் நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமாக வளர்ந்து கபில முனிவர் என்பவருடைய குருகுலத்தில்

கல்வி பயின்றான். அந்த முனிவர் ருக்மாங்கதனுக்கு விநாயகரின் ஏகாட்சர மந்திர உபதேசத்தைச் செய்தார். ருக்மாங்கதன் தன் தந்தையைக் காட்டிலும் விநாயக ரிடத்தில் பக்தி செலுத்தி வந்தான். அவன் வாலிபப் பருவமடைந்ததும் வீமராசன் முடிசூட்டி வைத்தான். ருக்மாங்கதன் விதர்ப்ப தேசத்தை சிறப்பாக அரசாண்டு வந்தான்.

## முனிபத்தினியின் காமமும் ருக்மாங்கதன் பெற்ற சாபமும்

ருக்மாங்கத மன்னன் பகையரசர்கள் பலரையும் வென்று செங்கோல் முறை வழுவாமல் அரசாட்சி செய்து வருங்காலத்தில் ஒரு நாள் அவனது அரசவைக்கு அந் நாட்டு மக்களிற் சிலர் வந்து வணங்கி "அரசே! காட்டி லுள்ள மிருகங்கள் கூட்டம் கூட்டமாக நாட்டிற் குள்ளே வந்து பயிர்களை நாசம் செய்கின்றன" என்று முறையிட்டார்கள்.

உடனே அரசன் மிருகங்களை வேட்டையாடுவதற் காக தனது படை வீரர்கள் புடைசூழ காட்டிற்குப் புறப்பட்டான். அங்கு சிங்கம், புலி, கரடி, காட் டெருமைகள் முதலிய கொடிய மிருகங்களையெல்லாம் வேட்டையாடி கொன்று குவித்தார்கள். அதனால் அவனுக்குக் களைப்பும் சோர்வும் தாகமும் ஏற்பட்டன. தாகத்தைத் தணித்துக் கொள்வதற்காக நல்ல தண்ணீ ரைத் தேடிச் செல்லும் போது அங்கே முனிவர் ஒருவரின் ஆசிரமத்தைக் கண்டான்.

அந்த ஆசிரமத்தில் கவிமகா முனிவர் என்ற தவ முனிவர் தமது மனைவியான முகுந்தை என்பவளுடன் வசித்து வந்தார்.

அங்கு பேரழகுடன் இளமையின் வாளிப்போடும் குதூகலத்தோடும் தனியாக உலாவிக் கொண்டிருந்த அந்த முனிவரின் மனைவி முகுந்தையை ருக்மாங்கதன் சந்தித்து "அம்மா! காட்டிலே துஷ்ட மிருகங்களை வேட்டையாடிய நான் மிகவும் களைப்படைந்து தாக வேட்கையோடு வந்திருக்கிறேன். என் தாகத்தைத் தணித்துக் கொள்ள தண்ணீர் கொடுங்கள் என்று கேட்டான்.

தன்னிடம் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டு நிற்கும் இளவரசன் ருக்மாங்கதனைக் கண்ட முகுந்தை அவனை ஏறிட்டு நோக்கினாள். ருக்மாங்கதனின் ஆண்மைப் பொலிவும் அழகிய முகமும் அவள் மனதைப் பெரிதும் கவர்ந்தன. அதனால் அவள் மதிமயங்கி அவன் மீது மோகதாபம் கொண்டாள்.

அச் சமயம் அவள் கணவனான கவிமகா முனிவர் தமது சீடர்களுடன் வெளியே சென்றிருந்ததால் அந்த ஆசிரமத்தில் அவள் மட்டுமே தனியாக இருந்தாள். அத்தகைய தனிமையான சூழ்நிலையும் ருக்மாங்கதனின் அற்புத அழகும் ஆண்மை செறிந்த இளமையும் உடல் வாகும் சேர்ந்து அவள் மனதில் அடக்க முடியாத விரக தாபத்தை அதிகரிக்கச் செய்யவே அவள் தனது மோக தாபத்தை தீர்த்துக் கொள்ள முடிவு செய்தாள்.

திருமகளும் கண்டு மயங்கும் அழகு வாய்ந்த முகுந்தை தானாகவே வலிய வந்து கெஞ்சிக் கேட்டும் ருக்மாங்கதன் சிறிதும் மனமிரங்காமல் அவளை நோக்கி

எனது தாய்க்குச் சமமான தவ முனிவரின் பத்தினியே! நீயோ உயர் குலத்தில் பிறந்தவள். அறநெறியில் வாழ்ந்து தரும வழியில் உலகைச் சுழலச் செய்ய வேண்டியவள் நானோ சதா காலமும் பிள்ளையார் பெருமானை வணங்கிப் பூசிக்கும் பக்தன்! என் உள்ளம் எச்சமயத்திலும் மாற்றான் மனைவியை நினைத்தாலும் கூட பாவமாகக் கருதும் குணமுடையது.

பெண்கள் தங்களுக்குரிய கணவனுடன் சிறிது நேரமே கூடினாலும் அதுதான் பெரிய சுகமே தவிர பிற ஆடவரோடு அதிக நேரம் கூடிவாழ முயன்றால் அது அதிக பயத்தைத் தருமே தவிர உண்மையான இன்பம் அளிக்குமா? உன்னைப் போன்ற பெண்கள் பிற ஆடவரை மனத்தாலும் கூட நினைத்துப் பார்ப்பதே பெரிய பாவமாகுமே? ஆகையால் உனது நெறி கெட்ட செயலால் உனக்குப் பழிச் சொல் ஏற்படுவதோடு உன் கணவரின் பெருமைக்கும் களங்கம் உண்டாகும். ஆகையால் உன் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு இப்போதே நீக்கியிருப்பதுதான் நல்லது!" என்று நல்வழியை எடுத்துச் சொன்னான் ருக்மாங்கதன்.

அவன் சொன்னதைக் கேட்ட முகுந்தை முன்னைவிட அதிக மோக வசப்பட்டு சட்டென்று ருக்மாங்கதனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு "யுக தர்மத்துக்கு விரோதமாக நீயாக வலுவில் வந்து என்னோடு சங்கமம் செய்ய இச்சித்தால்தான் உனக்குப் பழிபாவங்கள் வந்து சேருமே என்று நீ யோசிக்கலாமே தவிர நானே வலிய வந்து உன்னை இச்சிக்கும்போது உனக்கு எந்தவிதப் பழிபாவமும் நேரிட்டு விடாது.

ஆகையால் என் மனதின் ஆசைத் தீக்கு நீ தடை சொல்லி மறுத்தால் நீ வெந்து சாம்பலாகும்படி நான் உன்னைச் சபித்து விடுவேன். அல்லது உனது ஆண்மைப்

பொலிவின் அழகெல்லாம் குலைந்து போய் அவலட்சண மாகச் செய்து உன் நகரை விட்டு காட்டில் வனவிலங்கு களுடன் வசிக்கும்படி சபித்து விடுவேன் எதற்கும் யோசித்துப் பார்!" என்று ருக்மாங்கதனின் மார்பின் மீது சாய்ந்து அவனைத் தன்னிரு கைகளாலும் இறுக கட்டி அணைத்து தழுவிக் கொண்டாள்.

ருக்மாங்கதன் அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு "மோகத்தால் கண்களை இழந்தவளே! மடை திறந்த வெள்ளம் கூட ஏதாவது ஓர் அணைக்கு அடங்கிவிடும். நெருப்பும் பாம்பும் கூட ஏதாவது ஒரு தடைக்குக் கட்டுப் படும். ஆனால் பாலவயர் உள்ளம் பள்ளத்தில் பாயும் தண்ணீர் வேகத்துக்குச் சமம் என்று பெரியோர் சொல் வர். ஆகையால் மோகத்தால் மதியிழந்த நீ இத்தகைய தீச்செயலுக்கு சிறிதும் மனம் கூசாமல் துணிந்து விட்டாய். நீ இப்படிப்பட்டவள் என்பதை நான் முன்பே அறிந் திருந்தால் இந்தப் பக்கம் வருவதற்கே நான் துணிந் திருக்கமாட்டேன். முனிவரின் பத்தினியாயிற்றே என்று உன்னை மதித்து உன்னிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டேன். நீயோ என்னை மோகத்திற்கு ஆளாக்கி நரகத்தில் தள்ளும்படியான பாதகத்தைச் செய்யத் துணிந்து விட்டாய்! நீ ஒரு தவ முனிவரின் மனைவி என்பதால் பிழைத்தாய். இல்லையென்றால் இந்நேரம் உன்னை என் வாளால் வெட்டிக் கொன்றிருப்பேன். பெண்ணைக் கொலை செய்வது மகாபாவம் என்பதாலும் நீ ஒரு ரிஷிபத்தினி என்பதாலும் உன்னை உயிரோடு விடுகிறேன். காம வெறி பிடித்த உன்னைப் பார்ப்பதே மகாபாவம்!" என்று கூறிவிட்டு ருக்மாங்கதன் அங்கிருந்து நீங்கினான்.

முகுந்தை அவனை முறைத்துப் பார்த்தாள். தனது கட்டழகுக் கவர்ச்சியின் இளமையினைக் கண்ட பிறகும் தானாகவே வலியச் சென்று அவனைக் கட்டியணைத்தும்

அவன் தனது இச்சைக்கு இணங்காமல் செல்வதைக் கண்ட அவளுடைய கோபம் அதிகமாயிற்று.

"ஏய் அரசனே! என் மனத்தைச் சலனப்படுத்தி என் கற்பு குலையும்படி செய்ய இங்கு வந்த நீ எனக்கு ஒரு இன்பமும் கொடுக்காமல் செல்கிறாய்! அதனால் நான் உன்னைச் சபிக்கிறேன். எனக்குப் பயன்படாத உனது அழகிய உடல் உருக்குலையும்படியான வகையில் உடலில் குஷ்டரோகம் பிடிக்கட்டும்!" என்று சபித்தாள்.

முனி பத்தினி இட்ட சாபம் உடனே பலித்து விட்டது. ருக்மாங்கதனின் அழகிய மேனியெல்லாம் வெண்குஷ்டம் பரவியது. அவன் உடல் எங்கும் விகாரமாகியது.

இதனால் மிகவும் துயரமடைந்த ருக்மாங்கதன் விநாயகப் பெருமானை நினைத்துத் துதித்த வண்ணம், அத்தகைய கொடிய வியாதியுடன் தனது நகரத்திற்குச் செல்ல விரும்பாமல் அந்தக் காட்டிலேயே ஓர் ஆலமரத்தின் நிழலில் அமர்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுடன் வேட்டைக்குச் சென்ற வீரர்கள் எல்லாம் தங்கள் மன்னன் தலைநகருக்குச் சென்றிருப்பான் என்று நினைத்து தலைநகரத்தை அடைந்தார்கள். மாலைப் பொழுது துவங்கியது. இரவுப் பொழுது குவிந்தது. ருக்மாங்கதன் பசி, தாகம், களைப்பு ஆகிய துன்பங்களுடன் அந்த வனத்திலேயே தங்கியிருந்தான்.

## சாபம் நீங்க நாரதர் சொன்ன வழி

மறுநாள் பொழுது புலர்ந்தது. உணவும் உறக்கமும் இல்லாமல், துயரங்களால் வருந்திய ருக்மாங்கதன், சூரிய

உதய காலத்தில் தனது காலைக் கடன்களை முடித்து விட்டு விநாயகப் பெருமானை வணங்கித் துதித்து பிரார்த் தனை செய்த வண்ணம் இருந்தான். அப்போது வான வெளியில் நாரத முனிவர் யாழினை மீட்டிக்கொண்டு பரமனைப் புகழ்ந்து பாடிய வண்ணம் செல்வதைக் கண்டான். உடனே அவன் "அபயம்! நாரத முனிவரே அபயம்! உமது திருவடிகளில் அடியேன் ருக்மாங்கதன் சரணாகதியடைகிறேன். என் மீது கருணை காட்டுங்கள் என்று கூவியழைத்து தனது பரிதாபக் கதையை நாரத முனிவரிடம் கூறிவிட்டு விநாயகரின் அருளால் நான் உம்மை இன்று தரிசித்தேன் என்றான்.

ஞான திருஷ்டியினால் அனைத்தையும் அறிந்து கொண்ட நாரதர் அவனிடம் வந்து ''ருக்மாங்கதா! உனது அரசாட்சியிலுள்ள விதர்ப்ப தேசத்தில் சந்தர்ப்பம் என்ற நகரத்தில் ஒரு வினோதத்தைக் கண்டேன். அந்த நகரத்தில் பிள்ளையார் பெருமானின் திருக்கோயில் ஒன்று இருக்கிறது. அதன் எதிரே கணேச குண்டம் என்ற புண்ணியப் பொய்கை ஒன்று இருக்கிறது. அதன் அருமை பெருமைகளை பூலோக வாசிகளும் தேவர்களும்கூட அறிந் திருக்கிறார்கள். ஒரு குஷ்ட நோயாளி, தீர்த்த யாத்திரை செய்யும்போது அந்தப் பொய்கையில் குளித்து எழுந்தான்.

உடனே அவனுடைய கொடிய நோய் நீங்கியது மட்டு மின்றி அவனது தீவினைகளும் நீங்கி அவன் விநாயகப் பெருமானின் அருளாள் அனுப்பப் பெற்ற விமானத்தில் ஏறி விநாயகர் உலகத்தை அடைந்து விட்டான். நீயும் அந்தப் பொய்கையில் நீராடி அந்த விநாயகப் பெருமானை வணங்கி வழிபட்டு தான தருமங்களைச் செய் வாயானால் உனது தொழுநோய் நீங்கும் விநாயகரின் திருவருளால்தான் இந்தக் கொடிய நோய் நீங்குமே தவிர

வேறு எந்த மூலிகை மருந்துகளாலும் எத்தனை தருமங் களைச் செய்தாலும் நீங்காது என்றார்.

ருக்மாங்கதன் "நாரதரே கதம்பவனத்தில் வீற்றி ருக்கும்விநாயகரைப் பிரதிஷ்டை செய்து பூஜித்தவர் யார்? அந்த வரலாற்றைக் கூற வேண்டும்" என்றான். நாரதர் கூறலானார்.

"முன்பு ஒரு சமயம் நான் இந்திர சபைக்குச் சென் றிருந்தேன். இந்திரன் என்னை எதிர் கொண்டு அழைத்து வரவேற்றுப் பூசித்து உபசரித்து உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்து "சகல உலக சஞ்சாரியான நாரத முனிவரே! நீங்கள் சஞ்சரித்த இடங்களில் ஏதாவது அதிசயம் இருந் தால் அதை தயவு செய்து சொல்லுங்கள்!" என்று கேட்டான்.

"தேவர்களின் அரசனே! நான் பூவுலகம் சென்ற போது அங்கு கௌதம முனிவரின் மனைவியான அகலிகை என்ற அழகியைப் பார்த்தேன். அவள் அழகிற்கு ஈடாக இந்தத் தேவலோகத்திலுங்கூட ஒரு பெண்ணைக் காண இயலாது. திருமகள், இரதிதேவி, இந்திராணி ஆகிய தனிப்பெரும் அழகிகளும்கூட அவள் எதிரில் நிற்க முடியாது. அத்தனைப் பேரழகு வாய்ந்த அந்த அகலிகை யின் பேரழகைக் கண்டதும் பரமேஸ்வரனின் திருவடி களைத் தவிர வேறெதிலும் பற்றற்ற பிரும்ம ரிஷியான எனது உள்ளமும்கூட சலனமடைந்து அவளை அடைய ஆசைப்பட்டது என்றால் இந்தப் பிரபஞ்சத்தில் அவளை அடைய ஆசைப்படாத ஆண்மகன் எவனுமே இருக்கமாட் டான்! என்று கூறிவிட்டு நான் சென்று விட்டேன்.

உடனே தேவேந்திரனுக்கு அந்த அகலிகையின் மீது அடக்க முடியாத மோகம் மூண்டு விட்டது. அவளை எப்

படியாவது கூடி மகிழ்ந்து தன் ஆசையை அடைந்து அனுபவித்து விடவேண்டும் என்ற ஆவலினால் அவன் ஓர் உபாயம் செய்தான். இந்திரன் தனது சுயவுருவை மறைத்து அகலிகையின் கணவரான கௌதம முனிவரைப் போல் தன் உருவை மாற்றிக்கொண்டு அந்த முனிவர் அதிகாலையில் நீராடச் சென்ற நேரத்தைப் பார்த்து அகலிகையிடம் சென்று அவளுடைய கணவனைப் போலவே நடித்தான்.

தன்னை நாடி வந்திருப்பவன் தேவேந்திரன் தான் என்பதை உணர்ந்து கொள்ள முடியாத அந்த அகலிகை சற்று முன்னர் நீராடச் சென்ற தன் கணவர் தான் உடனே திரும்பி விட்டார் என்று நினைத்த அவள் "நாதா! நீராடச் சென்ற நீங்கள் ஏன் நதிக்குச் சென்று நீராடாமலேயே திரும்பி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"உன்னை உடனேயே கூடி மகிழ வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அதனால் தான் திரும்பி வந்தேன்!" என்றான் கபடவேடதாரி.

அதைக் கேட்ட அகலிகை திகைத்தாள். "நித்திய நியம ஒழுக்கங்களை என்றுமே தவறாத நீங்கள் இன்று மட்டும் அதற்கு மாறாக இப்படிப்பட்ட அற்ப ஆசை கொண்டதற்குக் காரணம் என்ன? வழக்கம் போல அதி காலையில் நீராடி நித்திய காலைக் கடன்களை முடித்து சிவ பூஜை செய்ய வேண்டிய இந்த உத்தமமான சமயத்தில் இப்படிப்பட்ட காம வேதனையும் சிற்றின்ப இச்சையும் கொண்டு வருவது சரிதானா? சரிதான் என்று தவமுனி வரும் ஞானியுமான நீங்களே நினைத்து வந்திருந்தால் அதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருக்க வேண்டுமே!" அந்தக் காரணம் என்ன? என்று கேட்டாள் அகலிகை.

அதற்கு கௌதம முனிவரின் வேடத்தில் இருந்த தேவேந்திரன் "என் அழகு மனைவியே! நான் அதிகாலையில் நீராடச் செல்லும் நீர்த் துறையில் ஒரு பெண் நீராடிக் கொண்டிருந்தாள். அந்நிலையில் அவளைக் கண்டதும் எனக்கு மனம் பேதலித்தது. மோகதாபம் மீறியது என்றான்.

போலி வேடத்தில் வந்திருக்கும் இந்திரனைத் தனது கணவன் என்றே நம்பிவிட்ட அகலிகை அக்னிசாட்சியாக கரம்பற்றி மணம் புரிந்த தன் கணவன் மனங்கோணாதபடி நடப்பதே தனது கடமை என்று நினைத்து அந்தக் கபடவேடதாரிக்கு சம்மதித்து படுக்கையை நெருங்கினாள்.

இந்திரன் மிகவும் மகிழ்ச்சியடைந்து பூங்கொடி போன்ற அகலிகையை அன்போடு கொஞ்சினான்.

அப்போது அகலிகையின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. இன்பத்தின் துறுதுறுப்பிலே மயங்கிய அவளுக்கு திடீரென்று ஒரு சந்தேகமும் பயமும் அந்த புதிய அனுபவத்தால் ஏற்பட்டது.

"இந்த ஆள் என் கணவரைப் போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் பழக்கமுடைய எனக்கு வேறு ஆள் என்றே படுகிறது. இவன் என்னிடம் பேசிய வார்த்தைகளும் காட்டிய மோகமும் இவன் உடலின் மணமும் என் கணவரிடத்திலிருந்து மாறுபட்டதாகவே இருக்கிறது. இவன் என்னை ஏமாற்றிவிட்ட இந்த ஆள் என்னைக்கூடி அனுபவிப்பதற்காகவே என் கணவரைப் போல கள்ளத்தனமாய் மாறு வேடத்தில் வந்திருக்கும் தேவேந்திரனாகத்தான் இருக்க வேண்டும் என்று யூகித்து நிச்சயித்து அந்தக் கபடவேடதாரியான தேவேந்திரனை கோபத்துடன் உற்று நோக்கி "என் கணவரைப் போல

வேடமிட்டு வந்த கள்வனே. நீ யார் உண்மையைச் சொல்லிவிடு. சொல்லாவிட்டால் நான் உன்னைச் சபித்து விடுவேன்! என்று கூறினாள்.

அதைக் கேட்ட தேவேந்திரன் சிந்தித்தான். "நான உண்மையைச் சொன்னால் இவள் உண்மையில் மகிழ்ச்சி அடைவாள் என்று நினைத்து புன்சிரிப்புடன் அகலியை நோக்கி "பூவுலகப் பெண்ணே! நான் தேவர்களின் அதிபதியான தேவேந்திரன்! உன் அழகின் செழிப்பைப்பற்றி கேள்விப் பட்டதும் நான் எனது தேவலோகப் பதவியையும் தேவமங்கையரின் போகங்களையும் வெறுத்து உன் மீது மோகம் கொண்டு இங்கு வந்தேன். என் ஆசைக்கு ஈடாக மனம் இசைந்து எனக்கு இணங்கி பெண்மை தரும் பேரின்பத்தை வழங்கினாய். நம் இருவர் உணர்வுகளும் ஒன்றி நாம் இருவரும் ஒன்றாகிவிட்ட பிறகு இனி என்னை நீ வேறாக நினைப்பாயானால் அது இயற்கைக்கே விரோதமாகும். எனவே இன்று போல் பேரின்பத்தை தந்து வரவேண்டும் என்று கெஞ்சினான்.

அதைக் கேட்ட அகலிகைக்குக் கோபம் பொங்கியது. நயவஞ்சகமாக தனது கற்பு மாற்றானிடம் பறிபோனதை எண்ணி அகலிகை மனம்கொதித்தாள். தன் கணவரைப் போல கள்ளவேடம் பூண்டு தன்னையும் கெடுத்து பெண்மையின் மரபுக்கே களங்கம் விளைவித்து தனது கற்பைச் சூறையாடி தன் கணவரின் பெருமையைக் குலைத்து உள்ளத்தையும் கொதிக்க வைத்து தன்னைப் பலவாறாகவும் கெடுத்து விட்ட இந்திரனைப் பார்ப்பதற்கு அவள் கண்கள் கூசின. அவள் அழுதாள்.

அப்போது சூரிய உதயத்திற்கு முன்பாகவே எழுந்து நீராடச் சென்ற அவளது கணவரான கௌதம முனிவர் காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு தனது

ஆசிரமத்திற்கு திரும்பி வந்து வாசலில் நின்றபடியே "அகல்யா! தண்ணீர் கொண்டு வா!" என்றார்.

உடனே அகலிகையின் உடல் நடுங்கியது. அந்த நடுக்கத்துடனேயே பழக்கத்திற்கு மாறான பாவனையுடனும் அசுத்தமான உடலோடும் தண்ணீர் கொண்டு சென்று தன் கணவரிடம் கொடுத்தாள்.

தன் மனைவியின் உடல்நடுக்கம், அசுத்தமான கோலம் உடல் வாட்டம், கன்றிப் போன கன்னம் இவற்றைக் கண்ட முனிவர் "அகல்யா! ஏன் உன் முகம் வாடியிருக்கிறது வழக்கம் போல வாசற் கதவை இன்று நீ தாழிட்டு வைக்கவில்லையே. புன்னகை தவழும் உன் முகம் ஏன் இப்படி இருண்டு கிடக்கிறது. உன் உடம்பு ஏன் சுசிகரமாக இல்லை! நான் நீராடச் சென்றிருந்த வேளையில் இங்கு என்ன நடந்தது? அப்படி ஏதேனும் நடந்திருக்குமானால் அதை உள்ளது உள்ளபடியே சொல்லி விடு!" என்றார்.

உடனே அகலிகை உள்ளம் கலங்கி உடல் நடுங்க உணர்வு ஒடுங்க தன் கணவரின் கால்களில் விழுந்து வணங்கி மெல்ல எழுந்து மனங்கூசி வெட்கத்தால் தலை குனிந்து வாய்குளற முகம் வெளிற "சுவாமி! தேவேந்திரன் தங்களுடைய உருவத்தில் இங்கு நயவஞ்சகமாக வந்து ஆள் மாறாட்டம் செய்து என்னைக் கூடி மகிழக் கூப்பிட்டான். நான் அவனை தாங்கள் என்றே நினைத்து அதற்கு உடன்பட்டு அவனோடு கூடிவிட்டேன்'' என்று குரல் விம்மத் தலை குனிந்து கூறினாள்.

ஆசிரமத்திற்கு வெளியே அவர்களிருவரும் பேசுவதை மறைவிலிருந்து கேட்ட இந்திரன் திடுக்கிட்டு முனிவர் தன்னைச் சபித்து விடுவாரோ என்ற பயத்தால் ஒரு பூனை

யின் வடிவமெடுத்து ஆசிரமத்தின் உள்ளேயிருந்து வெளியே நழுவிச் செல்ல முயன்றான். மதிமயங்கிச் செல்லும் அந்தப் பூனையை கௌதமர் பார்த்து விட்டார். தேவேந்திரன் தான் அந்தப் பூனை வடிவில் தப்பியோடப் பார்க்கிறான் என்பதை அவர் யூகித்துக் கொண்டு "ஏய் பூனையே நீ யார்? போகாதே நில்!" என்று அதட்டினார்.

அதனால் தேவேந்திரன் வேறு வழியின்றி தன் சுய உருவத்துடன் தனது தேவலோகப் பெருமைகள் அனைத்தும் இழந்தவனாக அடங்கி ஒடுங்கி அவர் முன் நின்றான். கௌதம முனிவர் அவனை நோக்கி "தேவர் களுக்கு அதிபனான நீயா இப்படிச் செய்வது! பெண் பித்தனே! நீ செய்த மகாபாதகமான செயலுக்கு உன்னை இப்போதே என் தவாக்கினியால் சுட்டுச் சாம்பலாக்கி விடலாம்! ஆனால் நீ தேவர்களின் தலைவனாகையால் அவர்களை முன்னிட்டு உன்னைச் சாம்பலாக்காமல் விடுகிறேன். ஆனால் எந்தப் பெண் இன்பத்தை நாடி இப் பெரும் பாதகத்தைச் செய்ய துணிந்தாயோ உன் உடல் முழுவதும் அதன் சின்னங்களான பெண் குறிகளாகவே ஆகட்டும்!" என்று சாபமிட்டார்.

உடனே தேவேந்திரன் சவத்தைப் போல கீழே விழுந்து தனக்கு நேர்ந்த சாபத்தை நினைத்து தாங்க முடியாத துயரத்துடன் "ஐயகோ! இந்தநாள் வரை நான் கற்ற கல்வியறிவும் தேவலோக ஆட்சியின் பெருமை யும் மற்ற எல்லா சுகபோகங்களும் காமம் என்னும் தீயில் பட்டு எரிந்து சாம்பலாகினவே! ஐயகோ! சாதாரண மாக பெண்கள் தங்கள் உடலில் இருக்கும் ஒரே பெண் குறியை மறைப்பதற்காகவே, மிக நீளமான ஆடைகள் அணிந்திருந்தும் பிற ஆடவர் எதிரில் வருவதற்கே நாண மடைவார்களே! அப்படிப்பட்ட பெண் குறிகள் என் உடல் முழுவதும் ஏராளமாகத் தோன்றி விட்டதே! இனிமேல் நான் எப்படி என் உடலில் நிறைந்திருக்கும் பெண்குறி

களையெல்லாம் மறைத்து பிறர் எதிரில் நடமாடப் போகிறேனோ? என்று உள்ளங் கூச, உடல் கூச, உணர்வெல்லாம் கூச வருந்தினான். ஒரு விநாடி கூட அவனால் அங்கு இருக்க முடியவில்லை. உடனே அவன் வெளியேறி எவர் கண்ணிலும் படாமல் தடாகம் ஒன்றிலே மூழ்கி ஒரு தாமரைத் தண்டின் உள்ளே ஒளிந்து கொண்டான்.

அழகும் இனிமையும் நிறைந்த தேவ மங்கையர்கள் பலரும் இருக்க தவமுனிவரின் பத்தினியின் மேல் தகாத இச்சை கொண்ட காரணத்தினால் தான் இந்திரனுக்கு அத்தகைய சீரிழிவு ஏற்பட்டது! அவன் தன் பெருமைகளை இழந்து தண்டினுள்ளே ஒளிந்துகொள்ள நேரிட்டது. நியாயமான தேவர்களின் தலைவன் என்றாலும் தகாத முறையில் இன்பம் கொண்டதால் இந்திரனுக்கு ஏற்பட்ட துன்பங்கள் தான் மற்றவருக்கும் உண்டாகும். விநாயகப் பெருமானின் பாதத் தாமரைகளில் பக்தி செலுத்தும் இன்பம் தான் உண்மையான இன்பமாகும்" என்று கூறி நாரத முனிவர் மேலும் கூறலானார்.

## இந்திரனைக் காப்பாற்ற தேவர்களின் முயற்சிகள்

கௌதமர் இட்ட சாபத்தினால் தாமரைத் தண்டினுள் தேவேந்திரன் மனங்கூசி பதுங்கி ஒளிந்து வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் தேவர்கள் எல்லாம் வழக்கம் போல தேவ சபைக்கு வந்தபோது அங்கு தேவேந்திரனைக் காணாமல் அவன் தனது அந்தப்புரத்திலிருக்கக் கூடும் என்று நினைத்து அங்கும் தேடினார்கள். அங்கும் அவன் இல்லை என்பதை இந்திராணியிடமிருந்து

தெரிந்துகொண்ட அவர்கள் மனம் திடுக்கிட்டு இந்திரனைத் தேடிக்கொண்டு மூவுலகிலும் அலைந்தார்கள்.

பின்னர் அவர்கள் தேவ குருவான பிருகஸ்பதியை அழைத்துக்கொண்டு "திரிலோக சஞ்சாரியான நாரதனைக் கேட்டால் தகவல் தெரியும்!" என்று என்னிடம்வந்தார்கள். அவர்கள் என்னிடத்தில் விசாரித்தபோது தேவேந்திரன் செய்த தகாத செயலையும் அதனால் ஏற்பட்ட துன்பங்களையும் அவர்களிடம் நான் விவரித்துச் சொன்னேன். அவர்கள் நீண்ட நேரம் யோசித்துவிட்டு "இந்திரனுக்குச் சாபம் கொடுத்த கௌதம முனிவரிடமே சென்று அவன் செய்த பாவத்திற்கு சாபம் கொடுத்த அவரிடத்திலேயே அந்தச் சாபத்திற்குப் பரிகாரம் கேட்போம்'' என்று தீர்மானித்து என்னையும் தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

நானும் தேவ குருவும் அவர்களுடன் சேர்ந்து கௌதமரின் ஆசிரமத்தை அடைந்து அவரை நாங்கள் அனைவரும் பயபக்தியுடன் பூசித்து தேவலோகத்தைத் திரும்பவும் ஆளும்படியாக தேவேந்திரனுக்கு சாப விமோசனம் அளிக்க வேண்டும் என்றும் அவன் செய்த தவறுகளைத் தங்களுக்காக மன்னிக்க வேண்டும் என்றும் வேண்டினார்கள்.

அப்போது அவர் தேவகுருவை நோக்கி "தேவகுருவே! தீவினைகள் அனைத்தையும் நீக்கும் சக்தியுடைய கணேச மந்திரத்தை நான் உமக்கு உபதேசிக்கிறேன். அந்த மந்திரத்தை தாமரைத் தண்டில் மறைந்து வாசஞ் செய்யும் இந்திரனுக்கு நீங்கள் உபதேசம் செய்யுங்கள் அந்த மந்திரத்தைச் செபித்தால் தேவேந்திர

னின் உடல் முழுமையும் தோன்றியுள்ள அருவருக்கத்தக்க பெண்குறிகள் அனைத்துமே அழகிய கண்களாக மாறி விடும். அவன் செய்த தீவினைகளும் அவனைவிட்டு நீங்கி விடும் என்று சொல்லி அந்த மந்திரத்தைத் தேவகுருவுக்கு கௌதம முனிவர் உபதேசித்தார். பிறகு தேவர்கள் முனிவரை வணங்கிப் போற்றிவிட்டு அங்கிருந்து கந்தர்ப்பம் என்ற தடாகத்தை நோக்கிச் சென்றனர்.

## ஆயிரம் கண்கள்

அந்தத் தடாகத்தில்தான் தாமாரைத் தண்டினுள் இந்திரன்ஒ ளிந்து கொண்டிருந்தான். தேவர்கள் அனைவரும் அங்கு சென்று "தேவர்களின் தலைவரே! மனக் கவலையைவிட்டு மறைவிடத்திலிருந்து வெளியே வாரும்! உம்மைச் சபித்த கௌதம முனிவரிடமே நாங்கள் அனைவரும் சென்று முறையிட்டு உமது சாப விமோசனத்திற்கான வழி முறையை நாங்கள் தெரிந்து வந்துள்ளோம். நாரத முனிவரும் எங்களுடன் வந்திருக்கிறார். அவரிடம் உமதுகுறைகளை வெளியிட்டால் அதற்குரிய பரிகாரத்தை அவரே உமக்குச் சொல்லுவார். தாமரைத் தண்டிலிருந்து வெளியே வாரும்" என்று தேவர்களனைவரும் வேண்டினார்கள்.

உடனே தேவேந்திரன் தாமரைத் தண்டிலிருந்து அச்சத்தோடும் வெட்கத்தோடும் அவமானத்தோடும் மனம் கூசியபடியே வெளியே வந்தான்.

தேவேந்திரன் தான் செய்த குற்றங்களையெல்லாம் நாரத முனிவரிடம் கூறி தேவ சபையில் அகலிகையின் அழகைத் தம்மிடம் நாரதர் கூறியதால் தனக்கு மோக மயக்கம் ஏற்பட்டு அதனால் செய்யத்தகாத குற்றங்களைச் செய்துவிட்டதால்தான் அத்தகைய இழிவான நிலையை

அடைய நேரிட்டது என்று கூற, தேவகுரு தேவேந்திரனுக்கு கணேச மந்திரத்தை உபதேசித்தார். அந்த உபதேசத்தைக் கேட்டவுடனேயே அவனுடலில் அவமானச் சின்னங்களாக விளங்கிய ஆயிரம் பெண் இனக்குறிகள் எல்லாம் ஆயிரம் கண்களாக மாறிவிட்டன. தேவேந்திரன் மகிழ்ச்சியடைந்தான். தேவர்கள் மலர் மாறி பொழிந்தார்கள்.

தேவேந்திரன் அவர்களை நோக்கி "தேவர்களே தவப் பெருமை வாய்ந்த கௌதம முனிவர் அளித்த உபதேசத்தால் எனக்கு ஏற்பட்ட அவமானச் சின்னங்களை அகற்றுவதற்காக நீங்கள் செய்தமுயற்சிகளுக்கு எனது நன்றிகள். உங்களால் ஒளி பொருந்திய ஆயிரம் கண்களை நான் அடைந்தேன். இனி நான் விநாயகப் பெருமானின் திருவருளைப் பெறுவதற்காக தவம் செய்யப் போகிறேன். அதற்குப் பிறகுதான் நான் தேவலோகம் திரும்புவேன். நீங்கள் அனைவருமே தேவலோகம் செல்லுங்கள். சிலர் மட்டும் அங்கிருக்கும் கற்பகத் தருவிடமிருந்துஎன்னுடைய தவத்திற்குத் தேவையான பொன், பொருள் முதலியவற்றையெல்லாம் கொண்டுவந்து கொடுங்கள்" என்று கூறி தவமிருக்கச் சென்றுவிட்டான்.

## இந்திரன் போற்றிய சிந்தாமணி விநாயகர்

தேவேந்திரன் கதம்பவனத்தில் கற்களினாலேயே பிள்ளையார் கோயில் ஒன்றைக் கட்டினான். அந்த ஆலயத்தில் விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்து தினந்தோறும் பூஜை செய்து சடாக்ஷர மந்திரத்தை செபித்து தவமிருந்து வந்தான். இதன் விளைவாக விநாயகர் சிங்க வாகனத்தில் ஏறிய வண்ணம் இந்திரனுக்குத் தரிசனம் அளித்து ''தேவேந்திரா! நீ வேண்டும் வரங்கள் என்ன?" என்று கேட்டார்.

தேவேந்திரன் தான் செய்த பிழைகளுக்கு மன்னிப்புக் கேட்டு "இந்தப் புண்ணியத் தலத்தில் நான் வணங்கி வழிபடும் இந்தப் பிரதிமைக்கு சிந்தாமணி விநாயகர் என்றும் இந்த நீர் நிலைக்கு சிந்தாமணி தீர்த்தம் என்றும் பெயர் வழங்கி இங்கு வரும் அனைவரும் சிந்தாமணி தீர்த்தத்தில் நீராடி உமது திருவுருவாகிய சிந்தாமணி விநாயரை வணங்கி வழிபடுவோருக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களும் கிடைக்க அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினான். விநாயகரும் "அப்படியே ஆகுக!" என்று வரம் தந்து மறைந்தார். பிறகு தேவேந்திரன் தேவலோகம் சென்று ஆட்சி நடத்தி வரலானான்.

இவ்வாறு ருக்மாங்கத மன்னனுக்குக் கூறிய நாரத முனிவர் "ருக்மாங்கத மன்னனே! நீயும் அந்த சிந்தாமணி விநாயகரைச் சரணடைந்து பூசித்து வந்தால் உனது தொழுநோய் நீங்குவதுடன் பல வரங்களையும் பெற்று மகிழ்வாய்!" என்றார். அவ்வாறே சிந்தாமணி விநாயகரைப் பூசித்துவந்த ருக்மாங்கத மன்னன் விநாயகர் உலகத்திற்குச் சென்று மோக்ஷ இன்பத்தை அடைந்தான்.

## முகுந்தையின் காதலும் திருச்சமதர் பிறவியும்

சவுனகாதி முனிவர்களே! சொல்கிறேன் கேளுங்கள்! முன்பொரு சமயம் ருக்மாங்கத மன்னனின் கட்டழகில் மயங்கிய முகுந்தை அவனுடன் இன்பமனுபவிக்கத் துடிதுடித்தும் அவன் அவளுடைய விருப்பத்திற்கு இணங்காமற் போகவே அவனுக்குத் தொழுநோய் உண்டாக வேண்டும் என்று சபித்தாள் அல்லவா! ருக்மாங்கதன் அவ்விடத்தை விட்டுச் சென்றதிலிருந்து

மோகம் தீராத முகுந்தை ருக்மாங்கதனையே எண்ணி எண்ணி அனலில் அகப்பட்ட புழுவைப்போல துடித்தாள். விரகதாபத்தால் வேதனைப்பட்டாள்! ருக்மாங்கதனோடு கூடி மகிழ முடியவில்லையே என்று அவள் ஏங்கித் தவித்தாள். அவனைப் போன்ற ஓவியத்தை எழுதி அதைக் கொஞ்சினாள். மார்பில் அணைத்து முத்தமிட்டாள். இப்படியே அந்த ருக்மாங்கதனையே கட்டித் தழுவி ஆனந்தம் அனுபவித்தாலன்றி தன் உயிர் பிழைக்காது என்ற நிலையினையடைந்து தரையில் சாய்ந்து தன்வசமிழந்து கிடந்தாள்.

இவையனைத்தையும் அறிந்த தேவேந்திரன் அந்த முகுந்தையிடம் தான் கூடிக் கலந்து சரசமாட விரும்பி வேட்டைக்கு வந்த ருக்மாங்கதனைப் போலவே மாறு வேடம் தரித்து முகுந்தையின் மனமும் நெகிழும்படி அவள் முன்பு தோன்றினான். முதலில் மறுத்துச் சென்ற ருக்மாங்கதனே தன்னிடம் திரும்பி தன்னை விரும்பி வந்திருக்கிறான் என்று நினைத்து மயங்கிக் கிடந்த முகுந்தை விருட்டென்று எழுந்தாள். உடனே மாயவேடம் பூண்டுவந்த தேவேந்திரன் வாஞ்சையுடன் இதமான வார்த்தைகளையெல்லாம் பேசி தன் மார்பில் பூசிய சந்தனம் எல்லாம் முகுந்தையின் மீது பட்டுக் கலையும்படி அவளை இறுகத் தழுவினான். முகுந்தையின் ஆசையைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்த இந்திரன் அவளுடன் மகிழ்ந்து அந்த மோகப் போரில் மன்மதனையும் முறியடித்து அவனது கரும்புவில்லையும் ஒடித்தெறிந்தான். இதனால் முகுந்தை தன் ஆசைப்படி பூர்த்தியான கலவிக்காகப் பெரிதும் பரவசப்பட்டாள்.

தான் நினைத்து வந்ததற்கு மேலாகவே முகுந்தையிடம் ஆனந்தம் அனுபவித்த தேவேந்திரன் அவளிடம் விடைபெற்று தன் மாறுவேடத்தை நீக்கி சுயஉருவத்

துடன் தேவ உலகத்தை அடைந்தான். முகுந்தையும் தன் கணவரான கவிமுனிவரிடம் சென்று பத்தினி மனைவி யைப் போல பணிவிடைகளைச் செய்து வந்தாள்.

நாளடைவில் முகுந்தை கருவுற்றாள். சூரியனைப் போல பிரகாசிக்கும் அழகிய மைந்தன் ஒருவனைப் பெற் றாள். அந்தக் குழந்தை தேவேந்திரனுக்குத் தான் பிறந் தது என்பதையறியாமல் தனது புத்திரனே என்று கருதிய கவிமுனிவர் அந்தக் குழந்தையைத் தூக்கி தோள் மீதும் மார்புமீதும் வைத்துக்கொண்டு கொஞ்சிக் குதூகலமடைந் தார். முகுந்தை அவனை அன்போடு வளர்த்தாள். அவனுக்கு "திருச்சமதர்" என்று பெயரிட்டனர். அவன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தான். அவனது அழகை யும் வாலிபத் துடிப்பையும் கண்டு மகிழ்ந்த கவி மகா முனிவர் அவனுக்கு 'கணானந்துவா' என்ற கணபதி மந்திரத்தை உபதேசித்து "மகனே இந்த மந்திரத்தை இடைவிடாது செபித்து வந்தால் உனக்கு விநாயகப் பெரு மானின் திருவருள் கிடைக்கும் என்று கூறினார். தந்தை யின் சொல்லைவிட மந்திரம் வேறில்லை என்று நினைத்து அவன் அந்த மந்திரத்தைச் செபித்து வந்தான்.

அந்தக் காலத்தில் மகதநாட்டை சூரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் பெரும் கொடை வள்ளல். ஒரு முறை அரசனுடைய தந்தைக்கு சிரார்த்தனை வந்தது. அதை முன்னிட்டு அத்திரி, வசிஷ்டர் முதலிய முனிவர் களை அரசன் வரவழைத்தான். அவர்களுடன் திருச்சம தரும் சென்றார். சிரார்த்தம் நடந்து முடிந்ததும் அத்திரி முனிவருக்கும் திருச்சமத முனிவருக்கும் இடையே சாஸ்திர சம்பந்தமான விவாதங்கள் நடந்தன. அதிலே ஒருவருக் கொருவர் முரண்பாடு ஏற்பட்டு அதன் பயனாக வாக்கு வாதம் நிகழ்ந்தது. முடிவில் திருச்சமத முனிவரை அத்திரி

முனிவரால் வெல்ல முடியவில்லை. அதனால் கோபங் கொண்ட அவர் திருச்சமத முனிவரை நோக்கி —

"பெரிய உத்தமனைப்போல் பேசுகிறாயே! உன் பிறப்பையும் பெருமையையும் நெருப்பில்தான் போடவேண்டும். என்னோடு வாதாட வந்த நீ ஒரு தவமுனிவரின் புத்திரனா! இல்லவே இல்லை. நீ கவிமகா முனிவருக்குப் பிறந்த கதை ஒருவருக்கும் தெரியாதா என்ன! இச் சபையில் இருக்கும் முனி புத்திரர்களுக்குச் சமமாக இருப்பதே சரியல்ல! எங்களுக்குத் தருகின்ற மதிப்பையும் மரியாதையையும் உனக்கு வழங்கவே கூடாது. இந்தக் கணமே நீ இந்த இடத்தை விட்டுப் போய்விடு! என்று கோபாவேசத்துடன் கூறினார்.

அதைக் கேட்டதும் மிகவும் கோபமடைந்த திருச்சமதர் அங்கிருந்து விருட்டென எழுந்து விழிகள் நெருப்பெனச் சிவக்க, உதடுகள் துடிதுடிக்க அங்கிருந்த முனிவர்களையெல்லாம் ஒழித்துவிடுவதைப் போல விழித்துப் பார்த்து "முனிவர்களே, வசிஷ்டர் போன்ற அத்தகைய முனிவர்கள் கூடியிருக்கும் இந்தச் சபையில் என்னோடு வாதிட்டு வெற்றியடையச் சக்தியற்ற அத்திரி முனிவன், என்னை ருக்மாங்கத மன்னனின் மகன் என்று அவமதித்துப் பேசியதை நீங்கள் அனைவருமே கேட்டுக் கொண்டிருந்தீர்கள். உண்மையில் நான் கவிமகா முனிவரின் புத்திரன்தான் என்றால் இச்சபையில் குழுமியிருக்கும் உங்களையெல்லாம் கண் இமைக்கும் நேரத்தில் சாம்பலாக்கி, தேவர்களும் போற்றிட புகழும் கீர்த்தியும் அடைவேன்!" என்று சூளுரை செய்து அங்கிருந்து வேகமாக வெளியேறி அதிவேகமாக தன் தாயிடம் வந்து தாங்கமுடியாத கோபத்தோடும் வேதனையோடும் தன் தாயைக் கூவியழைத்து "அம்மா! என் முன்னால் வா! என் தந்தை யார் நான கவிமகா முனிவரின் மகன்தானே! விஷயத்தை உள்ளபடியே என்னிடம் சொல்லிவிடு" என்று குமுறிக் கேட்டான்.

அதைக்கேட்ட முகுந்தை உள்ளம் பதைபதைத்து "என் மகனே! நடந்த உண்மைகள் அனைத்தையும் நான் உன்னிடம் சொல்கிறேன் ஆத்திரப்படாமல் கேள்" என்று சொல்லிவிட்டு முன்பொரு சமயம் ருக்மாங்கத மன்னன் தாகத்திற்கு தண்ணீர் கேட்க தன்னிடம் வந்ததையும் அவன்மீது தான் மோகங் கொண்டதிலிருந்து இடையில் நடந்த விஷயங்கள் அனைத்தையும் கூறி முடித்தாள்.

அதைக் கேட்டதும் எரியும் தீயில் நெருப்பையே மீண்டும் கொட்டியதைப் போல மிகவும் கோபமடைந்த திருச்சமத முனிவர் தன் தாயை நோக்கி 'நீ மோக மயக்கத்தால், தவ முனிவரின் மனைவியாக இருந்தும் ஈனத்தனமான காரியத்தைச் செய்துவிட்டாய்; அதனால் நீ கானகத்திலே பறவைகளும் கூட உண்ணாமல் தங்காமல் வெறுத்துத் தள்ளி ஒதுக்கும் இலந்தை மரம் ஆகக்கடவாய்!" என்று சாபமிட்டார்.

அதைக் கேட்டு நடுங்கிய முகுந்தை தன் மகனே தனக்கு இப்படியொரு சாபத்தைக் கொடுத்துவிட்டானே என்று அவளும் வெகுண்டு தன் மகனை நோக்கி "மகனே, சாஸ்திரங்கள், கலைகள் அனைத்திலும் நீ சிறந்தவனாக இருந்தும் உன்னைப் பெற்றெடுத்த அன்னையென்று என்னை நீ எண்ணிப் பாராமல் நான் பயந்து நடுங்கும்படி என்னைச் சபித்துவிட்டாய் அதனால் நானும் உன்னை என் புத்திரன் என்றும் கருதாமல் பதிலுக்குச் சாபமிடு கிறேன். என்னைப் போலவே நீயும் பயந்து நடுங்கும்படியாக, மகா கொடியவனான ஒரு புத்திரன் உனக்கே பிறக்கட்டும்!" என்று சபித்துவிட்டு அந்த வினாடியே அவள் ஓர் இலந்தை மரமானாள்!

பிறகு திருச்சமதர், தான் ஒரு உத்தமமான முனி குமாரர் அல்ல, கள்ளத்தனமாகப் பிறந்த புத்திரன்

என்பதை நினைக்கவே மனங் கூசினார். அந்த அவமானத்தோடு உயிர் வாழ்வதைவிட தன் உயிரைத் துறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்துவிட்டார். அப்போது "நீ தேவேந்திரனுடைய குமாரன்!'' என்று அவர் நெஞ்சம் மகிழும்படியான அசரீரி வாக்கு கூறியது. அதைக் கேட்டதும் திருச்சமதர் தமது மனத்தை ஓரளவு தேற்றிக் கொண்டு "இப்போது என்னை தலைகுனிய வைத்த முனிவர்களனைவரும் என்னை மதித்துப் போற்றக்கூடிய வகையில் உன்னதமான வரங்களைப் பெற்று வர வேண்டும்" என்று தீர்மானித்து மற்றொரு காட்டை அடைந்தார்.

அந்தக் காட்டில் இருந்த முனிவர்கள் அவரை அன்புடன் வரவேற்று, அவ்வனத்தில் தவம் புரியும்படி கூறினார்கள். இதனால் உள்ளம் மகிழ்ந்த திருச்சமத முனிவர் தமது வலது கால் பெருவிரலை பூமியில் ஊன்றி நிறுத்தி ஐம்புலன்களையும் அடக்கி விநாயகப் பெருமானின் திருவடிகளை மனத்தில் நினைத்து மந்திரத்தைச் செபித்துக் கடுந்தவம் செய்து வந்தார். ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை கண் விழித்து மீண்டும் மூடிக் கொள்வார். இவ்வாறு பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தார்.

அந்த தவத்தின் அக்கினி ஸ்வாலையைக் கண்ட விநாயகப் பெருமான் தமது மனைவியரான சித்தி புத்திகளுடன் திருச்சமத முனிவர் முன் காட்சியளித்தார்.

''மெய்யன்பனே! உன் தவத்தைக் கண்டு மகிழ்ந்தோம். உனக்கு விருப்பமான வரங்களைக் கேள்" என்றார் விநாயகர்.

''கர்த்தரே! உன் திருவடிகளில் அடியேனுக்கு அசைவற்ற பக்தியைத் தரவேண்டும். இந்த வனத்தில் தாங்கள்

திருக்கோயில் கொண்டருளி தேவர்களுக்கும் மனிதர் களுக்கும் விரும்பிய வரங்களைத் தந்தருள வேண்டும். இந்த வனத்துக்கு புஷ்பகவனம் என்றும் இந்த நகரத்துக்கு புஷ்பகநகரம் என்றும் பெயர் ஏற்பட வேண்டும். இவற் றைத் தவிர என்னை தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், தைத்தியர்கள், அரக்கர்கள் ஆகிய அனைவரும் வணங்கி போற்றி என் ஆணையைத் தட்டாமல் நடந்து கொள்ளும்படியான வரத்தையும் தந்தருள வேண்டும்" என்றார். விநாயகப் பெருமானும் அவன் வேண்டியவாறு வரமளித்து "பக்தனே இந்த நகரம் கிருதயுகத்தில் புஷ்பக நகரம் என்றும் திரேதாயுகத்தில் மணிபூர்கநகரம் என்றும் துவாபர யுகத்தில் பாகை நகரம் என்றும் கலியுகததில் பத்திரீக நகரம் என்றும் வழங்கப் பெறும். சர்வபெரு மானைத் தவிர எவராலும் அழிக்கப்பட முடியாத வரப்பிர சாதியாகவும் தன்னிகரற்ற தனிப்பெரும் பலசாலியாகவும் எமது பாத கமலங்களில் பக்தி வைத்திருப்பவனுமான மகன் ஒருவன் உனக்குப் பிறப்பான். மூன்று உலகங்களி லுள்ளவர்களும் உன்னைப் போற்றிப் புகழும்படியான சகல சௌபாக்கியங்களும் உனக்கு சித்தமாகும்" என்று கூறி விட்டு மறைந்து விட்டார்.

பிறகு முனிவர் அங்கு ஒரு கோயிலைக் கட்டி விநாயகரைப் பிரதிஷ்டை செய்து வரதகணபதி என்று பெயரிட்டு திருக்குளத்தையும் வெட்டி தினசரி பூசை களைச் செய்து வந்தார்.

## திரிபுராசுரன் பிறந்த கதை

விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்ற திருச் சமத முனிவர் ஒரு நாள் நீண்ட நேரம் யோகத்தில் ஈடு பட்ட பிறகு தமது கண்ணைத் திறந்து பார்த்தார். அவரது தீட்சண்யமான கண்விழிப் பார்வையிலிருந்து சகல

உலகங்களும் பயந்து நடுநடுங்கும் படியான 'பலி' என்னும் பெயரையுடைய ஓர் அரக்கன் இடியோசை போன்ற ஆரவாரத்துடன் பிறந்தான். தாயின் சாபத்தின் விளைவாகவே அத்தகைய புத்திரன் அவருக்குப் பிறந்தான். சிவந்த நிறமும் அதியற்புதமான அழகும் ஜொலிக்கும் மகுடமும் நவரத்தின குண்டலங்களும் தோள் கவசமும் அரைஞாணும் இன்னும் ஏராளமான அலங்காரங்களோடு சூரியனையும் மங்கச் செய்யும் பிரகாசத்தோடு அவன் தோற்றமளித்தான். பிறர் அவனை நோக்கி "நீ யார்? எங்கிருந்து வந்தாய்?" என்று கேட்டனர்.

அதற்கு அந்த பலி என்னும் அரக்கன் "நான்தான் உமது மகன். என்னையே உமக்குத் தெரியாமலிருப்பது எனக்கே வியப்பாக இருக்கிறது. நீர் விழித்த பார்வையிலே நான் உற்பத்தியானேன்! எனக்குத் தாய் தந்தை இருவரும் நீரே தான்! என்னைச் சில காலம் வரையில் நீர் காப்பாற்றி வளர்த்து விட வேண்டும். அதன் பிறகு நான் மூன்று உலகங்களையும் வென்று வெற்றிக் கொடி நாட்டுவேன். எனது வீரதீரப் பிரதாபங்களையெல்லாம் அப்போது நீங்களே தெரிந்து கொள்வீர்கள்" என்றான்.

அதைக் கேட்ட திருச்சமத முனிவர் உள்ளூர நடுங்கி அவனுடைய எதிர் கால ரகசியத்தை வெளிப்படுத்தக் கூடாது என்று தீர்மானித்து கொண்டு 'மகனே! ஆதி பரம்பொருளாகவும் எங்கும் தானாகத் தோன்றி ஒளிரும் ஜோதி ஸ்வரூபமாகவுள்ள கணேச மந்திரத்தை நான் உனக்கு உபதேசம் செய்கிறேன். அந்த மந்திரத்தைச் செபித்துத் தவம் செய்தால் உனக்கு சகல சௌபாக்கியங்களும் உண்டாகும் என்று கூறிவிட்டு அவனுக்கு வேதாகம முறைப்படி அந்தக் கணேச மந்திரத்தை உபதேசித்தார்.

பிறகு பலி என்னும் அரக்கன் தன் தந்தையை வணங்கி விடை பெற்று அந்த வனத்திலேயே ஓரிடத்தில் தங்கி தன்

தந்தையைப் போல விநாயகப் பெருமானைக் குறித்து கடுந்தவம் செய்து வந்தான். அவனது தவத்திற்கு இரங்கிய விநாயகப் பெருமான் தரிசனம் தந்தார். அவன் அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

"கருணைக் கடவுளே! உம்மையே நான் அன்புடன் நினைத்துத் தவம் செய்தது உண்மையானால் நான் மூன்று உலகங்களையும் வென்று வெற்றி வீரனாகத் திகழ வேண்டும். நான் இடும் ஏவல்களை இந்திராதி தேவர்களும் நிறைவேற்ற வேண்டும். நான் நினைத்த பொருள்கள் யாவும் நான் நினைத்தவுடனேயே எனக்கு கிடைக்க வேண்டும். உமது திருவடிகளில் எனக்கு என்றுமே மாறாத பக்தி இருக்க வேண்டும். தேக முடிவில் நான் முக்தியும் அடைய வேண்டும்" என்று வேண்டினான்.

விநாயகப் பெருமான் அவனை நோக்கி "பலியே நீ கேட்ட வரங்களனைத்தையும் நாம் உனக்குத் தந்தோம். மூவுலகத்தாரும் உனக்கு அடங்கி ஏவல் புரிவார்கள். மேலும் கரும்பொன், வெண்பொன், பசும்பொன் என்ற மூன்று உலோகங்களினால் ஆகிய மூன்று விதக் கோட்டைகளையும் நாம் உனக்குத் தருகிறோம். அவை கள் திரிபுரம் என்ற பெயர் பெறும்! உன்னை அனைவருமே "திரிபுரன்" என்ற பெயராலேயே அழைப்பார்கள். சிவ பெருமானின் வில்லம்பினாலன்றி மற்ற எவராலும் உனக்கு அழிவு ஏற்படாது. நீ நினைத்த இடத்தில் உனக்கு முன்னதாகவே உனது திரிபுரக் கோட்டைகளும் நடந்து வரும் இறுதியில் உனக்கு முக்தியும் சித்திக்கும்" என்று வரமளித்து மறைந்து விட்டார்.

அதன் பிறகு பலி என்ற அந்தத் திரிபுராசுரன் தன் தந்தையைப் பணிந்து வணங்கி விநாயகப் பெருமானிடம் தான் பெற்ற வரங்கள் அனைத்தையும் சொல்லி மகிழ்ந்

தான். பிறகு மூன்று உலகங்களின் மீதும் படையெடுத்துச் சென்று அவ்வுலகங்களின் ஆட்சியாளர்களையெல்லாம் வென்றடக்கும் லட்சியத்தோடு அந்தப் புஷ்பக விமானத்தி லேயே சஞ்சரித்து வந்தான்.

பிறகு அவன் புஷ்பகவனத்தில் இருக்கும் கணேசபுரத் தில் அனைவரும் வியக்கத் தக்க வண்ணம் ஒரு கற்கோயி லைக் கட்டி தான் நேரில் தரிசித்த விநாயகப் பெருமானைப் போலவே ஒரு விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து தினந் தோறும் வழிபட்டு வந்தான். சில காலத்தில் அவன் பூவுலகத்திலிருந்த மன்னர்களை யெல்லாம் வென்று போர் முரசு கொட்டிய வண்ணம் பல திசைகளிலும் போருக்குச் சென்று பல யுத்தங்களையும் செய்து பூவிலக வேந்தர்களை எல்லாம் வென்று வெற்றி வாகை சூடினான். தனக்குக் கீழ் படிந்த மன்னர்களையெல்லாம் கொன்று குவித்து விட்டுப் பூவுலகத்தில் தனி ஆட்சியை நிலை நாட்டிய பிறகு அவன் பாதாள லோகத்திற்கும் போரிடச் சென்றான்.

பாதாள லோகத்தை ஆண்டு வந்த நாகேந்திர ராஜன் போன்ற மாவீரர்களையெல்லாம் போர்க் களத்திலே வென்று அந்த உலகத்திலிருந்த பொருளையெல்லாம் சூறையாடிக் கொண்டு மீண்டும் பூவுலகத்திற்கு வந்தான். அருகிலும் தூர தேசங்களிலிருந்த அரசர்கள் எல்லாம் அவ னிடம் வந்து வணங்கினர். அவர்களுக்கெல்லாம் பொன் பொருள்களை வாரிக் கொடுத்து அவன் ஒரு பெரும் அள வில் படையைத் திரட்டினான்.

பிறகு தேவலோகத்தினை நோக்கித் தனது கவுரவப் படைகளுடன் போர் முரசுகள் முழங்கப் படையெடுத்து அங்கிருந்த தேவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்தான். இந்தச் செய்தியை தேவர்கள் இந்திரனுக்கு அறிவித்தார் கள். திரிபுரனும் தான் படையெடுத்து வந்திருப்பதை அறிவிக்கும்படி தனது தூதுவர்களை இந்திரனிடம்

அனுப்பி வைத்தான். அவர்கள் இந்திரனிடம் சென்று "தேவர்களின் தலைவனே! எமது சக்கரவர்த்தி உமது உலகின்மீது படையெடுத்து வந்திருக்கிறார். ஆகையால் நீங்கள் விரைவில் அவரைப் பணிந்து அடங்கி வாழவேண்டும். இல்லையென்றால் எங்கள் தலைவர் உம்மை உமது தேவலோகப் பதவியிலிருந்து விரட்டி, யமலோகத்திற்கு தள்ளிவிடுவார். உமக்கு அவருடன் போர்புரியும் ஆற்றலும் துணிவும் இருந்தால் இந்தக் கணத்திலேயே உமது போர்ப் படைகளுடன் போர்க்களத்துக்கு வரலாம். அதற்குப் பயந்தால் உடனே எமது தலைவரிடம் வந்து சரணாகதி அடையலாம். இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்?'' என்று முழங்கினார்கள்.

அதைக் கேட்ட தேவேந்திரன் மிகவும் கோபம் கொண்டு 'தூதுவர்களே! அகம்பாவம் பிடித்த உங்கள் அரசன் தனது முடிவு தெரியாமல் என்னிடம் மோத வந்துவிட்டான்? நான் போர் முனையில் சந்திக்கிறேன். உங்கள் அரசனைப் போர்க்களத்தில் முறியடிப்பேன்!" என்றான்.

தூதர்கள் நடந்தவற்றை திரிபுரனிடம் கூறினர். உடனே அவன் போர்க்கோலம் கொண்டு, இந்திரனிடம் போரிட்டான். அந்தப் போரிலே இந்திரன் தோற்றுவிட்டான். அவன் திரிபுராசுனுக்குப் பயந்து இமயமலைக் குகை ஒன்றில் மறைந்து கொண்டான்.

பிறகு திரிபுரன், சத்தியலோகத்தையும் வைகுந்தத்தையும் கைப்பற்றினான். பிறகு பூவுலகம் வந்து பிள்ளையாரைப் பூசித்துத் தனக்கு மூன்று கோட்டைகளையும் வழங்குமாறு வேண்டினான். அவன் வேண்டியபடியே சுக்கிலம் என்ற இரும்புக் கோட்டையையும் கமிலம் என்ற வெள்ளிக் கோட்டையையும் சுவர்த்து என்ற பொன்னாலான கோட்டையையும் அமைத்தான். அந்தக் கோட்டைகள் அவன் செல்லுமிடங்களுக்கெல்லாம் சென்று வந்தன.

அவன் தன் உள்ளத்திலிருந்து உருவாக்கிய வஜ்ரதமிட்டிரன், வீமராயன், காளைகூடன் என்ற தனது மூன்று புதல்வர்களிடமும் அந்தக் கோட்டைகளை ஒப்படைத்தான். பிறகு வங்காளத்திற்குச் சென்று தனது மனத்தாலே கண்டன், பிரகண்டன் என்ற இரு புதல்வர்களையும் உருவாக்கி, அவர்களிருவரையும் முறையே சத்தியலோகத்திலும் வைகுண்டத்திலும் ஆட்சிக்கு அமர்த்தினான்.

பின்னர் அவன் ஒரு மங்கையை மணந்து, மதன் என்ற மகனைப் பெற்றான். திரிபுரன் சகல உலகங்களிலும் தனது அரசாட்சியை செய்து வரும்போது நாரத முனிவர் மூலம் தேவர்கள் தேவேந்திரன் இருக்கும் கயிலையை அடைந்து நாரதரிடத்திலேயே திரிபுரனை அழிக்கும் வழிகளைக் கேட்க அவர் "திரிபுரசூரனையும் அவனது திரிபுரங்களையும் சிவபெருமான் ஒருவராலேயே அழிக்க முடியும். விநாயகரின் அருளால்தான் அவன் இத்தகைய சக்திகளைப் பெற்றானாகையால் அவரை வழிபட்டு பூசித்தால் அவர் திரிபுரனை அழித்துச் சாடுவதற்கு உபாயம் செய்வார்'' என்று கூறி மறைந்தார். தேவர்கள் அவ்வாறே பிள்ளையாரைப் பூசித்தனர்.

விநாயகர் அந்தணன் வடிவத்துடன் திரிபுராசனை அணுகினார். திரிபுரன் அவரை வரவேற்று உபசரித்து "நீங்கள் வந்த காரியம் என்ன?'' என்று கேட்டான்.

"திரிபுரனே! மூன்று உலகங்களையும் சுற்றிவரும் சித்தனாகிய நான், பிள்ளையார் பக்தனாகிய உன்னைக் காண வந்தேன். மூன்று உலகங்களிலும் உன் புகழ்தான் கொடிகட்டிப் பறக்கிறது. ஆனால் மூவுலகங்களையும் உனது அரசையும் அரச போகங்களையும் எனக்கு அளித்தாலும் அவை எனக்கு வேண்டாம். எனக்கு ஒரே விருப்பம் கைலாயத்தில் உமாமகேஸ்வரர் தினந்தோறும்

ஆகம விதிப்படி வணங்கும் சிந்தாமணி விநாயக மூர்த்தி விக்கிரகத்தை என்னிடம் கொடுக்க வேண்டும்!" என்றார்.

"இதென்ன பிரமாதம்? சிவபெருமானையே அந்த விக்கிரகத்தைக் கொண்டுவந்து கொடுக்கச் செய்கிறேன். அதுவரையில் நீங்கள் இந்த நகரத்திலேயே இருக்க வேண்டும்" என்றான். பிறகு தனது வீரர்களை கைலாயத்திற்குஅனுப்பி சிவபெருமான் பூசித்துவரும் சிந்தாமணி விநாயகரைக் கேட்டு வாங்கி வாருங்கள். அவர் அதைத் தர மறுத்தால் நான் அவர்மீது போர் தொடுத்து அதைப் பறித்து வருவேன் என்றான்.

## திரிபுர தகனம்!

இதனிடையில் தேவர்கள் சிவபெருமானுக்கு மிகவும் அதியற்புதமான சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாக்கி உருவாக்கிய தேர் ஒன்றைத் தயாரித்தனர்.

அந்த சமயத்தில் திரிபுரனின் தூதர்கள் சிவபிரானிடம் வந்து வணங்கி "நீங்கள் வழிபடும் சிந்தாமணி விநாயகரின் விக்கிரகத்தை விரைவில் எங்களிடம் கொடுத்து அனுப்ப வேண்டும். இல்லையென்றால் எங்கள் திரிபுரன் உங்கள்மீது போர் செய்ய நேரும்!" என்றனர்.

சிவபெருமான் புன்னகையுடன் "உங்கள் அரசனைப் போர்க்களத்தில் சந்திக்கச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு விநாயகப் பெருமானை தியானித்து "பிள்ளையார் பெருமானே! பிரம்மனும் விஷ்ணுவும் தேவேந்திரனும் தேவர்களும் உமது பக்தனான திரிபுராசுரனுக்கு பயந்து தலைமறைவாக இமயமலைக் குகைகளில் ஒளிந்துகொண்

டுள்ளனர். அவர்களுக்கெல்லாம் திருவருள் புரிந்து அந்த திரிபுரனை அழிக்கும்படியான வழியைச் சொல்லவேண்டும்" என்றார்.

உடனே விநாயகப் பெருமான் சிவபெருமானின் முகத்திலிருந்து பஞ்ச பூதங்களின் அமைப்பாக ஐந்து முகங்களுடன் கூடிய திருமேனியுடன் தோன்றி "நீங்கள் நினைப்பவை அனைத்துமே எளிதில் முடியும். திரிபுரன்மீது போர் தொடுத்து அவனை அழிக்க வேண்டுமானால் எனது மந்திரத்தை நூறு முறை செபித்து உமது ஆயுதத்தைப் பிரயோகிக்க வேண்டும். திரும்ப ஈர்க்கும்போது மும்முறை செபிக்க வேண்டும்!" என்று கூறி மறைந்தார்.

பின்னர் திரிபுரனுக்கும் சிவபெருமானுக்கும் இடையே பெரும் போர் மூண்டது. விநாயகப் பெருமானை அருகில் இருத்தி போர் செய்யும்போது தேவர்களும் பிரம்மனும் விஷ்ணுவும் பூதகணங்களும் தோல்வியடைந்தனர். என்றாலும் திரிபுரனின் மூன்று கோட்டைத் தலைவர்களும் அவனது இரண்டு புத்திரர்களும் போர்க்களத்தில் மடிந்தனர். திரிபுரம் என்ற மூன்று கோட்டைகளுடன் திரிபுராசுரன் போர் புரிந்தான்.

மிகப் பயங்கரமான யுத்தம் நெடுநாள் வரையில் நடைபெற்றது. அப்போது தேவர்கள் சிவபெருமானை வணங்கி "நீங்கள் இந்தப் போரை மேலும் நீடித்தால் அவன் உங்கள் திருமேனியை தரிசிப்பதாலேயே அதிக வலிமை பெற்றுவிடுவான். ஆகையால் அவனை விரைவில் கொன்றொழிக்க வேண்டும்" என்றனர். போர் தொடர்ந்து நீடித்தது. திரிபுரனின் மூன்று கோட்டைகளையும் சிவபெருமான் அழித்தார். அதனால் அவருக்கு 'திரிபுராகி' என்ற பெயர் உண்டாயிற்று. அதற்குப் பிறகு போர் மிகவும் உக்கிரமாக நடைபெறலாயிற்று. திரிபுராசுரன் சிவபெரு

மான் ஏறி வந்த தேரைத் தாக்கி நிலைகுலையச் செய்தான். அப்போது அச்சாணியிலிருந்து ஆணி கழன்று தேர் குடை சாயும் நிலையடைந்தது அதே சமயத்தில் சிவபெருமான் எய்த அம்புகளும் தீர்ந்தன. அத்தகைய இக்கட்டான நிலையில் விநாயகர் தமது தந்தங்களில் ஒன்றை உடைத்து அச்சாணித் துவாரத்தில் அழுத்தவும் சிவபெருமான் விநாயக மந்திரத்தை உச்சரித்துத் தமது திரிசூலத்தை எடுத்தார்.

உடனே திரிபுராசூரன் எரிந்து சாம்பலான காட்சியைத்தான் யாவரும் பார்த்தனரே தவிர அந்தச் சூலம் எங்கு சென்றது என்பதை ஒருவராலும் காணமுடியவில்லை.

## தக்ஷயக்ஞமும் பார்வதி கல்யாணமும்

"சிவபெருமான் பிள்ளையாரை வழிப்பட்டுத் துதித்து திரிபுரா தகனம் செய்த வரலாற்றைச் சொன்னோம். அது போலவே பார்வதி தேவியும் பிள்ளையாரை வழிபட்ட வரலாற்றையும் சொல்கிறேன் கேளுங்கள்" என்று சூதமா முனிவர் கூறலானார்.

முன்பொரு காலத்தில் பிரும்மதேவனின் புதல்வர்களின் ஒருவனான தக்கன் என்பவன் அரிய தவங்களைச் செய்து அகில உலக நாயகியான உமா தேவியே தனக்குப் புதல்வியாகப் பிறக்க வேண்டும் என்றும் அவர்களனைவரும் தன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற வரத்தைப் பெற்றான். அதன்படியே உமாதேவி அவரது புதல்வியாகப் பிறந்து தாட்சாயணி என்ற பெயரைப் பெற்று வளர்ந்து வந்தாள். தக்க பருவத்தில் தக்கன் அவளைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

ஒருநாள் தன் மகளைப் பார்க்க தக்கன் திருக்கை லாயம் சென்றான். அப்போது மருமகனான பரமசிவன் தன்னைக் கண்டவுடன் எழுந்து நின்று மரியாதை செய்ய வில்லை என்று அவன் கோபத்துடன் திரும்பிச் சென்று விட்டான். மாமனாரை மதிக்காத மருமகனை உலக நாயகராகிய சிவபெருமான் என்று சிந்திக்காமல் அவரை நிந்தித்து அவரைவிடத் தானே உயர்ந்தவனாகவேண்டும் என்ற எண்ணத்துடன் யாகம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்தான். தேவர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப் பிய அவன் சிவபெருமானுக்கு மட்டும் அழைப்பு அனுப்ப வில்லை. தனது தந்தை நடத்தும் யாகத்திற்கு மற்ற தேவர்கள் அனைவரும் செல்வதைக் கண்ட தக்கனின் மகளான தாட்சாயணியும் அந்த யாகத்திற்குத் தன் கணவனுடன் செல்ல வேண்டும் என்று விரும்பினாள். சிவபெருமானோ தம்மை அவமதிக்கும் பொருட்டாக நடத்தும் யாகத்திற்கு நாம் செல்லக்கூடாது. உன் தந்தை நமக்கு அழைப்பும் அனுப்பவில்லை, ஆகையால் அழையாத வீட்டிற்கு செல்வது நல்லதல்ல" என்றார்.

ஆனால் தாட்சாயணியோ மிகவும் பிடிவாதமாகத் தன் தந்தை நடத்தும் யாகத்திற்குச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்து தன் கணவரிடம் விடை பெற்று தந்தையின் யாகசாலைக்குச் சென்றாள். அங்கிருந்தோர் எவருமே அவளை வரவேற்று உபசரிக்கவில்லை. தக்கனும் தன் மகளைக் கண்டதும் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். தன் மகளையும் சிவபெருமானையும் ஏளனமாகப் பேசினான். இதனால் கோபங் கொண்ட தாட்சாயணி "இந்த யாகசாலை பேய்கள் தலை விரித்தாடும் சுடுகாடாக மாறக்கடவது! என்று சாபமிட்டுவிட்டு அங்கிருந்து வேகமாகத் தன் கணவனிடம் செல்ல நினைத்த அவள் அவர் எவ்வளவு சொல்லியும் கேளாமல் தன் தந்தையின் மீது உள்ள

பாசத்தால் யாகத்திற்கு வந்ததற்கு மனமுடைந்து யாகத் திலே பாய்ந்து விட்டார்.

இந்தச் செய்தியறிந்த சிவபெருமான் மிகவும் கோபங்கொண்டு தமது நெற்றிக்கண்ணைத் திறக்க வீரபத்திரன் தோன்றினார். சிவபெருமான் வீரபத்திரனாரை நோக்கி "வீரபத்திரா இந்தக் கணமே தக்கன் செய்யும் யாகத்தை அழித்துவிட்டு வா!" என்று ஏவிவிட்டுத் தமது பூதகணங்களையும் அனுப்பி வைத்தார். அகோர வீரபத்திரர் சிவபெருமானின் கட்டளைப்படி தக்கனின் வேள்வியை அழித்து தக்கனுடனும் அங்கு வந்த சகலரையும் நாசம் செய்து விட்டுத் திரும்பினார்.

சிவபெருமானின் சீற்றம் தணிந்தது. யாகத்தில் அழிந்த தேவர்களையெல்லாம் எழுப்பியதுடன் தக்கனின் உடலில் தலை மட்டும் காணாமற் போய்விட்டதால் அவன் உடலில் ஆட்டுத் தலையைப் பொருத்தி அவனை உயிர் பெற்று எழச் செய்து "தவறான காரியங்களைச் செய்பவர் கள் தண்டிக்கப் பெறுவார்கள்" என்றும் "தவறு செய்தவர் கள் தண்டிக்கப் பெற்ற பிறகாவது திருந்தவேண்டும்!" என்றும் உபதேசித்தார்.

யாகாக்கினியில் தன் உடலை இழந்த தாட்சாயணி பர்வதராஜனின் தவத்திற்கு இரங்கி அவனுக்கு மகளாகப் பிறந்து பார்வதி என்ற பெயரைப் பெற்றாள். அவள் பருவ வயதையடைந்தாள். பரமசிவனையே தனது கணவனாக அடைய வேண்டும் என்று விரும்பினாள். தன் தந்தையிடம் தனது விருப்பத்தைக் கூறி அதை நிறை வேற்றிக் கொள்வதற்குரிய விரதம் ஒன்றைத் தனக்கு உணர்த்த வேண்டும் என்று வேண்டினாள்.

பர்வதராஜன் ஆவணி மாதம் பூர்வபட்சத்தில் வரும் சதுர்த்தி நாளில் விநாயக சதுர்த்தி விரதத்தை முறைப்படி அனுசரித்து பிள்ளையார் பெருமானைப்

பூசித்து வந்தால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என்றும் விரும்பியவை வெற்றி பெறும் என்றும் கூறினான். இந்த விரதத்தை இதற்கு முன்பு எவரேனும் அனுஷ்டித்திருக்கிறார்களா என்று பார்வதி கேட்க "சிவபெருமானிடத்தில் அவரது மைந்தன் சுப்பிரமணியர் தமக்கு ஒரு விரதத்தை உபதேசிக்க வேண்டும் என்று கேட்க, சிவபெருமான் பிள்ளையார் சதுர்த்தி விரதமே விரதங்களிலேயே உயர்வானது அந்த விரதத்தை அனுஷ்டித்து வந்தால் சகல வித்தைகளும் கைகூடும்'' என்றார்.

## பிள்ளையார் சதுர்த்தி

தாட்சாயணியும் பிள்ளையார் சதுர்த்தி விரதத்தை முறைப்படி செய்யவேண்டும் எனத் தீர்மானித்தாள். பூஜைக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும் சேகரித்து வரும்படி பர்வதராசன் தனது சேவகர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பி வைத்தான். தேவலோகத்திலிருந்து கற்பக மலர்களும் அற்புதத் தளிர்களும் புனித நதிநீர்களும் அறுகுவன்னி முதலிய மூலிகைகளும் கொண்டு வந்தார்கள். தங்கத்தால் ஒரு மண்டபம் எழுப்பி அதனை நவரத்தின மணிகளால் அலங்கரித்தார்கள். வாழை, கமுகு, கரும்பு முதலியவற்றை தூண்களுடன் பிணைத்தார்கள். பழவர்க்கங்களை குலைகுலையாகத் தோரணம் போல தொங்கவிட்டார்கள். பிறகு ஓம குண்டத்தை அமைத்தார்கள். சந்தனமும் பன்னீரும் புனுகும் கலந்து மெழுகி நறுமணப் புகை மூட்டினார்கள்.

பரமேஸ்வரியான பார்வதிதேவி புனித கங்கையில் நீராடி புத்தாடை அணிந்து பூசைமண்டபம் வந்து தூய வெண்ணீறும் மங்களத் திலகமும் அணிந்து வேதமந்திர ஆகம விதிமுறைப்படி சிரசு முதல் பாதம் வரை நியாசம் செய்து ஆசனம் செய்து பிராணாயாமத்தின் பூதசுத்தி

முதலிய உட்புறத் தூய்மை செய்து சங்கற்பம் கூறி முறைப் படி பூஜை செய்து முடித்த பிறகு முறைப்படி நியாசம் தியானம் முதலியவற்றைச் செய்து ஒரு மாதம் வரை ஆகாரம் நித்திரையின்றி விரதத்தை அனுஷ்டித்த பிறகு கடைசி நாளில் முன்பு போலவே எல்லாப் பூசைகளையும் முறைப்படி நடத்தினார்.

இதன் விளைவாக பார்வதிதேவி பிள்ளையார் பெருமானின் திருவருளால் பரமேஸ்வரனாகிய சிவபெருமானைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியில் களித்திருந்தாள்.

இந்தச் சரிதத்தைக் கேட்டவர்களும் கதாப்பிரசங்கம் செய்பவரும் இந்த உலகில் திருமகளைப் போன்ற பேரழகும் பூமாதேவியைப் போன்ற பொறுமையும் அருந்ததியைப் போன்ற கற்பும் வாய்ந்த கன்னிப்பெண்ணை மணந்து சத்புத்ர பாக்கியங்களும் சகலவிதமான செல்வங்களையும் அடைந்து ஆனந்தமடைவார்கள்.

## கர்த்தமன் சக்கரவர்த்தியான கதை

ஒரு காலத்தில் இந்தப் பூவுலகமனைத்தையும் கர்த்தமன் என்பவன் ஆண்டு வந்தான். அவனது அரண்மனைக்கு பிருகு முனிவர் வந்தார். அரசன் அவரை உபசரித்து ஆசனத்தில் அமர்த்தி தனக்குப் பூவுலகம் முழுமையும் ஆட்சி செய்யும் ஏகசக்ராதிபதியாகும் நிலைமை எப்படி ஏற்பட்டது என்று கேட்க அவர் அந்த மன்னர் மன்னனுக்கு அவனது பூர்வ பிறவிக் கதையைக் கூறினார்.

"வேந்தனே! நீ உனது முற்பிறவியில் ஒரு வணிகனாக இருந்தாய், அப்போது போதிய செல்வமின்றி துன்புற்று வணிக கர்மங்களைக் கைவிட்டு விட்டாய். இதனால்

உனது உறவினரும் சுற்றத்தாரும் உன்னைப் பலவாறாய் தூற்றினார்கள். அவைகளைக் கேட்டு மனம் சகிக்காத நீ வெறுத்து உன் உயிரையே விட்டு விடலாம் என்ற எண்ணத்துடன் காட்டுக்குச் சென்றாய். அங்கு சவுபரி மகா முனிவரின் ஆசிரமத்தை அடைந்தாய். அங்கு அவரிடத்தில் உனது வரலாறு முழுவதையும் கூறி உனது முடிவைப் பற்றியும் கூறினாய்.

அதைக் கேட்ட சவுபரி முனிவர் உன் மீது மனமிரங்கி விநாயகப் பெருமானின் மந்திரத்தை உபதேசித்து அதை அனுபவிக்கும் முறையையும் கூறினார். விநாயக சதுர்த்தி தினம் வந்த போது அவரே அந்த தினத்தன்று ஆகமவிதிப் படி அந்தப் பூஜையைச் செய்து முடித்து வைத்தார். "பிள்ளையார் சதுர்த்தி விரதத்தின் மகிமையினால் நீ பெருஞ்செல்வந்தனாகி விட்டாய் இனி உன் வீட்டிற்குச் செல்வாயாக!" என்றார்.

நீ உன் வீட்டிற்குச் செல்லும் வழியிலேயே உன்னைத் தூற்றியவர்கள் எல்லாம் உன்னை வரவேற்றுப் போற்றினார்கள். சகலவிதமான சௌபாக்கியங்களுடன் நீ ஆனந்தமாக வாழ்ந்தாய். ஆண்டு தோறும் விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து வந்தால்தான் இந்தப் பிறவியிலும் ஏகசக்ராதி பத்தியம் பெற்று மன்னர் மன்னனாக சகல சௌபாக்கியங்களுடன் நீ இன்பமாக வாழ்ந்து வருகிறாய். இனியும் அந்த விநாயக சதுர்த்தி விரதத்தையே அனுஷ்டித்து வருவாயாக! என்று கூறிய பிருகு முனிவர் அவனிடம் விடை பெற்றுச் சென்றார்.

கர்த்தமன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்து வருடந் தோறும் விநாயக சதுர்த்தி விரதத்தையும் பூஜையையும் அனுஷ்டித்து சகல போகங்களுடன் ஆட்சி புரிந்து வந்தான்.

நிடத நாட்டினை நளமகாராஜன் தன் மனைவி தமயந்தியுடன் இனிமையுடன் இன்பமாகவாழ்ந்து நீதி நெறி

தவறாமல் அரசாட்சி செய்து வந்தான். அவனது அரச அவைக்கு வந்த கௌதம முனிவரை மரியாதை மதிப்புடன் வணங்கி "சுவாமி நான் நலம் அடைய ஒரு விரதத்தைத் தங்கள் உபதேசிக்க வேண்டும்!" என்றான். அவர் விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து வரும்படி கூறினார். அவ்வாறு நளமகராசனும் பிள்ளையார் சதுர்த்தி பூசையைச் செய்து பெருமையுடனும் புகழுடன் அரசாட்சி செய்து வந்தான்.

## கணவனை மீட்ட கற்புடையாள் கதை

மாளவ நாட்டை சந்திராங்கதன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவியின் பெயர் இந்துமதி. ஒரு நாள் அரசவைக்கு வந்த குடிமக்கள் "காடுகளில் வனமிருகங்கள் அதிகமாக இருப்பதால் அவைகளை வேட்டையாடினால்தான் அந்த மிருகங்களால் ஆபத்துகள் ஏற்படாமலிருக்கும்" என்று கூறினார்கள்.

அரசன் காட்டிற்குத் தன் படைகளுடன் சென்று காட்டு மிருகங்களான காட்டெருமை, கரடி, புலி, சிங்கம் முதலிய மிருகங்களை வேட்டையாடி வந்தான். அப்போது அசுரர்கள் சிலர் அவனை எதிர்த்தார்கள். அவர்களை வென்ற அரசன் பலரையும் கொன்று விட்டான். அவர்கள் மடிந்ததைக் கண்ட அரக்கி ஒருத்தி அரசனைப் பின் தொடர்ந்து போராடி அவன் கையைப் பிடித்து இழுப்பதற்காக நெருங்கி வந்தாள். அரசன் ஒரு தடாகத்தில் திடீரென்று பாய்ந்து ஒளிந்து கொள்ள முயன்றான.

அந்தத் தடாகம் நாகலோகக் கன்னியர்கள் வந்து நீராடுமிடமாகும். அங்கு வந்த நாகலோக மங்கையர்கள் சந்திராங்கதனைக் கண்டதும் அவன் அழகில் மயங்கி

தங்களுக்குப் பெரும் போகம் சிக்கியது என்ற உற்சாகப் போதையில் அரசனைத் தங்கள் நாகலோகத்துக்கு அழைத்துச் சென்று பல இன்சுவை உணவுகளையும் பானங்களையும் கொடுத்து ஆடையாபரணங்களையும் அணிவித்து அழகு பார்த்தனர். தங்களுடன் கூடிக் கலக்குமாறு அவனிடம் கெஞ்சினார்கள்.

"நான் ஏகபத்தினி விரதன் என் மனைவியைத் தவிர வேறு மங்கையரை நான் விரும்ப மாட்டேன்" என்றான். அவர்களோ எப்படியேனும் அவனைத் தங்களிடம் வசப் படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் அவனுக்குச் சலிப்பும் கோபமும் ஏற்படாத வகையில் அவனுடன் இனிமையாகப் பழகி வந்தார்கள்.

இப்படியிருக்க பூவுலகில் தங்கள் வேந்தனைக் காணாத படை வீரர்கள் அந்தத் தடாகத்திலும் அவனைத் தேடிக் காணாததால் அவன் இறந்து விட்டான் என்று தீர் மானித்து அரண்மனைக்குச் சென்று அரசியிடம் அவர்கள் அரசன் இறந்து விட்டான் என்று சொல்லி விட்டார்கள். அதைக் கேட்ட அரசனின் மனைவி அழுதாள். சோர்ந்து விழுந்தாள். சோக வெள்ளத்தில் ஆழ்ந்தாள். தன் கணவனை இழந்ததால் தன் தாலியையும் பூவையும் பொட்டையும் இழந்து தன் கணவனுக்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளையும் செய்தாள். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தன.

ஒரு நாள் நாரத முனிவர் மாளவ தேசத்திற்கு வந்து அரண்மனையிலுள்ள இந்துமதியைக் கண்டார். அப்போது நாரத முனிவர் இந்துமதியின் விதவைக் கோலத்தைக் கண்டு அதிர்ச்சியடையாமல் புன்னகை செய்து "மகாராணியே உனது கணவன் நீரில் மூழ்கி இறந்து விடவில்லை. அவன் நாகலோகத்தில் இருக்கிறான். அவன் மீது மையல் கொண்டதாக மங்கையர்களிடம் சிக்கியிருக்கிறான். அவனை

இங்கு வரவழைக்க ஒரு மார்க்கம் இருக்கிறது. விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தால் உன் கணவன் திரும்ப வருவான்!" என்று கூறி கணபதி மந்திரத்தை உபதேசித்தார்.

மகாராணியும் ஆகம விதிப்படி பிள்ளையார் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தாள். விநாயகப் பெருமானின் அருளால் நாகலோக மங்கையர் சந்திராங்கத மன்னனின் மனவுறுதியைப் பாராட்டி அவனை ஒரு குதிரை மீது ஏற்றி ஏராளமான பொன் பொருள்களோடு பூவுலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அரசன் குதிரை மீது வருவதை அறிந்த மகாராணியும் அந்நாட்டு மக்களும் எதிர்கொண்டு வரவேற்றனர். பின்னர் அரசனும் அரசியும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

## தாருகாசுரன் கர்வமும் முருகன் அவதாரமும்

முன்பு ஒரு காலத்தில் தாருகன் என்ற அசுரன்ஒருவன் நீண்டகாலம் தவமிருந்து வரம் பெற்று தேவலோகத்தை வென்று தேவர்களைச் சிறையிலடைத்துக் கொடுமைப் படுத்தி வந்தான். இந்திரன், விஷ்ணு, பிரம்மா முதலிய தேவர்கள் அவனுக்கு பயந்து சிவபெருமானைத் தியானிக்கத் திருக்கயிலைக்குச் சென்றார்கள். அப்போது ஆகாயத்தில் அசரீரி கேட்டது.

"தேவர்களே! உங்கள் துயர் நீங்க வேண்டுமாயின் சிவபெருமானிடத்தில் சுப்பிரமணியர் அவதரிக்கச் செய்ய வேண்டும். அதற்கு முயற்சி செய்யுங்கள்" என்று அந்த அசரீரி கூறியது.

தேவர்கள் சிவபெருமானைக் காணச் சென்றனர் அவரைக் காணமுடியவில்லை. அப்போது அவர்கள்

எதிரில் உமாதேவியார் தோன்றினான். தேவர்கள் அவளை வணங்கி தங்கள் குறையைக் கூறி அதற்குரிய நிவர்த்தி வழியைக் கேட்டனர்.

கோளகிரியில் அதைக் கேட்ட பார்வதி தேவியார் "எனது பிராண நாயகர் யோக நிஷ்டையில் இருப்பதால் நீங்கள் அவரிடம் சென்று உங்கள் விருப்பத்தையும் குறை களையும் சொல்லுங்கள்'' என்றாள்.

தேவர்கள் அங்குச் சென்றனர். சிவபெருமான் யோக நிஷ்டையில் மௌனமாக வீற்றிருந்தார். அவரது மௌனத்தைக் கலைத்து அவரைக் கண்விழிக்கச் செய்வது எப்படியென்று தேவர்கள் சிந்தித்தனர். பிறகு அவர்கள் காமதேவனாகிய மன்மதனை அழைத்து சிவபெருமான் மீது காதல் கணைகளைத் தொடுத்து எய்து அவரை விழிக்கச் செய்யும்படி வேண்டினர். அப்படிச் செய்தால் தான் முருகன் அவரித்து தேவர்களின் துயரம் நீங்கும் என்றனர்.

மன்மதன் யோக நிஷ்டையைக் கலைப்பதற்கு விரும்பவில்லை. தேவர்கள் வற்புறுத்திக் கூறவே அவன் தனது மலர்க் கணைகளைச் சிவபெருமான்மீது எய்தான். அந்தக் கணைகள் மலர்கள்தான் என்றாலும் அவை மகேஸ்வரனின் மவுனத்தைக் கலைத்தன. உடனே தவாக் கினியால் கொதிக்கும் தம் நெற்றிக்கண்ணைத் திறந்தார் சிவபெருமான். அந்த நெருப்பு விழியிலிருந்து எழும்பிய தீப்பிழம்பு மன்மதனின் மீது சீறிப் பாய்ந்து அவனுடலை எரித்துச் சாம்பலாக்கியது.

அதைக் கண்ட பார்வதி தன் நாதனின் கோபம் தணியச்செய்ய இன்ப மொழிகளை அன்புடன் பேசினாள்.

தேவர்கள் தாருகாசுரன் செய்யும் கொடுமைகளுக்குப் பயந்து உங்களுடைய திருவருள் பெற வேண்டித்தான் வந்தனர். யோக நிஷ்டையில் அமர்ந்திருந்த தங்களுடைய கவனத்தைக் கவர்வதற்குத் தான் மன்மதனைக் கொண்டு மலரம்புகளை எய்யச் செய்தனர். மன்மதன் தங்கள் நெற்றிக்கண் தீய்க்கு இரையாகிவிட்டான். இனி தாங்கள் கோபம் தணிந்து தேவர்களுக்கு அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டினாள்.

சிவபெருமான் மனங்கனிந்து தன் கோபத்தைத் தணித்துக்கொண்டு கோளகிரியிலிருந்து தன் மனைவியுடன் கயிலாயத்துக்குச் சென்று அந்தப்புரத்தை அடைந்து தேவ ஆண்டுகள் அறுபதினாயிரம் ஆண்டுகள்வரை உமாதேவியாருடன் கூடி மகிழ்ந்துகொண்டே இருந்தார்.

நீண்டகாலமாகியதால் தேவர்கள் அக்கினி தேவனை சிவபெருமானிடம் அனுப்பி வைத்தார்கள். அக்கினிதேவன் "அம்பிகை அருள் செய்ய வேண்டும்" என்று அந்தப்புரத்தின் வாசலில் இருந்தவாறே மும்முறை வேண்டினான். உமாதேவி உடலிலிருந்து விலகிக்கொண்டாள். சிவபெருமான் தமது சக்தியை தேவியிடம் கொடுக்க அவள் அக்கினிதேவனிடம் கொடுத்தாள். அவன் சரவணப்புற்கள் நிறைந்த தடாகத்தில் அந்த சக்தியை விட்டான். உடனே அது ஒரு குழந்தையாக மாறியது. கார்த்திகைப் பெண்களான ஆறு நட்சத்திர மங்கைகள் அந்தக் குழந்தைக்குப் பாலூட்டி வளர்த்தனர். அந்தக் குழந்தைதான் சுப்பிரமணியர்.

குழந்தை சுப்பிரமணியர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். தேவர்கள் அனைவரும் அசுரனின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் சரவணனை அடைந்து "கந்தா! தாருகாசுரனின்

வலிமையை அடக்கி, நாங்கள் படும் துன்பங்களிலிருந்து எங்களைக் காத்தருள வேண்டும்!" என்று வேண்டினர். ஆறுமுகப் பெருமான் அவர்களுக்கு ஆறுதல் கூறி கிருஷ்ணா நதிக்கரையில் வடக்கு திசையிலுள்ள ஒரு கான கத்திற்குச் சென்று விநாயகப் பெருமானை பூசித்து வந்தார்.

விநாயகர் முருகன் முன்பு தோன்றி ஆசீர்வதித்தார். பின்னர் சிவபெருமானிடமும் சக்தியிடமும் சென்று வேலா யுதத்தையும் போர்ப்படைகளையும் பெற்று தாருகாசுரன மீது போர் தொடுத்து அவனை வென்று தேவர்களுக்கு அபயமளித்தார்.

இலக்க விநாயகர் என்ற பெயரில் கிருஷ்ணா நதிக் கரையில் கந்தபெருமான் பூசித்த பிள்ளையாரைத் தரிசித்து பூசிப்பவர்களுக்கு பகைகள் நீங்கும். எண்ணிய காரியங் களும் சித்தியடையும். அந்தப் புண்ணிய பிள்ளையார் தலத்துக்கு 'மயூரேசம்' என்ற பெயர் வழங்கலாயிற்று.

## மன்மதனின் மறுபிறவிக் கதை

சிவபெருமான் யோக நிஷ்டையை தேவர்களின் தூண்டுதலால் கலைத்த மன்மதன் சிவபெருமானின் நெற்றிக்கண் நெருப்பால் எரிக்கப்பட்டதை அறிந்த மன்மதனின் மனைவி இந்துதேவி அழுது புலம்பினாள். பின்னர் சிவபெருமானிடம் சென்று "தன் கணவன் தேவர் களின் தூண்டுதலால் தவறு செய்துவிட்டான். அவனை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

சிவபெருமான் அவள்மீது கருணைகொண்டு "இரதியே உன் கணவன் மன்மதன் இனி எப்போதும் உனக்கு மட்டும் உருவமாகவும் மற்றவருக்கெல்லாம் உருவமற்ற

அரூபனாகவும் இருப்பான்" என்று கூறி மன்மதனை உயிர் பெற்று எழச் செய்தார்.

மன்மதனும் சிவபெருமானிடத்தில், தான் தேவர்களின் தூண்டுதலால் தவறு இழைத்ததற்கு மன்னிப்பு வேண்ட, விநாயகப் பெருமானைப் பூசித்து வந்தால் அவரருளால் மன்மதன் தனது பதவியை அடைவான் என்று சிவபெருமான் கூறினார்.

மன்மதன் விநாயகரைப் பூசித்து வந்தான். ஒரு நாள் விநாயகர் அவன் முன்பு தோன்றி ''மன்மதா! உன் பக்திக்கு மெச்சினேன். இனி திருமால் கண்ணனாக அவதரிக்கப் போகிறார். அப்போது நீ அவரது மகனாகப் பிறந்து உனது அழகிய உருவத்தை அடைவாயாக" என்றார். மன்மதன் விநாயகர் காட்சியளித்த இடத்தில் கோயில் ஒன்றைக் கட்டி பிள்ளையாரைப் பிரதிஷ்டை செய்து, மகோற்கட விநாயகர் என்று பெயரிட்டு பூசித்து வந்தான். நாளடைவில் தனது கரும்புவில்லையும் பஞ்ச பாணங்களையும் பெற்றான்.

இந் நிலையில் திருமால் கிருஷ்ணாவதாரம் செய்தார். அவருடைய மகனாக மன்மதன் பிறந்து, பிரத்யும்னன் என்ற பெயரைப் பெற்றான்.

அப்போது சம்பாசுரன் என்ற அரக்கன் மன்மதனை விட்டு இரதிதேவி பிரிந்திருப்பதை அறிந்து அவளைக் கவரவேண்டும் என்று தேவலோகம் சென்றான். தனித்திருந்த அவளைத் தூக்கிக் கொண்டு வானவெளியில் செல்லும்போது அந்தக் கொடியவனின் கைகளிலிருந்து நழுவிய இரதிதேவி நடுக்கடலில் விழுந்தாள். அவளை பெரிய மீன் விழுங்கிவிட்டது. அசுரன் அவளை கடலைக் கலக்கித் தேடினான். பிறகு ஏமாற்றத்தோடு தன் நகரையடைந்தான்.

இரதிதேவியை விழுங்கிய மீன் அவளையே கருவாகத் தரித்தது. சில நாள்களுக்குப் பிறகு அந்தக் கடலில் வலை வீசிய செம்படவன் ஒருவன் வலையில் சிக்கிய அந்த மீனை அவன் சம்பாசுரன் முன்பு வைத்தான். அசுரன் அதை வெட்டினான். அந்த மீனின் வயிற்றில் கருப்பையில் ஒரு பெண் குழந்தை இருப்பதைக் கண்டு மகிழ்ந்தான். அந்தப் பெண்ணை தன் மகளைப் போல வளர்த்து வந்தான்.

இவ்வாறு சம்பாசுரனிடத்தில் இரதிதேவி வளர்ந்து வருவதை நாரத முனிவர், கண்ணனின் மகனான பிரத்யும்னனுக்குத் தெரிவித்தார்.

பிரத்யும்னன் சம்பாசுரனுடன் போரிட்டு இரதிதேவியைக் கைப்பற்ற முடிவு செய்து போருக்குச் சென்றான்.

பிரத்யும்னன் சம்பாசுரனிடம் போருக்குச் சென்றிருப்பதை அவனது அன்னை ருக்மணிதேவி அறிந்து பிள்ளையார் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து தன் மகன் வெற்றியுடன் வரவேண்டும் என்று வேண்டி வந்தாள். ஆறாவது நாளில் பிரத்யும்னன் சம்பாசுரனை ஜெயித்து தன் காதல் நாயகியைக் கைப்பற்றிக் கொண்டு அரண்மனைக்கு திரும்பினான். விநாயக சதுர்த்தி விரதமும் முடிந்தது.

பிரத்யும்னனுக்கு அனிருத்தன் என்ற மகன் ஒருவன் பிறந்தான். அவனும் தன் பெற்றோர்களைப் போலவே பேரழகுடன் திகழ்ந்தான்.

அந்தக் காலத்தில் பாணாகரன் என்ற அசுரன் ஏகாதிபத்ய அரசாட்சி செய்து வந்தான். அவனது மகளான உஷை என்பவள் ஒருநாள் இரவு கனவு ஒன்று கண்டாள். அந்த கனவிலே அனிருத்தன் தோன்றினான். அவன் அழகைக் கண்ட அவள் எப்படியும் தன் கனவில்

கண்ட காதலனையே திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்று விரும்பி, அந்த ஆசையைத் தன் தோழியான சித்திரரேகையிடம் கூறினாள். அவள் அனிருத்தன் தூங்கும்போது அவனது தூக்கம் கலையாமலேயே தூக்கிக் கொண்டு வந்து உஷையிடம் சேர்த்தாள். அனிருத்தனும் உஷையும் ஆனந்தமாக அந்தப்புரத்திலேயே இரகசியமாகக் காதலித்து வாழ்ந்து வந்தனர் சில நாள்களில் உஷை கர்ப்பமுற்றாள். இதையறிந்த பாணாசுரன் அனிருத்தனை கொடுஞ் சிறையிலடைத்து வைத்தான். இந்தச் செய்தியை அறிந்த பிரத்யும்னன் மிகவும் கவலைப்பட்டான். அப்போது ருக்மணிதேவி அவனை பிள்ளையார் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்கும்படி கூறினாள்.

இதனிடையில் அனிருத்தன் சிறைப்பட்டிருக்கும் செய்தியை நாரதர் கண்ணனிடம் கூற, அவர் பிரத்யும்னனுடன் பாணாசுரன் மீது போர் தொடுத்து அவனை வென்று, அவன் புதல்வி உஷாவையும் தன் பேரன் அனிருத்தனையும் அழைத்துக் கொண்டு தன் மகனிடம் திரும்பி வந்தார்.

## அனந்தன் ஆயிரம்தலை பெற்ற கதை

"மாமுனிவர்களே! ஒரு சமயம் கைலாயத்தில் சிவபெருமான் தமது தேவி சிவகாமியுடன் வீற்றிருக்கும்போது சகல தேவர்களும் முனிவர்களும் பூதகணங்களும் அவரை வணங்கி தாம் விரும்பிய வரங்களைக் கொடுக்கும்படி பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சிவபெருமான் முடிமீது நாகாபரணமாக இருந்த ஆதிசேஷன் "இத்தனை பேரும் வணங்கும் சிவபெருமானின் திருமுடியில் அமர்ந்திருக்கும் என்னையும்தானே இத்தனை பேரும் வணங்குகிறார்கள் என்று கர்வம் கொண்டான்.

இதையறிந்த சிவபெருமான், அந்தப் பாம்பை பிடித்திழுத்துத் தரையில் ஓங்கி அடித்தார். உடனே அதன் தலை ஆயிரம் சுக்கல்களாகியது. அதனால் உலகத்தைத் தாங்கும் பலத்தையும் பெருமையையும் இழந்த ஆதி சேஷன் மீண்டும் மகேஸ்வரரின் மகுடத்தையடையும் வழியினை ஆலோசித்தான்.

அப்போது அங்கு வந்த நாரதர் அவனது குறைகளை கேட்டு விநாயகரின் சடாட்சர மந்திரத்தை உபதேசித்து சதுர்த்தி விரதத்தையும் அனுஷ்டித்து வரும்படி கூறினார்.

நாரதர் கூறியவாறே அனந்தன் பிரவாதை நகரத்தை அடைந்து அங்குள்ள விநாயகர் கோயிலில்சென்று பூசித்து வந்தான். விநாயகர் சித்தி புத்திகளுடன் சிங்கவாகனத்தில் அமர்ந்து தரிசனம் அளித்து "உன் தலையில் பிளவுண்ட ஆயிரம் பிளவுகளும் ஆயிரம் தலைகளாக மாறும். முன்பு போலவே பூமியைத் தாங்கி வருவதுடன் ஐந்து தலைநாகமாக என் தந்தையின் மகுடத்தில் மீண்டும் அமர்வாய் இப்போதுள்ள உருவத்தில், நீ என் வயிற்றைக் கட்டும் உத்ரபந்தணமாகக் கடவாய்! என்று கூறி ஆதி சேஷனைத் தன் இடுப்பில் கட்டிக் கொண்டார்.

அந்த இடத்தில் ஆதிசேஷன் பிள்ளையாருக்கு கோயில் கட்டி வணங்கி வழிபட்டு வந்தான்.

## பூமியில் இறங்கிய தேவ விமானம்

ஐம்புலன்களையும் வென்ற தவமுனிவர்களே! முன்பு ஒரு காலத்தில் தோப்புகளும் தோட்டங்களும் நிறைந்த மத்தியப் பிரதேசத்தில் சூரசேனன் என்ற மன்னன் தன் மனைவி சுசீலையுடன் பெயரும் புகழுமாக வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் அரசவையில் வீற்றிருந்தபோது கோடி சூரியப் பிரகாசமுடைய ஒரு விமானம் பேரிரைச்சலுடன் பூமியில் இறங்கும் ஓசையைக் கேட்டு தன் சேவகர்களுடன் அதன் விவரத்தைக் கண்டு தெரிந்துவரச் சென்றான். அவர்கள் விமானம் இறங்கிய திசையைச் சொல்ல அவனும் மற்றவர்களும் அந்த இடத்தை நோக்கிச் சென்றனர். அந்த விமானத்தில் தேவர்களின் அரசனான தேவேந்திரன் வீற்றிருந்தான். மன்னர் இந்திரனை வணங்கி அவன் பூவுலகம் வந்தது ஏன் என்று கேட்டான்.

அதற்கு தேவேந்திரன் ஒரு சமயம் நாரதர் தனது உலகத்திற்கு வந்து பூவுலகத்தில் புருசுண்டி என்ற மகான் விநாயகரைப் பூசித்து விநாயகரின் உருவத்தைப் போலவே தும்பிக்கையுடனும் மற்ற அம்சங்களுடன் இருப்பதாகக் கூறினார். அந்த மகானை தரிசித்துச் செல்வதற்குத்தான் நான் பூவுலகத்துக்கு வந்தேன். விமானத்தில் வரும் வழியில் என் விமானம் இந்த இடத்திற்கு நேராக வந்த போது ஒரு குஷ்டரோகியின் பார்வை இதன்மீது பட்டதால் விமானம் வழி தவறி இங்கு இறங்கியது. இந்த நகரத்தில் சங்கட சதுர்த்தி விரதத்தை ஒருவன் அனுஷ்டித்து வருகிறான். அவன் ஒருவனால்தான் இந்த விமானம் பூமியைவிட்டு எழும்பி ஆகாய மார்க்கமாகச் செல்ல முடியும்? என்றான்.

சூரசேனன் புருசுண்டி என்பவன் யார் என்ற விவரங்களையெல்லாம் இந்திரனைக் கேட்க, அவன் ''அரசே! தண்டகாருண்யம் என்ற நாட்டில் விப்ரதன் என்ற வேடன் காட்டின்வழியே செல்லும் பிரயாணிகளைவழிப்பறிசெய்து கொள்ளையடித்தும் கொலை செய்தும் பொருள்களைப் பறித்து வந்தான். ஒரு நாள் வேதியன் ஒருவன் அந்தக் காட்டின்வழியே வருவதைக் கண்டதும் வேடன் அவனைப்

பின்தொடர்ந்தான். வேதியன் ஓட, வேடன் ஓட வேடனால் வேதியனைப் பிடிக்க முடியவில்லை. அதனால் வேடன் மனம் வருந்தி திரும்பும்போது ஒரு விநாயகர் கோயிலையும் குளத்தையும் கண்டான். குளத்தில் நீராடிக் களைப்பைப் போக்கிக்கொண்ட வேடன் தாகம் தீர தண்ணீர் அருந்தி அங்கிருந்த ஒரு மரத்தின் நிழலில் இளைப்பாறினான்.

அந்த வழியே முத்கல முனிவர் என்ற தவமுனிவர் வந்து கொண்டிருந்தார். அந்த வேடன் அவரையும் வெட்டிக் கொல்ல தன் வாளை ஓங்கினான். முனிவர் அவனை உற்று நோக்கினார். உடனே அவன் வாளைக் கீழே போட்டுவிட்டான். அவனது கொடிய குணங்கள் எல்லாம் மாறின. அவன் முனிவரின் கால்களில் விழுந்து வணங்கினான்.

முனிவர் அவனை நீராடிவிட்டு வரச் செய்தார்.

விப்பிரதன் நீராடிவிட்டு வந்ததும் முத்கல முனிவர் அவன் தலைமீது கையை வைத்து 'ஓம் கணேசாய நம:' என்ற மந்திரத்தை உபதேசித்து ஒரு கம்பை பூமியில் நட்டு "இந்தத் தடிக்கு தினந்தோறும் நாள் தவறாமல் வேளை தவறாமல் தண்ணீர்விட்டு அது துளிர்க்கும் வரையில் இதன் அருகே இருந்து நான் உபதேசித்த மந்திரத்தைச் செபித்து வந்தால் உனக்கு சகலவிதமான சித்திகளும் உண்டாகும். சில நாள்களுக்குப் பிறகு நானும் இங்கு வருவேன்!" என்றார்.

விப்பிரதன் முனிவர் கூறியவாறே நீண்ட காலம் செய்துவந்தான். அப்போது அந்தக் கொம்பு துளிர்விட்டு மலர்ந்தது. அப்போது அங்கு வந்த முனிவர் அவனது மனவுறுதியைப் பாராட்டி மந்திரம் உச்சரித்து தண்ணீரை அவன்மீது தெளித்தார். உடனே அவன் பாவங்கள் விலகின. விப்பிரதனின் முகத்தில் விநாயகருக்கு இருப்ப

தைப் போன்ற துதிக்கையும் மற்ற அம்சங்களும் தோன்றின. முனிவர் அவனை நோக்கி "நீ பெற்றிருக்கும் இந்த உருவத்தோடு ஒரு கல்பகாலம் வரை நீவாழ்ந்து வருவாயாக! உன்னால் தண்ணீர் விடப்பட்டு துளிர்விட்ட இந்த மரம் கற்பக விருட்சமாக மாறிவிடும்!" என்று கூறிவிட்டுச் சென்றார்.

"அந்த விப்ரதன்தான் புருசுண்டி என்னும் மகானாகும். அவர் விநாயகரையே வணங்கி வந்தார். விநாயகரும் அவருக்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற தத்துவங்களை உபதேசித்தார்" என்று தேவேந்திரன் கூறினான்.

"சங்கட சதுர்த்தி விரதம் அனுஷ்டிக்கும் ஒருவரால் தான் தெய்வீக விமானம் பூமியிருந்து எழும்பி தேவலோகத்தை அடையும் என்று சொன்னீர்களே அந்த விரதத்தின் பெருமைகளை அடியேனுக்கு கூற வேண்டும் என்று சூரசேன மன்னன் தேவேந்திரனை வேண்டினான்.

## சங்கட சதுர்த்தி விரத பலன்

பூவுலகில் புருசுண்டி முனிவர் வாழ்ந்து வந்த காலத்தில் நாரத முனிவர் யமலோகம் சென்றார். யமதர்மராஜன் அவரை வரவேற்று உபசரித்து அவர் அங்கு வருவதற்குக் காரணம் என்னவென்று கேட்டான். நாரதர், யமலோகத்திலுள்ள நரகலோகத்தின் இருபத்தொன்பது கோடி நரகங்களையும் காணவேண்டும் என்றார். யமதர்மன் அவருக்கு நரகலோகத்தில் பாவிகள் படும் துன்பங்களையெல்லாம் காட்டினான். அப்போது கும்பீபாகம் என்ற நரகத்தில் தவமுனிவரான புருசுண்டியின் முன்னோர்கள் எல்லாம் துன்பப்படுவதைக் கண்டார். பிறகு அவர் யமதர்மனிடம் விடைபெற்று பூவுலகத்திற்குச் சென்று புருசுண்டி முனிவரிடம் சென்று அவரை நோக்கி

"புருசுண்டி முனிவரே! நீர் கணேசரின் திருவருளைப் பெற்று பேரின்பத்துடன் திகழ்கின்றீர்கள். உங்கள் மூதாதையரெல்லாம் யமலோகத்தில் நரக அவஸ்தைப் படுகிறார்கள். அவர்களை சொர்க்கத்தில் சேர்ப்பிக்க வழியைப் பாரும்!'' என்றார்.

உடனே புருசுண்டி முனிவர் சிறிது யோசித்துவிட்டு விநாயகப் பெருமானை சங்கட சதுர்த்தி விரதத்துடன் பூசித்து அந்த விரதத்தின் முழுப்பயனையும் விநாயகப் பெருமானின் திருக்கரத்திலே தத்தம் செய்து விட்டார். உடனே நரகத்தில் வருந்திய புருண்டியின் முன்னோர்கள் எல்லாம் தெய்வீக விமானங்களில் ஏறி தேவலோகம் சென்றனர். "ஒருநாள் சங்கடசதுர்த்தி விரதம் அனுஷ்டித்ததற்கே இத்தகைய பலன் ஏற்பட்டது என்றால் எப்போதும் அந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு ஏற்படும்நன்மைகளைப் பற்றிக் கூறமுடியுமா?" என்று இந்திரன் சூரசேன மன்னனிடம் கூறினான்.

## செவ்வாயும் சந்திரனும்

சிவஞானச் செல்வர்களே! முன்பொரு காலத்தில் காவிரிநதிக்கரையில் கிருதவீரியன் என்றமன்னன் ஒருவன் அரசாட்சி செய்து வந்தான். அவன் தன் மனைவி சுகந்தையோடு இன்பமாக வாழ்ந்து வந்தான். இருப்பினும் அவர்களுக்கு நீண்ட காலமாக புத்திரபாக்கியமே ஏற்படவில்லை. அதனால் அவர்கள் காட்டிற்குச் சென்று காற்றையும் நீரையும் மட்டுமே பருகிய வண்ணம் கடுந்தவம் செய்து வந்தனர்.

இதையறிந்த நாரத முனிவர் பிதுர் உலகத்திற்குச் சென்று கிருத வீரியனின் தந்தையைப் பார்த்து பிதுர்த்

தேவனே பூவுலகத்தில் உனது மகன் மன்னனாக இருந்தும் மக்கள் பேரின்மையினால் காட்டிலே கடுந்தவம் செய்து வருகிறான். அவன் மனைவியும் வருந்துகிறாள். அவர்களுக்குப் பிள்ளை பிறந்தாலன்றி உங்கள் ராஜ வமிசம் விருத்தியடையாது அவர்களிருவருமே உயிர் வாழ மாட்டார்கள். அதனால் அவர்களுக்கு புத்திர பாக்கியம் ஏற்படுவதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள்" என்று கூறிச் சென்றுவிட்டார்.

பிதுர்த்தேவன் பிரம்மதேவனிடம் சென்று "படைத்தல் தெய்வமே! சகல சௌபாக்கியங்களுமுள்ள என் மகனுக்கு புத்திரபாக்கியம் மட்டும் ஏன் ஏற்படவில்லை?" என்று கேட்டார்.

அதற்கு பிரமதேவன் "கிருதவிரியன் என்ற உமது மகன் தனது முற்பிறவியில் சாம்பன் என்ற பெயரில் அரசனாகப் பிறந்தும் காலகதியினால் வறுமை நிலையடைந்தான். அவனுக்குக் கணேசன் என்ற மகன் இருந்தான். இருவரும் வறுமையில் வாடினர். அதனால் சாம்பன் காடுகளில் சென்று வழிப்பறிக் கொள்ளையடித்து வந்தான். ஒருநாள் அந்தக் காட்டின் வழியே பன்னிரண்டு அந்தணர்கள் சென்று கொண்டிருந்தனர். சாம்பன் அவர்களையெல்லாம் கொன்று பிணங்களை ஒரு குகையில் போட்டு விட்டு பொருள்களைக் களவாடிக் கொண்டு இரவுப் பொழுதில் வீட்டிற்குச் சென்றான்.

கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்தது. அதனால் அவன் "கணேசா! கணேசா" என்று பல முறைகள் தன் மகனைப் பெயர் சொல்லி அழைத்தான். பதில் வரவில்லை. அவன் மைந்தன் கணேசன் அன்றைய தினம் முழுவதும் பட்டினி கிடந்ததால் வீட்டினுள்ளே உயிரிழந்து பிணமாகக் கிடந்தான்! சாம்பன் கதவை உடைத்து வீட்டிற்குள்ளே

சென்று பார்க்க தன் மகன் பிணமாகக் கிடப்பதைக் கண்டு அழுது புலம்பினான். அவனும் பசியால் துடித்தான். அவன் செய்த பிரம்மஹத்தி தோஷமும் அவனை வாட்ட அவனும் இறந்தான்.

அவன் மடிந்த தினமானது சங்கட சதுர்த்தி விரத நாளாகும். முதல் நாள் இரவு அன்னதானம் இன்றி அவன் மகன் இறந்துவிட்டதால் அவனைத் தேவர்கள் விமானத்தில் ஏற்றி விநாயகர் உலகத்துக்கு அழைத்துச் சென்றனர். அவன் தந்தை சாம்பனோ தன் மைந்தனை "கணேசா! கணேசா" என்று பல தடவைகள் கூறியதால் அன்று சங்கட சதுர்த்தியில் அவன் இறந்ததால் இந்தப் பிறவியில் உனக்கு மகனாக விரத மகிமையினால் பிறந்தான். அரசனானான். ஆனால் பிராமணர்களைக் கொன்ற பாவத்தினால் தான் அவனுக்குப் பிள்ளை பிறக்கவில்லை. அவனுக்கு புத்திரபாக்கியம் உண்டாக வேண்டுமென்றால் அவன் விநாயகப் பெருமானின் சங்கட சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்" என்றார். பிரம்ம தேவன் பிதுர்த் தேவனை நோக்கி.

"சுவாமி சங்கட சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்கும் முறைகள் என்ன? அதைச் சொல்லுங்கள்" என்று கிருதவிரியனின் தந்தை கேட்க பிரம்மதேவன் கூறலானார்.

"மாசி மாதம் அமர பட்சத்தில் செவ்வாய்க் கிழமையன்று வருகின்ற சதுர்த்தி திதியில் இந்த விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். அன்று அதிகாலையில் எழுந்து நீராடிக் குளித்து விபூதி பூசி உருத்திராட்ச மாலையணிந்து சிரசு முதல் பாதம் வரை நியாசம் செய்து பிள்ளையாரின் திருவடிகளைத் தியானித்து ஓரெழுத்து ஆறெழுத்து திருநாமம் ஆகிய மந்திரங்களைச் செபித்து அன்னபானம் அருந்தாமல் உபவாசமிருந்து அன்று இரவு

சந்திர உதயத்தில் கணேசரை எழுந்தருளச் செய்து பூசைப் பொருள்களைக் கொண்டு ஆராதனை செய்து முடித்து சந்திரனுக்கு அர்ச்சனை செய்து வேதம் ஓதும் அந்தணர்களுக்கு அறுசுவையுணவுகளைப் படைக்கவேண்டும். அன்றிரவு முழுவதும் தூங்காமல் விநாயகரின் கதைகளைக் கேட்க வேண்டும். இதுதான் சங்கட சதுர்த்தி விரதம். இதனை சதுர்த்தி திதிகள் தோறும் செய்து ஓராண்டு முடியும் வரை செய்து வரவேண்டும். இவ்வாறு செய்பவர்களுக்குப் புத்திரபாக்கியம் உண்டாகும். சதுர்த்தி தினத்தில் வன்னி மரத்தினடியில் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் கூன், குருடு போன்ற குறைபாடுகள் நீங்கும். சகல சௌபாக்கியங்களும் உண்டாகும். இந்த விரதமே நீ விரும்பும் புத்திர பாக்கியத்தை அளிக்க வல்லது" என்று கூறினார்.

பிதுர்த்தேவன் பிரம்மதேவனை நோக்கி இந்த விரதத்தைச் செவ்வாய்க் கிழமையில் வரும் சதுர்த்தியில் ஏன் செய்யவேண்டும்? சந்திர உதயத்தில் செய்யச் சொன்ன காரணம் என்ன? என்று பிரும்மதேவனைக் கேட்டார்.

பிரம்மதேவன் கூறலானார்: "நர்மதையாற்றங்கரையில் பரத்வாஜர் என்ற முனிவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பிள்ளையாரின் பக்தர் அவர் ஒருநாள் நர்மதை நதியில் நீராடச் சென்றார். அந்த நதிக்கரையில் நீராடுவதற்கு மிகவும் அழகிய பெண் ஒருத்தி தன் தோழிகளுடன் நின்றிருந்தாள். அவளைக் கண்ட முனிவர் உணர்ச்சி மீறிய நிலையில் தன் சக்தியை இழந்தார். அவரது வீரியம் பூமியில் விழுந்தது. அதனால் ஏற்பட்ட வெட்கத்தால் மனங்கூசிய முனிவர் ஆசிரமம் சென்றார். தவத்தில் ஈடுபட்டார்.

பூமியில் விழுந்த வீரியம் ஒரு குழந்தையாயிற்று. பூமா தேவி அந்தக் குழந்தை செக்கர்வானம் போல சிவந்து காணப்பட்டதால் அந்தக் குழந்தைக்கு 'அங்காரகன்' என்று பெயரிட்டு அன்போடு வளர்ந்து வந்தாள் அவள்.

பாலகனாகியதும் தன் தந்தையைப் பார்க்க வேண்டும் என்று தன் தாயாகிய பூமாதேவியிடம் கூறினான்.

பூமாதேவி அவனை பரத்வாஜரின் ஆசிரமத்துக்கு அழைத்துச்சென்று அவரை வணங்கி "இந்தப் பாலகன் தங்கள் உதிரத்திலிருந்து உற்பத்தியானவன். இவனை நான் வளர்த்து வந்தேன். இனி இவனை உங்கள் உடைமையாக ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று கூறி அவனை அவரிடமே விட்டுவிட்டு போய்விட்டாள்.

பரத்வாஜர் அங்காரகனுக்கு சகல வித்தைகளையும் கற்பித்து வளர்த்து வந்ததோடு அவனுக்கு விநாயகரின் மந்திரத்தையும் உபதேசித்து தகுந்த இடத்தில் தனித்திருந்து அந்த மந்திரத்தைச் செபித்து தவம் செய்யும்படி கூறினார்.

அங்காரகனும் தன் தந்தையின் சொற்படி காட்டிற்குச் சென்று விநாயகரைக் குறித்து தவம் செய்து வந்தான். விநாயகர் அவன் தவத்திற்கு மகிழ்ந்து அவன் முன் தோன்றி "அன்பனே! நீ விரும்பும் வரங்களைக் கேட்பாயாக!" என்றார்.

அங்காரகன் அவரை நோக்கி "ஐயனே! எப்போதும் தங்கள் மீது நீங்காத பக்தியும் தேவர்களுக்கு சமமாக அமுது அருந்தும் பாக்கியமும் வானத்தில் நவக்கிரங்களில் ஒன்றாகத் திகழும் பதவியும், அடியேனுக்குத் தாங்கள் தந்த இந்த செவ்வாய்க்கிழமை சதுர்த்தி தினமாகையால் சதுர்த்தி திதியில் எனது கிழமை சேர்ந்து வரும் நாளில் தங்களை வணங்கி வழிபடும் மக்களுக்கு எல்லாம் அவர்

இரு வினைகளையும் நீக்கி தாங்கள் திருவருள் செய்ய வேண்டும்!" என்று வேண்டினான்.

விநாயகர் அவன் கேட்ட வரங்களை அளித்தார் என்று பிரம்மதேவன் கூறி முடித்தான்.

## கோபத்தால் வந்த சாபங்கள்

அவந்தி நகரத்தில் சுலபன் என்ற அரசன் தன் மனைவி சுபத்திரையோடு நீதிநெறி தவறாமல் ஆட்சி புரிந்து இன்பமாக இல்லறம் நடத்தி வந்தான்.

ஒருநாள் அவ்வரசனிடம் யாசகம் வாங்குவதற்காக உடுத்தக்கூட ஒழுங்கான ஆடையில்லாத கிழிசல் ஆடையுடன் ஒருவன் வந்தான். அவன் தன் உடல் எங்கும் தூய வெண்ணீறு பூசி சிவபக்தனைப் போல தோன்றினான். பிச்சை எடுக்க வந்த அவனை கண்டும் காணாமல் தன் மனைவியுடன் கொஞ்சியபடியே அவனை நோக்கி நையாண்டியாக அரசன் சிரித்தான். அவனது அலட்சிய சிரிப்பைக் கண்ட அந்த வேதியன் அரசனை நோக்கி "அரசே! அறிவுடையோருக்கு இது அழகல்ல! வறுமையால் வாடிய நான் அரசனாகிய உன்னை நாடி உதவி கேட்க வந்தேன். நீயோ உனது செல்வச் செருக்கால் என்னைப் பார்த்து சிரித்தாய். அது என் உள்ளத்தைச் சுட்டதுபோல உன் குலத்தையும் சுட்டு அழித்துவிடும். மேலும் நீ ஏரில் பூட்டி ஓட்டப்படும் எருதாகப் பிறந்து புல்லைத் தின்று திரிவாயாக!" என்று சாபமிட்டான்.

தன் கணவனைச் சாபமிட்ட அந்த யாசகனை அரசன் மனைவி சுபத்திரை நோக்கி "ஏ வேதியா! உடம்பு முழுவதும் திருநீறு பூசியிருந்தும் உன் மனத்தில் இரக்கம்

என்பது சிறிதும் இல்லையே! தவறு செய்பவர்களை மன்னிப்பதுதான் உயர்ந்தவர்களின் குணமாகும். நீயோ இந்த உலகை ஆளும் அரசனையே சிறிதும் மதியாமல் கழுதையைப் போல சபித்துவிட்டாய். ஆகையால் நீ கழுதையாகி சலவைத் தொழிலாளியிடம் சிக்கி முதுகு வலிக்க அழுக்கு மூட்டைகளைச் சுமந்து அவதிப்படுவாயாக!" என்று சபித்தாள்.

அதைக் கேட்ட வேதியன் "குற்றம் செய்தவர்கள் தாங்கள். அந்தக் குற்றத்தை உணராமல் நீ நீச ஸ்திரீயைப் போல எனக்குச் சாபமிட்டதால் நீயும் ஒரு சண்டாளப் பெண்ணாகி புலைச்சேரியில் திரிந்து கண்டதைத் தின்பவளாக அவதிப்படுவாயாக!" என்று எதிர் சாபமிட்டான்.

காலவசத்தால் அம் மூவரும் சாபத்திற்குரிய பிறவிகளை அடைந்தனர். அரசன் எருதானான். அவன் மனைவி புலைச்சேரியில் பிறந்தாள். வேதியனோ கழுதையானான். நாட்கள் பல சென்றன. ஒருநாள் எருதானது உழவனுடைய ஏரில் பூட்டப்பட்டு அவனது நிலத்தை உழுது கொண்டிருந்தது. கழுதை தன் முதுகெலும்பு நோவ அழுக்கு மூட்டைகளைச் சுமந்து சென்று வண்ணான் துறையில் போட்டுவிட்டு புல்மேய்ந்து கொண்டிருந்தது. இராணி சுபத்திரையும் குளிர் காய்வதற்காக மரப்பட்டைகளையும் புற்களையும் வெட்டிக் கொண்டிருந்தாள். சந்தர்ப்பவசத்தால் மூவரும் ஓரிடத்தில் வந்து சேர்ந்தனர். அப்போது வானம் இருண்டு மின்னலும் வீசி இடி இடித்து பெருமழை பொழிந்தது அதனால் உழவன் ஏரில் பூட்டியிருந்த எருதை அவிழ்த்துவிட்டான். அந்தக் காளைமாடு மழைக்குப் பயந்து அருகிலிருந்த ஒரு பிள்ளையார் கோயிலுக்குள்ளே புகுந்து ஒதுங்கியது. அக் கோயிலுக்கு வெளியே மேய்ந்துகொண்டிருந்த கழுதையும் கோயிலுக்குள் ஒதுங்கியது. புலைச்சியும் தான் சேகரித்த புற்கட்டு

களுடன் மழைக்காக கோயிலுக்குள்ளிருந்த பிரகாரத்தில் ஒதுங்கிளாள். மழையும் காற்றும் ஓயாமல் அடித்தன. குளிர் அதிகமாயிற்று. இரவு நேரமும் வந்தது. கோயிலுக்குள் இருந்த கழுதைக்கும் காளை மாட்டுக்கும் பசி அதிகரிக்கவே அவையிரண்டும் மெல்லமெல்ல சென்று, புலைச்சியின் புல்லுக் கட்டைப் பிடுங்கி போட்டி போட்டுக் கொண்டு தின்னத் தொடங்கின.

புலைச்சி ஒரு தடியை எடுத்து அடிஅடியென்று கழுதையை அடித்தாள். அந்தக் கழுதை தனது அருகிலிருந்த காளை மாட்டை எட்டி உதைத்தது. அதனால் கோபங்கொண்ட காளை, கழுதையைத் தன் கொம்பினால் தாக்க பாய்ந்தது. இவ்வாறு ஒன்றுக்கொன்று உதைத்துக் கொண்டும் கதறிக் கொண்டும் ஒரு பெருங் கூச்சல் எழுப்பின.

அதனால் மூவரும் வெளியே செல்ல பயந்து ஆலயத்தின் பிரகாரத்தையே சுற்றிச்சுற்றி ஓடினார்கள். அப்படி ஓடும்போது மிருகங்கள் வாயில் கவ்விக் கொண்டிருந்த புல்லும், புலைச்சியின் புற்களும் பிள்ளையார் சந்நிதியில் விழுந்தன. அவற்றில், மூன்று புற்கள் மட்டும் அங்கு வீசிய காற்றில் பறந்து பிள்ளையாரின் திருமேனியில் படிந்தன.

இதனால் சாமிக்குத் தீட்டுப்பட்டுவிட்டது என்று அங்கிருந்த முனிவர்கள் எல்லாம் கருதி பிள்ளையாருக்கு மீண்டும் அபிஷேகம் செய்து ஆலயம் முழுவதும் சுத்தஞ் செய்து தூப, தீபநைவேத்தியங்களுடன் பிள்ளையாரை அலங்கரித்துப் பூசித்தனர். அவர்களால் கடுமையாக அடித்துத் துரத்தப்பட்ட காளையும் கழுதையும் புலைச்சியும் அவ்விடத்திலேயே இறந்தனர்.

அன்றைய தினம் பிள்ளையார் சதுர்த்தியாகையால் அம்மூவருக்கும் விநாயகர் திருவருள் புரிந்து விமானத்தை

அனுப்பி அம் மூவரையும் அழைத்து வரும்படி தேவர்களுக்குக் கட்டளையிட்டார். விமானம் அவர்களைச் சுமந்து சென்றது. அந்த அதிசயத்தைக் கண்டு மக்கள் வியந்தனர்.

இழிந்த பிறவியில் உள்ளவர்களுக்கும் உயர்ந்த உலகத்தை அடையத்தக்க புண்ணியத்தை ஓர் அறுகம்புல் கொடுத்தது என்றால் அந்த அறுகம்புல்லால் பிள்ளையாரை அர்ச்சனை செய்வதால் ஏற்படும் மேன்மையைச் சொல்ல வேண்டுமென்று தவமுனிவர்கள் கேட்டனர்.

## அனலாசுரனும் அறுகம்புல்லும்

தாபரன் என்ற நகரத்தில் பனைமரங்கள் நிறைந்த ஒரு தோப்பில் கவுண்டின்யர் என்ற தவமுனிவர் ஒருவர் தம் மனைவி ஆசிரியை என்பவளுடன் வாழ்ந்து வந்தார். அவர் தமது ஆசிரமத்தில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து தினந்தோறும் பதினாயிரம் அறுகம்புற்களால் பிள்ளையாரைப் பூசித்து வந்தார். அவர் மனைவி கவுண்டின்ய முனிவரை நோக்கி "நாதா! நறுமணம் வீசும் மலர்கள் பல இருக்க, அவைகளைப் பறித்துவந்து அர்ச்சனை செய்யாமல் நாள்தோறும் அறுகம்புற்களைக் கொண்டுவந்து பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்து வருகிறீர்களே அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டாள்.

அதற்கு அந்த முனிவர் "பிரியே! இதன் பெருமை இரகசியமானது பக்தியோடு கேட்கும் உனக்கு அந்த வரலாற்றைச் சொல்கிறேன் கேட்பாயாக!"

முன்பு ஒரு காலத்தில் யமதர்பாரில் யமதர்மராஜன் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அவனது

சபையில் தேவர்களும் முனிவர்களும் கந்தர்வர்களும் வீற்றிருந்தனர். அவர்களுக்கு எதிரில் ஊர்வசி, ரம்பை, திலோத்தமை முதலிய தேவகன்னியர்கள் நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். அந்தநடனத்தில் தேவகன்னியரில் மிகவும் அழகு வாய்ந்த திலோத்தமை என்பவளின் மேலாடை ஆட்டத்தின் வேகத்தில் நழுவி அகன்று போய் விட்டது. அவள் தலைகுனிந்தவாறு யாரும் அறியா வண்ணம் நகர்ந்து சென்றாள் அவளையே கவனித்துக் கொண்டிருந்த யமதர்மராசன் மேலாடையில்லாத திலோத் தமையைக் கூர்ந்து பார்த்ததால் மோகதாபம் கொண் டான். அவன் உள்ளம் காமத்தால் நெகிழ்ந்தது. உடனே சபையிலிருந்து வெளியேறினான் அவன் நடந்து செல் லும்போதே அடக்கமுடியாத காமத்தால் அவனது வீரியம் தானாகவே வெளிப்பட்டு தரையில் சிந்தியது. அதிலிருந்து பயங்கரத் தோற்றமுடைய ஓர் அசுரன் மின்னலைப் போல தோன்றினான். அனலாசுரன் என்ற அவனது பயங்கர உருவத்தைக் கண்டு அனைவரும் பயந்து ஓடிப் போய்விட்டார்கள். அவனது பயங்கர உருவத்தைக் கண்டு யமதர்மனும் பயந்தான்.

உடனே அந்தப்புரத்திற்குச் சென்று தனது கோர மைந்தன் நுழைந்துவிடாதபடி கதவுகளைத் தாளிட்டுக் கொண்டான். தந்தை என்பதால் அனலாசுரன் அவனை ஒன்றும் செய்யாமல் பூவுலகம் சென்று உயிரினங்களை விழுங்கிவிட்டு, தேவர்களையும் சாப்பிட எண்ணியவனாய் தேவலோகத்தை நோக்கிப் பாய்ந்தான். இதையறிந்த தேவர்கள், இந்திரனுடன் திருமாலிடம் சென்று நடந்த வற்றைக் கூறினார்கள்.

திருமாலோ, அந்தக் கொடிய அசுரனை பிள்ளையா ரால்தான் அழிக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டு, தேவர்களுடன் விநாயகரை வழிபட்டு தேவர்களின் குறை

களைச் சொல்லி முறையிட்டார். விநாயகரும் அவர்களை யெல்லாம் தனக்குப் பின்னால் இருக்கும்படி செய்து விசுபரூபம் எடுத்துக் கொண்டார். தேவலோகம் சென்ற அனலாசுரன் அவர்களையெல்லாம் அங்கு காணாததால் பல இடங்களிலும் அவர்களைத் தேடியலைந்து விநாயகர் அருகில் அவர்களிருப்பதை அறிந்து அவர்மீது பாய்ந்தான் விநாயகர், ஆழ்கடலை அகத்தியர் விழுங்கியதைப் போல ஆலகாலவிஷத்தை உமையொருபாகன் அள்ளி விழுங்கிய தைப் போல, அவ்வசுரனை விநாயகர் விழுங்க நினைத் தார். அவனைத் தன் துதிக்கையில் வளைத்துப் பிடித்து உயரத் தூக்கி "அனலாசுரனே! நீ இந்த உலகத்தை பல விதத்திலும் துன்புறுத்தி விட்டாய். இன்னும் பல உலகங் கள் என் வயிற்றினுள்ளே இருக்கின்றன என்று கூறி அனலனை அப்படியே தன் வாயில் போட்டு விழுங்கி விட்டார்.

பிள்ளையாரின் வயிற்றினுள்ளே புகுந்த அனலாசுரன் அவர் உடலில் கொடிய வெப்பத்தை உண்டாக்கினான். தேவர்கள் பிள்ளையாரின் செயலைக் கண்டு அதிசயித் தனர் என்றாலும் எல்லோருடைய வயிற்றிலும் அதே வெப்ப உணர்ச்சி வாட்டியது. பிள்ளையார் வயிறு குளிர்ந் தால்தான் அனைவருடைய வயிறும் குளிருமென்று அனை வரும் தீர்மானித்தனர். உடனே தேவேந்திரன் கட்டளை யிட, சந்திரன் தனது அமுத கிரணங்களை விநாயகரின் சிரசின் மேலிருந்து பொழிந்தான். நான்முகனின் அன்புக் கட்டளைப்படி சித்தி புத்தி என்ற பிள்ளையாரின் மனைவி யர் இருவரும் அவரருகில் நெருங்கியிருந்து தங்களது குளுமையான அங்கங்களினால் ஒற்றடம் கொடுத்தனர். திருமால் ஏராளமான தாமரை மலர்களை விநாயகர் முன்பு நீட்ட பிள்ளையார் அவற்றைக் கொண்டு தம்முடல் எங்கும் தடவிக் கொண்டார்.

வருணன் குளிர் நீர் அபிஷேகம் செய்தான். என்ன செய்தும் பிள்ளையாரின் வெப்பம் தணியவில்லை. கடைசியாக எண்பத் தெண்ணாயிரம் தவமுனிவர்களும் வந்து ஒவ்வொருவரும் இருபத்தோர் அறுகுகளினால் விநாயகர் உடல் முழுதும் அர்ச்சனை செய்தனர். உடனே அவரைப் பற்றியிருந்த வெப்பமும் அனல் வெக்கையும் நீங்கியது. எல்லோரும் ஆனந்த மடைந்தனர். மூன்று உலகங்களும் குளிர்ந்து செழித்தன.

அப்போது விநாயகர் அவர்களை நோக்கி என் வயிற்றில் தோன்றிய அனலை தேவர்கள் செய்த பரிகாரங்களால் தணிக்க முடியவில்லை. நீங்கள் செய்த அறுகம்புல் அர்ச்சனையினால் தான் என் வெக்கை நீங்கியது. எனவே என்னை வழிபடும் போது எத்தனை நறுமண மலர்கள் இருந்தாலும் அதில் அறுகம்புல் மட்டும் இல்லாவிட்டால் அந்தப் பூஜை பயன் தராது. நிறைய அறுகம் புற்களால் அர்ச்சிக்க முடியாதவர்கள் இருபத்தோரு அறுகம் புற்களினாலாவது அர்ச்சிக்க வேண்டும். அதற்கும் இயலாதவர்கள் அறுகம்புல் ஒன்றையாவது அர்ப்பணிக்க வேண்டும்!" என்று கூறி விட்டு மறைந்தார்.

அனலாசுரனை விழுங்கியதால் பிள்ளையாருக்கு 'காலானலப் பிரசமனர்' என்று ஒரு திருப்பெயரும் உண்டு. அன்று முதல் பிள்ளையாரின் பூசைக்குரிய பொருள்களில் அவரது அர்ச்சனைக்கு அறுகம்புல் மட்டுமே மேன்மையாக விளங்கி வருகிறது.

## பசி தீராப் பிள்ளையார்

அறுகம் புல்லின் மேன்மையைக் குறித்து தேவர்கள் மேலும் ஒரு கதை கூறலாயினர்.

"முனிவர்களே! மிதிலாபுரியில் தன்னிகரில்லாத தத்துவ ஞானியும் மாமன்னருமாகிய ஜனக மகாராஜன் சீரும் சிறப்புமாக ஆட்சி செலுத்தி வந்தான். அவன் தன்னைத் தானே பரம்பொருள் என்று அகந்தை கொண்டிருந்தான். நாரதர் அவனது அரண்மனைக்கு வந்தார். அவர் வந்ததை அறிந்தும் இம் மன்னன் அகந்தையினால் அவரைக் காணாதது போல் இருந்து விட்டான். நாரதர் அவனை நோக்கி "மன்னாதி மன்னனே! அண்டி வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் அளவற்ற தருமங்களைச் செய்து வருகிறாய். பகவானுடைய அருளினால் தான் அத்தகைய செல்வமும்-பகவானின் திருவருளினாலே அது மேன்மேலும் பெருகட்டும்!" என்றார்.

அதைக் கேட்ட அரசன் 'நாரதரே! பகவான் என்று ஒருவர் தனியாக இல்லை. விருப்புவன அனைத்தையும் கொடுக்கும் பகவானும் அவற்றை ஏற்கும் யாசகனும் அவற்றை அனுபவிக்கும் போகியும் வெறுக்கும் யோகியும் நானே தவிர வேறொன்றுமில்லை. நானே பகவான்!" என்றான்.

நாரதர் அவன் சொன்னதை ஒப்புக் கொள்ளாமல் "பகவான் என்று ஒருவன் இருக்கிறான். பகவான் இல்லை என்று நீதான் அறியாமையினால் சொல்லுகிறாய். அப்படிப்பட்ட பகவான் இருக்கிறான் என்பதை நீ அறிந்து வெட்கித் தலை குனியும்படி செய்கிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

அவர் கவுண்டின்ய முனிவரிடம் வந்து ஜனக மாமன்னனிடம் நடந்த விவாதத்தைக் கூறினான். முனிவர் தாம் வணங்கி வரும் பிள்ளையாரிடம் அந்த விஷயத்தைக் கூறும்படி சொன்னார். நாரதரும் பிள்ளையாரிடம் சொல்லிவிட்டுத் தம் வழியே சென்றார்.

விநாயகரும் ஜனக மாமன்னனின் அகந்தையை நீக்கி அவனை நல்வழிப்படுத்த நினைத்து குஷ்டநோயுடைய ஏழை அந்தணனைப் போல வடிவமெடுத்துக் கொண்டு ஜனகமாமன்னனின் அரண்மனைக்குச் சென்றார். பார்வைக்கு அருவருப்பு தோன்றும்படி காணப்பட்ட அந்த வேதியரை நோக்கி "உமக்கு என்ன வேண்டும்? எதற்காக என்னை நாடி வந்தீர்!'' என்று கேட்டான்.

"அரசே! முதலில் எனது பசிப்பிணியைப் போக்க வேண்டும்'' என்றார் வேதியர்.

அரசன் தன் மகனை நோக்கி "மகனே! இந்த மறையவரின் பசி தீரும்படி நல்ல அறுசுவை பண்டங்களுடன் விருந்து வைத்து இவர் வயிற்றை நிரப்பிவிடு" என்றான்.

மன்னரின் மகன் அவரை விருந்தறைக்கு அழைத்துச் சென்று இரு வாழையிலை விரிக்கச் செய்து அறுசுவை உணவுகளைப் படைக்கச் சொன்னான். உணவுகளைப் பரிமாறப் பரிமாற அவர் அத்தனை ஆகார வகைகளையும் ஒன்றாக வாரி ஒரே வாயில் விழுங்கி விட்டு அப்போதும் பசியடங்காமல் அவர் தமது தொந்தியைத் தடவினார். அரசிளங்குரன் அதைக் கண்டு சமையற்காரர்களை அழைத்து அவர்கள் சமைத்து வைத்துள்ள அத்தனை உணவுப் பதார்த்தங்களையும் கொண்டு வந்து அவருக்குப் பரிமாறச் செய்தான்.

பரிசாரர்கள் பெரிய தட்டுகளில் ஆகாரங்களைக் கொண்டு வந்து பரிமாறியதும் அவற்றையெல்லாம் தொந்திப் பிள்ளையார் விழுங்கிக் கொண்டிருந்தார். உண்டு முடித்ததும் "இன்னும் பசி தீரவில்லையே! என்றார். உடனே அடுப்பில் வெந்து கொண்டிருந்தவைகளைப் படைத்தனர். வேகாதவைகளையும் கொண்டுவந்து பரிமாறினர். அவைகளையும் தின்று முடித்ததைக் கண்ட

அரசிளங்குமரன் "வேதியரே! நீங்களே சென்று களஞ்சியத்தில் புகுந்து உங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் சாப்பிடுங்கள்!" என்றான். பிள்ளையார் உணவுக் களஞ்சியங்களில் புகுந்து அத்தனையும் சாப்பிட்டு விட்டு "இன்னும் பசிக்கிறதே!" என்றார்

இதையெல்லாம் கேள்விப்பட்ட ஜனக மாமன்னன் வியந்து மலைத்து, நகரத்திலுள்ள வீடுகளிலுள்ள உணவுப் பொருள்களையெல்லாம் கொண்டு வந்து மலை போல குவிக்கச் செய்தான். அவற்றையும் தின்று தீர்த்த விநாயகர் "இன்னும் என் பசி தீரவில்லையே!'' என்றார். "அரசன் ஜனகன் திகைத்துத் திடுக்கிட்டு என்னால் முடிந்த மட்டும் என் அரண்மனையிலிருந்தும் நகரத்து வீடுகள் அனைத்திலிருந்தும் உணவுப் பொருள்களையெல்லாம் அள்ளி வந்து உங்கள் முன் கொட்டியும் உமது பசித்தீரவில்லை. இனிமேல் என்னால் ஒன்றும் முடியாது. உமது பசியைத் தீர்க்கக் கூடிய வரை நீரே தேடிச் செல்லும்!" என்றான்.

மன்னனே! பரப்பிரம்மமான கடவுளும் நீயும் ஒன்று என்று பேசும் நீ தான் பகவான் என்றால் என் பசியைக் கூட உன்னால் தீர்க்க முடியவில்லையே! நீயா பரப்பிரம்மம்!" என்று கூறி விட்டு அங்கிருந்து வெளியேறி வேகமாக நடந்து சென்றார். வேதியரான விநாயகர் வெளியேறிச் செல்வதைப் பார்த்த ஜனக மன்னன் அவரது வார்த்தைகளும் செயல்களும் வினோதமாக இருக்கின்றனவே இவரை இன்னார் என்று தன்னால் அறிந்து கொள்ள முடியவில்லையே என்று தனது தத்துவக் கொள்கையையும் தனது அகந்தையையும் விட்டு விட்டான்.

ஜனகரின் அரண்மனையிலிருந்து வெளியேறி வேகமாக நடந்த விநாயகர் அந் நகரத்திலிருந்த திரிகரன் என்ற அந்தணரின் வீட்டுக்குச் சென்றார். அவரும் அவர்

மனைவி விரோசனையும் ஒழுக்கம் தவறாது இல்லறம் நடத்தி வந்தனர். வேதியர் அங்கு சென்றபோது தம்பதி கள் இருவரும் பிள்ளையார் பூசை செய்து கொண்டிருந் தார்கள். வேதியரைக் கண்டதும் அவர்கள் இருவரும் வணங்கினர். வேதியர் அவர்களை நோக்கி "மெய்யன்பர் களே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. அதைத் தீர்த்துக் கொள்ள ஜனக மன்னனின் அரண்மனைக்குச் சென்றேன். அவன் சிறிது உணவிட்டான். என் பசி முற்றிலும் தீருவதற்காகவே உங்களை நாடி வந்தேன்'' என்றார்.

அப்போது விரோசனை வேதியரை நோக்கி "ஐயா! குளத்துநீரை முழுவதையும் குடித்தும் தணியாத தாகத் திற்கு குடத்துநீர் குடித்தால் போதுமா! யாசகம் செய்து வாழ்கின்ற எங்களுக்கே உணவில்லை. பிள்ளையார் பூசை செய்து மிகுந்திருக்கும் அறுகம்புல்லைத் தவிர வேறு தானியம் எதுவும் எங்களிடம் இல்லை'' என்று உண்மை நிலையினைக் கூறினாள்.

வேதியர் அவளை நோக்கி "அன்போடு எதைக் கொடுத்தாலும் அது எனக்கு மிகவும் ருசிக்கும். புல்லை அற்பமாக நினைக்க வேண்டாம். உடனே சென்று அந்தப் புல்லைக் கொண்டுவந்து கொடுங்கள்!" என்றார். அவளும் கொண்டுவந்து கொடுத்தாள். அவர் அந்தப் புல்லைத் தம் கையால் வாங்கி வாயில் மென்று விழுங்கி தம் தொந்தி யைத் தடவிக் கொண்டு ஏப்பம் விட்டார். உடனே அவரது அகோரப் பசியும் நீங்கியது. அதே கணத்தில் திரிகரனுடைய பழைய, கூரைக் குடிசை தங்கமயமான மாளிகையாகியது. அநேக வகையான உணவுகளும் பொன், வெள்ளி நகைகளும் செல்வங்களும் குவிந்தன. திரிகரனும் அவன் மனைவியும் திகைத்தனர். வேதியரான விநாயகர் தம் சுயவுருவத்துடன் அவர்களுக்குத் தரிசனம் அளித்தார். விநாயகரின் பசி நீங்கியதும் திரிகரன்

திடீரென்று குபேரன் ஆகிய செய்தியும் ஜனக மன்னனுக்கு எட்டியது அவன் அங்கு விநாயகரை வணங்கி தன்னை மன்னித்தருள வேண்டினான். பின்னர் விநாயகர் அவனுக்குப் பல தத்துவ விளக்கங்களை கூறி அவனது அறியாமையையும் அகந்தையையும் நீக்கினார்" என்று கவுண்டின்ய முனிவர் தம் மனைவிக்கு கூறினார்.

உடனே அவள் தன் கணவரை நோக்கி மிதிலா புரியின் திரிகரனைவிட நாம் அளவற்ற அறுகம்புற்களால் யானைமுக விநாயகரை பூசித்து வருகிறோம். அப்படி யிருந்தும் நமக்கு மட்டும் இதுவரை நற்பேறு ஏற்பட வில்லையே என்றாள்.

அதைக் கேட்ட முனிவர் உலகிலேயுள்ளவர்கள் அனைவரும் அறுகம்புல்லின் அருமை பெருமைகளை அறிய வேண்டும் என்பதற்காக "பத்தினியே! நான் உன்னிடம் ஓர் அறுகம்புல்லைத் தருகிறேன். அதை நீ எடுத்துக் கொண்டு தேவேந்திரனிடம் கொண்டு போய் கொடுத்து அதன் எடைக்கு ஈடான பொன்னைத் தரும் படிக் கேட்டு வாங்கி வா! என்றார்.

ஆசிரியை அந்தப் புல்லை எடுத்துச் சென்று தேவேந்திரனிடம் கொடுத்து தான் வந்த காரியத்தைக் கூறினாள். தேவேந்திரன் அவளை குபேரனிடம் அனுப்பி அவள் கொண்டு வந்த அறுகம்புல்லுக்குச் சமமான பொன்னை அவளிடம் கொடுக்கும்படி கூறி அவளை தனது தூதுவர்களுடன் அளகாபுரிக்கு அனுப்பி வைத்தான். அவள் அங்கு சென்றாள். நடந்தவற்றைகி கூறினாள். உடனே குபேரன் அவள் முன்பு ஏராளமான பொற்குவியலைக் குவித்து வைத்து "தாயே உனக்குத் தேவையான அளவு எடுத்துச் செல்லவும்" என்றான்.

அதற்கு ஆசிரியை அவனை நோக்கி "குபேரனே! நான் கொண்டு வந்துள்ள இந்த அறுகம்புல்லின்

எடைக்குச் சமமான பொன்னை மட்டும் வாங்கி வரும்படி என் கணவர் கூறியனுப்பினார். அதனால் இந்த அறுகம் புல்லை ஒரு தராசில் வைத்து அதற்கு இணையான பொன்னைத் தரவேண்டும்" என்றாள்.

குபேரன் தராசைக் கொண்டு வரச் செய்து அவன் ஒரு தட்டில் அந்த அறுகம்புல்லை வைத்து மற்றொரு தட்டில் சிறிதளவு தங்கத்தை வைக்கச் செய்தான். அப்போது அறுகம்புல் வைத்த தட்டு அதிகபாரமுள்ள தாய் பூமியில் படிந்திருந்தது. அதைக் கண்ட குபேரன் அந்த அறுகின் மகிமை உணர்ந்து தனது பொக்கிஷத்திலிருந்த செல்வங்களையெல்லாம் கொண்டு வைக்கச் செய்தான். அப்போதும் அறுகம்புல் இருந்த தட்டு சிறிதும் அசையாமல் பாரத்தால் தாழ்ந்திருந்தது. பிறகு தனது நகரத்திலிருந்த திரவியங்களையெல்லாம் கொண்டுவந்து தட்டில் வைத்தான். அறுகு இருந்த தட்டு உயரவில்லை. பின்னர் தேவர்களும் மும்மூர்த்திகளும் வந்து அந்த அறுகம்புல்லுக்கு ஈடாக மற்றொரு தட்டில் ஏறியமர்ந்தனர் அப்போதும் அறுகு இருந்த தட்டு அசையாமல் இருந்தது.

அதைக் கண்டதும் அனைவரும் வியந்து தட்டிலிருந்து கீழே இறங்கி அந்த அறுகு பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்ததால் மேன்மை பெற்றிருக்கிறது. என்பதை ஞான திருஷ்டியால் அறிந்து அவர்கள் அனைவரும் ரிஷிபத்தினியுடன் கவுண்டின்ய முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தனர். மும்மூர்த்திகளும் மற்றுமுள்ள தேவர்களும் தம் மனைவியுடன் வருவதைக் கண்ட முனிவர் அவர்களைப் பணிந்து வலம் வந்து தொழுதார்.

அப்போது சிவபெருமான் அம் முனிவரை நோக்கி "முனிவரே! பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்த அறுகம் புல்லுக்கு உள்ள மகிமையை வெளிப்படுத்தவே நீங்கள்

உங்கள் மனைவியிடம் அதைக் கொடுத்து எங்களிடம் அனுப்பி வைத்தீர்கள். அதற்கு ஈடாக புவனம் முழுவதுமுள்ள அஷ்ட ஐஸ்வரியங்களும் அறுகம்புல்லுக்கு ஈடாகாது. அப்படியிருக்க அறுகம்புற்களைக் கொண்டு தினந்தோறும் விநாயகரைப் பூசித்து வரும் பக்தர்களில் உமக்கு ஈடானவர் எவருமேயில்லை!" என்று கூறிவிட்டு அவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து விட்டு தேவர்கள் மறைந்தனர்.

## வன்னி இலைகளின் மகிமை

கிரிதவீரியனுடைய தந்தையான விதுர்த்தேவன் பிரும்மதேவனை நோக்கி "கர்த்தாவே! அறுகம்புல்லினால் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்வதால் உண்டாகும் பலன்களை நீங்கள் அறிவித்தீர்கள் அறுகம்புல் கிடைக்காத சமயங்களில் பிள்ளையார் பூசையை எப்படிச் செய்வது?" என்று கேட்டான்.

பிரும்மதேவன் அதற்குப் பின்வருமாறு கூறலானார்: பிள்ளையார் பூசைக்குப் பல பொருள்கள் பயன்பட்டாலும் அறுகம்புல்லுக்குச் சமமான மகிமையும் பெருமையும் பெற்றிருப்பது வன்னித் தழையாகும். வன்னியில்லாமல் விநாயக பூஜை செய்தால் பயனிருப்பதில்லை. அறுகம் புல்லுக்குச் சமமாக வன்னியிலைகளும் முக்கியமானவை என்பதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

விதேய தேசத்தில் ஆதேயம் என்ற நகரம் ஒன்றிருந்தது. அதில் வீமன் என்று ஒரு வேடன் வசித்து வந்தான். அவன் தீமையே உருவான தீயவனாகவும் வழிப்போக்கர்களை வழி மறித்து கொள்ளையும் கொலையும் புரிந்து அவர்களது பொருள்களைப் பறித்தும் மிருகங்களை வெட்டிக் கொன்றும் விற்றும் வாழ்ந்து வந்தான்.

ஒரு நாள் அயலூர் அந்தணர்கள் அந் நகரத்தில் நடந்த ஒரு திருவிழாவைக் காணவந்து சொந்த ஊர்க ளுக்குத் திரும்பும் போதும் அவன் அவர்களிடமிருந்த பொன், பொருள்களை வழிப்பறி செய்து அவர்களையும் கொன்று விட்டான். அதனால் அவனை பிரம்மஹத்தி தோசம் பிடித்தது. அப்போது ராட்சஸன் ஒருவன் தோன்றி புள்ளி மானைத் துரத்தி ஓடும் வேங்கைப் புலி யைப் போல வீமனைத் துரத்தினான். அரக்கனுக்கு பயந்த வீமன் காட்டிலிருந்த ஒரு வன்னி மரத்தின்மீது ஏறிப் பதுங்கிக் கொண்டான்.

அவன் மரத்தின் மீது ஏறிய அதிர்ச்சியில் அதிலிருந்த ஓரிலை மரத்தினடியில் இருந்த பிள்ளையார் சிலையின் திருவடிகளில் விழுந்தது. வீமனைத் தொடர்ந்து அந்த அரக்கனும் மரத்தின்மீது ஏறினான். அப்போதும் மற் றொரு இலை பிள்ளையாரின் திருவடிமீது விழுந்தது. மரத்தில் ஏறிய வீமனும் அந்த அரக்கனும் மரத்திலேயே கடுமையாகப் போர் புரிந்தனர். முடிவில் இருவருமே கட் டிப் புரண்டு மரத்திலிருந்து விழுந்து மடிந்தார்கள். ஆயினும் அவர்களால் வன்னி மரத்தின் இலைகள் விநா யகர் மீது விழுந்ததால் அவர்கள் இருவரும் தெய்வ உரு வம் அடைந்தனர். விநாயகரின் திருவருளால் தேவலோ கத்திலிருந்து ஒரு தங்க விமானம் வந்தது. அதில் இரு வரும் ஏறியமர்ந்து விநாயகர் உலகத்தை அடைந்து பெரு வாழ்வு பெற்றார்கள்.

இவர்களின் முன் பிறவிப் பயன்களையெல்லாம் கூறு கிறேன்.

"விதர்ப்ப தேசத்தை புண்ணிய கீர்த்தி என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் விரதத்திலும் தர்மத்திலும் புக ழுடன் விளங்கி வந்தான். அவன் மனைவியின் பெயர் மதனவதி. இருவரும் சுகபோக பாக்கியங்களைப் பெற்றி ருந்தும் பிள்ளைப் பேறில்லாமலேயே வாழ்ந்து மடிந்தனர்.

அரசன் இல்லாத குறையால் அமைச்சர்கள் திரிடராஜனுடைய மகனான சாம்பன் என்பவனை அரசனாக்கி மகுடம் சூட்டி வைத்தனர். ஆனால் அவன் பிறந்த குடும்பமோ விரும்பத் தக்க குடும்பமாக இருக்கவில்லை.

திரிடராஜனுடைய மனைவிக்கு நீண்ட காலமாக பிள்ளைப் பேறில்லாமல் இருந்தது. அதனால் அரசன் பல தான தருமங்களைச் செய்து வந்தான். ஆயினும் கொடிய அரக்கர்களுடன் நட்புக் கொண்டு செயல்களைப் புரிந்து வந்தான். அவன் மனைவி சோரம் போய் ஒரு செம்படவனுடன் தொடர்பு கொன்டு அதன் மூலம் சாம்பனைப் பெற்றிருந்தாள். எனவே சாம்பன் அரச குலத்தில் பிறந்தாலும் கள்ளத்தனமாகப் பிறந்து இருந்ததால் அவன் நாட்டிலுள்ள நல்லறிஞர்களையும் தவமுனிவர்களையும் கொடுமைப் படுத்தி வந்தான்; மது அருந்தினான், மாற்றான் மனைவியரைக் கற்பழித்து வந்தான். அவன் துர்புத்தி என்பவனை மந்திரியாக்கி விட்டான்.

ஒரு நாள் கொடுங்கோல் மன்னனான சாம்பன் காட்டிற்கு வேட்டையாட தன் படைகளுடன் சென்றான். அந்தக் காட்டில் ஒரு பிள்ளையார் கோயில் ஒன்றைக் கண்டான். அந்த கோயிலை வசிஷ்ட முனிவர் கட்டியிருந்தார். தசரதர் அந்த விநாயகரை வணங்கி புத்திரப் பேற்றை அடைந்ததால் அந்தப் பிள்ளையாருக்கு வரத கணபதி என்ற பெயர் வழங்கி வந்தது.

அந்தக் கோயிலைத்தான் சாம்பவன் கண்டான். அந்தக் கோயிலுக்குத் தரிசனம் செய்ய வந்த பக்தர்கள் வரத கணபதிக்குப் பொங்கலிட்டும் தேங்காய் உடைத்தும் அபிஷேகம் செய்தும் பலவாறாக வழிபட்டு வலம் வந்து செல்வதைக் கண்ட சாம்பனும் வேடிக்கையாக தான் வேட்டையாடி வரும்போது மரங்களிலிருந்த பழங்களை

யும் வண்ணத் தழைகளையும் பறித்து வந்து விளையாட் டாகவே விநாயகரைப் பூஜித்து "நானும் உமது பக்தன்" என்று கூறி சிரித்து விட்டு பிள்ளையாரை வலம் வந்து சென்றான். முதலில் அவன் இறந்தபிறகு அவனுயிரை யமதூதர்கள் யமலோகத்திற்குக் கொண்டு சென்று யமதர்மராஜன் முன்பு நிறுத்தினர். அங்கு சாம்பன் முதலானவர்கள் செய்த பாவ புண்ணியக் கணக்குகளை சித்ரகுப்தன் எடுத்துக் கூறிவரும்போது சாம்பன் பல பாவங்களைச் செய்திருந்தாலும் ஒரே ஒரு நாள், ஒரே ஒரு முறை மட்டுமே விளையாட்டாக பிள்ளையார் கோயி லைச் சுற்றி வலம் வந்து தான் கொண்டு வந்த கனிவர்க் கங்களை விநாயகருக்குப் படைத்து வழிபட்டான் என்று கூறினான்.

கடைசியாக சாம்பனாதியர் செய்த பாவங்களுக்காக பல நரகங்களுக்கும் அனுப்பப்பட்டு அங்கு அடி, உதை, அனல், சூடு முதலான கொடிய துன்பங்களை அனுபவித் தான். சாம்பனும் அவன் மந்திரி துர்புத்தியும் இப் பிறவியில் வேடனாகவும் அரக்கனாகவும் பிறந் தனர். முற்பிறவி ஒன்றில் பிள்ளையார் பூசையை வெறும் வேடிக்கையாக செய்த போதிலும் அந்தப் புண் ணியத்தால் வன்னி மரத்தில் ஏற நேர்ந்து அதனால் வன்னி இலைகள் விநாயகரை அர்ச்சிக்க நேர்ந்ததால் அவர்கள் இருவரும் விநாயகர் உலகம் சென்றனர். இனி அந்த வன்னி மரத்தடியில் இருந்த விநாயகரின் மகிமையை கூறுகிறேன் கேளுங்கள்.

## மரணத்தை வெல்ல முயன்ற அசுரர்களும் திருமாலின் அவதாரங்களும்

மிகச் சிறந்த தவ முனிவராகிய காசிபர் என்பவருக்கு அதிதி, திதி என்ற மனைவியர் இருந்தனர். இந்த இரு

மனைவியரோடும் இன்பமாக இல்லறத்தோடு தவத்தையும் செய்து வந்த காசிப முனிவர் மிகவும் புகழ் பெற்றவர். அவரது மனைவியரில் அதிதி என்பவள் தனக்குத் திருமாலே புதல்வராகப் பிறக்க வேண்டும் என்ற ஆசையோடு தவமிருந்து வந்தாள். அதைக் கண்ட திதி என்பவள் தேவர்களைவிட அதிக வலிமை வாய்ந்த புத்திரர்களை அடையவேண்டும் என்று ஆசைப்பட்டு வந்தாள். உடனே அவளுக்கு ஆசை ஏற்பட்டது.

அந்தி நேரத்தில் அவள் தன் கணவனுடன் இருந் தாள். விண்ணுலகும் மண்ணுலகும் யாவும் பயந்து நடு நடுங்கத் தக்கவும் அரக்கர் குலம் தழைக்கவுமான இரணி யகசிபு, இரணியாட்சன் என்ற இரண்டு அசுரர்கள் அவளுக் குப் பிறந்தார்கள்.

அவர்களில் இரணியகசிபு என்பவன் சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் செய்து ஏராளமான வரங்களையும் பெற்று அம்புகள், ஆயுதங்கள், பூமி, ஆகாயம், உள்ளிடம் வெளியிடம், இரவு, பகல், உயர்திணை, அஃறிணை ஆகிய வற்றால் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என்றும் தன் உடலிலிருந்து இரத்தம் பூமியில் விழுந்தால் தன்னைப் போன்ற உருவம் உண்டாகி வர வேண்டும் என்றும் வரம் கேட்டு அந்த வரத்தையும் பெற்றான். அதனால் அவன் தனக்கு அழிவே ஏற்படாது என்ற அகந்தையினால் செருக் குற்று தேவர்களையும் மனிதர்களையும் அடக்கியாண்டு மூவுலகங்களுக்கும் ஏகச்சக்கராதிபதியாக ஆட்சி புரிந்து வந்தான். தன்னையே கடவுள் என்று மார்தட்டி கொடுங் கோலாட்சி செய்து வந்தான்.

அப்போது மகாவிஷ்ணு பூவுலகத்தில் ஒரு வன்னி மரத்தடியில் விநாயகர் உருவைப் பிரதிஷ்டை செய்து அந்த இரணியகசிபைக் கொன்றொழிக்கும் வழியைத்

தமக்கருளும்படியான வேண்டுதலுடன் பூஜை செய்து வந்தார். அப்போது விநாயகர் அவர் முன்பு தோன்றி—

"மாயவா! என் தந்தையிடம் வரம்பெற்ற இரணிய கசிபு, அவன் வரம் பெற்ற விதத்தால்தான் தனக்கு மரணமே ஏற்படாது என்று அகந்தை கொண்டுள்ளான். அவனை அவன் பெற்ற வரத்தின்படியே கொன்றொழிக்கும் வழியை நான் கூறுகிறேன். உயர்திணை, அஃறிணை இரண்டாலும் அவனுக்கு மரணமே கிடையாது. அதனால் நரனும் இல்லாத மிருகமும் இல்லாத நரசிம்ம உருவத்தை நீ எடுத்துக் கொண்டு இரவும் பகலுமில்லாத அந்தி நேரத்தில் உள்ளும் புறமுமின்றி வாசற்படியில் பூமியிலும் இல்லாமல் ஆகாயத்திலும் இல்லாமல் உன் தொடையில் அரசனைக் கிடத்தி, எந்த அம்பிலும் ஆயுதத்திலும் சேராத உனது கூரிய நகங்களினால் அவன் மார்பைக் கீறிப் பிளந்து அதிலிருந்து பெருகும் உதிரத்தைப் பூமியில் விழாமல் உறிஞ்சி விடுவாயாக! அவன் மீண்டும் உருவெடுக்க முடியாமல் அழிந்து ஒழிந்துவிடுவான்! அதற்குத் தேவையான வலிமையையும் வரத்தையும் நாமே உமக்குத் தந்தோம் என்று கூறிவிட்டு மறைந்தார்.

அதன் பிறகு மஹாவிஷ்ணு, நரசிம்ம அவதாரம் எடுத்து விநாயகர் கூறியவாறே இரணியகசிபுவைக் கொன்று ஒழித்தார். அதற்குப் பிறகு, அவனது சகோதரனான இரணியாட்சன் என்பவன் அரசாட்சி செய்யும் போது விநாயகரின் திருவருளால், மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து அவனையும் கொன்று ஒழித்தார். விஷ்ணுவுக்கு வரம் கொடுத்ததால் பிள்ளையாருக்கு விஷ்ணுவிநாயகர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

பிறகு இரணியராட்சனுடைய மகனான விரோசனன் என்பவன், அரசனாகி சூரியனைக் குறித்து கடுந்தவம்

செய்து வந்தான். சூரியன் அவன் முன்பு தோன்றி பொன் மகுடம் ஒன்றை வழங்கி 'அசுரனே! இந்தப் பொன் முடியைத் தலையில சூட்டிக் கொண்டால் மூவுலகும் உனக்கு வசமாகி உனக்கு எந்தவித மரண ஆபத்தும் ஏற்படாது. ஆனால் இந்தக் கிரீடத்தை உன் தலையில் தரியாதிருக்கும்போது, உன் தலை மீது மற்றவர் கை பட்டால் உடனே உன் தலை நூறு துண்டுகளாகப் பிளந்து, உன் உயிரும் உன் உடலைவிட்டு நீங்கிவிடும். இதனை நன்றாக உன் நினைவில் வைத்துக்கொள்!" என்று வரங் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டார். அவன் அதன்படியே பொன்மகுடம் தரித்து மூவுலகங்களையும் ஆண்டுவந்தான் அவனுக்கு மாவலி என்ற மகன் பிறந்தான்.

விரோசனன் தேவர்களையும் மனிதர்களையும் மிகவும் கொடுமைப்படுத்தி வந்ததால் தேவர்கள் திருமாலிடம் அவனை அழித்து ஒழித்து, தங்களைக் காப்பாற்றும்படி வேண்டினர்.

திருமால் அதியழகான மோகினிப் பெண் வடிவம் எடுத்து விரோசனனிடம் சென்றார். மோகினியின் அழகில் மயங்கிய விரோசனன் அவள் மீது மோக வெறி கொண்டு மோகினியைப் பின் தொடர்ந்து வந்தான். மோகினி தன் ஆடல் பாடல்களினால் அவனது காமவெறியைத் தூண்டி விட்டாள். அசுரன் மோகினியுடன் கூடிக் கலந்து இன்பசுகங்களை விரும்பி, அவளை கெஞ்சினான் அப்போது அவள், என்னோடு கூடிமகிழ வேண்டுமாயின் நிபந்தனை ஒன்றுண்டு—

அதாவது "ஆடவன் எண்ணெய் தேய்த்துக் குளித்து நீராடிய பிறகே நான் அவனுடன் கூடி மகிழ்வேனே தவிர, தயிலம் தலையில் தடவாத ஆண்மகனிடம் நான் ஒருபோதும் சேரமாட்டேன்" ஆகையால், இப்போது

நீ எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு வந்தால் நான் உன் எண்ணத்தைப் பூர்த்தி செய்வேன். உனக்கு விருப்ப மிருந்தால் நானே உனக்கு எண்ணெய் தேய்த்துவிடு கிறேன! என்று மோகினி வடிவில் இருந்த திருமால் கூறினார்.

விரோசனன், மோகினியின் மீது மிகவும் மோகவசப் பட்டு தன்னை மறந்த நிலையில் சூரியன் தனக்களித்த வரத்தின் எச்சரிக்கைகளையெல்லாம் அடியோடு மறந்து, தன் உயிருக்குக் கவசம் போன்ற தனது கிரீடத்தைத் தலையிலிருந்து எடுத்துக் கீழே வைத்துவிட்டான். அந்தச் சமயத்தையே எதிர்பார்த்திருந்த மோகினி, அசுரன் எதிரில் மோகமூட்டும் பாவனையில் நின்று அவன் தலை யில் எண்ணெயைத் தேய்ப்பதற்காக ஒரு கையால் எண் ணெயை அள்ளிக்கொண்டு மற்றொரு கையால் அவனது உச்சந்தலையைப் பிடித்தாள். மோகினியின் கைப் பட்ட வுடனேயே அந்த அசுரனின் தலை நூறு பிளவுகளாகப் பிளந்து சிதறியது. விரோசனன் அழிந்தான். விநாயகரின் ஆலோசனைப்படி விரோசனனை அழித்த திருமால் வைகுந்தம் சென்றான்.

பின்னர் விரோசனனின் மகனான மாவலி அசுரர்களின் அரசனாக முடிசூட்டிக் கொண்டு சிவபெருமானிடம் பக்தி கொண்டு ஆட்சி புரிந்துவந்தான்.

அவன் தேவேந்திரனைப் போல வாழ நினைத்து தனது குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரிடத்தில் அதைப் பற்றி விசாரிக்க நூறு அசுவமேத யாகங்களைச் செய்தவர் கள்தான் தேவேந்திரப் பதவியை அடைவார்கள் என்று சொன்னார்.

உடனே மாவலி, மகிழ்ச்சியடைந்து தேவேந்திரனைப் போலவே தானும் நூறு அசுவமேத யாகங்களைச் செய்ய முனைந்து தவமுனிவர்களைக் கொண்டு தொண்ணூற்

றொன்பது யாகங்களைச் செய்து முடித்து நூறாவது யாகத்தையும் தொடங்கிவிட்டான்.

இதையறிந்த தேவேந்திரன் தனது பதவிக்குப் போட்டியும் கெடுதியும் நிகழ்வதையறிந்து அதை நீக்கும் படித் திருமாலிடம் சென்று முறையிட்டார். அவரும் மாவலியை அழிப்பதாக இந்திரனுக்கு வாக்களித்து விட்டார். ஆனால், மாவலியோ தருமநெறி தவறாதவன், முறைப்படி யாகம் செய்பவன். தனக்கு எக் காலத்திலும் அழிவு வராதபடி வரம் பெற்றவன். அத்தகைய மாவலிச் சக்கரவர்த்தியை நால்வகை உபாயங்களாலும் வெல்ல முடியாது! அதனால் அவனைக் கொண்டே தன் விருப் பத்தை நிறைவேற்ற உபாயம் செய்தார்.

உடனே அவர், காசிபமுனிவரின் மனைவியான அதிதி யின் கர்ப்பத்தில் தங்கி அவளுக்குப் பாலகனாக அவதரித் தார். வாமனர் என்ற அந்தணச் சிறுவரை அன்போடு வளர்த்து அவருக்கு உபநயன விழா நடத்தி சகல கலை களிலும் தேர்ச்சி பெறச் செய்தார் காசிபர் முனிவர். ஒரு நாள் வாமனர் தன் தந்தையிடம் நூறாவது யாகம் செய்து இந்திர பதவியை அடையவிருக்கும் மாவிலிச் சக்கரவர்த்தியை வென்று இந்திர பதவியை இந்திர னுக்கே நிலைக்கச் செய்ய என்ன வழி!'' என்று கேட்டார்.

விநாயகப் பெருமானின் திருவருள் ஒன்றினால் தான் கைகூடும். அதற்கு அவர்து சடாட்சரமந்திரத்தைச் செபிக்க வேண்டும் என்று கூறித் தன் மகனுக்கு வேதாகம முறைப் படி தீட்சை செய்து அந்த சடாட்சர மந்திரத்தையும் காசிபர் உபதேசித்தார்.வாமனர் தந்தை கூறிய வண்ணம் விநாயகரைப் பூசித்துவந்தார். விநாயகரும் அவர் முன்பு தோன்றி அவர் விரும்பிய வரங்களை அளித்தார்.

பின்னர் வாமனர் மாவலிச் சக்கரவர்த்தியின் யாக சாலைக்குச் சென்றார். மாவலி அவரை வரவேற்று உபசரித்து ''தவமுனிவரே! தங்கள் மலர்ப்பாதங்கள் வருந்த என்னை நாடிவந்த காரணம் என்ன?" என்று கேட்டான்.

''மாவலிச் சக்கரவர்த்தியே! நான் காசிப முனிவரின் மைந்தன். நீர் மாபெரும் யாகம் செய்வதைக் கேள்விப் பட்டு நான் அமர்ந்து தவம் செய்வதற்கு மூன்றடி நிலம் தானம் கேட்டு வாங்கிப் போகவே வந்தேன். யாகம் செய்யும் இந்தச் சமயத்தில் தானம் கேட்பதைக் கொடுத்து என் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்!" என்றார்.

''முனிவரே நீர் கேட்பது மூன்றடி நிலம்தானே! இந்தத் தானத்தை நான் பெருவிருப்பத்துடன் தருகி றேன். என்று வாக்களித்தான் மாவலி.

அப்போது மாவலிச் சக்கரவர்த்தியின் அருகில்இருந்த அவனுடைய குருவாகிய சுக்கிராச்சாரியார் அவனை தனியாக அழைத்துச் சென்று ''மன்னர் மன்னா! உன் னிடம் யாசகம் கேட்டு வந்திருக்கும் வாமனன் சாதாரண குறுமுனிவனல்ல. மகாவிஷ்ணுவே இத்தகைய மாய உருவம் எடுத்து உன் வசமுள்ள உலகங்களையெல்லாம் கைப்பற்ற வந்திருக்கிறார். இந்திரனின் பதவியைக் காப் பாற்ற உன்னையே அழிக்க வந்திருப்பதால் அவர் யாசித் துள்ள மூன்றடி நிலத்தை தானமாகக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிடு!" என்றார்.

அதைக் கேட்ட மாவலி "குருநாதரே! நம்மிடம் யாசிக்க வந்தவரின் விருப்பத்தை நிறைவேற்றுவது நமது கடமை. அப்படியிருக்க மூவுலக மன்னனான என்னிடம் மூன்றடி நிலத்தை தானமாகப் பெறுவதற்கு மகா விஷ்ணுவே யாசிக்க வந்துவிட்டார் என்றால் அதுவே

எனக்குப் பெருமையாகும். மேலும் நான் கொடுத்த வாக்கை மறுக்கத் தயாராக இல்லை. வாக்குப்படி நடப்ப தால் ஏற்படும் துன்பத்தை அடைவதற்கு நான் சிறிதும் தயங்கவில்லை" என்றான்.

பிறகு வாமனருக்கு மூன்றடி நிலத்தை தானம் கொடுக்க முனைந்து அருகிலிருந்த கமண்டலத்து நீரை ஊற்றித் தாரை வார்த்துக் கொடுக்க முனைந்தான். அப்போது சுக்கிராச்சாரியார் தாரை நீர் வெளிவராதபடி சூட்சும உருவம் பெற்று கமண்டலத்தின் மூக்கின் வழியை அடைத்துக் கொண்டார் சுக்கிராச்சாரியாரின் சூழ்ச்சியை ஞானதருஷ்டியால் அறிந்த வாமனர். தடையை நீக்க கமண்டலத் துவாரத்தினுள்ளே ஒரு குச்சியை எடுத்துக் குத்தினார். அதனால் சுக்கிராச்சாரியாரின் கண்களில் ஒன்று குருடாகியது. அவர் கமண்டலத்திலிருந்து வெளிப் பட்டுப் போய்விட்டார்.

மாவலி தாரை வார்த்துக் கொடுத்தபோது வாமன ராகிய மகாவிஷ்ணு விசுவரூபம் எடுத்து தனது ஒரு பாதத் தால் பூவுலகம் முழுவதையும் ஒரே அடியாகவும் மற்றொரு பாதத்தால் ஆகாயம் முழுமையும் மற்றொரு அடியாகவும் அளந்துவிட்டு மூன்றாவது காலடிவைக்க இடமில்லாமற் போகவே மாவலியின் சிரசின் மீதே மூன்றாவது அடியாக தமது பாதத்தை வைத்து அவனைப் பாதாள லோகத் திற்குத் தள்ளினார். இவ்வாறு மாவலியைச் சூழ்ச்சியால் வீழ்த்திவிட்டு தேவேந்திரனின் இந்திர பதவியை காப்பாற்றினார். மாவலி சிறந்த சிவபக்தனாகையால் பாதாளத்தினை அடைந்து சகல உலகங்களுக்கும் தனது புகழோடு அதிகாரத்தைச் செலுத்தி வந்தான்.

எனவே வன்னி விநாயகர், விஷ்ணு விநாயகர், வாமன விநாயகர் என்ற பிள்ளையாரின் மூன்று திருப்

பெயர்களையும் நினைப்பவர்களுக்கு தேவேந்திரனைப் போன்ற செல்வ வளமுடைய வாழ்க்கை அமையும். எல்லாத் துன்பங்களும் நீங்கும்.

## சக்களத்தி மகன் பெற்ற புத்துயிர்!

ஒரு சமயம் திருக்கயிலைமலையில் சிவபெருமானும் பார்வதியும் வீற்றிருக்கும் போது பார்வதிதேவி சிவ பெருமானை நோக்கி "பிராண நாதா! விநாயகருக்குப் பூசை செய்யும் மலர்கள், தழைகளை எல்லாவற்றையும் விட வன்னித் தழைக்கு மட்டும் பெருமை ஏற்படவும் பிள்ளையாருக்குப் பிரியம் ஏற்படவும் காரணம் என்ன?" என்று கேட்டனர். உடனே சிவபெருமான் பார்வதிக்கு ஒரு கதையைக் கூறலானார்.

''முன்பு ஒரு காலத்தில் பூவுலகத்தைப் பிரியவிரதன் என்ற மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் ஒரு வள்ளல். நீதிநெறி தவறாதவன். அவனுக்கு கீர்த்தி என்றும் பிரபை என்றும் இரண்டு மனைவியர்கள் இருந்தனர். அவர்கள் இருவரில் இளையவளான பிரபை என்பவளிடத்தில் தான் பிரியவிரதன் அன்பு கொண்டு அவள் மீது அளவிலாத பற்றும பாசமும் கொண்டு வாழ்ந்து வந்தான். அவனது முதல் மனைவியான கீர்த்தி அதனால் சிறிதும் மனம் துவளாமல் தன் கணவனுக்குரிய பணிவிடைகளைச் செய்து கொண்டு கற்பு நிலை தவறாமல் வாழ்ந்து வந்தாள்.

இந் நிலையில் இளையாளான பிரபைக்கு அழகிய ஆண் மகன் பிறந்தான். அவனுக்குப் பத்மநாபன் என்று பெயர் சூட்டி வளர்த்தனர். அவன் வாலிபப் பருவம் அடைந்ததும் பாஞ்சால தேசத்தரசனின் மகளை மணம் செய்து கொண்டான். இதனால் இளையவளான பிரபை

மிகவும் கர்வம் கொண்டாள். மூத்த சக்களத்தியான கீர்த்தியைக் கொஞ்சமும் மதிக்காமல் ஒரு புழுவுக்குச் சமமாக அவளைக் கருதி அலட்சியப்படுத்தி வந்தாள். கற்புநிலை தவறாத கீர்த்தி அத்தனைக் கொடுமைகளையும் சகித்துக் கொண்டு தன் கணவன் மனங்கோணாமல் நடந்து வந்தாள்.

ஒரு நாள் பிரியவிரதன் தன் இளைய மனைவி பிரபையுடன் இன்புற்றிருந்தான். அச்சமயத்தில் தன் கணவனுக்குப் பணிவிடை செய்ய கீர்த்தி அங்குச் சென்றாள். அவளைக் கண்டதும் இளையவளான பிரபை மிகவும் கோபங்கொண்டு தன் கணவன் அணைப்பிலிருந்து விடுபட்டுத் துள்ளிக் குதித்து "இங்கே உன்னை யார் வரச் சொன்னது?" என்று கோபித்து கீர்த்தியைத் தனது காலரல் எட்டியுதைத்தாள். இதைத் தன் கண்களால் கண்ட பிரியவிரதனும் கண்டும் காணாதவனைப் போல இருந்துவிட்டான்.

இதனால் கீர்த்தியின் மனம் மிகவும் வேதனையடைந்தது. தன்னை எட்டி உதைத்ததைக் கண்ட பிறகும் தன் கணவன் அதைப் பற்றி விசாரிக்காமல் இருந்துவிட்டதை நினைத்த அவள் உள்ளம் வருந்தியது இத்தகைய கேவலமான நிலையில் உயிர் வாழ்வதைவிட உடலை வதைத்தோ நஞ்சு உண்டோ குளத்தில் விழுந்தோ மலையிலிருந்தோ தன் உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்த கீர்த்தி அரண்மனையை விட்டு வெளியேறி கண்ணீர் பெருக மனம் போன போக்கில் ஒரு காட்டு வழியே சென்று கொண்டிருந்தாள்.

அந்தக் காட்டிலே நடந்து கொண்டிருந்த அவளை நோக்கி புரோகிதன் ஒருவன் யாசகம் கேட்க வந்தான். அவள் படுகின்ற மனவேதனையை அறிந்து கொண்ட அவன் அவளுக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றிவிசாரித்து

விட்டு "மகாராணி! உனது துன்பங்களையெல்லாம் மறந்து பிள்ளையாரை பூசித்துவந்தால் அவரது திருவருளால் நீ எல்லாவிதமான சௌபாக்கியங்களையும் விரைவில் அடைந்துவிடுவாய். இளையாளின் மோகத்தில் இருக்கும் உன் கணவன் உன்னையே நாடி உன்னிடத்திலேயே வசப்பட்டு இருப்பான்!'' என்று கூறி பிள்ளையாரைப் பூசித்து வழிபடும் முறைகளை அவளிடம் கூறிவிட்டுச் சென்றான். புரோகிதன் கூறியவாறே கீர்த்தியும் அந்தக் காட்டில் ஒரு மந்தார மரத்து நிழலில் வீற்றிருந்த விநாயக ரைத் தனது தோழியர்கள் கொண்டுவந்து கொடுக்கும் அறுகு, திருமஞ்சனம் முதலியவற்றால் முறைப்படி பூசித்து வந்தாள்.

ஒருநாள் எங்கு தேடியும் பிள்ளையார் பூசைக்குத் தேவையான அறுகம்புற்கள் எங்குமே கிடைக்காத தால் அவளது தோழிகள் எதிரிலிருந்த ஒரு வன்னி மரத்தின் இலைகளைப் பறித்துக் கொண்டுசென்று ''மகாராணி! இன்று எங்கு தேடியும் அறுகம்புற்கள் கிடைக்கவில்லை. அதனால் பூசை நின்றுவிடக் கூடாதே என்பதால் வன்னி இலைகளைப் பறித்துக்கொண்டு வந்திருக்கிறோம். இது அர்ச்சனைக்கு உரியதா என்பது எங்களுக்குத் தெரியாது. இருந்தாலும் இந்த இலைகளைக் கொண்டே இன்றைய பூசையைக் குறைவின்றி முடித்து விடவேண்டும் என்றார்கள்.

கீர்த்தியும் அவர்கள் கூறியவாறே வன்னித் தழை களால் விநாயகரைப் பூசித்தாள். என்றாலும் அறுகம்புற் களால் பிள்ளையாரை பூசிக்க முடியவில்லையே என்ற கவலையால் அன்று முழுவதும் இரவிலும் அன்ன ஆகாரம் இன்றி பட்டினி கிடந்தாள். மறுநாள் அதிகாலையில் கீர்த்தியின் கனவில் பிள்ளையார் தோன்றி "பெண்ணே! அறும்புல் கிடைக்கவில்லை என்பதால் வன்னி இலை

களைக்கொண்டு நீ தூய்மையான பக்தியுடன் என்னை அர்ச்சனை செய்ததை நான் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டுவிட்டேன். நீ அர்ச்சித்த அந்த வன்னி இலைகள் இப்போது இருக்குமிடத்தைப் பார்!" என்று தரிசனம் அளித்தார்.

அவருடைய திருமுடி மீது அவள் அர்ச்சித்த வன்னி இலைகள் எல்லாம் இருப்பதைக் கண்ட கீர்த்தியின் விழி களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அவளது மனக் கவலையை உணர்ந்த பிள்ளையார் அவளை அன்புடன் நோக்கி "பெண்ணே! உன் கணவன் இன்று முதல் உன்னிடத்தில் மிகவும் பிரியமாக இருப்பான். பொறாமையும் பேராசையும் பிடித்த உனது சக்களத்திக்கு தீராத நோய்கள் வந்து பிடித்துக்கொள்ளும். இன்னும் ஓராண்டு காலத்திற்குள் உனக்கும் ஒரு மகன் பிறப்பான். அவனுக்கு திப்பிரப்பிரசாதன் என்று பெயரிட்டு வளர்த்து வருவாயாக! அவனது நான்காவது வயதில் உன் சக்களத்தி அவனுக்கு விஷமிட்டு கொன்றுவிட முயல் வாள். என்றாலும் கிரிச்சமத முனிவர் உதவியால் உன் மகன் நஞ்சு நீங்கி உயிர் பிழைத்து சுகமடைவான்" என்று கூறி மறைந்தார்.

கனவில் விநாயகர் கூறிய யாவும் நடைமுறையில் நிகழலாயின. கீர்த்தி நாள் தவறாமல் பிள்ளையார் பூசை யைச் செய்து வந்தாள். அதன் பலனாக இளையாளான பிரபைக்குப் பலவிதமான நோய்கள் தோன்றின. அதனால் பிரபை தனது அழகை இழந்தாள். அதே சமயம் இடை விடாமல் பிள்ளையார் பூசை செய்துவந்த கீர்த்தி புதுமை யான முகப்பொலிவுடன் உடல் பூரிப்பும் பெற்று பேரழகி யாக மினுமினுத்தாள்.

எனவே அழகு ரசிகனாகிய பிரியவிரதன் நோயினால் உருக்குலைந்துத பிரபை மீது வெறுப்படைந்து மூத்தா

ளாகிய கீர்த்தியிடம் காதல் மிகவும் கொண்டு அவளுடன் கூடி மகிழ்ந்து வந்தான். அதன் பயனாக கீர்த்திக்கு ஆண் குழந்தை பிறந்தது அவனுக்கு திப்பிரப்பிரசாதன் என்ற பெயரிட்டு அன்புடன் அவனை வளர்த்து வந்தனர். அவனுக்கு நான்கு வயதாகும்போது ஒருநாள் யாருக்கும் தெரியாமல் அவன் உண்ணும் உணவில் கொடிய நஞ்சை மாற்றாந் தாயான பிரபை கலந்து விட்டாள். அதைச் சாப்பிட்ட அரசகுமாரன் விஷம் தலைக்கேற மயங்கிவிழுந்தான் அரசன் அரண்மனை வைத்தியர்களையெல்லாம் அழைத்து வந்து சிகிச்சை செய்தான். எந்தப் பயனும் ஏற்படவில்லை.

அப்போது கீர்த்திக்கு தான் கண்ட கனவின் நினைவு வந்தது. எனவே தன் மகனைப் பிழைக்கவைக்க கிருச்சமத முனிவரிடம் சென்றால்தான் முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அரசகுமாரனை வாரியெடுத்துக் கொண்டு அந்த முனிவரின் ஆசிரமத்துக்கு விரைந்து சென்றாள். செல்லும் வழியிலேயே அரசிளங்குமரனின் ஆவி பிரிந்தது. உயிரற்ற சடலத்தை முனிவர் முன்பு கொண்டு சென்ற கீர்த்தி நடந்தவற்றைக் கூறி புலம்பினாள். அழுதாள். முனிவர் அவளை நோக்கி "பெண்ணே! கவலைப்படாதே! முன்பு ஒரு சமயம் நீ பிள்ளையார் பெருமானை வன்னித் தழையால் பூசித்தாயல்லவா! அந்தப் பூசையின் பலனை உன் புத்திரன் கையிலே தத்தம் செய்துவிடு" என்றார்.

கீர்த்தியும் அந்தப் பலனைத் தன் மைந்தனுக்குத் தத்தம் செய்தவுடனேயே தூக்கத்திலிருந்து கண்விழித்து எழுந்திருப்பவனைப் போல அரசகுமாரன் உயிர்பெற்று எழுந்து முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

அப்போது கீர்த்தி, முனிவரை நோக்கி "சுவாமி அறுகம்புல் கிடைக்காத காரணத்தால் ஒரு நாள் நான் வன்னி இலைகளைக் கொண்டு பிள்ளையாரை பூசித்தேன்.

அதன் மகிமையினால்தான் நஞ்சுண்டு இறந்த என் மகன் பிழைத்துவிட்டான். அந்த வன்னியின் மகிமையைத் தாங்கள் தயவு செய்து எனக்குக் கூறவேண்டும்" என்று வேண்டினாள்.

அதற்கு அம் முனிவர் "பெண்ணே! வன்னியிலையின் பெருமையை அளவிட்டுச் சொல்ல என்னால் இயலாது. அதன் மகிமையை நாரதர் தேவேந்திரனுக்கு உபதேசித்தார். அதனை இப்போது நான் உனக்குச் சொல்லுகிறேன் கேட்பாயாக" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தார்.

## நான்முகனின் வேள்வியும் சாவித்திரியின் சாபமும்

ஒரு சமயம் பிரம்மதேவர், சிவபெருமானைக் குறித்து பொதியமலைச்சாரலில் யாகம் ஒன்றைச் செய்ய விரும்பினார். அந்த யாகத்திற்கு அவர் தமது மனைவியர் இருவரில் சாவித்திரியாகிய சரஸ்வதியை மட்டும் தமது இல்லத்தில் இருக்க வைத்துவிட்டு மற்றொரு மனைவியான காயத்திரி தேவியை மட்டும் தன்னுடன் அழைத்துச் சென்றார். அதோடு யாகம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன் பிள்ளையாரை நினைத்து வழிபட மறந்து தேவர்கள் பலருடன் பொதியமலைக்குச் சென்று யாகத்தைத் தொடங்கி விட்டார்.

இதனையறிந்த சரஸ்வதிக்கு கோபம் பொங்கியது. உடனே அவள் யாகசாலைக்கு விரைந்து சென்று அங்கு கூடியிருந்த தேவர்களை நோக்கி "என்னை ஒதுக்கி விட்டு என் கணவர் செய்யும் வேள்விக்கு நீங்கள் அனைவரும் சம்மதித்து வந்திருக்கிறீர்களே! நீங்கள் எல்லோரும் இந்த கணத்திலேயே தண்ணீர் வடிவாக மாறக்கடவீர்கள்!"

என்று சாபமிட்டாள். உடனே மகாவிஷ்ணு முதலிய சகல தேவர்களும் நீர் வடிவமாக மாறினார்கள். அந்த நீரெல்லாம் பெருவெள்ளமாகப் பெருக்கெடுத்து யாகசாலை முழுவதையும் வெள்ளக்காடாக்கியது. இதனால் தேவர்களின் மனைவியர்கள் எல்லாம், பிரம்மதேவனை இழித்தும் பழித்தும் பேசி, "உங்கள் மனைவியின் சாபத்தால் நீர் வடிவம் பெற்ற தங்கள் கணவர்கள் பழைய உருவமடைவதற்கு என்ன வழி சொல்லுவீர்கள்!" என்று ஆத்திரத்துடன் கேட்டார்கள்.

பிரும்மதேவன் அவர்களை சமாதானப்படுத்தி விட்டு, அதிவிரைவில் அவர்களுடைய மனக் கவலையை நீக்குவதாகக் கூறிவிட்டு சிவபெருமானைக் குறித்து தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன்பு தோன்றி "பிரும்ம தேவா! சகலத்திற்கும் அதிகாரமாக விளங்கும் பிள்ளையாரை நீர் முதலில் தியானம் செய்யாமல் இந்த யாகத்தை ஆரம்பம் செய்ததால்தான் இத்தகைய இடையூறுகள் அனைத்தும் ஏற்பட்டுள்ளன. ஆகையால் இனியாவது பிள்ளையாரின் கோபம் தணியும் வகையில் பக்தி சிரத்தையுடன் பிள்ளையார் பூஜை செய்தால் உமது மனக்குறைகள் நீங்கும்!'' என்று கூறி மறைந்தார்.

அதைக்கேட்டு மனமகிழ்ந்த பிரம்மதேவர் மற்ற தேவர்கள் அனைவருடனும் சேர்ந்து கர்நாடக தேசத்தில் மந்தார மரத்தடியில் மகாவிஷ்ணுவினால் பூசிக்கப்பெற்ற வக்கிரதுண்ட விநாயகரைப் பூசிக்கலானார்கள். நீண்ட காலம் அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை, மந்திர செபம், வேதாகமப் பிரார்த்தனை ஆகியவற்றையெல்லாம் செய்து வழிபட்டு வந்தனர். அப்போது ஒருநாள் வானத்திலிருந்து அசரீரி வாக்கு ஒன்று "நீங்கள் விநாயக மூர்த்தியை வன்னி இலையால் பூசியுங்கள்!" என்று முழங்கியது. அவ்வாறே தேவர்கள் பூசிக்க, விநாயகர் அவர்கள் முன்பு

தோன்றி தண்ணீர் வடிவமாக இருந்த தேவர்கள் அனைவரையும் தங்களுடைய சுய உருவமையச் செய்து மறைந்தார்.

தேவர்கள் அனைவருமாக சேர்ந்து தேவலோகம் சென்று அங்கேயும் ஒரு மந்தார மரநிழலில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து பக்தி சிரத்தையுடன் பூசித்து வரலாயினர். பிரும்மதேவனும் வன்னி இலைகளால் விநாயகரைப் பன்னிரண்டு ஆண்டுகள் பூசித்ததால் சாவித்திரியின் மனக் குறையை நீக்கி முன் தொடங்கிய வேள்வியையும் செய்து முடித்தார்.

பின்னர் கீர்த்தி முனிவரை வணங்கி தன் மகனுக்கு விநாயகரின் மந்திரத்தை உபதேசித்து பூசிக்கும் முறைகளையும் சொல்லும்படி வேண்டினாள்.

கிருச்சமதமுனிவர் கீர்த்தியின் மகனுக்கு காசியிலுள்ள துண்டி விநாயகரின் சந்நிதியில் விநாயகரின் நான்கெழுத்து மந்திரத்தைச் செபித்து பூசிக்கும்படி கூறினார். அதைக் கேட்ட கீர்த்தி முனிவரை நோக்கி "சுவாமீ! உலகத்திலுள்ள தலங்கள் எல்லாவற்றையும்விட காசியானது எவ்வகையில் முக்கியமானது என்று கேட்டாள்.

உலகம் எங்கும் ஏராளமாக அமைந்துள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையினின்றும் அமைந்துள்ள புண்ணிய பலன்களையெல்லாம் ஒரே மூர்த்தியாகவும் ஒரே தலமாகவும் ஒரே தீர்த்தமாகவும் காசி நகரில் குடிகொண்ட சிவபெருமான் வழங்குகிறார். மகாவிஷ்ணுவானவர் விசுவநாதரை பூசித்து வந்தார். அப்படி பூசிக்கும்போது கடவுளின் அபிஷேகத்துக்காகத் தண்ணீர்கொண்டு வருவதற்காக பாதாளம் வரையில் ஆழம் ஏற்படும்படியான குளத்தைத் தோண்டினார். அந்தத் தடாகத் தண்ணீரினால்

~~தண்ணீரினால்~~ அபிஷேகம் செய்து அருந்தவம் செய்தார். அவரது பக்திக்கு மெச்சிய சிவபெருமான் விசாலாட்சி தேவியுடன் காட்சியளித்தார். திருமால் வேதாகமங்களால் வணங்கியதை காசி விசுவநாதர் தமது திருமுடியை அசைத்து ஆமோதித்தார். அப்போது அவரது குண்டலத்திலிருந்த ஒரு மணியானது சிதறி தடாகத்தில் விழுந்தது. அதனால் அதற்கு மணிகர்ணிகை என்ற பெயர் உண்டாயிற்று.

அத்தகைய காசி விசுவநாதருக்கு ஒப்பான மூர்த்தியும் மணிகர்ணித்கைக்கு ஒப்பான தீர்த்தமும் காசிக்கு ஒப்பான திருத்தலமும் மூவுலகங்களிலும் இல்லை. அந்தக் காசி விசுவநாதர் சந்நிதியில் எழுத்தருளியிருக்கும் துண்டி விநாயகரை இவர்கள் அனைவரும் வன்னி, அறுகு, மந்தாரை முதலியவற்றைக் கொண்டு பூசித்து பெறற்கரிய வரங்களையெல்லாம் பெற்றிருக்கிறார்கள்". இவ்வாறு முனிவர் கூறியதும் கீர்த்தியும் அரசகுமாரனும் முனிவரின ஆசிகளைப்பெற்று காசிக்குச் சென்று மணிகர்ணிகையில் நீராடி துண்டி விநாயகரைப் பணிந்து அன்றிரவு முழுவதும் பட்டினி கிடந்து கண் விழித்தார்கள். இவ்வாறுமாசி மாதம் அமரபட்ச சதுர்த்தி வரும் வரையில் காசியிலேயே தங்கியிருந்து அந்தச் சதுர்த்தி தினத்தில் அதிகாலையில் நீராடி நாலெழுத்து மந்திரத்தை வன்னி மரத்தினடியில் அமர்ந்து செபித்தார்கள். வெண்ணிலா உதித்ததும் வன்னி, அறுகு, மந்தாரை முதலியவற்றால் அர்ச்சனை செய்தார்கள்.

அதைக் கண்டு மகிழ்ந்த துண்டி விநாயகர் காட்சியளித்து "கீர்த்தியே! உன் மகன் ஆயிரம் ஆண்டுகள் சகல சௌபாக்கியங்களுடன் வாழ்ந்திருந்து ஆயிரம் வேள்விகளைச் செய்து புகழ் அடைவான் என்று ~~என்று~~ கூறி விட்டு மறைந்தார்.

பிறகு கீர்த்தியும் அரசகுமாரனும் தங்கள் தலைநக ருக்குத் திரும்பினர் பருவ வயதையடைந்ததும் பிரியவிர தன் அரசகுமாரனுக்கு முடிசூட்டி விட்டு வனத்துக்குச் சென்று விட்டான் நீண்ட காலம் ஆட்சி செய்த துப்பிரப் பிரசாதன் ஆயிரம் வேள்விகளைச் செய்து முடிவில் விநா யகரின் திருவருளைப் பெற்று பேரின்ப நிலையடைந்தான். இவ்வாறு பிரும்ம தேவன் சங்கட சதுர்த்தியின் விரத மகி மைகளையெல்லாம் தெளிவாக எடுத்துரைத்ததைக் கேட்ட பிதுர்த்தேவன் சதுர்த்தி விரதத்தை முடித்த பிறகு நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் கூற வேண்டும்'' என்று வேண்டினான்.

பிரும்ம தேவன் கூறலானார்: "பிதுர்த்தேவனே! சதுர்த்தி விரதத்தை ஆரம்பித்த மாதத்திலாவது ஐந்தா வது அல்லது ஏழாவது மாதத்திலாவது வரக் கூடிய சதுர்த்தியில் முன்பே போல கலசம் அமைத்து அதன் மீது யந்திரம் அமைத்து சித்தி புத்திகளோடு கூடிய பொன்னா லான கணேசமூர்த்தியைச் செய்து வைத்து முறைப்படி பூசித்து ஐயாயிரம் பத்தாயிரம் நூற்றியெட்டு எண்ணிக் கையில் அவரவராக இயன்றளவு ஆகுதி கொடுத்து குறுவை எண்ணத் தானம் செய்ய வேண்டும்! பொருள் படைத்தவர்கள் பசு பொருள் தானம் செய்யலாம். இருபத் தொரு அந்தணர்களுக்கு உணவளித்த பிறகுதான் மீத முள்ள உணவை விநாயகரைத் தியானித்து அருந்த வேண் டும். கடைசியாக அந்த யந்திரம், திருவுருவம் ஆகிய வற்றை ஆசிரியருக்குத் தானம் செய்ய வேண்டும். இந்த விரதத்தை உமாதேவி அனுசரித்து வந்ததால் தான் சிவ பெருமானின் இடது பாகத்தை அடைந்தாள். இதை அனுசரித்த தமயந்தி நளமகாராசனைத் திரும்ப அடைந் தாள். கிருஷ்ணபரமாத்மா இதை அனுசரித்ததால் தான் பாணசுரனை வென்றார் என்று பிரும்ம தேவர் கூறினார். இத்தகைய சங்கடசதுர்த்தி விரத மகிமைகளை ஒரு நூலாக

எழுதிய பிதுர்த்தேவன் அதனை கானகத்தில் தவம் செய்து வந்த கிருதவீரிய மன்னனின் கனவில் தோன்றி புத்தகத்தை மன்னனிடம் கொடுத்து இந்தப் புத்தகத்திலுள்ள விரதத்தை அனுஷ்டித்தால் உனக்கும் புத்திரபாக்கியம் என்று கூறிவிட்டு தன்னுலகம் அடைந்தான்.

கிருதவீரியன் மாசி மாத கிருஷ்ணபட்சத்து அங்காரக சதுர்த்தி தினத்தன்று உதயகாலத்தில் கண்விழித்து நீராடி விபூதி ருத்திராட்சம் அணிந்து சிற்ப விதிப்படி தூயமண்ணினால் பிள்ளையார் உருவம் அமைத்து ஓரிடத்தில் வைத்து முறைப்படி சங்கல்பம் கூறி விநாயக சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்கலானான்.

இவ்வாறு கிருதவீரியன் அனுஷ்டித்த சதுர்த்தி விரதம் முடிந்தது. தானதர்மங்களைச் செய்து வந்த பின்னர் அந்த விரதத்தின் மகிமையால் கிருதவீரியனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் மிகவும் அழகாகப் பிறந்த அந்தக் குழந்தைக்கு கைகளும் கால்களும் இல்லாமல் ஊனமடைந்திருந்தன. அதைக் கண்ட அரச தம்பதிகள் மிகவும் மனம் வருந்தினர். என்றாலும் பிள்ளையாரின் திருவருளால் அந்த அங்கஹீனத்தை நீக்க முடியும் என்ற நம்பிக்கையோடு பிறந்த குழந்தைக்கு 'கார்த்த விரியன்' என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தன. அப்போது தத்தாத்ரேய முனிவர் என்ற ஞானியார் ஒருவர் அரண்மனைக்கு வந்தார். வந்தவர் அரசனுடைய அங்கஹீனமான புதல்வனைப் பார்த்து அவன் உடல் குறைபாடுகள் நீங்குவதற்காக விநாயகரின் மந்திரத்தை உபதேசித்து விட்டுச் சென்றார். கை கால்களற்ற கார்த்தவீரியன் தன் தந்தையிடத்தில் அனுமதி பெற்று தன்னைத் தூக்கிக் கொண்டு போய் கானகத்தில் வைக்கும்படி செய்து அங்கு

அன்ன பானமின்றி விநாயகரைக் குறித்து தவம் செய்து வந்தான் விநாயகர் அவன் முன்பு தோன்றி அவனுக்கு இரண்டு கால்களையும் ஆயிரம் கைகளையும் வழங்கிவிட்டு மறைந்தார். விநாயகருடன் வந்த தேவர்கள் கார்த்த வீரியனை நோக்கி "தவசீலனே! நீ கற்பகாலம் வரையில் வாழும் ஆயுளைப் பெற்று அனைவருக்கும் நன்மைகளையே செய்து பகைவர்கள் மீது ஐந்நூறு பாணங்களை ஒரே சமயத்தில் எய்யும் ஆற்றலுடன் சிறப்பாக வாழ்வாயாக!" என்று வாழ்த்தி வரமளித்துச் சென்றனர்.

கார்த்த வீரியன் முத்துக்களாலும் பவளத்தாலும் பொன்னாலும் மணியாலும் அமைந்த ஒரு திருக்கோயிலைக் கட்டி அங்கு விநாயகரை பிரதிஷ்டை செய்து 'பிரவாள விநாயகர்' என்று பெயரிட்டு சிறப்பாக வழிபட்டு வந்தான.

இவ்வாறு சொல்லி வந்த தேவேந்திரன் சூரசேன மகாராசனை நோக்கி "சூரசேனா! என் விமானம் இப்போது தோஷத்தின் காரணமாகவே கீழே இறங்கிவிட்டது. சங்கட சதுர்த்தி விரதம் செய்தவர்கள் யாராவது ஒருவர் அவ்விரதத்தின் ஒரு நாள் பலனை மட்டும் என் கையில் தத்தம் செய்து கொடுத்தால் போதும்! இந்த விமானம் மண்ணைவிட்டு விண்ணில் பறந்து செல்லும்!" என்றான்.

சூரசேன மன்னன் மண்ணில் இறங்கிய இந்திரனின் விமானத்தை எப்படியாவது விண்ணிற்கு எழும்பச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து தனது தூதுவர்களை அழைத்து "நீங்கள் நமது நகரம் முழுதும் தேடியலைந்து சங்கட சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று விசாரித்து அவர்களை விரைவில் அழைத்து வருக!" என்று கட்டளையிட்டான்.

தூதுவர்கள் வீடுவீடாக விசாரித்துச் செல்லும் போது மற்றொரு தெய்வ விமானம் ஆகாயத்திலிருந்து பூமியில்

இறங்கியதைக் கண்டு அது என்ன அதிசயம் என்று பார்க்க அதனருகே சென்றனர்.

அந்த விமானத்திலிருந்த தேவகணங்கள் அந் நகரப் புறச் சேரியிலுள்ள புலைச்சிக்கு தெய்வ வடிவம் கொடுத்து அவளைத் தங்கள் விமானத்தில் ஏற்றிச் செல்ல முயன்றார்கள். அதைக்கண்ட தூதுவர்கள் "தேவர்களே! இந்தப் பெண், பிறவியிலே புலைச்சியாக இருந்தவள். சிறிதேனும் தர்மம் செய்யாதவள். சென்ற பிறவியில் அவள் ஏதேனும் புண்ணியம் செய்திருக்கலாம். அருந்தவம் செய்பவர்களுக் கெல்லாம் கிடைப்பதற்கரிய இந்த பாக்கியம் இவளுக்கு எப்படி ஏற்பட்டது!" என்று கேட்டனர். அதற்கு அந்தத் தேவகணங்கள் கூறலாயினர்.

"வங்காள தேசத்தில் சித்திரன் என்ற அரசன் அந் நாட்டிலிருந்த சாரங்கதரன் என்ற பெருந்தலைவரின் மகளான சுந்தரி என்ற பேரழகியை மணந்து கொண்டான். அவளது பேரழகைக் கண்டவர்கள் ஐம்புலன்களையடக்கிய முனிவர்களாயினும் தேவர்களாயினும் அவளது கட்டழகில் மயங்கி காம வயப்பட்டு விடுவார்கள். அவளும் அதற்கு உடன்படுவாள். அக்கினிசாட்சியாக அவளை மணப்புரிந்த அரசன் சித்திரனே தன் மனைவியின் நடத்தையைக்கண்டு கோபங்கொண்டு "ஒழுக்கங்கெட்டு என் குலத்தைக் கெடுக்கவா எனக்கு மனைவியாக வந்து வாய்த்தாய்! இனி அன்னிய ஆடவருடன் நீ வெளியே சென்றால் உன் தோலை உரித்து உன் சதைகளையெல்லாம் பிய்த்துப் பிய்த்து கழுகுகளுக்குத் தீனியாகப் போட்டுவிடுவேன்" என்று கடிந்து அவளை காவலில் வைத்தான்.

சுந்தரி அவனது பயமுறுத்தலுக்கு மசியவில்லை. எப்படியோ அவள் தன் கணவனை மயக்கி தனது இன்ப வாழ்வுக்குத் தடைவிதித்த தன் கணவனையே ஒரு நாள்

இரவு நயவஞ்சகமாகக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு அரண்மனையைவிட்டு ஓடி முறையற்ற வாழ்வைத் தொடர்ந்து மேற்கொண்டாள்.

சித்திரனைக் கொலை செய்தவள் அவன் மனைவி சுந்தரியே என்பதைஅறிந்த காவலர்கள் அவளைத் தேடிப் பிடித்து கட்டி இழுத்துச் சென்று அரச தண்டனையின்படி அவள் தலையைச் சீவிக் கொன்றுவிட்டார்கள்.

உயிரிழந்த சுந்தரி அளவற்ற காலம் நரக வேதனைகளை அனுபவித்த பிறகு அவள் இந்த நகரத்திலுள்ள இந்தப் புறச்சேரியில் சண்டாளப் பெண்ணாக வந்து பிறந்தாள். அரச குமரியாக பிறந்த முற்பிறவி முழுவதும் பாவத்தையே செய்து வந்த இவள் இந்தப் பிறவியிலும் எந்தவொரு புண்ணியத்தையும் செய்வதில்லை. ஒரு நாள் அதிகாலையில் இவள் கள்ளைக் குடித்து மயக்கம் தலைக்கேற பகல் முழுதும் படுத்துக் கிடந்துவிட்டு மயக்கம் நீங்கியதும் பசியதிகமானதால் ஆகாரம் தேடி ஒரு வீட்டின் அருகே சென்றாள்.

அன்று பிள்ளையாருக்குரிய சங்கட சதுர்த்தி தினமாகையால் அந்த விரதத்தை அனுஷ்டித்த அந்த வீட்டிலிருந்தவர்கள் விநாயகருக்கு நிவேதனம் செய்து பார்த்தார்கள். தாமும் புசித்து மீதமானதை தெருவில் கொண்டு வந்து கொட்டினார்கள். உடனே இந்தப் புலைச்சி அவற்றைப் பசியாறத் தின்றாள். வீட்டிலுள்ளவர்கள் கணபதி, கணபதி என்ற பக்திப் பாடலைப் பாட, இவளும் கணபதி, கணபதி என்று முணுமுணுத்தாள். சதுர்த்தியன்று தமது திருநாமத்தை உச்சரித்தாள் என்பதால் மகிழ்ச்சியடைந்த பிள்ளையார் இவளை தெய்வீக விமானத்தில் ஏற்றித் தம்மிடம் அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவ்வாறே நாங்களும் வந்தோம். இவளுக்கு தெய்வ

சரீரம் கொடுத்து விமானத்தில் ஏற்றிக் கொண்டோம்!" என்றார்கள்.

அதைக் கேட்ட தூதுவர்கள் அவர்களை நோக்கி "தேவ கணங்களே! இந்த ஊருக்கு வெளியே தேவேந்திரனின் விமானம் ஒரு நோயாளியின் பார்வைபட்ட தோஷத்தினால் கீழே இறங்கி எழும்ப முடியாமல் இருக்கிறது. அந்த விமானம் மீண்டும் எழும்பும் படியாக நீங்கள் காட்சியளித்தருள வேண்டும்!" என்றனர்.

அதற்கு அவர்கள் "நாங்கள் கணேசப் பெருமானின் கட்டளையை மீறி நடந்து கொள்ள மாட்டோம்!" என்று கூறிவிட்டு தங்கள் விமானத்தை கிளம்பி ஆகாய மார்க்கமாகச் செலுத்திக் கொண்டு சென்றார்கள். அப்போது அந்த விமானத்தில் சண்டாளப் பெண்ணின் சரீரம் ஒழிந்து அவள் தெய்வ வடிவம் பெற்றிருந்தாள். அவளது பார்வை இந்திரனின் விமானத்தின் மீது பட்டது. அவள் பார்வை பட்ட மகிமையினால் தேவேந்திரனின் விமானமும் வானத்தில் எழும்பிப் பறந்து சென்றது. இந்த அதிசயத்தைக் கண்ட சூரசேன மன்னனும் தூதுவர்களும் பிள்ளையாரின் பெருங்கருணையை நினைத்து மகிழ்ச்சி அடைந்தனர்.

## சூரசேன மன்னனின் முக்தியும் புதனின் கதையும்

பிறகு சூரசேன மகாராசன் சதா காலமும் விநாயகரைப் பூசித்து வந்தான். அவன் தனது குலகுருவான வசிஷ்டரின் ஆசியோடு மாசி மாதம் அமர பட்சத்தில் வரும் அங்காரக சதுர்த்தி விரதத்தை ஆரம்பித்து மாதா

மாதம் வருகிற சதுர்த்திகளில் விநாயகர் பெருமானை வழிபட்டு வந்தான். அதன் பயனாக விநாயகர் அவன் மீது கருணை கொண்டு தேவகணங்கள் அவனை தம்முலகத்திற்கு விமானத்தில் ஏற்றி வரும்படி உத்தரவிட்டார். அவர்கள் விமானத்தைக் கொண்டு சென்று சூரசேன மன்னனை அதில் ஏறிக்கொள்ளும்படி வேண்டினர். அதற்கு அந்த அரசன் "இந் நகரத்திலுள்ள எனதுகுடிமக்கள் அனைவரும் ஒரு கணப்போதும் என்னை விட்டுப் பிரிந்திருக்கச் சம்மதியார்கள் ஆகையால் அவர்களையும் என்னோடு சேர்த்து அழைத்துச் செல்லவேண்டும்!" என்றான். தேவர்கள் அரசனின் வேண்டுகோளை ஏற்று சூரசேன மகாராசனையும் அவனது சுற்றத்தினரையும் மந்திரிபிரதானிகளையும் விமானத்தில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டனர்.

ஆனால் அந்த விமானம் பூமியிலிருந்து கிளம்பாமல் இந்திர விமானத்தைப் போலவே பூமியில் அழுந்திப் போயிற்று. அரசன் அதற்குரிய காரணமறியாமல் விழித்தான். அப்போது விமானிகள் "அரசே! உம்மோடு இந்த விமானத்தில் ஏறிய உமது நகரமக்களில் தொழுநோய் பிடித்த வணிகன் ஒருவனும் இருக்கிறான். அவன் மகாபாவியாகையால் அதனால்தான் விமானம் மேலே எழும்ப முடியாமல் பூமியில் அழுந்தியுள்ளது!" என்றார்கள்.

அதைக் கேட்ட அரசன் "தொழுநோய் கண்ட அந்த வணிகனின் பாவத்தைப் போக்கி அவனையும் புனிதனாக்கி எங்களுடன் அழைத்துப் போக வழி செய்யுங்கள்!" என்றான்,

உடனே அவர்கள் தங்கள் அருட்பார்வையினால் அவன் பாவங்களை நீக்கி அவனுக்கு கணபதி மந்திரத்தை உபதேசித்தனர். அவன் தேவ வடிவம் பெற்றான். உடனே

தேவ விமானம் பூமியிலிருந்து விநாயகரின் உலகத்தை நோக்கிச் சென்றது.

## பரசுராமன் செய்த பயங்கர சபதம்

கார்த்த வீரியன் விநாயகரின் திருவருளால் இரண்டு கால்களையும் ஆயிரம் கைகளையும் ஐந்நூறு பாணங்களையும் பெற்று தனது தலைநகரத்திற்குத் திரும்பினான். பின்னர் அவன் தந்தை கிருதவீரியன் தன் மகனிடம் அரசாட்சியை ஒப்படைத்து விட்டு மறைந்தான்.

கார்த்த வீரியன் ஆட்சி செய்து வருங்காலத்தில் சைய வரைச் சாரலில் ஜமதக்கினி என்ற அந்தண முனிவர் ஒருவர் வசித்து வந்தார். அவர் மனைவியின் பெயர் ரேணுகா. அவள் அழகிலும் கற்பிலும் ஒப்பற்றவள். பிருகு முனிவரின் சாபத்தினால் மகாவிஷ்ணுவே அத் தம்பதிகளுக்குப் புத்திரராகப் பிறந்து பரசுராமர் என்ற பெயரில் வளர்ந்து வாலிபரானசர். பரசுராமர் தமது தாய் தந்தையருக்குப் பணிவிடை செய்வதையே தமது பெரும் பாக்கியமாகக் கருதி வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் பரசுராமர் நைமிசாரண்ய வனத்திற்குச் சென்றிருந்தார். அந்தச் சமயத்தில் கார்த்த வீரிய மன்னன் தன் படைகளுடன் காட்டில் வேட்டையாடி விட்டு தன் படைகளுடன் திரும்பிவரும்போது ஜமதக்கினி முனிவரின் ஆசிரமத்தையடைந்தான். நெடுந்தூரம் காட்டில் வந்த அவனுக்கும் அவனது படைவீரர்களுக்கும் தாகம் அதிகரித்தது. அரசன் படைகளை ஓரிடத்தில் நிறுத்தி விட்டு ஜமதக்கினி முனிவரிடம் சென்று வணங்கினான். அந்தண முனிவரும் அவனை நோக்கி "மன்னனே நீ யார்? இந்த

வனத்திற்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்க மன்னன் தன் படைகளுடன் வேட்டையாடிவிட்டுத் திரும்பும் வழியில் தாகம் மேலிட்டதால் முனிவரை அணுகியதாகக் கூறினான்.

அதைக் கேட்ட அந்தண முனிவர் "மன்னனே! உச்சி வெயில் நேரத்தில் இங்கு வந்த நீ வேட்டையாடி மிகவும் களைத்திருக்கிறாய். எனவே என் ஆசிரமத்திலேயே தங்கி இளைப்பாறி அமுதுண்டு நிதானமாக உனது நகரத்திற்குத் திரும்பலாம்!" என்றார்.

அரசன் முனிவரை நோக்கி "முனிவரே! தாகத்திற்குத் தண்ணீர்தான் கேட்டேன். நீங்கள் அமுதுண்டு தங்கி விட்டுப் போகச் சொல்கிறீர்கள். ஆனால் நான் மட்டும் ஒருவனாக வரவில்லை. ஏராளமான படை வீரர்களும் வந்திருப்பதால் அவர்களனைவருக்கும் தங்களைப் போன்ற தவமுனிவரால் அமுது அளிக்க முடியுமா? அதனால் விடை கொடுத்து அனுப்பினாலே போதும்!" என்றான்.

அதைக் கேட்ட ஜமதக்கினி முனிவர் "மன்னா! உனது படைவீரர்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். அவர்கள் எத்தனை பேராயினும் இங்கு வயிறார அமுதுண்ணலாம். இங்கு சிறிது தொலைவில் கானாறு ஓடுகிறது. நீங்கள் அனைவரும் நதியில் நீராடிவிட்டு இளைப்பாறி இங்கு வர வேண்டும்! அதுவே போதும்!" என்றார்.

கார்த்தவீரியனும் அவனுடைய படைவீரர்களும் கானாற்றுக்கு நீராடச் சென்றனர். ஜமதக்கினி முனிவரும் அவர் மனைவி ரேணுகையும் காமதேவனைத் தியானித்தார்கள். உடனே அவர்கள் முன்பு தோன்றிய அந்தத் தெய்வீகப் பசுவை வணங்கி பூசை செய்து தங்கள் கோரிக்கையைத் தெரிவித்தார்கள்.

உடனே காமதேனுவின் சக்தியால் நவரத்தினங்கள் இழைத்த மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் வான ளாவி எழுந்தன. அறுசுவையோடு உணவுகள் தயாராகி அவற்றைப் பரிமாற பரிசாரகர்களும் தாசிகளும் கூடங்கள் எங்கும் தோன்றினர். பலவகையான பாத்திரங்களும் நிரம்பின. அவற்றைக் கண்ட ஜமதக்கினி முனிவர் அரசனையும் அவனது படைவீரர்களையும் அழைத்து வருமாறு தனது ஆட்களுக்குக் கட்டளையிட்டார். அவர் கள் சென்றனர்.

அரசனும் அவனது வீரர்களும் குளித்துவிட்டு ஆசிர மத்தை நோக்கி வரும்போது மாயாஜாலத்தைப் போல கண் கவரும் நகரத்தையும் வாத்தியங்கள் இசைத்து திருவிழாவைப் போல வீதிகள் எல்லாம் காட்சியளிப்பதை யும் கண்டு வியந்தான். ஆசிரமத்தையடையும் போது நாக்கிலே நீர் ஊறும்படியான சுவையும் மணமும் கூடிய அறுசுவை உணவுகள் கமகமவென்று வாசனை வீசுவதை யும் உணர்ந்து முனிவரை வணங்கினான். பிறகு முனிவரின் விருப்பப்படி அனைவரும் அறுசுவை உணவுகளை வயிறார உண்டு மகிழ்ந்தனர்.

கார்த்த வீரியன் களைப்பு நீங்கியும் திகைப்பு நீங்கா மல் முனிவரை நோக்கி "முனிவரே! இத்தகைய அழகிய நகரமும் அறுசுவை உணவுகளும் ஒரு நொடி பொழுதில் எப்படி உண்டாயின! இதென்ன மாயமா மந்திரமா அல்லது தங்களுடைய தவமகிமையா! இதனைத் தாங்கள் அடியேனுக்கு விளக்கிக் கூற வேண்டும்!'' என்று வேண் டினான்.

ஜமதக்கினி முனிவர் அரசனை நோக்கி "மன்னா! இவை மாயாஜாலத்தால் நிகழ்ந்தவையல்ல. எனது தவ மகிமையினால் காமதேனுவைக் கொண்டு வந்து இந்தக் கைங்கரியத்தைச் செய்தேன்!'' என்றார்.

உடனே அரசனுக்கு எப்படியாயினும் அந்தக் காம தேனுவைக் கைப்பற்றிச் செல்லவேண்டும் என்ற கெட்ட எண்ணம் உண்டாயிற்று. அதனால் அவன் முனிவரை நோக்கி "காட்டில் தவம் புரியும் தங்களுக்கு இந்தக் காம தேனுவால் என்ன பயன்? என்னிடமிருந்தால் எனக்கு மிகவும் பயன்படும். தெய்வீகப் பசுவானது மன்னனாகிய என்னிடத்தில் இருப்பதே நியாயமாகும். ஆகையால் அதை நீங்களாகவே எனக்குக் கொடுத்தருள வேண்டும்!'' என்று கேட்டான். முனிவர் சம்மதிக்கவில்லை. அரசன் கோபம் கொண்டான். அதனால் அவன் முனிவரை நோக்கி "முனிவரே காமதேனுவை நீங்களாகவே எனக்குக் கொடுக்க மறுத்தால் நானாகவே அதனை வன்முறையால் கைப்பற்றிச் செல்வேன்! என்றான். அதற்கு முனிவர் "மன்னாதி மன்னனாக இருக்கும் உனக்கு பிறர்பொருளை அபகரித்துச் செல்லும் எண்ணம் ஏற்பட்டதே தவறல்லவா? நன்றியுணர்வாவது வேண்டாமா? உன்னால் அதைக் கைப்பற்றிச் செல்ல முடியும் என்றால் என்னைக் கேட்கா மலே கைப்பற்றிச் செல்லலாமே! முடியுமானால் கைப் பற்றிச் செல்வாயாக!'' என்றார்.

உடனே அரசன் தனது படை வீரர்களை அழைத்து அந்தக் காமதேனுவைக் கைப்பற்றிச் செல்லும்படி கட்டளையிட்டான். அவர்கள் காமதேனுவைக் கைப் பற்றிப் பிடித்துச் செல்ல முயன்றனர். அது தன் கொம்பு களினாலேயே அவர்களை முட்டித் தள்ளியது. பின்னர் அரசன் தனது படைகளைக் கொண்டுவரச் செய்து அத னைப் பிடிக்கச் சொன்னான். உடனே காமதேனுவின் உடலிலிருந்து பல்லாயிரம் வீரர்கள் தோன்றினர். பெரும் போர் நிகழ்ந்தது. என்ன செய்தும் காமதேனுவைக் கைப் பற்ற முடியவில்லை. அதனால் அவன் அந்த முனிவரை எப்படியாவது கொன்றுவிட எண்ணினான். எனவே தன் படைகளுடன் வஞ்சினத்துடன் கருவிக் கொண்டு தன் தலை

நகரையடைந்தான் காமதேனுவும் தேவலோகம் சென்று விட்டது.

ஒரு நாள் முனிவர் கடுந்தவம் செய்து கொண்டிருந்த சமயத்தில் கார்த்த விரியன் அவரது ஆசிரமத்திற்கு வந்து அவரைத் தன் வாளினால் குத்திக் கொன்று விட்டான். அதைக் கண்ட முனிவரின் மனைவி ரேணுகை பதறித் துடித்து "அடத் துரோகியே! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் மகாபாவியே? தவம் செய்யும் முனிவரைக் கொல்வது தரணியாளும் மன்னனின் நீதியா?" என்று கூறினாள்.

அரசன் அவள் மீதும் கோபம் கொண்டு இருப்பத்தொரு அம்புகளை அவள் மீது எய்தான். அந்தக் கொடிய அம்புகளின் கொடுமையைத் தாங்காமல் ரேணுகை கண்ணீரும் செந்நீரும் பொங்கிவிழ அப்படியே சோர்ந்து சுழன்று தரைமீது மயங்கி விழுந்தாள். ஆயினும் தன் கணவரை தியானம் செய்தபடியே தன் மகன் பரசுராமன் வரும் வரையில் தன் உயிரை தன் உடம்பினுள் பிடித்து வைத்திருந்தாள் அச்சமயம் பரசுராமர் நைமிசாரண்யத்தி லிருந்து வீடு திரும்பினார். ஆசிரமம் எங்கும் அமைதியாக இருந்தது. அங்கு அவன் தந்தை வாளினால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் உயிர் நீங்கிக் கிடப்பதைக் கண்டான். அவன் மனம் பதைபதைத்துத் துடித்தது. சிறிது தூரத்தில் தன் தாயும் அம்புகளால் எய்யப்பட்டு மயங்கித் துவண்டு கிடக்கும் நிலையைக் கண்டு தன் மடிமீது அவள் தலையை வைத்துக் கொண்டு துயரம் தாங்க முடியாமல் அழுதான், கதறினான்.

அவன் குரலைக் கேட்டு மயக்கத்திலிருந்து சிறிது தெளிவு பெற்ற அவன் தாய் கண்ணீருடன் நடந்தவைகளை மகனிடம் கூறிவிட்டு "மகனே நீ வர வேண்டும் என்பதற்காகவே இது வரையில் என் உயிரைத் தாங்கி

இருந்தேன். இப்போது தான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. மகாபாவியான கார்த்தவீரிய மன்னன்தான் உன் தந்தையையும் கொன்று என் உடலிலும் இருபத்தோரு அம்புகளை எய்து விட்டான். அதனால் என் மகனே! அந்தண குலத்தில் பிறந்த நீ அவனுடைய அரசவமிசத்தில் முடி சூடும் மன்னர்களின் மூவேழு தலைமுறையினரையும் அழைத்து அவர்கள் உடல்களைச் சப்த பூமியில் புரளும்படி வீசி எறிந்து வெற்றிக் கொடி நாட்டி அவர்கள் இரத்தத்திலேயே உன் தந்தைக்கு பிதிர்த்தர்ப்பணம் செய்து தத்தாத்ரேய முனிவரைக் கொண்டு ஈமக்கிரியைகளைச் செய்! அது மட்டுமன்று அந்தணர்கள் தர்ப்பைப் புற்களை மட்டும் பிடிக்கும் தவமுனிவர்களல்ல அவர்களும் வீரமுடையவர்கள் தான் என்பதை நிலைநாட்ட வேண்டும். அப்படிச் செய்தால் தான் என் ஆத்மா சாந்தியடையும்!" என்றாள்.

அவளும் இறந்து விட்டாள். அதனால் துக்கமும் துயரமும் தாய் தந்தை இருவரையும் இழந்த இழப்பின் கொடுமையையும் தாங்க முடியாமல் அவன் மிகவும் ஆவேசமாக "என் தாய் தந்தையரைக் கொன்ற மகாபாவியான கார்த்தவீரியனையும் அவன் வமிசத்தையும் மட்டுமின்றி அரசகுலத்தில் பிறந்த அனைவரையுமே கொன்று குவித்து க்ஷத்திரிய குலத்தையே வேரோடு வெட்டி எறிவேன்!" என்று கூறி 'பரசு' என்ற ஆயுதத்தைத் தோள்மீது ஏந்திக் கொண்டு வீர சபதம் செய்தான்.

பிறகு தாய் தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளைச் செய்து வந்தான். ஐந்தாம் நாள் இரவில் அவன் தூங்கும் போது தன் மீது புலி ஒன்று பாய்வதைப் போல ஒரு பயங்கரக் கனவு கண்டு உடல் நடுங்க வாய் குழற 'அம்மா, அம்மா' என்று தன்னையுமறியாமல் கூவியபடி கண் விழித்தான். அவன்

கூக்குரலைக் கேட்டதும் அவனுடைய தாயாகிய ரேணுகை யின் ஆவி மேலுலகம் செல்லாமல் இழுபட்டது. ஈமக் கிரியைகள் முடிவதற்கு முன்னதாகவே தன் மைந்தன் இடையில் கூவியழைத்ததால் அவனிடமே அவள் திரும்பி வரும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் அவள் அழகு ஒளி வீசும் தனது முகத்தை மட்டும் ஆகாய வெளியிலிருந்து அவனுக்குக் காட்டினாள். தேன் மலர்கள் சூடிய கூந்தலும் குங்குமப்பூ மூக்கும் பவழ உதடுகளும் தோன்ற ரேணுகை அவன் எதிரே தன் முகத்தை மட்டுமே காட்சியாக அளித்து நின்றாள். அந்தக் காட்சியைக் கண்ட தத்தாத் ரேய முனிவர் பரசுராமரை நோக்கி "பரசுராமா! உன் தாய் இறந்த பதின்மூன்றாவது தினத்தில் நீ அவளைக் கூப்பி டாமல் அதற்கு நடுவிலேயே அவளைக் கூப்பிட்டு விட்டாய். அதனால் அவள் தன் முகத்தை மட்டும் வானவெளியில் காட்டினாள். ஆனால் குறையொன்றுமில்லை. இனி நடத்த வேண்டிய கிரியைகளையெல்லாம் சிறப்பாக நடத்தி விட்டாயானால் 'உன் தாய் மற்ற அவயங்களும் பூரண மாக வரப்பெற்று இந்தப் பூவுலகத்தில் எல்லோரும் தொழுதற்குரிய தேவதையாகத் திகழ்வாள்!" என்று கூறினார்.

அதைக் கேட்ட பரசுராமர் மற்ற கிரியைகளையும் குறைவில்லாமல் செய்து முடித்தான், அதன் பயனாக அவன் தந்தையான ஜமதக்கினி முனிவர் சத்திய லோகத் தையடைந்தார். அவன் தாய் ரேணுகை தனது முழு வடிவ மும் பெற்று பூவுலகம் எல்லாம் போற்றி வழிபடும் புனித தெய்வமானாள். (அவளே 'சமயபுரம் மாரியம்மனாவாள் )

பின்னர் பரசுராமன் சிவபிரானை வணங்கி விடை பெற்று மாயூரம் என்ற புண்ணிய தலத்தை அடைந்து அங்கு விநாயகரைக் குறித்து கடுந்தவம் செய்து வந்தார். அப்போது விநாயகர் அவர் முன் தோன்றி "அன்பனே!

உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக!" என்றார். உடனே பரசுராமர் அவரை வணங்கி "என் பெற்றோர்களைக் கொன்ற அந்தக் கார்த்த விரியனின் வமிசத்தை மட்டுமின்றி அரச குலத்தினர் அனைவரையுமே அடியோடு ஒழிதது நான் வெற்றி வாகை சூட வேண்டும். அதற்குரிய சக்தியை அடியேனுக்கு கருணை கூர்ந்து அருள் செய்ய வேண்டும்!" என்றான்.

விநாயகரும் மிகவும் சக்தி வாய்ந்த 'பரசு' என்ற ஆயுதத்தை அவனுக்கு அளித்து 'பரசுராமன் என்ற பெயரோடும் புகழோடும் நீ சிரஞ்சீவியாக வாழ்க என்று வரத்தையும் கொடுத்து அருளினார். அதன்பிறகு பரசுராமன் தன் சபதப்படி அரச குலங்களையெல்லாம் அழித்து ஒழித்து அவர்கள் ஆட்சி செய்துவந்த உலகங்களையெல்லாம் மக்களுக்குப் பகிர்ந்தளிதது தன் சபதத்தை நிறைவேற்றி மகிழ்ந்தான். பிறகு அவன் உன்னதமான தவங்களைச் செய்து என்றும் சிரஞ்சீவியாக இந்த உலகத்தில் வழிகாட்டி வருகிறான்.

## இராவணனும் பிள்ளையாரும்

இலங்கையில் மன்னன் இராவணன் இமயமலைக்குச் சென்று கயிலாய நாதரைக் குறித்து கடுந்தவம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவன் எதிரில் தோன்றி "நீ வேண்டும் வரங்களைக் கேள்" என்றார்.

இராவணன் சிவபெருமானை வலம் வந்து வணங்கி "சங்கரரே! உலகங்கள் அனைத்தும் அழிந்து போகும் காலத்திலும் என்னுடைய இலங்காபுரி மட்டுமே எப்போதும் அழியாது நிலைத்திருக்கும்படியான வரத்தைத் தந்தருள வேண்டும்!'' என்று வேண்டினான். சிவபெருமானும்

அவன் விரும்பிய வரமளித்து அவனிடம் ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்து "இராவணா! இந்தச் சிவலிங்கத்தை உன்னுடைய இலங்கையில் வைத்து வழிபட்டு வந்தால் உனது கோரிக்கைகள் நிறைவேறும். ஆனால் இந்தச் சிவலிங்கத்தை உன்னுடன் எடுத்துச் செல்லும் போது வாகனம் எதிலும் ஏறாமல். கால்நடையாகவே செல்லவேண்டும். அவ்வாறு நடந்து செல்லும் போது எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த லிங்கத்தை உன் கையிலிருந்து பூமியில் வைக்கக் கூடாது. மாறாக பூமியில் வைத்துவிட்டால் லிங்கம் மீண்டும் உன் கைக்குக் கிடைக்காது. இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்!" என்றார்.

இராவணன் சிவபெருமான் கூறியவாறே அந்த லிங்கத்தைப் பெற்று பக்தியுடன் கையில் ஏந்தியவாறு காடு, மலை, நாடு, நகரங்களைக் கடந்து கடல் நடுவேயுள்ள தனது இலங்கையை நோக்கி கால் கடுக்க நடந்து சென்று கொண்டிருந்தான். இதையறிந்த தேவேந்திரன் அந்தச் சிவலிங்கத்தை இராவணன் இலங்கைக்குக் கொண்டு சென்று பூசித்து வந்தால் எக்காலத்திலும் அவனையும் அவன் நகரத்தையும் அழிக்கவே இயலாது இதற்கு என்ன செய்வது? என்று யோசித்தான். பிறகு அவன் ஒரு முடிவுக்கு வந்து முப்பத்து முக்கோடி தேவர்களுடன் கைலாய மலைக்குச் சென்று விநாயகப் பெருமானை வணங்கிப் பூசித்து நின்றான். பிள்ளையார் புன்னகை செய்து "இந்திரனே நீ இங்கு என்னை நாடி வந்த காரியம் என்ன?" என்று கேட்டார்.

"இராவணன் தவம் செய்து சிவபெருமானிடத்திலிருந்து ஒரு சிவலிங்கத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டு இலங்கை நோக்கிச் செல்கிறான். அதை வழியில் வைக்காமல் இலங்கையில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தால் அவனுக்கும் அவனது அரசுக்கும் ஒரு போதும்

அழிவே ஏற்படாது. ஆகவே அவன் இலங்கையை அடை வதற்கு முன்னதாக வழியில் ஏதேனும் ஒரு விக்கினம் ஏற்படுத்தி லிங்கத்தைத் தரையில் வைக்கும் படிச் செய்து அவனால் தேவர்குலம் தொல்லை படாதவாறு காப்பாற்ற வேண்டும்!" என்று வேண்டினான்.

விநாயகர் உடனே தண்ணீருக்கு அதிபதியான வருணதேவனை அழைத்து இராவணனின் வயிற்றில் நீரை நிரப்பி ஒரு உபாதையை உண்டாக்கி விடும்படி பணித்தார். அதன்படியே அவனும் இராவணனின் வயிறு முட்டும் அளவுக்கு நீரை நிரப்பிவிட்டான். உடனே பிள்ளையார் ஒரு பிராமணச் சிறுவனைப் போல வேடந் தரித்து இராவணன் எதிரே நடந்து சென்றார்.

இராவணன் இயற்கையின் இடர் நீக்க சிவலிங்கத்தை அந்த சிறுவனிடம் தந்தான். அதற்கு அந்த அந்தணச் சிறுவன் "நானோ சிறு பிள்ளை. என்னால் இந்தச் சிவ லிங்கத்தை அதிக நேரம் என் கையில் வைத்துக் கொண் டிருக்க முடியாது. நீங்கள் கெஞ்சிக் கேட்பதால் இந்த லிங்கத்தை என் கையில் கொஞ்ச நேரம் வைத்துக் கொள் கிறேன். கை வலித்தால் நான் உங்களை மூன்று முறை கூப்பிடுவேன். அதற்குள் நீங்கள் திரும்பி வந்து இதை உங்கள் கையில் வாங்கிக் கொண்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் இதை தரையில் வைத்துவிட்டு என் வழியே நான் போய்விடுவேன்!" என்றான்.

இராவணனும் சம்மதித்தான். அந்தப் பையனின் கையில் சிவலிங்கத்தைக் கொடுத்துவிட்டு ஒதுக்குப்புறம் சென்றான்.

சிறிது நேரம் ஆயிற்று. அந்தணச் சிறுவனான விநா யகர் இராவணனை மூன்று முறைகள் கூப்பிட்டுவிட்டு இராவணன் திரும்பி வருவதற்குள்ளாகவே அந்தச் சிவலிங்

கத்தை பூமியில் வைத்துவிட்டான். இராவணன் விரைந்து ஓடி வந்தான். சிவலிங்கம் தரையில் வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு மனம் பதைபதைத்தான். பிறகு அதைத் தன் கைகளாலும் வலிமை மிகுந்த தனது புஜபல பராக்கிரமத்தாலும் பூமியிலிருந்து கெல்லி எடுக்க முயன் றான். ஆனால் சிவலிங்கத்தை எடுக்க முடியவில்லை. சிவலிங்கத்தின் அடிப்பாகம் பூமியில் அழுந்தி அசைவற்று இருந்தது. பூமியும் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது. அதனால் இராவணன் செய்த முயற்சி கள் பலிக்கவில்லை. அவன் விடாமுயற்சியுடன் தன் பலங்கொண்ட மட்டும் இழுத்தான்.

அப்போது சிவலிங்கம் பசுவின் காதைப் போல குழைந்தது. அந்தக் காரணத்தால் வானோரும் வையகத் தாரும் அந்த இடத்தை கோகர்ணம் என்று வழங்கலா யினர். (கோ என்றால் பசு; கர்ணம் என்றால் காது.) பசுவின் காதைப் போல குழைவுபட்ட சிவலிங்கமாகை யால் அந்தத் தலத்திற்கு கோகர்ணம் என்று வழங்க லாயிற்று. அந்தத் தலம் துளுவ தேசத்தில் அமைந்துள்ளது விநாயக லிங்கம் என்ற பெயரும் உண்டு. இராவணன் மிக்க வலிவுடையவன். அத்தகைய அவன் எவ்வளவு முயன்றும் அந்தச் சிவலிங்கத்தை கையில் எடுக்க முடியா மற் போகவே "அடேயப்பா இது மகாபலம் வாய்ந்ததாக இருக்கிறதே! என்று வியந்தான். அதனால் அந்தச் சிவலிங்கத்துக்கு 'மாபல லிங்கம்' என்ற பெயரும் வழங்க லாயிற்று. அந்த லிங்கத்தை பூமியில் வைத்த அந்தச் சிறுவனின் மீது கோபங்கொண்டு, அவன் தலையில் ஆத்திரத்தோடு குட்டினான்.

பிள்ளையார் புன்னகை செய்து இராவணனுக்கு உயிர்ப் பிச்சையளித்தார். இராவணன் நறுமண மலர் களால் விநாயகரை அர்ச்சனை செய்தான். விநாயகர்

அவனை நோக்கி "இராவணா! என் தலையில் நீ எவ்வாறு குட்டினாயோ அதேபோல் உன் தலையிலேயே உன் கைகளால் இப்போது குட்டிக் கொள்!" என்றார். இராவணனும் அவ்வாறே செய்தான்.

அதைக் கண்ட விநாயகர் "இது போல நம்மைக் கண்டவுடன் யாராவது தலையில் குட்டிக் கொள்வார்களானால் அவர்களின் துயரங்களையெல்லாம் துடைப்போம்!" என்றார். பிறகு இராவணனுக்கு வேண்டிய பல வரங்களை அளித்து மறைந்தார்.

## கணபதி காகமாக மாறிய கதை

முன்பு ஒரு காலத்தில் சிவபெருமானிடம் சூரபதுமன் என்ற அசுரன் ஒருவன் ஏராளமான வரங்களைப் பெற்று சகல உலகங்களையும் ஆட்சி புரிந்து வந்தான். அதனால் இந்திரன் அவனுக்குப் பயந்து தனது மனைவியுடன் பூவுலகை அடைந்து சீர்காழித் தலத்திற்குச் சென்று சிவ பெருமானை அர்ச்சித்து வழிபடுவதற்காக ஒரு நந்த வனத்தை அமைத்தான். அந்த நந்தவனத்திலிருந்து நாள்தோறும் நறுமண மலர்களையும் தளிர்களையும் பறித்து வந்து சிவபெருமானைப் பூசித்து வந்தான்.

அப்போது நாரதமுனிவர் அங்கு வந்தார். தேவேந்திரன் நாரதரை வணங்கி "திரிகால ஞானியே! சூரபதுமனின் ஆட்சிக் கொடுமையினால் என்னுலகத்தைவிட்டு என் மனைவியுடன் மண்ணுலகத்திற்கு வந்து என் மனக் கவலைகள் நீங்குவதற்காக மகேஸ்வரனைப் பூசித்து வருவதற்காக நந்தவனம் ஒன்றை அமைத்தேன். சூரபதுமனின் கட்டளையால் மேகங்கள் மழை பொழிவதில்லை. ஆதலினால் நந்தவனத்திற்குத் தண்ணீர் பாய்

வதற்கு ஓர் உபாயத்தை நீங்கள்தான் செய்தளுரு வேண்டும்!" என்று வேண்டினான்.

அதற்கு நாரதர் "இந்திரா! முன்பு ஒரு சமயம் சிவபெருமான் காவிரி நதியை அகத்திய முனிவருக்கு வழங்கியிருக்கிறார். அகத்தியர் அந்த நதியைத் தமது கமண்டலத்திற்குள்ளே அடக்கிக்கொண்டு சையவரைச் சாரலில் தங்கியிருக்கிறார். அந்த நதி அவரது கமண்டலத்திலிருந்து தரையில் பாய்ந்து வருமானால், இந்த நந்தவனம் மீண்டும் தழைக்கும். இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வல்லவர் விநாயகரேயாவார். ஆகையால் நீ அவரைப் பூசித்து அவரிடம் வரம் பெறுவாயாக!" என்று கூறி மறைந்தார்.

இந்திரன் விநாயகரைக் குறித்து தவம் புரிந்தான். விநாயகர் அவன் முன்பு தோன்றினார். இந்திரனின் கோரிக்கையைக் கேட்டு அவ்வாறே செய்வதாகக் கூறி விட்டு உடனே ஒரு காக்கை வடிவம் எடுத்து சையவரைச் சாரலில் இருந்த அகத்திய முனிவரிடம் சென்று முனிவரின் கமண்டலத்தின் மீது ஏறியமர்ந்தார். அதைக் கண்ட அகத்தியர் தம் கையை ஓங்கி அந்தக் காகத்தை விரட்டினார். உடனே அந்தக் காகம் அகத்தியருடைய கமண்டலத்தை தலைக் குப்புறக் கவிழ்த்தது. அதனால் அதிலிருந்த நீரெல்லாம் நதியாகப் பெருக்கெடுத்தது. காகமும் பிள்ளையார் வடிவத்தில் மாறியது. கமண்டலத்தைத் தாழ்த்திய காகம் தம் முன்பு பிராமணப் பிள்ளையைப் போல நிற்பதைக் கண்டு இவன் யார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அச் சிறுவனின் தலையில் குட்டுவதற்காக அவனைப் பிடிக்க ஓடினார். விநாயகர் அகத்தியரின் கைப்பிடிக்குள் அகப்படாமல் ஓடினார். அகத்தியர் பின் தொடர்ந்து ஓடினார். அதனால் அகத்தியரின் உடலும் உள்ளமும் சோர்ந்தன. உடனே பிள்ளை

வார் தமது சுய உருவத்துடன் அகத்தியர் முன்பு தோன்றி னார். அகத்தியர் விநாயகரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி முன்பு அவரைக் குட்டுவதற்கு ஓங்கிய தம்து கையினால் தமது தலையிலேயே இரத்தம் கசியக் குட்டிக் கொண்டார்.

அகத்தியரின் இத்தகைய அன்புச் செயலைக் கண்ட விநாயகர் "தமிழ் முனிவரே! உமது தலையில் குட்டிக் கொள்வதை நிறுத்தி உமக்கு வேண்டிய வரங்களைக் கேளும்!" என்றார்.

அதற்கு அகத்தியர் "சிவபெருமானின் திருவருள் பெற்று என் கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்த காவிரியைச் சிறிதும் அஞ்சாதபடி கவிழ்த்து விட்டதற்கான காரணத்தை நான் அறியேன்! இப்போது சிவபெரு மானின் கட்டளைப்படி நான் பொதிய மலைக்குச் செல்வ தால் அங்கு அவரை அபிஷேகம் செய்ய வேண்டி காவிரி நதியைத் தந்தருள வேண்டும் என்றார்."

அகத்தியருக்கு மனமிரங்கிய விநாயகர் கமண்டலத்து நீரை தாம் கவிழ்த்ததற்கு காரணத்தைக் கூறி விட்டு மிக வேகமாகப் பாய்ந்து செல்லும் காவிரியை தம்மிரு கைகளாலும் அள்ளி அகத்தியரின் கமண்டலத்தில் நிரப் பிக் கொடுத்து விட்டு மறைந்தார். அதற்குப் பிறகு அகத்தியர் பொதிகை மலையை அடைந்தார். யானை முகத்துக் கணபதியின் அருளால் காவிரியாறு தோன்றி யது. இந்திரனின் நந்தவனத்தில் பாய்ந்து கடலில் போய் கலந்து வருகிறது.

## காசியபரும் கணபதி அவதாரங்களும்

முன்பு ஒரு சமயம் ஏற்பட்ட பிரளயத்தின் இறுதியில் பிரும்மதேவர் தமது மனத்திலிருந்து ஏழு மானச புத்திரர்

களைப் படைத்தார் அவர்களில் காசியபமுனிவரும் ஒருவர். அவர் மிகப்பெரிய ஞானியாக விளங்கியதால் பிரும்ம தேவர் அவருக்கு ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்து "மகனே! இந்த மந்திரத்தைச் செபித்து தவம் செய்து விநாயகரின் திருவருளால் சகலவிதமான உயிரினங்களை யும் ஜடப் பொருள்களையும் சிருஷ்டி செய்து வருவாயாக!" என்றார்.

காசியபரும் ஓராயிரம் ஆண்டுகள் வரை தவம் செய்து விநாயகரைத் தரிசித்து "மூலமுதல்வரே! உலகம் எங்கும் உயிர்களையும் ஜடப்பொருள்களையும் படைக்கும் ஆற்றலை அடியேனுக்கு வரமாக வழங்க வேண்டும். அது மட்டுமின்றி வரம் தரும் தாங்களும் எனக்குப் புத்திரராக அவதரிக்க வேண்டும் என்று வேண்டினார். விநாயகர் அவர் விருப்பத்தை நிறைவேற்றுவதாக உறுதி கூறிவிட்டு மறைந்தார்.

காசியபர் தமது ஆசிரமத்தையடைந்து தமது மனைவி யராகிய பதினான்கு மனைவியரோடும் கூடி மகிழ்ந்து வந்தார். அவர்களின் கர்ப்பத்திலிருந்து தேவர், கந்தர்வர் முதலியவர்களும்; ஈ, எறும்பு முதலிய சகல உயிரினங்களும்; மலை நதி முதலிய சடப் பொருள்களும் தோன்றின, தேவர்கள் முதலான அனைவரும் மிகவும் பக்தியுடன் வெவ்வேறு கோயில்கள் கட்டி விநாயகரைத் தத்தமது விருப்பத்திற்கு உரிய வடிவங்களில் பெயரிட்டு வழிபட்டு வந்தனர். தேவர்கள் சுமுகர்கள் என்றும் சித்தர்கள் கஜானனர் என்றும் மானிடர்கள் லம்போதரர் என்றும் மிருகங்கள் அவரை விகடர் என்றும் பறவைகளும் மரங் களும் அவரை விக்னராஜன் என்றும் நவக்கிரகங்கள் அவரை கண நாயகர் என்றும் திக்குப்பாலகர்கள் தூமகேது என்றும் புண்ணிய நதிகள் கணத்தியட்சகர்

என்றும் பயிர்கள் முதல் வண்டுகள் வரை. பாலச்சந்திரர் என்றும் மற்ற பிராணிகள் அனைத்தும் கஜானனர் என்றும் பெயரிட்டு வழங்கலாயினர்.

## லீலா காண்டம்

## வக்கிரதுண்ட விநாயகர் அவதாரம்

வியாசமுனிவர், நான்முக பிரம்மதேவரை வணங்கி, "ஞானத் தந்தையே! இதுவரை நீங்கள் பிள்ளையாரைப் பற்றிய மகிமைகளைக் கூறியதுபோல அவரது அவதாரங்களையும் லீலைகளையும் எங்களுக்குக் கூறியருள வேண்டும்" என்றார். அவருக்கு பிரம்மதேவர் கூறியதை, நான் அறிந்தபடி உங்களுக்குச் சொல்கிறேன் கேளுங்கள்:

வேழமுகத்து விநாயகப் பெருமான் அடியார்களுக்கு அருள்புரிவதற்காக யுகங்கள் தோறும் பல்பல அவதாரங்களை எடுத்தே வருகிறார். முன்பு ஒரு சமயம்,முருகப் பெருமானுக்கு சிவபெருமான், விநாயகரின் பன்னிரண்டு அவதாரத் திருவிளையாடல்களைக் கூறியிருக்கிறார்.அவற்றை நான் உங்களுக்குச் சொல்கிறேன் விநாயகரின் அந்தப் பன்னிரண்டு அவதாரங்களும் பின்வருமாறு: 1. வக்கிர துண்ட விநாயகர் 2. சிந்தாமணி விநாயகர் 3. கஜானனர் 4. விக்கினராஜர் 5. மயூரேசர் 6. பாலச்சந்திரர் 7 தூமகேது 8. கணேசர் 9. கணபதி 19. மகோற்கடர் 11. உருண்டி விநாயகர் 12. வல்லபை விநாயகர் என்பன. இவற்றில் வக்கிரதுண்ட விநாயகரின் அவதாரத்தையும் திருவிளையாடல்களையும் பற்றி உபாசன காண்டத்தில் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இனி சிந்தாமணி விநாயகரின் அவதாரத்தையும் லீலைகளையும் சொல்கிறேன் கேளுங்கள்.

# கணராஜனின் தோற்றமும் சிந்தாமணி விநாயகரின் அவதாரமும்

முன்பு ஒரு காலத்தில தமிழ் நாட்டில் அபிசித் என்ற மன்னன் தன் மனைவி குணவதியுடன் அரசாண்டு வந்தான். நீண்ட நாள்களாகியும் அந்த அரச தம்பதிகளுக்கு குழந்தையே பிறக்கவில்லை. அதனால் விரக்தியடைந்த அரசன், தனது அரசாட்சியை மந்திரிகளிடம் ஒப்படைத்து விட்டு தன் மனைவியோடு, காட்டிலே வனவாசம் செய்வதற்குப் புறப்பட்டுச் சென்றான். அந்தக் காட்டிலிருந்த வைசம்பாயன முனிவரின் ஆசிரமத்தையடைந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

அப்போது அந்த முனிவர் அரசனை நோக்கி "அரசே! நீ யார்? இந்த வனத்திற்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டார். அரசன் மகப்பேறில்லாத மனவருத்தத்தால் வாயைத் திறந்து ஒன்றுமே பேசாமல் மௌனமாக இருந்தான்.

முனிவர் தமது ஞானதிருஷ்டியினால் அரசனுடைய மனக் குறையை அறிந்து அவனுக்கு புத்திரன் பிறக்கட்டும் என்று வாழ்த்தினார்.

உடனே அரசன் ''தவ முனிவரே! நான் தமிழ்நாட்டின் அரசன். என் பெயர் அபிசித்! எனக்கு வெகுகாலமாக குழந்தைச் செல்வம் உண்டாகவில்லை. அதனால் விரக்தியுடன் வனவாசம் செய்ய வந்த நான் தங்களை சரணடைந்தேன். தாங்களும் எனக்கு புத்திரன் பிறக்கட்டும் என்று வார்த்திவிட்டீர்கள், தவ முனிவர்களின் வாக்கு ஒருபோதும் பொய்க்காது. எனக்கு புத்திர பாக்கியம் உண்டாக நான் என்ன செய்ய வேண்டும் என்பதை

தயை செய்து கூறுங்கள்" என்று ஆசையோடும் ஆர்வத்தோடும் கேட்டான்.

உடனே முனிவர், அவனுக்கு சிவபெருமானின் ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசித்து "தமிழ் மன்னனே! கடலும் ஆறும் கலக்கும் சங்கம கட்டத்திற்கு மேற்கே ஒரு வனமும் தடாகமும் இருக்கிறது. நீ அங்கு சென்று இந்த மந்திரத்தைச் செபித்தவண்ணம் தவமிருந்து பிறகு இதற்குரிய வேள்விகளைச் செய்துவிட்டு உனது நகரத்திற்கே திரும்பிச் செல். விரைவில் சிவபெருமான் திருவருளால் உனக்கு புத்திரன் ஒருவன் பிறப்பான்" என்றார்.

முனிவர் கூறியவாறே அபிசித் மன்னனும் அவன் மனைவி குணவதியும் முனிவர் குறிப்பிட்ட வனத்தின் தடாகக் கரையை அடைந்தனர். அங்கு, ஏற்கெனவே கலைமகளும் பிரம்மதேவனும் வந்திருந்தனர். பிரம்மதேவன் ஆழ்ந்த தவத்தில் மூழ்கியிருக்க, கலைமகள் அவருக்குரிய பணிவிடைகளைச் செய்துகொண்டு இருந்தாள். அரசனும் அரசியும் அவர்களை வணங்கிவிட்டு அந்த வனத்திலேயே அரசன் முனிவர் கூறிய மந்திரத்தை ஒருமித்த மனத்துடன் தியானம் செய்து வந்தான். அரசனின் மனைவியும் கலைமகளும் தங்கள் கணவன்மார்கள் தவம் புரிவதற்கு பூத்தொண்டு முதலிய பணிகளைச்செய்து இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வனத்தில் சுற்றி காய், கனி வர்க்கங்களைச் சேகரித்து உணவு தயாரித்து வரலானார்கள். இவ்வாறு நிகழ்ந்து வரும்போது, ஒரு நாள் கலைமகள், கூடலிச்சை கொண்டு மோக தாபத்துடன் ஆசைப் புன்னகையுடன் சரேலென்று ஒடி தவமிருக்கும் தன் கணவரான பிரம்மதேவரின் மடிமீது ஏறியமர்ந்தாள். அதனால் தவம் கலைந்த பிரம்மதேவனும் அவள் மீது மோகம் கொண்டார்.

கலைமகள் தன் தவறை உணர்ந்து அவரது பிடியிலிருந்து தப்பி நழுவி விருட்டென்று ஓடினாள். பிரும்மாவும் பின்தொடர்ந்து ஓடினர். இருவரும் ஓடினர். முடிவில் கலைமகள் தேவர்களுடன் இந்திரன் தவம் செய்யும் இடத்தை அடைந்து அங்கு ஒரு புறமாக பதுமையைப் போல நின்றாள்.

தேவேந்திரன் திகைத்தான். பிரும்மாவும் சரஸ்வதியும் ஓடிவந்ததைக் கண்ட அவன் காரணத்தைக் கருதாமல் பிரும்ம தேவனுக்குப் பாதபூசை செய்தான்.

"பிரும்ம தேவரே! தங்கள் பத்தினியோடு இங்கு வந்த காரணம் என்ன?" என்று கேட்டான். பிரும்ம தேவன் பதில் ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனமாக இருந்தார். கலைமகளும் தன் வாயைத் திறக்கவேயில்லை. ஆனால் அவர்களுடைய முகபாவங்களிலிருந்தும் தோற்றத்திலிருந்தும் தேவர்கள் அவர்களுடைய மனநிலையைப் புரிந்து கொண்டு "அன்ன ஆகாரம் இல்லாமல் ஐம்புலன்களையும் அடக்கி நீண்ட காலம் தவத்தில் ஆழ்ந்திருக்கும் மாபெரும் தவயோகிகளாலும் காமக்கடலைக் கடந்து கரையேறுவது கடினமான காரியமாகும்!" என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அதைக் கேட்ட பிரும்ம தேவன் தனது செயலுக்காக மனம் வருந்தி அங்கிருந்து விருட்டென்று எழுந்து வெளியே சென்றார். அப்போது காமக்கினியினால் தகித்துக் கொண்டிருக்கும் அவர் தேகத்திலிருந்து தேனாய்த் திரண்டு வீரியம் வெளிப்பட்டது. அவர் அங்கிருந்து நேராகத் தடாகத்துக்குச் சென்று அதில் இறங்கி நீராடி, தன் உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே தூய்மைப் படுத்திக் கொண்டு மீண்டும் தவநிஷ்டையில் அமர்ந்தார். அவருடன் தவம் செய்து கொண்டிருந்த அபிசித் மன்னன்

பௌர்ணமி தினம் வந்ததும் தன் மனைவியுடன் கடலில் நீராடிவிட்டுத் திரும்பி வந்தான். அவ்வாறு வரும் வழியில் அரசனின் மனைவிக்குத் தாகவேட்கை உண்டாயிற்று. அவள் தடாகத்தில் இறங்கி அதன் தண்ணீரை அள்ளிக் குடித்தாள். அப்போது அந்தத் தண்ணீரோடு கலந்திருந்த பிரும்ம தேவரின் வீரியமும் கலந்திருந்ததால் அத் தண்ணீருடன் வீரியமும் அவளுடைய வயிற்றில் சென்று கருவாயிற்று. அபிசித் மன்னனும் வைசம்பாயன முனிவர் உபதேசித்தபடி நான்கு மாதங்கள் ஜபதபம் செய்து முடித்ததால் தன் மனையுடன் தனது தலைநகரத்துக்குத் திரும்பினான்.

அவன் மனைவி குணவதி கருத்தரித்த பத்தாவது மாதத்தில் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அப்புதல்வனுக்கு அரசன் ஜாதகர்மங்களைச் செய்து சோதிடர்களை அழைத்து அவனுக்கு கணன் என்று பெயரிட்டு அருமையுடன் பெருமையாக வளர்த்து வந்தான். நாளுக்கு நாள் வளர்ந்து வந்த கணன் நெடிய உருவமும் மேக நிறமும் பெரிய கண்களும் விசாலமான தோள்களும் கொண்டவனாகவும் மலையரசனைப் போன்றும் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள்ளாக ஆகாயத்தில் பறந்து வெகுதூரம் சென்று திரும்பி வந்துவிடும் ஆற்றலைப் பெற்றவனுமாக இருந்தான்.

ஒரு நாள் அவன் கீழ்த்திசையில் சந்திரன் உதயமாகி வானவீதியில் கிளம்பி வருவதைக் கண்டான். உடனே அவன் வானத்தில் பாய்ந்து சந்திரனின் இரு கைகளையும் சேர்த்துப் பிடித்து அவனைப் போகவிடாமல் தடுத்து நிறுத்தினான் சந்திரன் அவனிடம் இனிய வார்த்தைகளைப் பேசிக் கொஞ்சிய பிறகுதான் கணன் அவனைப் போக விட்டான்.

மற்றொரு நாள் நகரத்தின் வாயிலில் மதம் கொண்ட யானை ஒன்று தன் கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டு யானைப் பாகர்களையெல்லாம் எதிர்த்துத் தள்ளி விட்டு தனது தும்பிக்கையினால் சேனை வீரர்களையெல்லாம் கொன்று குவித்தது. அதைக் கண்ட கணன் அந்த யானை மீது பாய்ந்து அதன் மத்தகங்களில் ஓங்கியறைந்தான். உடனே அந்த யானை இரத்த வெள்ளத்தையும் மதநீரையும் பொழிந்தபடி கீழே விழுந்து உயிர் நீத்தது. இவ்வாறு சிறு வயதிலிருந்தே வலிமையிலும் திறமையிலும் சிறந்து விளங்கிய கணன் பெரியவனானதும் நற்குணங்களில் சிறந்து விளங்கினான்.

ஒரு நாள் அவன் தன் தாய் தந்தையரிடம் விடை பெற்று காட்டுக்குச் சென்று ஒரு தடாகக் கரையில் அமர்ந்து சிவபெருமானைக் குறித்து ஒற்றைக் காலில் தவமிருந்தான். அவன் இயற்றிய தவத்தின் அக்கினியானது பரவி தேவலோகத்தைக் கொளுத்தியது. தேவர்கள் சிவபெருமானிடம் சென்று "கங்காதரரே! பூவுலகில் யாரோ ஒருவன் ஒற்றைக்காலில் நின்று தங்களைக் குறித்துக் கடுந்தவம் செய்கிறான். அவன் செய்யும் தவத்தின் வெப்பம் தெய்வ உலகம் வரை பரவி எங்களை வாட்டுகிறது எங்களை நீங்கள்தான் காத்தருள வேண்டும்!" என்று வேண்டினார்கள்.

உடனே சிவபெருமான் அவர்களுக்கு அபயம் அளித்து உமா மகேஸ்வரியுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி கணனுக்கு எதிரில் காட்சியளித்து அவன் விரும்பிய வண்ணம் தமது திருவடிகளில் மாறாத பக்தியும் மூவுலகத்தையும் ஆட்சி புரியத்தக்க ஆற்றலையும் பிரும்மா முதலிய தேவர்களாலும் அழிவுறாத ஆயுள் பலத்தையும் தந்தருளி மறைந்தார்.

அதன் பிறகு அரசன் அபிசித் தன் மகனுக்குத் திருமணம் செய்வித்து அரசாங்சியை ஒப்படைத்து விட்டான்.

கணன் அரசாட்சியை ஏற்றதும் உலகம் முழுவதையும் தன் படைகளுடன் சென்று கைப்பற்றி தன் ஆளுகைக்குக் கொண்டு வந்தான். பிறகு தேவ உலகம் சென்று தேவேந்திரனின் வெண்கலக் குதிரையைக் கைப்பற்றி அதன் மீது ஏறியமர்ந்து தேவேந்திரனுடன் போர் செய்தான். முடிவில் தேவேந்திரன் தோற்றுவிட்டான்.

கணராஜன் அவனை அலட்சியமாக நோக்கி "தேவ இந்திரா! கவலைப்படாதே! உனது தேவலோகம் எனது ஆளுகைக்கு உட்பட்டு இருக்கட்டும். என் அதிகாரத்திற்கு உட்பட்டு நீயே அதை நிர்வகித்து வரலாம். இதற்கு மாறாக நீ நடந்தால் அதற்குரிய தண்டனையையும் அடைவாய்! என்று கூறி மற்றைய உலகங்களையும் கைப்பற்றச் சென்றான்.

மூவுலகமும் அவன் கைவசமாயின. அவ்வுலகங்களிலிருந்து கொண்டு வந்த பெருஞ் செல்வங்களை தன் தாய் தந்தையரின் காலடிகளில் வைத்து வணங்கினான். பிரும்மாவும் திருமாலும் கூட அவனுடன் போரிடப் பயந்து அவனுடன் ஆட்சிக்கு உட்பட்டு கப்பஞ் செலுத்துவதாக ஒப்புக் கொண்டுவிட்டனர்.

அதற்குப் பிறகு கணன் அழகிற் சிறந்த பெண்கள் பலரையும் மணந்து கொண்டு வாழ்ந்து வருகையில் ஒரு நாள் வேட்டையாடி விட்டு அரண்மனைக்குத் திரும்பும் வழியில் கணராசனுக்கு அடக்க முடியாத தாகம் ஏற்பட்டது. அவன் கண்கள் இரண்டும் மங்கின. அதனால் அவன் வழி தவறி தன் வீரர்களுடன் இருண்ட காட்டுப்

பகுதியினுள் ஊடுவிச் சென்றான். அங்கு மலர்கள் நிறைந்த பூச்சோலையையும் ஒரு குளத்தையும் கண்டு மன மகிழ்ச்சியுடன் தனது தாகம் தீரும் மட்டும் தண்ணீரை அருந்தினான் தன் உடல் களைப்பு நீங்கும் பொருட்டு நீராடிவிட்டு ஒரு மரத்து நிழலில் அமர்ந்து இளைப் பாறினான். அப்போது அந்த வனத்தில் வசித்து வந்த கபில மகா முனிவருடைய சீடர்களில் ஒருவன் மரத்து நிழலில் இளைப்பாறும் கணராஜனையும் அவனது வீரர் களையும் கண்டான், விரைந்து கபில முனிவரிடம் சென்று அதைப் பற்றி கூறினான். முனிவர் அந்தச் சீடனையே அனுப்பி கணராஜனைத் தனது ஆசிரமத்திற்கு அழைத்து வரச் செய்தார்.

கபிலமுனிவர், சூரியனைப் போல ஒளி வீசும் சிந்தா மணியை மார்பில் சூடியிருந்தார். கபில முனிவரைக் கண்டதும் கணராஜன் அவரது திருவடிகளை வணங் கினான்.

முனிவர் மகிழ்ந்து "வேந்தனே! என் ஆசிரமத்துக்கு வந்தவர்கள் யாரும் பசியுடன் திரும்பிச் சென்றதில்லை. ஆகையால் நீயும் உனது படைவீரர்களும் இங்கேயே உணவருந்தி விட்டுச் செல்லலாம்!" என்றார். அரசனும் அதற்குச் சம்மதித்தான்.

உடனே கபில முனிவர் தமது மார்பிலணிந்திருந்த சிந்தாமணியை தம் கையில் எடுத்து ஓர் ஆசனத்தின் மீது வைத்துப் பூசித்து "சிந்தாமணியே! என் ஆசிரமத்தை நாடி வந்திருக்கும் விருந்தினர் அனைவருக்கும் அறுசுவை உணவுகளுடன் விருந்தளிக்க வேண்டும்!" என்று வேண்டினார்.

சிந்தாமணியின் அதியற்புத சக்தியினால் அளவற்ற படைவீரர்களுக்கு அமுதம் தயாரித்து அளித்த அந்த முனி வரின் தவ வலிமையை கண்ணெதிரில் கண்ட கணராசன்

எப்படியாவது அந்தச் சிந்தாமணியை தானே அடைந்து விடவேண்டும் என்று எண்ணினான். "சுவாமி! தங்கள் தவ வலிமையினாலேயே நினைத்ததையெல்லாம் சாதிக்க வல்லவராக தாங்கள் இருக்கும்போது கேட்டதை தரும் அந்த சிந்தாமணியை நீங்கள் ஏன் வைத்திருக்கவேண்டும் என்னை தங்கள் குமாரனாக பாவித்து, அதை என்னிடம் கொடுத்தருள வேண்டும்" என்று கேட்டான் அதற்கு அந்த முனிவர் "அரசே! இந்தச் சிந்தாமணி என் உயிரை விட மேலானது. ஆகையால் அதைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் தருகிறேன். தயவு செய்து சிந்தாமணியை மட்டும் கேட்காதே!'' என்றார்.

கணராஜன் சிந்தாமணியை தான் அடைந்தே தீருவது என்று பேராசை கொண்டான். அதனால் அவரிட மிருந்து பலவந்தமாகக் கைப்பற்றிக் கொண்டான். முனிவர் கோபம் கொண்டு "அற்பனே! திரிலோக சக்கர வர்த்தியாக இருந்தும் நன்றியும் திருப்தியுமில்லாமல் எனது பொருளை வன்முறையில் பறித்துச் செல்லும் உன்னை, நான் வணங்கிப் பூசிக்கும் அந்தக் கடவுளே அவதாரம் எடுத்து உன் அகம்பாவத்தையும் உன்னையும் அழிப்பாராக!'' என்று கூச்சலிட்டார்.

கணராசன் அப்போதும் சிந்தாமணியை அவரிடம் கொடுக்காமல், தன் தலைநகருக்கு கொண்டு சென்று அதன் வழியால் அளவற்ற சக்திகளையடைந்து மூவுலகத் தையும் சிறப்பாக ஆண்டு வந்தான்.

சிந்தாமணியை இழந்த கபிலமுனிவர் தம்மிடமிருந்து அதை அபகரித்துச் சென்ற கணராசனுக்கு அதிவிரைவில் அழிவுநேர வேண்டும் என்ற எண்ணத்துடன் கடுமையான தவத்தில் ஈடுபட்டார். அப்போது விஷ்ணுவின் மாயை யானது நான்கு திசைகளிலும் மேலும் கீழுமாகப் பரவி

நெருப்பு ஜ்வாலையாக அவர் கண் முன்பு தோன்றியது. அதைக் கண்ட கபில முனிவர் பயந்தார். அப்போது அந்த அக்கினி ஜ்வாலையின் மாயா சக்தியின் குரல் வானொலி போல எழும்பி "கபிலரே! நான் மாயா சக்தியாவேன். என் பெயர் சாருஹாசினி! உமக்குத் தீங்கிழைத்து துயரம் விளைவித்த அந்த கணமகாராசன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் மும்மூர்த்திகளாலும் அழிக்க முடியாத வனாக இருக்கிறான். ஆனால் மும்மூர்த்திகளுக்கும் மூல முதல்வரான பிள்ளையாரால்தான் அவனுக்கு அழிவை ஏற்படுத்த முடியும். ஆகையால் நீங்கள் அம் மூர்த்தியைக் குறித்து தவம் செய்யவேண்டும்!" என்று கூறி மறைந்தது.

கபிலமுனிவர் அவ்வாறே தவம் செய்தார். வேள்வி யும் செய்தார். அந்த வேள்வித் தீயிலிருந்து சித்தி புத்தி சமேதராக சிங்கவாகனத்தில் விநாயகர் காட்சி யளித்தார். "கபிலமுனியே! நீ வேண்டிய வரங்களைத் தந்தோம். உனக்குத் துயரமூட்டிய அந்த கணராசனை அழிப்பதற்காகவே நான் உன் ஆசிரமத்தில் அவதரித் திருக்கிறேன். அந்த கணராசனையும் அழித்து அவன் அபகரித்த சிந்தாமணியையும் உன் கையில் தருவேன்" என்று கூறி "கபிலமுனியே கவலைப்பட வேண்டாம். கடல் போன்ற பெரும் படைகளுடன் படையெடுத்து வந்தாலும் கணராசனை நானே கவனித்து கொள்கிறேன்!" என்றார். அப்போது அவரது மனைவியரில் சித்திதேவி என்பவள் புன்னகையுடனும் வீரத்தோடும் விநாயகரை நோக்கி, "நாதா! தாங்கள் உத்தரவிட்டால் கண்ணிமைக்கும் நேரத் தில் அந்தக் கணராசனின் படைகளைத் துடைத்தெறிந்து வெற்றியுடன் வருவேன்!" என்றாள். விநாயகரும் அதற்கு சம்மதித்து அவளது உள்ளங்கையில் ஐக்கியமானார்.

தன்னோடு போர் செய்வதற்கு நிராயுதபாணியான ஒரு பெண் வருவதைக் கண்டதும் "கேவலம் ஒருபெண்ணா

என்னுடன் போரிட வருவது!" என்று சலித்து கணராசன் போருக்குத் தயாரானான். அப்போது அவனருகில் இருந்த அவன் குமாரர்களான சூலபாணி, சுலபன் என்ற இருவரும், "தந்தையே! எங்களுக்கு உத்தரவு கொடுங்கள். நாங்கள் அந்தப் பெண்ணை அரைக்கணத்தில் அழித்து ஒழித்துவிட்டு வருகிறோம்!" என்றார்கள்.

"மைந்தர்களே! என் வீரத் திருமகன்களே வெற்றியுடன் திரும்பி வாருங்கள், இல்லையென்றால் என் கண் எதிரே வராதீர்கள்! என்றான் கணராசன்.

கணனின் மைந்தர்கள் சித்திதேவியை நோக்கிப் பாய்ந்தார்கள். அதைக் கண்டதும் சித்திதேவி கணநேரத்தில் கணக்கற்ற படைவீரர்களையும் ஆயுதங்களையும் உற்பத்தி செய்தாள். யானைகள், குதிரைகள், தேர்கள் முதலியனவும் தோன்றின. பேரீ முரசுகள் முழங்கின. பெரும்போர் மூண்டது. பயங்கரமாகப் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. அந் நிலையில் சித்திதேவியின் போர் வீரர்கள் சிறிது தளர்ச்சியடைந்தனர். அதைக் கண்ட சித்திதேவி உக்கிரமான கோபத்துடன் வீரன் ஒருவனை தோன்றச் செய்தாள். இலக்கன் என்ற அந்த வீரன் லட்சக்கணக்கான ஆயுதம் தரித்த வீரர்களுடன் போரிட்டு, கணனின் மைந்தர்கள் இருவரையும் சிறைப்படுத்தி, கைது செய்து சிந்தாமணி விநாயகரின் முன்பு கொண்டு நிறுத்தினாள்.

பிறகு அவன் விநாயகரை வணங்கிவிட்டு ''இவர்கள் இருவரும் கணராசனின் மைந்தர்கள். இவர்கள் தந்தை என்னுடன் நேருக்கு நேர் போர் செய்ய வராததால், தங்கள் திருக்கரத்தால் மடிபவர்கள் முக்தியடைவார்களாகையால் தாங்களே அவனுடன் போர் செய்து அவனை

அழிக்க வேண்டும். அவன் மைந்தர்களான இவர்கள் சுத்தவீரர்கள் ஆயினும் என்னிடம் சிக்கிக் கொண்டுவிட்டார்கள். இயல்பில் இவர்கள் நற்குணம் வாய்ந்தவர்களாகையால், கணராசனுடைய அரசாட்சியை இவர்களிடம் கொடுத்து ரட்சிக்க வேண்டும்!" என்று வேண்டினான். விநாயகரும் அவ்வாறே ஆகுக!" என்று கூறினார்.

இந் நிலையில் போர்க்களத்திலிருந்து புறமுதுகு காட்டி தன்னிடம் ஓடிவரும் மந்திரிகளைப் பார்த்து கணராசன் மனம் பதைத்தான். தன் புத்திரர்கள் இருவரையும் இலக்கன் என்ற வீரன், போர்க்களத்தில் தோற்கடித்து கைது செய்து சென்றதை ஒற்றன் மூலம் அறிந்து கொண்டான். புத்திர சோகத்தினால் அழுதுபுலம்பினான். அப்போது அவனது அமைச்சர்கள் அவனைத் தேற்றி, தைரியமூட்டி இலக்கனையும் கபிலமுனிவரையும் கொன்று விடவேண்டும் என்று அவனது ஆவேசத்தைத் தூண்டி படைகளுடன் போரிடச் சென்றனர்.

கபில முனிவரின் ஆசிரமத்தை நோக்கிப் போர்ப் படைகள் சென்றன. அங்கு விநாயகப் பெருமான் முன்பு கபில முனிவர் அமர்ந்து பூஜை செய்து கொண்டிருந்தார். போர்ப்படைகளுடன் கணராசன் கபிலராசிரமத்தையடைந்தான். அங்கு சித்தி, புத்தி தேவியருடன் சிங்க வாகனத்தில் அமர்ந்தவாறு காட்சியளிக்கும் விநாயகரைக் கண்டான். கபிலமுனிவரை தன் வாய்க்கு வந்தவாறெல்லாம் இழித்தும் பழித்தும் பேசினான். அவற்றைக் கேட்ட கபில முனிவர் கோபத்துடன் அவனை நோக்கி "அடே வஞ்சகா! நன்றிகெட்டவனே! வானத்துத் தேவர்களையும் வையத்து தவ முனிவர்களையும் அவமதிக்கும் உன்னைக் கொன்றொழிப்பதற்காகவே விநாயகர் இங்கே வந்து அவதரித்திருக்கிறார். அவர் பாதங்களில் வீழ்ந்து சரணடைந்தால் உனக்கு சர்வமங்களமும் உண்டாகும்.

இல்லையெனில் அழிவு ஏற்படும். உன் மனைவியரெல்லாம் மங்களமிழந்து மனம் புலம்பிச் சாபமிட, உன் உடலிலுள்ள ரத்தமெல்லாம் பெருக்கெடுத்தோட நீ மரணமடைவாய்!" என்றார்.

கபில முனிவர் கூறியவை எதையும் காதில் வாங்கிக் கொள்ளாத கணராசன் பிரளயத்தீயைப் போலக் கொதித்து தன் கையிலிருந்த வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்து விநாயகரின் நெற்றியைக் குறிபார்த்து எய்தான். விநாயகரின் பார்வை பட்டதும் அந்த அம்பு எரிந்து சாம்பலாயின. கணேசர், தம் சிம்ம வாகனத்திலிருந்தபடியே தமது கையில் ஏந்தியிருக்கும் 'மழு' என்னும் ஆயுதத்தைத் தூக்கி "அந்தத் தற்குறியின் தலையை அறுத்து வா!" என்று வீசினார்.

அந்த மழுவாயுதம் சீறி கோடி சூரியப் பிரகாசத்துடன் பாய்ந்து, கணராசனின் தலையை அறுத்துத் தரையில் தள்ளிவிட்டு, தெய்வ கங்கையில் நீராடி, மீண்டும் விநாயகரின் திருக்கரத்தில் வந்தமர்ந்தது.

கணராசனின் படைவீரர்கள் விநாயகரை எதிர்க்க முடியாமல் பயந்து ஓடிச் சென்று அபிசித் மன்னனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினர். தன் மகன் இறந்து விட்ட செய்தியை அறிந்த மன்னன், அழுது புலம்பினான். ஆற்றொனாத் துயரத்துடன் மறுநாள் கபில முனிவரிடமிருந்து தன் மகன் கவர்ந்து வந்திருந்த சிந்தாமணியை எடுத்துக்கொண்டு, தன் மந்திரிகள் பின் தொடர கபில முனிவரின் ஆசிரமத்திற்கு வந்தவன் விநாயகரை வணங்கி கபில முனிவரையும் வணங்கி, விநாயகரின் திருவடிகளில் அந்தச் சிந்தாமணியை வைத்து வணங்கி,

"எல்லாம்வல்ல ஆனந்தமூர்த்தியே! யாவுமே உம்மால் தான் நடக்கின்றன என்பதை அறியாத என மகன் கணன்

அற்பகுணத்தாலும் அகம்பாவத்தாலும், உம்மைப் பகைவராகப் பாவித்து படையெடுத்து வந்தான். உமது மழுவாயுதத்தால் அவன் உடல் அழிந்து, உயிர் உன்னத நிலையையடைந்தது. இனி என் பெயரர்களான சுலபனையும் சூலபாணியையும் வரவழைத்து என் மகனின் அரசாட்சியை அவர்கள் வசம் ஒப்படைத்து அருள்புரிய வேண்டும். எனக்கு உம்மிடம் மாறாத அன்பு பெருகும் படியும் இந்தப் பூதவுடல் நீங்கி நான் பேரின்ப வாழ்வு பெறும்படியாகக் கருணை புரியவேண்டும்!" என்று வேண்டினான்.

அவ்வாறே அருள் புரிவதாக யானைமுகத்தார் கூறிவிட்டு, தமது திருவடிகளில் அபிசித் மன்னன் சமர்ப்பித்த சிந்தாமணியை கபில முனிவரிடம் கொடுத்தார். பின்னர் கபிலமுனிவரும் அபிசித் மன்னனும் அந்தச் சிந்தாமணியை விநாயகருக்கு அணிவித்து, அதனை ஏற்றருளும்படி வேண்டினார்கள்.

அவ்வாறே விநாயகரும் சிந்தாமணியை தமது கண்டத்தில் தரித்துக் கொண்டார். சிந்தாமணியை அணிந்த காரணத்தினால் சிந்தாமணி விநாயகர் என்றும், கபில முனிவரின் ஆசிரமத்தில் அவதரித்ததால், கபில விநாயகர் என்றும், மலர்ந்த முகத்துடன் காட்சியளித்த தால் அவருக்குச் சுமுகவிநாயகர் என்றும் பெயர்கள் வழங்கலாயின.

சவுனகாதி முனிவர்கள் அவரை நோக்கி, கபில முனிவருக்கு தேவலோகத்துச் சிந்தாமணி எப்படி கிடைத்தது? அந்தக் கதையையும் எங்களுக்குச் சொல்லவேண்டும்என்று கேட்டனர். அதற்கு சூதபுராணீகர் சொல்லலானார்.

"ஒரு சமயம் தேவேந்திரன் பூவுலகத்தின் புதுமைகளைக் காணவேண்டும் என்று பூவுலகிற்கு வந்து பசியும்

தாகமும் கொண்டு கபில முனிவரின் ஆசிரமத்தை அடைந்தான். அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்ட இந்திரன் தன் குதிரையை விட்டுக் கீழே இறங்கி ஆற்று நீரில் குளித்தான். பிறகு கபிலமுனிவரின் ஆசிரமம் சென்று அந்தத் தவ முனிவரை வணங்கினான். கபில முனிவர், அவனுக்கும் அவனுடன் வந்த வீரர்களுக்கும் தமது ஆசிரமத்தில் விருந்து அளித்துக் கௌரவித்தார். அதற்கு வந்த தேவேந்திரன், வாயுதேவனை அழைத்து தேவலோகப் பொக்கிஷத்திலிருந்த சிந்தாமணியை எடுத்துவரச் செய்து அதனை கபில முனிவருக்குக் காணிக்கையாகக் கொடுத்து விட்டு தேவலோகம் சென்றான். இப்படித்தான் கபில முனிவருக்கு சிந்தாமணி கிடைத்தது!" என்றார் சூத முனிவர்.

## கஜானனர் லீலைகளும் செந்தூரன் தோற்றமும்

முன்பு ஒரு சமயம் சத்தியலோகத்தில் பிரும்மதேவர் கொட்டாவி விட்டபோது அதிலிருந்து அரக்கன் ஒருவன் தோன்றினான். உடனே மூவுலங்களிலும் இரத்த மழை பொழிந்தது. அவன் செம்பருத்தி பூப்போன்ற நிறத்துடனும், மலைபோன்ற உடலுடனும் மன்மதனை போன்ற அழகோடும், பத்துத் தலைகளோடும் விளங்கினான்.

அவனுக்கு பிரம்மதேவர் செந்தூரன் என்று பெயரிட்டு "நீ மூவுலகங்களையும் பார்த்து, உனக்கு விருப்பமான இடத்தில் வசிப்பாயாக, உலகம் முழுவதும் உன்வசமாகும். விஷ்ணு முதலிய தேவர்களாலும் ஆயுதங்களாலும் உனக்கு மரணம் நேரிடாது நீ கோபத்தோடு எவர் ஒருவர் உடலை அணைத்துத் தழுவுகிறாயோ, அப்போதே அவரது

உடல் சாம்பலாகி விடும். இவையனைத்தையும் நான் புத்திர பாசத்தால் உனக்கு நான் கொடுத்த வரமாக ஏற்றுக் கொள்!" என்று கூறினார்.

அந்த வரத்தைப் பெற்றதுமே செந்தூரனுக்கு அந்த வரம் பலிக்குமா பலிக்காதா என்ற சந்தேகம் திடீரென்று தோன்றியது. அதைச் சோதித்துப் பார்க்க மீண்டும் அவன் சத்திய உலகம் வந்து பிரும்ம தேவரின் உடலையே தன் கைகளால் கட்டித் தழுவ முயன்றான்.

அதைக் கண்ட பிரும்ம தேவன் அஞ்சி நடுங்கியவராய் "அறிவிலியே! வரம் கொடுத்த என்னை உனக்குத் தகப்பன் என்பதை அறிந்தும் என்னையே அழிக்கத் துணிந்த உனக்கு அழிவு காலம் விரைவிலேயே வரப்போகிறது. உன்னைக் கொன்று ஒழிக்க விநாயக மூர்த்தியே அவதாரம் செய்வார்!'' என்று சபித்தார். அப்போது அவன் ஆணவத்தோடு இடிஇடியென்று சிரித்துவிட்டு அவரைக் கட்டித் தழுவ கைகளை விரித்தான். அதைக்கண்டு அஞ்சிய பிரும்ம தேவர் அவனுக்குப் பயந்து வைகுந்தத்திற்கு ஓடினார். விஷ்ணுவிடம் முறையிட்டார். இருவரும் பேசுவதைக் கண்ட செந்தூரண் திருமாலை நோக்கி "ஓ கபடனே! என்னுடன் போர் செய்ய வா! மறுத்தால் உன்னையும் உன்னைத் தஞ்சமடைந்திருக்கும் என் தந்தையையும் ஒரு நொடியில் சாம்பலாக்கிவிடுவேன்!" என்றான்.

அதைக் கேட்ட திருமால் செந்தூரனிடம் தந்திரமாகப் பேசி அழிப்புக் கடவுளான சிவபெருமானிடம் போர் செய்யச் சொல்லி அனுப்பி வைத்தார். செந்தூரன் கைலாயம் சென்றான்.

அங்கு சிவபெருமான் அப்போது நிஷ்டையில் இருந்தார். சிவபெருமானின் அருகில் இருந்த உமாதேவியின்

அழகில் மயங்கிய செந்தூரன் எப்படியும் அவளைக் கவர்ந்து சென்றுவிட வேண்டும் என்று நினைத்தான். எனவே அவளை நெருங்கினான். உமாதேவி சிவபெருமானை அணுகி "நாதா! செந்தூரன் என்ற அரக்கன் என்னைக் கவர்ந்து செல்லும் வெறியுடன் நெருங்கி வருகிறான். தாங்கள் தியானத்திலிருந்து விழித்து எழுந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்!'' என்றாள்.

அதைக் கேட்ட சிவபெருமான் கண்விழித்து தனது சூலாயுதத்தை எடுத்து எழுந்தார். செந்தூரனும் அவரைக் கட்டித் தழுவிச் சாம்பலாக்க எண்ணினான். அவரை நோக்கிச் சென்று நெருங்கினான் அப்போது கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவர்கள் இருவர் நடுவிலே விநாயகப் பெருமான் அந்தணன் வேடத்துடன் தோன்றி சிவபெருமானையும் செந்தூரனையும் நோக்கி "நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொள்வதை விட்டுவிட்டு போர் முனையில் ஆயுதப் பிரயோகம் செய்து உங்கள் வலிமையைக் காட்டுங்கள்!" என்றார்.

செந்தூரன் சிவபெருமானை ஆயுதப் போரில் தோற்கடிக்கும் வல்லமை பெற்றிராததால். அவரைக் கட்டித் தழுவ நெருங்கினான் அப்போது பரசு ஆயுதம் செந்தூரனின் மீது பாய்ந்து அவனைத் தாக்கித் தடுத்தது. அதை மீறிக்கொண்டு அவனால் சிவபெருமானை நெருங்கவே முடியவில்லை.

இதைக் கண்ட அந்தணர் வடிவிலிருந்த விநாயகர் அவனை நோக்கி "செந்தூரா! இனி நீ காலகண்டரான சிவபெருமானின் சூலாயுதத்தினால் சாம்பலாகிவிடுவாய் ஆகையால் சிவபெருமானைப் பகைத்துக் கொள்ளாமல் உன் உயிரைக் காத்துக் கொள்ளும் அக்கறை இருந்தால் உடனே இங்கிருந்து தப்பி ஓடிவிடு" என்றார்,

செந்தூரனும் பூவுலகம் சென்றுவிட்டான். செந்தூரன் அகன்றதும் உமாதேவியார் அந்தணரை நோக்கி "போருக்கு வந்த பகைவனைத் தந்திரமாக விரட்டிய நீ யார்?" என்று கேட்டாள். அதற்கு பதில் எதுவும் சொல்லாமல் தமது அந்தண வேடத்தை நீக்காமல் உமாதேவியை நோக்கி "உலக நாயகியே! உன்னைச் சிறை எடுத்துச் செல்ல வந்த அந்தச் செந்தூரனைச் சங்கரிப்பதற்காக நானே உனது வயிற்றில் உனது குமாரனாக அவதரிப்பேன்'' என்று அனுகிரகித்து மறைந்தார்.

உடனே அவர் பூமாதேவியின் கர்பத்தில் உருவானார். உமாதேவியும் அதையுணர்ந்து தன் உடலில் உண்டான உஷ்ணத்தைத் தணித்துக் கொள்ள பூவுலகில் பரியலி என்ற குளுமையான நந்தவனத்தை அடைந்து அங்கு ஒரு ரத்தின மண்டபத்தை எழுப்பி அதில் உமாதேவியார் தங்கியிருந்தார். சிவபெருமான் யோக நிஷ்டையில் ஆழ்ந்திருக்க கர்ப்பவதியான உமாதேவியார் இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு குதூகலமாக இருந்துவந்தார்.

இது இப்படியிருக்க பூவுலகில் செந்தூரன் உலகங்களையெல்லாம் வென்று தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் அழித்து வந்தான். அப்போது அசரீரியாக "அடே செந்தூரா! உனக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. உன்னைக் கொல்வதற்கென்றே உமாதேவியின் வயிற்றில் விநாயகமூர்த்தி கருவாகி வளர்ந்து வருகிறார்!" என்று ஒரு குரல் ஒலித்தது.

எனவே அந்தக் குரல் எங்கிருந்து வந்தது என்று தேடி குரல் கொடுத்தவரைக் கைது செய்யக் கட்டளையிட்ட செந்தூரன் எப்படியேனும் உமாதேவியின்

கருவில் வளரும் குழந்தையை அழிக்கப் புறப் பட்டான். பல இடங்களிலும் தேடி பரியலிக்கு வந்து இரத்தின மண்டபத்தில் பதுங்கியிருந்தான். சிவபெருமான் யோக நிஷ்டையிலும் உமாதேவி அயர்ந்த உறக்கத்திலும் ஆழ்ந்திருக்கும் சமயமாகப் பார்த்து செந்தூரன் உமா தேவியின் வயிற்றில் வாயுருபமாகச் சென்று அங்கு நிர்மலமாக வளர்ந்துவரும் கருவைக் கலைத்து எடுத்துக் கொண்டு வித்தியமலைச் சாரலில் நர்மதி நதியில் வீசி யெறிந்துவிட்டு நிம்மதியாகத் தன் அரண்மனையை அடைந்தான்.

கருவான விநாயகரின் சிரத்தை செந்தூரன் வீசி யெறிந்த இடத்தில் மாபெரும் பள்ளம் உண்டாயிற்று. அதற்கு கணேச குண்டம் என்ற பெயர் உண்டாயிற்று. அதிலிருந்து பெருகியோடிய இரத்தம் சோணை நதியா கியது. அந்தப் பாறைகள் செந்தூர வண்ணமாயின.

செந்தூரனால் கருவின் சிரம் அறுக்கப்பட்ட விஷயம் உமாதேவிக்கும் சிவபெருமானுக்கும் தெரியாமற் போயிற்று. தலையறுபட்ட பிறகும் அந்தக் கரு உமாதேவி யின் வயிற்றில் வளர்ந்து பத்தாவது மாதத்தில் உமா தேவி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

ஆனால் அந்தக் குழந்தை தலை இல்லாத முண்டமாக இருப்பதைக் கண்டு உமாதேவி மனம் கலங்கினாள். அதைக் கண்ட சிவபெருமான் உண்மையைப் புரிந்து கொண்டு தம் புதல்வனின் மகிமையை உலகத்துக்கு எடுத் துக்காட்ட விரும்பியவராய் தன் குமாரனை இருகைகளா லும் வாரியெடுத்து தம் மடிமீது வைத்துக் கொண்டார். இந் தச் செய்தியை அறிந்த பிரும்மாவும் திருமாலும் அங்கு வந்தனர். தலையில்லாமல் பிறந்திருப்பது விநாயகப்

பெருமானாகையால் அதற்கும் ஏதோ ஓர் காரணம்இருக்க வேண்டும் என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும் போது வாயில்லாத அந்தக் குழந்தை "தேவர்களே! வருந்தாதீர்கள் செந்தூரனை அழிப்பதற்காகவே நான் தலையில்லாத குழந்தையாக அவதரித்திருக்கிறேன்!" என்றார். அப்போது நாரதமுனிவர் "பிள்ளையாரே! தாங்கள் தலை மட்டுமில்லாமல் பிறந்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு விநாயகர் "நாரதரே! நான் உமாதேவியின் வயிற்றில் கருவாக உருவாகிக் கொண்டிருந்த எட்டாவது மாதத்தில் நானே அசரீரியாக உமாதேவியின் வயிற்றில் நான் வளர்ந்து வருவதைச் செந்தூரனுக்கு அறிவித்தேன். அவன் உடனே வாயுருபத்தில் உமாதேவியாரின் உதரத்தில் புகுந்து என் சிரத்தை அறுத்துச் சென்று நர்மதி நதியில் வீசி எறிந்தான். முன்பு கஜாமுகாசுரனுக்கு தேவகுரு கொடுத்த ஒரு வரத்தை நிறைவேற்ற நான் இவ்வாறு செய்தேன். எனவே கஜமுகாசூரனின் தலையையே நான் என் உடலில் தாங்குவேன். எனவே கஜமுகாசூரனின் தலையை சிவபெருமானிடமிருந்து எடுத்து வந்து என் உடலில் பொருத்துங்கள். அந்தக் கஜமுகத்தோடு நான் செந்தூரனைச் சம்ஹாரம் செய்வேன்" என்றார். தேவர்களும் அவ்வாறே செய்தனர். அன்று முதல் அவருக்கு கஜமுகர் என்ற பெயர் உண்டாயிற்று யானை முகத்துடன் அவர் அவதாரம் செய்த நாள் ஆவணி மாதம் பூர்வ பட்சம் சதுர்த்தி திதியாகையால் அச் சதுர்த்தி தினத்தில் விநாயகரைப் பூசித்தால் ஏற்படும் பலன்களை அளவிட்டுக் கூற இயலாது.

இவ்வாறு விநாயகர் யானை முகத்தோடு வளர்ந்து வரும் செய்தியை நாரத முனிவர் செந்தூரனின் அரண்

மனைக்குச் சென்று அவனிடம் அறிவித்துவிட்டார். முன்பு அசரீரி வாக்குப்படி யானை முகத்துடைய அந்தக் குழந்தையே தனக்குப் பகைவன் என்பதை அறிந்து அந்த யானை முகத்தானைக் கொல்வதற்கு செந்தூரன் கைலாயத்தை அடைந்தான்.

''எனக்குப் பகைவனாக யாரோ ஒருவன் இங்கு முளைத்து வருகிறானாமே! அவன் என் முன் வரட்டும். யானை முகம் படைத்த அவனை நான் இப்போதே கொன்றொழித்து விடுகிறேன்!" என்று கர்ஜித்தான்.

உடனே விநாயகர் ''துஷ்டனே உன்னை அழிக்கக் கூடியவன் நான் தான். என்னையும் மற்ற தேவர்களைப் போல எண்ணிவிடாதே! நான் நினைத்தால் இப்போதே உன்னை ஒழித்து விடுவேன்!" என்றார்.

அதைக் கேட்ட செந்தூரன் விநாயகரைப் பார்க்க அவர் குழந்தையாக இருப்பதைக் கண்டு எள்ளி நகைத்த படியே ''பால் மணம் மாறாக் குழந்தையான உன்னைக் கொல்லவும் எனக்கு மனம் வரவில்லையே! நீ உன் தாய் மடியில் ஏறி தாய்ப்பால் அருந்திவிட்டு முற்றத்தில்போய் விளையாடிக் கொண்டிரு!'' என்றான்.

உடனே விநாயகர் ''பெரிய இருள் கூட்டத்தை ஒரு சின்னஞ்சிறிய விளக்குத் திரியின் வெளிச்சமே விலக்கிவிடு கிறது. வானத்தை முட்டும் மலைகளையே ஒரு சிற்றுளி பிளந்து விடுகிறது. மதயானைக் கூட்டங்களை அங்குசமே அடக்கி விடுகிறது. நான் யார் என்பதை இப்போது பார்!" என்று விசுவரூபம் எடுத்துக் கொண்டார். வானத்தை எட்டும்படியான தலையுடன் மிகப் பெரிய உருவத்தைக் கண்ட செந்தூரன் நடுங்கினான். அவனைக் கஜானனர் தமது நீண்ட துதிக்கையினால் வாரி எடுத்து நசுக்கி தமது

மத்தகத்தில் அவன் இரத்தத்தைப் பூசிக் கொண்டார். உடனே திக்கெட்டும் பரிமளிக்கும் செந்தூரனின் உடல் விநாயக மூர்த்திக்கும் மத்தகத்தின் சாந்தாகி விட்டது; அவன் உயிர் அவரது திருவடிகளை அடைந்து பேரானந்த நிலையை அடைந்தது. வானத்திலிருந்த தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

## மூஷிக வாகனரும் விக்கின ராஜரும்

முன்பு ஒரு காலத்தில் இமயமலைச் சாரலில் சவுபரி என்ற முனிவர் தமது மனைவி மனோரமை என்பவளுடன் இல்லறம் நடத்தி தம்மிடம் வருபவர்க்கு அறநூல்களை உபதேசித்தும் சிறந்த சிவபக்தராகவும் விளங்கி வந்தார்.

ஒரு நாள் அந்த முனிவர் நதிக்கு நீராடச் சென்றிருந்தார். அப்போது வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த கிரௌஞ்சன் என்ற கந்தர்வ அரசன் முனிவரின் ஆசிரமத்திலிருந்த அவரது மனைவியின் அழகில் மோக தாபம் மேலிட வானத்திலிருந்து கீழே இறங்கி வந்து ஆசிரமத்தினுள் நுழைந்து அடங்காத ஆசை வெறியுடன் மனோரமையின் கையைத் தன் கைகளால் சட்டென்று பிடித்திழுத்தான். மனோரமையின் மனம் பதை பதைத்தது. "அடப்பாவி! என் கணவர் இல்லாத சமயத்தில் இங்கு வந்து என் கையைப் பிடித்து கூடிக்குலாவ இழுக்கிறாயே! என் கையை இப்போதே விட்டு விடு. இல்லையென்றால் உன்னை நான் அழித்துவிடுவேன்!" என்றாள்.

அதே சமயத்தில் முனிவரும் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்துவிட்டார். தன் மனைவியின் கையைப் பிடித்திழுக்கும் கிரௌஞ்சனைப் பார்த்தவுடன் அவர் கோபம் மிகவும்

கொண்டு "அடே துஷ்டா! ஒரு குற்றமும் அறியாத என் மனைவியை நீ கைப்பற்றி இழுத்த குற்றத்தின் தண்டனையாக மண்ணைத் தோண்டி வளையில் பதுங்கும் மூஷிகமாக (பெருச்சாளியாக) நீ மாறக் கடவாய்!" என்று சபித்தார். அதைக் கேட்ட கந்தர்வ அரசன் தான் செய்த பிழையை மன்னித்து சாபத்தை நீக்கும்படி வேண்டினான்.

முனிவர் மனமிரங்கி "என்னிடம் நீ மன்னிப்புக் கேட்டதால் உனக்கு சாபவிமோசனத்தை மட்டுமே சொல்கிறேன். இன்னும் சில நாள்களில் பராசுவ முனிவரின் ஆசிரமத்தில் விநாயகப் பெருமான் அவதரிப்பார். நீ அவருக்குப் பெருச்சாளி வாகனமானவுடன் என் சாபம் நீங்கும்!" என்றார். கந்தர்வ அரசன் பெருச்சாளி வடிவத்தில் உலகம் எங்கும் திரிந்து கொண்டிருந்தான்.

## மயூரேச விநாயகர்

முன்பு ஒரு காலத்தில் பிரும்மதேவன் உலகங்களனைத்தையும் படைத்துவிட்டு தினந்தோறும் வேதாகம புராணங்களைப் பூசித்து வந்தார். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பகை மூண்டு அதன் பயனாகப் பெரும் போர் நீண்ட காலம் நிகழ்ந்து வந்தது. போர்க்கருவிகளுடன் வேத நூல்களையும் ஆயுதங்களாக்கி அசுரர்களை அழித்து வந்த போதிலும் அசுரர்கள் மறைந்திருந்து தேவர்களை எப்படிப் பழி தீர்ப்பது என்பதிலேயே மிகவும் கவனமாக இருந்தார்கள்.

இப்படியிருக்க சங்கு உருவமுடைய சங்காசுரன் மாயைகளில் வல்ல கமலாசுரன் என்ற இரு அசுர சகோதரர்கள் மிகவும் பலசாலிகளாகவும் உயிரும் உடலும் போன்ற ஒற்றுமையுடனுமிருந்து வந்தார்கள். தேவர்கள் வேத நூல்களையே ஆயுதங்களாகப் பிரயோ

கித்து அசுரர்களை ஜெயித்து வருவதையறிந்து அந்த வேதங்களை பிரும்ம தேவனிடமிருந்து கைப்பற்ற நினைத்தார்கள்.

கமலாசுரன் மாயாசக்தியால் அரூபியாகி சத்திய லோகம் சென்று பிரும்ம தேவன் தியானத்திலிருக்கும் போது அவரறியாமல் வேத நூல்களைத் திருடிச் சென்று தன் சகோதரன் சங்காசுரனிடம் அவற்றை ஒப்படைத்தான். அவன் அந்த நூல்களைக் கடலுக்கடியில் ஒளித்து வைத்து பலத்த காவலையும் ஏற்படுத்தினான். தியானத்திலிருந்து கண்விழித்த பிரும்ம தேவன் வேத நூல்கள் களவு போனதையறிந்து கவலைப்பட்டார். உலகத்தில் வறுமையும் துன்பங்களும் ஏற்பட்டன. பிரும்ம தேவன் நடந்தவற்றை சிவபெருமானிடம் கூறினார். சிவ பெருமான் "யோக நித்திரை புரியும் திருமால் கண்விழித்து எழுந்த பிறகு அவற்றை மீட்டுத்தருவார்!" என்று கூறினார் "பாற்கடலில் நித்திரை புரியும் திருமால் கண் விழிப்பது எப்போது? அதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆகுமே அதுவரை எப்படி வேதங்களைப் பூசிக்காமல் நான் இருக்க முடியும். சங்காசுரனை சங்கரிப்பது எப்படி?" என்று பிரும்ம தேவன் சிவபெருமானைக் கேட்டார்.

"நான்முகனே! அஞ்ச வேண்டாம். சங்காசுரனுக்கு இளைய சகோதரன் கமலாசுரன், அவனை வெல்லக்கூடியவர் விநாயகர். அவரைத் தஞ்சமடைந்தால் அவர் கமலாசுரனை சந்தித்து வேத நூல்களை மீட்டுத்தருவார்!" என்று கூறினார். பிரும்ம தேவர் விநாயகரைக் குறித்து தவமிருந்தார். விநாயகர் அவர் முன் தோன்றி "வேதாகமப் புராணங்கள் மூன்றும் என் முகத்தின் மூன்று கண்களாக இருப்பதால் அவை பறிபோய்விட்டது என்று நீ கவலைப் பட வேண்டாம். இப்போதே நான் கமலாசுரனை சங்காரம்

செய்கிறேன். யோக நித்திரையிலிருந்து விழித்ததும் திருமால் சங்காசுரனைக் கொன்றிருப்பார்! என்று கூறியருளி மறைந்தார்.

பிறகு கணேசர் வேதியர் வடிவம் கொண்டு ஆயிரம் சீடர்களுடன் பூவுலகத்திற்கு வந்து சுந்தர ஆசிரமத்தை அடைந்தார். அங்கிருந்த முனிவர்கள் அந்தணன் வடிவில் வந்த விநாயகரை அடிபணிந்து 'ஐயனே தாங்கள் யார்? இங்கு வந்த விஷயம் என்ன?" என்று கேட்டனர்.

"என் பெயர் மல்லாளன். வேத நூல்கள் களவு போனதை அறிந்து என்னிடமுள்ள வேத நூல்களை உங்கள் வசம் ஒப்படைக்கவே நான் வந்திருக்கிறேன். நான் தங்குவதற்கு இடமளித்தால் மகிழ்ச்சியடைவேன்! என்றார். முனிவர்கள் மல்லாளருக்குப் புதிய ஆசிரமம் ஒன்றை அமைத்துக் கொடுத்தனர். வேதாகம நெறிகளை மல்லாளர் உலகமெங்கும் பரவச் செய்தார்.

இதை அறிந்த கமலாசுரன் போர் தொடுத்தான். நால் வகைப் படைகளும் சுந்தர ஆசிரமத்தை அடைந்தன. முனிவர்கள் பயந்தனர். விநாயகர் தமது மாய வலிமையால் ஆயிரக்கணக்கான போர் வீரர்களைத் தோன்றச் செய்து நீண்டகாலம் போர் நிகழ்ந்தது. கமலாசுரன் போரிலே தோற்றுவிட்டு தன் சகோதரனிடம் ஓடிச் சென்று நடந்தவற்றைக் கூறினான். மறுநாள் தனது படைகளுடன் போர்க்களத்திற்குச் செல்லும்படி சங்காசுரன் கட்டளையிட்டான்.

இதையறிந்த முனிவர்கள் விநாயகரை வணங்கி துதித்தார்கள். அப்போது மல்லாளர் அவர்களை நோக்கி "நாளை யுத்தத்தில் கமலாசுரனைச் சந்திப்பதற்கு ஓர் உபாயத்தை நீங்களே சொல்லுங்கள்" என்று கேட்டார்.

"மல்லாளரே! தங்களுக்குத் தெரியாதது ஒன்று மில்லை. நாளைய போரில் கமலாசுரன் ரதத்திலும் குதிரையிலும் போர் புரிவான். அவனை அழிக்கத் தாங்களும் ஒரு வாகனத்தின் மீது அமர்ந்து போர் புரிய வேண்டும். அதற்குத் தாங்களே ஒரு வேள்வியைச் செய் தால் அந்த வேள்வியிலிருந்து பிரம்மாண்டமான மயில் ஒன்று தோன்றும். நீங்கள் அந்த மயில் வாகனத்தில் அமர்ந்து போர்க்களத்திற்குச் செல்லவேண்டும்!" என் றனர்.

மல்லாளர் அவர்கள் கூறியவாறே வேள்வியைச் செய்து முடித்தார். அதன் முடிவில் மயில் ஒன்று வெளிப் பட்டது. மல்லாளர் அந்த மயில் வாகனத்தில் ஏறியமர்ந்து போர்க்களத்திற்கு தமது படைகளை அணி வகுத்துச் சென்றார். அப்போது புத்திதேவி "நாதா தங்களுக்குப் பதிலாக நானே போர்க்களத்திற்கு சென்று அந்த கமலா சுரனை வென்று வருவேன். தாங்கள் எனக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டும்!'' என்றாள்.

மயூரேசர் அவளது வேண்டுதலுக்கு இசைந்து புத்தி தேவிக்கு உதவும் நால்வகைப் படைகளையும் கொடுத்து அனுப்பி வைத்தார். போர்க்களத்தில் நீண்ட நேரம் போரிட்டும் கமலாசுரனை வெல்ல புத்திதேவியால் முடிய வில்லை. அவள் தன் சக்தியால் ஒரு வீரனை தோன்றச் செய்தாள். உடனே அவன் "என்னை ஈன்ற தாயே! என் தந்தை யார்?" என்று கேட்டான்.

"மைந்தனே சுந்தர ஆசிரமத்தில் முனிவர்கள் புடை சூழ மயூராசனத்தில் உன் தந்தை அமர்ந்திருப்பார் என்றாள். வீரன் மயூரேசரைச் சந்தித்து வணங்கி அவரது ஆசியை வேண்டினான். மயூரேசன் அவனுக்கு இலாபன் என்று பெயரிட்டு அவனைப் போருக்கு விடை கொடுத்துத் தாமும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்.

இலாபன் பயங்கரமாகப் போர் புரிந்து கமலாசுரனின் படைகளைச் சூறையாடிச் சின்னாபின்னப் படுத்தினான். கமலாசுரன் மோகனாஸ்திரத்தை இலாபனின் படை மீது வீச அவனது படைவீரர்கள் அனைவரும் மயக்கமுற்று விழுந்தனர். மயூரேசரும் தமது மகனின் அன்பைச் சோதிக்க தாமும் உணர்வற்று மயங்கியதைப் போல பூமியில் விழுந்து கிடந்தார். அதையறியாத இலாபன் மட்டும் தன்னந் தனியா நின்று பயங்கரமாகப் போர் புரிந்தான். கமலாசுரன் அவன் மீது ஏககாலத்தில் அள வற்ற பாணங்களை எய்தான். அத்தனை பாணங்களையும் தடுத்து அசுரனைக் குறி பார்த்து இலாபன் பாணங்களை எய்தான். இவ்வாறு ஆறு நாள்கள் தொடர்ந்தாற் போல கடும் போர் நிகழ்ந்தது. கமலாசுரன் மனம் சோர்ந்து களைப்படைந்து யுத்தகளத்தை விட்டு தன் அரண் மனைக்குச் சென்றான்.

அசுரன் சென்றதும் இலாபன் போர்க் களத்தில் மோகனாஸ்திரத்தால் மயங்கிக் கிடந்த வீரர்களிடையே தன் தந்தையான மயூரேசரும் வீழ்ந்து கிடப்பதைக் கண்டான். உடனே கஜாமுக மந்திரத்தைச் செபித்து கை நிறையத் தண்ணீரை அள்ளி அவர் முகத்தின் மீதும் படைவீரர்களின்மீதும் தெளித்தான். மயூரேசரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் விழித்து எழுந்தனர். அதைக் கண்டு முனிவர்கள் மனம் வருந்தினர். உடனே இலாபன "என் தந்தை இன்னமும் கண விழித்து எழாமலிருப்பதற்கு காரணம் அசுரன் விட்ட மோகனாஸ்திரம் அல்ல. இவ் வாறு ஆறு நாள்கள் கண் விழிக்காமல் இருப்பது அவரது திருவிளையாடல்களில் ஒன்றேயாகும். அதை உங்களுக்கு நான் தெளிவுபடுத்துகிறேன்!" என்று கூறி அவன் தன் உயிரை இழந்து விடவும் தயாராகி அங்கிருந்த வீரர்களை நோக்கி அக்கினி வளர்க்கும்படி கட்டளையிட்டு அக்கி னியை வலம் வந்து அதில் பாய்வதற்குத் தயாரானான்.

உடனே மயங்கிக் கிடந்த மயூரேசர் கண்விழித்து அவன் அக்கினியில் விழாதவாறு நிறுத்தினார் "மகனே! உன்னை சோதிக்கவே நான் இவ்வாறு நடித்தேன்" என்று மயூரேசர் கூறவும் இலாபன் மனம் தெளிந்தான்.

மறுநாள் போரில் மயூரேசர் கமலாசுரனுடன் போரிட்டு அவனை தனது தண்டாயுதத்தினால் அடித்துக் கொன்றார். அது அவன் மார்ப்பைப் பிளந்து அவன் உயிரை மாய்த்தது. அவன் இரத்தம் சிந்திய ஒவ்வொரு துளியிலிருந்தும் அசுரர்கள் தோன்றி போரிட்டனர். சித்தி புத்தி தேவிகள் தங்கள் சக்தியினால் போர் வீரர்களையும் பூதகணங்களையும் தோன்றச் செய்தனர். அந்தப் பூத கணங்கள் இரத்தத் துளிகளைக் கீழே விழாமல் விழுங்கின. இறுதியாக மயூரேசர், கமலாசுரனை தமது சூலாயுதத்தால் மூன்றிடங்களில் தாக்கினார். அவன் மலைகளைப் போல மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டு வீழ்ந்தான். தேவர் கள் மலர்மாரி பொழிந்தனர். முனிவர்கள் மயூரேசரை வணங்கி பூசித்தனர். கமலாசுரன் உடல் மூன்று துண்டு களாக விழுந்த அந்தத் தலம் 'திரிசந்து க்ஷேத்திரம்' என்ற பெயரைப் பெற்றது.

## பால விநாயகர் அவதாரம்

மைதல தேசத்தை சக்கரபாணி என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவி பெயர் உக்கிரை. அவர் களுக்கு நெடுநாள்களாக புத்திரபாக்கியம் ஏற்படவில்லை. அதனால் மனம் வருந்திய அரசன் தானம், தவம், விரதம், வேள்வி முதலியவைகளைச் செய்துவந்தான். அதன் பயனாக உத்திரை கருவுற்றாள். ஆனால் அவளுக்குப் பிறந்த குழந்தை பிறந்தவுடனேயே இறந்தது. இப்படியே பலமுறைகள் நிகழ்ந்ததால் அரசன் ஆட்சியை அமைச்சர்

களிடத்தில் ஒப்படைத்துவிட்டு காட்டில் சென்று தவம் செய்ய விரும்பினான் அப்போது அரண்மனைக்கு வந்த சவுனக முனிவர் காட்டிற்குச் சென்று சூரிய விரதம் அனுஷ்டித்து வந்தால் புத்திரப்பேறு உண்டாகும் என்று அரசனுக்கு உபதேசித்தார்.

அரச தம்பதி இருவரும் முனிவர் கூறியபடி சூரிய னுடைய விரதத்தை ஆரம்பித்துச் செய்து வந்தார்கள். விரதம் ஆரம்பித்த ஒன்பதாம் நாளன்று அரசன் மலடன் என்பதை அறிந்த சூரியன், உக்கிரையின் கனவில் அவள் கணவனைப் போல வடிவமெடுத்து அவளுடன் கூடி மகிழ்ந்து அவளை கருத்தரிக்கச் செய்து மறைந்தார்.

அதையறியாத உக்கிரை தன் கணவன்தான் முன்னிர வில் தன்னோடு கூடி மகிழ்ந்துவிட்டதாக நினைத்துக் கொண்டு தன் கணவனிடம் ''நாதா! காமம் கடல்போலப் பொங்கினாலும் நமது விரதம் முடியும்முன்பு தாங்கள் என்னிடம் நெருங்கிவிட்டீர்களே இது தவறல்லவா" என்று கேட்டாள்.

அரசன் திகைத்தான் ''அரசியே! நீ என்ன கூறு கிறாய்! நடந்த உண்மையைச் சொல்!'' என்றான்.

''நேற்றிரவு நீங்கள் என் பள்ளியறைக்கு வந்து என்னோடு கூடி மகிழ்ந்தீர்களே! அதைத்தானே சொல் கிறேன்!" என்றாள் அரசி.

அரசன் வியப்படைந்து ''கடந்த இரவு வந்தவன் நானல்லன்! நமக்குப் பிள்ளைவரம் அளிப்பதற்காக இறை வனே என் வடிவில் வந்திருக்கிறான். இதில் சந்தேக மில்லை. உன் வயிற்றில் கருவுண்டாகிவிட்டதால் இனி உனக்கு விருப்பமான பண்டங்களையே உண்டு நீ ஆனந்த மாக இரு!" என்று சொல்லிவிட்டு தனக்கும் ஒரு மகன் பிறக்கிறானே என்று அரசன் மகிழ்ந்திருந்தான்

பத்து மாதங்களில் உக்கிரை ஒரு குமாரனை சிந்து நதிக்கரையில் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தைக்கு மூன்று கண்களும் ஒளிவீசும் உடம்பும் சிவந்த சடைகளும் இரு கரங்களில் சூலாயுதமும் சக்கரமும் இருந்தன. அதைக் கண்ட அரசி மூர்ச்சையடைந்தாள். அவளது தோழிகளும் பயந்து அலறியடித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள்.

அப்போது வருணபகவான் அந்தணர் வடிவத்தில் அங்கு வந்து அரசியின் மயக்கத்தை நீக்கி குழந்தையைத் தமது கரத்தில் ஏந்தி அரண்மனைக்குக் கொண்டுசென்று சக்கரபாணி மன்னரின் முன்வைத்து ''இந்தக் குழந்தை சிந்துநதிக்கரையில் பிறந்ததால் இவனுக்கு 'சிந்து' என்று பெயர் வழங்கட்டும்!" என்று கூறி மறைந்தார்.

சிந்து பாலகனாக இருக்கும்போதே அதிவீர பராக்கிரமங்களைச் செய்தான். ஆகாயத்தில் பாய்ந்தான். தேவலோகம் சென்று இந்திரனது வெள்ளை யானையின் முகத்தில் அறைவான. அதன்மீது ஏறி சவாரி செய்வான் கடலில் குதித்து கடல்நீரையெல்லாம் கலக்குவான். மலைகளை தன் கைகளால் ஆட்டி அசைத்து பெயர்த்து வீசுவான்.

இத்தகைய சிறுவனின் வீரதீரங்களை அசுரகுலமான சுக்கிரன் கண்டு அவன்மீது அதிக அன்புகொண்டு அவனால் அசுரகுலம் தழைக்கும் என்று கருதி அவனுக்கு அழிவு நேராதபடி பல மந்திரங்களையும் உபதேசித்து வந்தார். சிவபெருமானைக் குறித்து தவம் செய்து அவர் அருளைப் பெற்று மூவுலகங்களும் பயந்து நடுங்கும் வண்ணம் ஏகச்சக்கராதிபதி பதவியை நீ விரைவில் அடைவாயாக என்று வாழ்த்தினார்.

சுக்கிரன் அறியாதவாறே சிந்துவும் கடுமையாகத் தவம் செய்தான். சிவபெருமான் அவன்முன் தோன்றி அவன் வேண்டிய வரங்களை அளித்தார்.

"சிந்துவே விநாயகர் அவதரித்தாலன்றி உன்னை எதிர்த்துக் கொல்வதற்கு வேறு எவராலுமே முடியாது!" என்று கூறி மறைந்தார்.

அதன் பிறகு சிந்துராஜன் முடிசூடிக்கொண்டு தேவ லோகம் சத்தியலோகம் நாகலோகம் ஆகிய உலகங்களின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று பூவுலகிற்குத் திரும்பி வந்தான்.

இப்படியிருக்க தேவேந்திரன் மகாவிஷ்ணுவை தஞ்ச மடைந்து அவரது உதவியை நாடினான். விஷ்ணுவும் சிந்துராஜனுடன் போரிட்டு முடிவில் அவனுக்குப் பணிந்து அவனிடுகின்ற குற்றேவல்களைச் செய்ய ஒப்புக் கொண் டார்.

பின்னர் தேவகுருவின் யோசனைப்படி தேவர்கள் அனைவரும் விநாயகரைப் பூசித்து அவரைக்கொண்டு சிந்துராஜனை அழிக்கத் திட்டமிட்டனர். பின்னர் திரிச் சந்தி க்ஷேத்திரத்தில் விநாயகர்மயூரேசராக அவதரித்தார். அதே சமயத்தில் சிந்துராஜனின் தலைநகரில் இரத்த மழை பெய்தது. ஆந்தைகள் அலறின. சிந்துராஜனின் இடக்கண்ணும் தோளும் துடித்தன.

சிந்துராஜன், விநாயகர் மயூரேசராக அவதரித்த செய்தியை அறிந்து தன்னை அழிப்பதற்காக அவதரித் துள்ள அந்தக் குழந்தையைக் கொன்றுவிட்டு வருமாறு மிருத்திராசுரன் என்ற அசுரனை கழுகு வடிவமெடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டான். அந்தக் கழுகு மயூரேச ரைக் கவர்ந்து செல்ல பறந்து சென்றது. மயூரேசர் அந்தக் கழுகின் கழுத்தைத் திருகிக் கொன்று விட்டார். பின்னர் எலிகள் வடிவில் அசுரர்களை அனுப்ப - மயூ ரேசர் பூனை வடிவமெடுத்து அவர்களை அழித்தார்.

பிறகு அரக்கி ஒருத்தியை அனுப்ப அவளையும் மயூரேசர் அழித்தார். குதிரை வடிவிலும் ஆமை வடிவிலும் பலப்பல வகையிலும் மயூரேசரைக் கொல்வதற்கு அசுரர்களை சிந்துராஜன் அனுப்பி வைத்தான். அனைவரையும் அழித்த மயூரேசர் நாகலோகம் சென்று மயில் வாகனம் பெற்று சிந்துராஜனுடன் போர் செய்து அவனைக் கொன்றொழித்தார். தேவர்களைச் சிறையிலிருந்து மீட்டார். தேவர்களும் தவமுனிவர்களும் மயூரேசரை வணங்கிப் பணிந்து போற்றினர்.

## தூமகேது விநாயகர் அவதாரம்

விந்திய தேசத்தில் மசிபாதினி நகரத்தை தூமாசுரன் என்ற அசுர ராஜன் ஆண்டுவந்தான். அவன் ஒரு சிவ பக்தன். நீதி நெறி தவறாமல் ஆட்சி புரிந்து வந்த அவனது அரண்மனைக்கு பிருகு முனிவர் வந்தார். தூமாசுரன் அவரை வரவேற்று உபசரித்து தனக்கு நெடுநாள்களாக இருந்து வந்த சந்தேகத்தைப் பற்றி விளக்கம் கேட்டான். "நான் தாழ்ந்த குலமான அசுர வம்சத்தில் பிறந்தவன் என்றாலும் எனக்கு சகல சௌபாக்கியங்களும் சிவபக்தியும் எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டான்.

பிருகு முனிவர் அவனை நோக்கி "தூமாசுரனே! நீ முற்பிறவியில் விகுதி என்ற அரசனாகப் பிறந்து இந்திர பதவியை அடையவேண்டி தொண்ணூற்று ஒன்பது யாகங்களைச் செய்து நூறாவது யாகத்தையும் செய்யத் தொடங்கினாய். அதையறிந்த தேவேந்திரன் நூறாவது யாகத்தையும் நீ முடித்துவிட்டால் அவனது பதவியை அடைந்து விடுவாய் என்ற பயத்தால் அந்த யாகத்தை நீ

நடத்தவிடாமல் செய்ய ஆலோசித்தான். நாரதரைக் கொண்டு உன் யாகத்தை அழிக்கத் திட்டமிட்டு அவரை உன்னிடம் அனுப்பி வைத்தான். நாரதர் கிழட்டுப் பிராமண வடிவமெடுத்து உனது யாகசாலைக்கு வந்தார்.

நீயும் அவரை வரவேற்று உபசரித்து "தாங்கள் யார்! நாடி வந்த காரணம் என்ன?" என்று கேட்டாய். அதற்கு அவர் "அரசே! என் பெயர் சிவசன்மன் நான் உன்னிடம் ஒரு தானம் வாங்கிச் செல்ல வந்தேன். அதாவது உன் மனைவியின் மீது நான் ஆசைவைத்து விட்டதால் அவளை நீ எனக்குத் தானமாகத் தரவேண்டும் என்று கேட்டார். நீ திடுக்கிட்டு - திகைத்து "பிறன் மனைவியின் மீது தங்களைப் போன்றவர்கள் இச்சைப்படலாமா! பழிபாவத்திற்கு இடமான ஒரு பொருளைக் கொடுத்தால் கொடுப்பவனும் ஏற்பவனும் தீயவர்களாகி விடுவார்களே! ஆகவே என் பத்தினியைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் தானமாகத் தருவதாகச் சொன்னதை அவர் கேட்கவில்லை.

நீயோ "அந்தணரே என்னைப் பொருத்தவரையில் என் ராஜ்யமும் எனக்கு ஒரு மனைவியைப் போலத்தான். நான் என் ராஜ்யத்தை உங்களுக்குத் தானமாகத் தருகிறேன். ஏராளமான கன்னிப்பெண்களையும் தருகிறேன்!" என்றாய். அதற்கும் அவர் இணங்காமல் "நான் விரும்பிய பொருளைத்தான் உன்னிடமிருந்து அடைய விரும்புகிறேன். தேவ மங்கையரைவிட அழகும் கவர்ச்சியும் நல்ல குணமும் வாய்ந்த உன் மனைவிதான் எனக்கு வேண்டும்! கொடுத்தால் அவளைக்கொடு; இல்லையென்றால் தானமே தருவதில்லை" என்று சொல்லிவிடு! என்றார்.

நீ உன் மனைவியைத் தானம் கொடுக்க மனமின்றி மறுத்துவிட்டாய். அதனால் அவர் உன்னைப் பலவாறாக நிந்தித்து "நீ அரக்கத்தனமாகத் தானம் கொடுக்க மறுத்த

தால் அடுத்த பிறவியில் நீ ஒரு அசுரனாகப் பிறக்கக் கடவாய்!" என்று சபித்து உன்னுடைய யாகசாலையையும் சின்னாபின்னப்படுத்தி விட்டுப் போய் விட்டார்.

அதனால்தான் நீ இப்பிறவியில் அரக்கனாகப் பிறந்தாலும் முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனாகவே நற்குணங்களையும் பெற்று சகல சௌபாக்கியங்களையும் பெற்றுத் திகழ்கிறாய் என்று சொல்லிவிட்டு பிருகுமுனிவர் விடைபெற்றுச் சென்றுவிட்டார். தூமாசுரன் முன்பு போல ராஜியத்தை ஆண்டுவந்தான்

அப்போது அவனது அரசாட்சியில் மாதவராசன் என்ற சிற்றரசன் ஒருவன் தன் மனைவி சுமுதை என்பவளோடு வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு மக்கட்பேறே உண்டாகவில்லை. அதனால் மாதவராசன் தன் மனைவியை நோக்கி "சீசீ நீயும் ஒரு பெண்ணா! ஊரும் உலகும் உன்னை மலடி என்று பழிக்கும் போது நீ இன்னமும் வெட்கம் மானமில்லாது உயிர் வாழ்கிறாயே உன் முகத்தைப் பார்த்தாலே எனக்கு ஆத்திரம் வருகிறதே! பிள்ளை பெறமாட்டாத வெற்றுடம்பைச் சுமந்து கொண்டு இந்த நாட்டில் இருப்பதைவிட நீ காட்டிற்குப் போய்த் திரியலாமே இனி என் முகத்தில் விழிக்காதே" என்று கடிந்துரைத்தான்.

எனவே அவள் காட்டிற்குச் சென்று மிகவும் கஷ்டப் பட்டாள். பின்னர் அன்ன ஆகாரமின்றி பிள்ளைவரம் வேண்டி மகாவிஷ்ணுவைக் குறித்து பன்னிரண்டு ஆண்டுகள் கடுந்தவம் செய்தாள். அப்போது விநாயகப் பெருமான் சங்கு, சக்கரம், கோதண்டம் முதலியவைகளை ஏந்தி மகாவிஷ்ணுவைப் போல காட்சியளித்து "சுமுதையே புத்திர பாக்கியம் கிடைக்கவில்லையே என்று கவலைப்பட

வேண்டாம். நானே உன் விருப்பப்படி உனக்குப் புத்திர னாக அவதரிப்பேன்" என்றார்.

சுமுதை கானகத்திலிருந்து அரண்மனைக்குத் திரும்பி நடந்தவை அனைத்தையும் தன் கணவனிடம் கூறினாள். விநாயகரின் அருளால் சுமுதை கருத்தரித்தாள். அப்போது அந்த நகரத்தை ஆட்சி செய்து வந்த அசுரவேந்தன் தூமா சுரன் ஏகாதிபத்திய வெறியுடன் பிற நாடுகள் மீது படை யெடுக்கத் தீர்மானித்தான். அப்போது ஆகாயத்திலிருந்து ஓர் அசரீரி தூமாசுரனே நீ செங்கோல் முறைதவறி வேற்று அரசர்கள்மீது படையெடுத்துச் செல்லத் துணிந்து விட்டாய். உன்னை அழிப்பதற்கு மகாவிஷ்ணுவே சுமுதை யின் வயிற்றில் கருவாகி வளர்ந்து வருகிறார்! என்று கூறியது.

எனவே தூமாசுரன் தனது படைத் தளபதிகளில் ஒருவனான வித்ருமனைப் படைகளுடன் அனுப்பினார். அவன் நள்ளிரவில் சுமுதையின் அரண்மனைக்குச் சென்று மஞ்சத்தில் படுத்து ஆழ்ந்த நித்திரையிலிருந்த சுமுதையை யும் அவள் கணவனையும் மஞ்சத்தோடு தூக்கிச் சென்று ஒருகாட்டில் கொண்டு வைத்தான். நித்திரையில் இருந்த கர்ப்பவதியான சுமுதையைக் கொல்வதற்கு வித்ரும னுக்கு மனம் வரவில்லை. அந் நிலையில் சுமுதையும் அவள் கணவனும் கண்விழித்தனர். வித்ருமன் அரச கட்டளையைக் கூறி அவர்களைக் கொல்வதற்குத் தயாரா னான். அப்போது மகாவிஷ்ணுவின் சக்தியால் அளவற்ற வீரர்கள் தோன்றி எதிரிப் படை வீரர்களைக் கொன்று வித்ருமனை மட்டும் உயிரோடு விட்டுவிட்டான். அவன் தூமாசுரனிடம் முறையிட்டான். குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தையைக் கொன்று விடும்படி தூமாசூரன் படை வீரர்களை அனுப்பி வைத்தான்.

அவர்கள் அந்தக் காட்டிலேயே மறைந்துகொண்டு, சுமுதையின் பிரசவ காலம்வரும்வரையில் காத்திருந்தனர். மாதவராசன் தன் மனைவியை இரவும், பகலுமாக வாளுங் கையுமாக காவல் புரிந்துவந்தான். இவ்வாறு இருக்கும் போது சுமுதைக்குப் பிரசவகாலம் நெருங்கியது. அதை யறிந்த விநாயகப் பெருமான் அழகியதொரு ஆண்குழந்தை யாக உருமாறி அவளது மடியில் கிடந்தார். அந்தக் குழந்தை சிவந்த மேனியும் பிறைசூடிய நெற்றியும் குண்டலமணிந்த செவிகளும், மழுப்படை, தாமரை மலர், செபமாலை, மோதகம் முதலியவைகளை ஏந்திய நான்கு கரங்களுடனும் மூன்று விழிகளுடனும் பிரகாசமான அவயவங்களுடனும் விளங்கியது. இதையறிந்த தூமா சுரனும் அவனது போர் வீரர்களும் சுமுதைக்குக் குழந்தை பிறந்த செய்தியை அறிந்து, அந்தக் குழந்தையினால் தமக்கு அழிவு ஏற்படும் என்பதை உணர்ந்து, எப்படி யாவது அந்தக் குழந்தையை அழித்துவிட எண்ணி அக் காட்டுக்கு விரைந்தனர்.

மாதவராசனின் கட்டுக்காவலை மீறி அவர்களால் அவனுடன் போர் செய்து, அந்தக் குழந்தையைக் கைப் பற்ற முடியவில்லை. எனவே தூமாசுரனும் அவனது போர் வீரர்களும் மாதவராசனையும் சுமுதையையும் சுற்றி வளைத்துக் கைப்பற்ற முயன்றனர். அப்போது ஓர் அழகிய நிகழ்ச்சி நிகழ்ந்தது. விநாயகப் பெருமான், பிள்ளையார் பெருமானாக, குழந்தை வடிவிலிருந்துங்கூட தமது மகிமையினால் தமது துதிக்கை வழியாக பெரும் புகையை வெளிவரச் செய்தார். அந்தப் புகையினால் கண்களின் பார்வை மறைக்கப்பட்டும், புகையினால் மூச்சுத் திணறி யும் அவதிப்பட்டனர். எங்கு பார்த்தாலும் ஒரே மையிருட்டு! எங்கும் இருள் மயம்!

அப்போது அந்தக் குழந்தை தனது சின்னஞ்சிறுபவள வாயைத் திறந்து "அம்மா, நான்தான் மூவுலகும் புகழும்

விநாயக மூர்த்தியாவேன் முன்பு ஒருமுறை நீங்கள் புத்திர பேற்றை விரும்பி தவம் செய்தீர்கள். அப்போது நான் தான் உங்கள் கவலையைத் தீர்த்தேன் இப்போது தூமா சுரனுக்குப் பயந்து, காட்டில் அலைந்து திரியும் உங்க ளுடைய கவலையை நீக்கவே நான் சிறு குழந்தையாக அவதரித்தேன் நான் உங்கள் கருவில் உதித்தவனல்லேன் உங்களுக்குக் கொடுத்த வரத்தின்படி, மகாவிஷ்ணுவை உங்கள் உதரத்தில் கருவாக மாறும்படி நானதான கட்டளையிட்டேன். உன் வயிற்றில் வளரும் கருவையும் உங்கள் கணவனையும் எந்தவிதமான அபாயமும் அணு காதவாறு காப்பதற்காக நானே அந்தத் தூமாசுரனை அழித்து, உங்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் வழங்குவேன். உங்களுக்குப் பிறக்கும் உங்கள் மகன் தூமாசுரனின் ராஜ்யத்தை ஆள்வான்!" என்று கூறியது.

அதைக் கேட்ட தம்பதிகள் இருவரும் வியந்தனர். இந்தக் காட்சியை ஒளிந்திருந்து பார்த்த தூமாசூரனின் காவலர்கள், தங்கள் அரசனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினார்கள். உடனே அவன் தன் படைகளைத் திரட்டிக் கொண்டு போருக்குப் புறப்பட்டான். அப்போது பாலச் சந்திர விநாயகர் தம் தாயின் மடியில் படுத்துப் பால் குடித்துக் கொண்டிருந்தார். அவர் எதிரில் தூமாசூரன் ஏராளமான பாணங்களை எய்தான். அவை புகைந்து சீறிக் கொண்டு பாலச்சந்திர விநாயகரைச் சூழ்ந்து கொண்டன அதைக் கண்டு சுமுதையும் மாதவராஜனும் மிகவும் வருந்தினர்.

அப்போது பாலச்சந்திர விநாயகர், தம் தாய் தந்தை யரை நோக்கி, நீங்கள் அஞ்சாதீர்கள்! என்று கூறிவிட்டு தம் வாயிலிருந்து பந்துகளைப் போன்ற புகைப்படங்களை வெளியே விட்டார். அவை எங்கும் சுழன்று எல்லாத்திசை களிலும் பரவி கனத்த இருளை ஏற்படுத்தியது. உடனே தூமாசூரனும் அவனது போர்வீரர்களும் இருளில் பார்வை

தெரியாமல் மயங்க நேரிட்டது. அவர்கள் பாதாளலோகத்தில் இடறிவிழுந்து மடிந்தார்கள், மாதவராசனும் சுமுதையும் மகிழ்ந்தனர். பின்னர் குழந்தையாக இருந்த பாலச்சந்திரவிநாயகர் தமது தோற்றத்தை மறைத்து பக்தர்களின் மனக்கோயிலில் குடியேறிக் கொண்டார்.

தூமாசுரனையும் அவனது சேனைகளையும் ஒரு தொடிப்பொழுதில் தூமத்தினால் (புகையினால்) அழித்துவிட்ட பாலச்சந்திர விநாயகருக்கு அன்று முதல் தூமகேது விநாயகர் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

சில நாள்களுக்குப் பிறகு சுமுதையின் வயிற்றில் மகாவிஷ்ணு அவதரித்தார், அக் குழந்தை வளர்ந்து வாலிபப் பருவமடைந்ததும் மாதவராசன் அவனுக்கு முடிசூட்டி விட்டு, கானகம் சென்று தவம் செய்யலானான். பின்னர் திருமகனாகப் பிறந்த திருமால் ஆண்டு வந்தார்.

பின்னர் பிரமாசுரன் என்பவனின் மகனான துராசுரன் என்பவன் சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் செய்து, தனக்கு எவராலும் அழிவு ஏற்படக்கூடாது என்ற வரத்தைப் பெற்றுக் கொண்டான். ஆனால் சிவபெருமான் "என்னுடைய சக்தியே உமாதேவியிடத்தில் விநாயகனாக பிறந்து உன் தலையில் கால் வைத்து மிதித்து, உனக்கு அழிவை ஏற்படுத்தினாலன்றி வேறு எவராலும் உனக்கு அழிவே ஏற்படாது" என்று கூறி மறைந்தார். சிவபெருமான் கூறிய வண்ணமே வரம் பெற்ற துராசுரன் தேவர்களுக்கும் பூவுலக மக்களுக்கும் தீங்கிழைத்து வந்ததால், விநாயகப் பெருமான், வக்கிரதுண்ட விநாயகராக அவதாரம் எடுத்து அவனைச் சம்ஹாரம் செய்தார்.

## துண்டிராஜ விநாயகர் அவதாரம்

மிகப் பழைய காலத்தில், சுவாயம்புவ மனு என்ற சக்கரவர்த்தி பூவுலகத்தை ஆண்டு மறைந்தபிறகு அறுபதினாயிரம் ஆண்டுகள் வரையில் பூமியில் மழையே பொழியவில்லை. அதனால் சகல தேசங்களும் வறட்சியடைந்தன.

அதைக் கண்டு வருந்திய பிரம்மதேவர் புதிய அரசனைத் தேடி பூவுலகமெங்கும் அலைந்தார். அப்போது காசி நகரத்தில், மன்னர் குலத்துப் பிறந்த ரிபுஞ்சயன் என்பவன் அருந்தவம் செய்து கொண்டிருந்தான். நான்முகன் அவன் முன்பு தோன்றி "அரசனே! ஆட்சி செய்வோரில்லாமல் பூவுலக தேசங்கள் வறண்டுவிட்டன. ஆகையால் நீயே பூவுலகத்திற்குச் சென்று சக்கரவர்த்தியாகி ஆட்சி செலுத்தவேண்டும். உனக்கு ஆதிசேஷன் தனது மகளான அங்கமோகினியைத் திருமணம் செய்து கொடுப்பான். தேவர்கள் ஆடையாபரணங்களை வழங்குவர். உன்னை யாவரும் துவோதசன் என்று வழங்குவார்கள்" என்று கூறி அவனுக்கு முடிசூட்டினார்.

அப்போது ரிபுஞ்சயன், பிரம்மனை நோக்கி "பிரம்மதேவரே! காசி நகரத்தில் தேவர்கள் வாழ்கிறார்கள் அவர்கள் நீங்கினால் ஒழிய நான் உலக அரசாட்சிப் பொறுப்பை ஏற்கமாட்டேன்!" என்றான்.

பிரம்மதேவன் அதற்கு ஒப்புக்கொண்டு, காசிவிஸ்வநாதப் பெருமானைத் தரிசிக்கச் சென்றார். அப்போது சிவபெருமான், தமது கணங்களுடன் மந்திரகிரிக்குச் சென்றிருந்தார். மந்திரகிரியில் தவம்புரிந்த மரீசீ முனிவருக்கு சிவலோக வாசம் அளித்துவிட்டு மந்திரகிரியைப் பார்த்து "உனக்கு வேண்டும் வரம் யாது?" என்று சிவபெருமான் கேட்க, மந்திரகிரி "சுவாமி தாங்கள் காசித்தலத்தில்

எப்படி தேவர்கள் புடைசூழ வாசம் செய்கிறீர்களோ அதைப் போலவே எனது கிரியிலும் வாசம் செய்ய வேண்டும்" என்று கேட்டது. அதே சமயத்தில் அங்கிருந்த பிரும்மதேவர் சிவபெருமானை நோக்கி "பெரியோனே! சுவாயம்புவமனுவிற்குப் பிறகு உலகத்தை அரசாட்சி செய்பவர் இல்லாமல் எண்ணற்ற ஆண்டுகள் மழையின்றி உலகம் வறண்டுவிட்டது. அதற்கு ஓர் அரசனை நியமிக்க விரும்பிய நான் காசி தலத்தில் உங்களைக் குறித்து தவம் செய்து கொண்டிருந்த ரிபுஞ்சயன் என்பவனுக்கு முடிசூட்டினேன். ஆனால் அவனோ காசி தலத்தில் தேவர்களே இல்லாமல் வெளியேறினால்தான் அரசுப் பொறுப்பை ஏற்பதாகக் கூறினான்.

நானும் வேறு வழியின்றி அவனது நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டேன். ஆகவே "மந்திரகிரி கோரிக்கையை தாங்கள் நிறைவேற்ற வேண்டும்" என்றார்.

சிவபெருமானும் அதற்கு இணங்கி தமது பூதகணங்களுடனும் தேவர்களுடனும் மந்திரகிரியிலேயே தங்கி விட்டார்.

அன்று முதல் காசி தலத்தில் தேவர்கள் வசிக்கவில்லை. ரிபுஞ்சயனும் காசி நகரில் அரசனாக வீற்றிருந்து ஆதிசேஷனின் மகளை மணந்து நீதி நெறி தவறாமல் ஆட்சி புரிந்து வந்தான். அவன் ஆட்சியில் மாதந்தோறும் மும்மாரி பெய்தது. பயிர்கள் செழித்து வளர்ந்தன. எனவே நீண்டகாலம் அவன் நீதி நெறி தவறாமல் ஆண்டு வந்தான்.

இவ்வாறு இருக்க காசியில் தேவர்கள் நடமாட்டம் இல்லாமலிருப்பதைக் குறித்து மனம் வருந்திய தேவர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி தேவகுருவை அணுகி "குருதேவா! நாங்கள் மீண்டும் காசி தலத்தில் எவ்வாறு சஞ்சரிக்க முடியும்?" என்று கேட்டனர்.

அதற்கு பிருகஸ்பதிதேவர் ''ரிபுஞ்சயன் நீதி தவறா மல் ஆட்சி செய்து வருவதால் அவனுக்கு அளிக்கப்பட்ட வரத்தை நம்மால் மீறமுடியாது. அவனாட்சியில் நீதி தவறினால் அவன் பெற்ற வரம் பயனின்றிப் போகும்!" என்றார்.

அதைக்கேட்ட தேவேந்திரன் அக்கினி தேவனை அழைத்து காசி நகரத்தில் அக்கினியே இல்லாதபடி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டான். அவ்வாறே அக்கினிதேவனும் அப்படியே செய்ததால் பிரயாகையி லிருந்த முனிவர்கள் வேள்விகளைச் செய்ய முடியாமல் தவித்தார்கள். அவர்களனைவரும் ரிபுஞ்சயனிடம் சென்று தமக்கு ஏற்பட்ட இடையூறுகளைக் கூறி முறையிட் டார்கள். ரிபுஞ்சயன் அத்தகைய நிலை ஏற்பட்டது தேவர் களின் சூழ்ச்சி என்றறிந்து தானே அக்கினியாகவும் மேகமாகவும் காற்றாகவும் சூரிய சந்திரனாகவும் இருந்து அவற்றிலிருந்து தானும் வேறாகி ஆட்சி புரிந்துவந்தான். இவ்வளவு நீண்டகாலம் அவன் அரசாண்டதால் தேவர் கள் வெட்கித் தலைகுனிந்தனர்.

இந்நிலையில் மந்திரகிரியில் வாசம் செய்த விஸ்வ நாதர் காசி தலத்திற்குத் திரும்பிச் செல்ல எண்ணினார். எனவே அவரே தேவர்களை காசி நகரத்திற்குச் சென்று ரிபுஞ்சயனை நீதிநெறியிலிருந்து தவறும்படி செய்யுமாறு கட்டளையிட்டார்.

தேவர்கள் காசியை அடைந்தனர் அவர்கள் முயற்சி களனைத்தும் தோல்வியுற்றன. அதனால் சிவபெருமான் அந்தக் காரியத்தை செய்து முடிக்க பிள்ளையாராகிய விநாயகப் பெருமானால்தான் முடியும் என்று நினைத்து உருண்டி விநாயகரிடம் தமது எண்ணத்தைச் சொன்னார்.

விநாயகர் ஒரு பால சோதிடனைப் போல வேடம் தரித்து கனவுகளின் பலன்களை சொல்பவரைப்போல காசி நகரத்திற்குச் சென்றார். காசி நகரத்து மக்களுக்கு இரவில் பல கனவுகளை தோன்றச் செய்து மறுநாள் அந்தக் கனவுக்குரிய விளக்கங்களையும் பரிகாரங்களையும் சொல்லி வந்தார். காசி நகரத்திற்கு வெகு விரைவிலேயே அழிவு ஏற்படப் போவதாகவும் அதனால் மக்களனைவரும் அங்கிருந்து தப்பியோடும்படியாகவும் கூறி மக்கள் மனத்தில் ஒரு பீதியை ஏற்படுத்தினார். இதனால் மக்கள் காசி நகரைவிட்டு வெளியேறலானார்கள். ரிபுஞ்சய மன்னனின் பட்டத்து அரசிகளில் ஒருத்தியான லீலாவதி என்பவள் சோதிடனின் மகிமையைப் பற்றிக் கேள்விப்பட்டு அவனை அரசனிடம் அழைத்துவரச் செய்தாள்.

சோதிடர் வடிவிலிருந்த உருண்டி விநாயகரை ரிபுஞ்சயன் வரவேற்று உபசரித்து "ஜோதிடரே திரிகால ஞானியாகிய தாங்கள் எனக்கு ஒரு விஷயத்தில் ஆலோசனை கூறவேண்டும். நான் இந்த உலகத்தை எனது உயிரினும் மேலாக மதித்து அரசாட்சி செய்து வருகிறேன். ஆனால் இப்போது எனது நாட்டில் தர்மநெறி குறைந்து வருகின்றன. இதனால் எனக்கு மனக்குழப்பமாக இருக்கிறது. ஆட்சிப் பற்று குறைந்த எனக்கு அறிவு வேட்கை அதிகமாக இருககிறது. அதனால் எனது ஆட்சி நீடிக்குமா? அல்லது அது என்னை விட்டுப் போய்விடுமா? என்பதைப் பற்றி தாங்கள்தான் கூறவேண்டும்" என்று மனம் திறந்து கேட்டான்.

அதற்கு கணேச சோதிடர் "அரசே! இன்றையிலிருந்து பதினேழாம் நாளன்று உனது நகருக்கு ஒர் அந்தணர் வருவார். அவர் உனது கேள்விக்குப் பதிலளிப்பார். அவர்

சொல்வது போல நீ நடந்துகொள்!" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

இந்த விஷயத்தை அறிந்த சிவபெருமான் மஹா விஷ்ணுவை அந்தணராக உருமாற்றிச் செல்லுமாறு பணித்தார். மகாவிஷ்ணு ஒரு பிக்ஷுவாகவும் இலக்ஷ்மி தேவி மானிடப் பெண்ணாகவும் உருமாறி காசி நகரத்தை அடைந்தனர். அந்தணர் வடிவத்திலிருந்த மஹாவிஷ்ணு அந்நகரத்து ஆடவர்களிடம் சென்று "நீங்கள் செய்யும் யாகங்களுக்கு பசுக்களையும் ஆடுகளையும் பலி கொடுப்பது மிகவும் பாவச்செயலாகும். அதனால் இனிவரும் பிறவிகளில் அதிக துன்பங்களை அடையப் போகிறீர்கள்" என்று கூறி அவர்கள் மனத்தைப் பலவாறாகவும் மாற்றி யாகங்களை நடத்தாமற் செய்தார். அறநெறிகளைவிட அறிவே சிறந்தது என்று வாதாடினார். பதினேழாவது நாளன்று விஷ்ணுவும் இலக்ஷ்மியும் ரிபுஞ்சயனின் அரண் மனைக்குச் சென்றனர்.

ரிபுஞ்சயன் அவரை வரவேற்று உபசரித்து "சுவாமி! புத்தபிக்ஷுவாகி வந்திருக்கும் நீங்கள் மகாவிஷ்ணு என்பதையும் தங்களுடைய வஞ்சகச் செயலால் என் நாட்டு மக்கள் அறநெறி தவறி நடக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். இவைகள் அனைத்தும் எனது எதிரிகளான தேவர்களின் சூழ்ச்சி என்பதையும் நான் அறிவேன். உங்களுக்கு முன்பு இங்கு வந்து என்னிடம் ஆலோசனை கூறியவரை உருண்டி விநாயகர் என்பதையும் நான் அறிவேன். நான் அவரது அறிவுரையைக் கேட்பவன். ஆகையால் இதுவரை நான் எனது அறியாமையால் தேவர்களை காசி நகரத்தில் வசித்துவரக் கூடாது என்று நான் நிபந்தனை விதித்தேன். தேவர்களைப் பகைத்து எவராலுமே வாழமுடியாது. இதுவரை நான்

அவர்களைப் புறக்கணித்த பாவங்கள் எல்லாம் தீர்ந்து சிறந்த பேரின்பத்தை நான் அடைவதற்குண்டான மார்க்கத்தை தாங்கள்தான் கூறியருள வேண்டும்!" என்று கூறினான்.

உடனே மகாவிஷ்ணுவும் தனது சுய உருவத்தை மன்னனுக்குக் காட்டி "மன்னனே! இந்தக் காசித தலத்தை விசுவநாத மூர்த்தியின் வசம் ஒப்படைக்க வேண்டும் அப்படிச் செய்வதுதான் உனக்குப் புண்ணியங்களைத் தேடித்தரும்!" என்று கூறினார்.

உடனே ரிபுஞ்சயன் மிகவும் மகிழ்ச்சியுடன் காசி நகரத்தை விசுவநாதர் வசம் ஒப்படைத்தான். தனது அரசாட்சியை தனது மகன் வசம் ஒப்படைத்துவிட்டு சிவபூஜையிலே மனத்தை நிலை நிறுத்தி வந்தான. பிறகு அவன தன்னுடைய அரணமனைக் கருவூலத்திலிருந்து செல்வத்தைக் கொண்டு விசுவநாத மூர்த்திக்கும் விசாலாட்சி தேவிக்குமாக அற்புதமானதொரு கோயிலையும் கங்கை நதிக்கரையில் கட்டினான். அந்தத் திருக்கோயிலில் ஒரு சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்து சதாகாலமும் சிவபூஜை செய்து தன் வாழ்நாளைக் கழித்து வந்தான. காசி நகரத்தில் உருண்டி விநாயகருக்கும் சிறப்புக்குரிய வகையில் அவன் ஒரு கோயில் அமைத்தான்.

இவ்வாறு கொஞ்சகாலம் சென்ற பிறகு அவனுடைய பக்தியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவன் வழிபட்டு வந்த சிவலிங்கத்திலேயே அவனையும் ஐக்கியப்படுத்தி அவனுக்கு முக்தி நிலையை வழங்கியருளினார்.

# வல்லபை விநாயகர் அவதாரமும் திருமணமும்

ஒருசமயம் சத்தியலோகத்தில் பிரும்மதேவன் தேவர்களும் முனிவர்களும் புடைசூழ வீற்றிருந்தார். அப்போது அவருடைய புத்திரர்களில் மரீசி என்பவர் நான்முகனை நோக்கி "தந்தையே! படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களுக்கும் தலைவராய் ஞானமே வடிவமாகவுடையவராய் விளங்கும் பரம்பொருள் யார்?'' என்று கேட்டார்.

அதற்கு பிரும்மதேவன் "அத்தகைய பரம்பொருள் விநாயகர்தான்!" என்று கூறினார். உடனே மரீசி முனிவர் விநாயகரைக் குறித்து நெடுங்காலம் கடுந்தவமிருந்தார். அப்போது விநாயகர் அவர் முன் தோன்றி "அன்பனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்!" என்று கூறினார்.

உடனே மரீசி முனிவர் ''விக்னேஸ்வரா! வானத்து தேவர்களெல்லாம் எனக்கு ஏவல் புரிய, நான் எவ்வுலகமும் ஆளவேண்டும். பரமேஸ்வரனின் பத்தினியான பார்வதி தேவியே எனக்கு மகளாக பிறக்கவேண்டும். அவளை நான் தங்களுக்கே திருமணம் செய்து கொடுக்க வேண்டும்!" என்று வரம் கேட்டார்.

விநாயகரும் புன்னகையுடன் அவர் கேட்ட வரத்தை அளித்து மறைந்தார். பிறகு மரீசி சத்தியலோகத்திற்குத் திரும்பிவந்து பிரும்மதேவரிடத்தில், தான் விநாயகரிடம் பெற்ற வரங்களைப் பற்றிக் கூறினார். தனக்கு ஒரு பெரிய நகரத்தைச் சிருஷ்டித்துக் கொடுக்கும்படி கேட்டார். நான்முகனும் அவ்வாறே பீரயநகரம் என்ற ஒரு நகரத்தை சிருஷ்டித்துக் கொடுத்தார். அந் நகரத்து அரண்மனையில் நவரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து மரீசி ஆட்சி செலுத்தி வந்தார். அப்போது தேவவல்லி என்ற அழகிய பெண்ணை மரீசிக்கு பிரும்மதேவர் திருமணம் செய்து

வைத்தார். அவர்களுக்கு ஆயிரக்கணக்கான பிள்ளைகளும் பெண்களும் பிறந்தனர்.

இந் நிலையில் கைலாயத்தில் ஒரு நாள் பார்வதிதேவி சிவபெருமானிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டாள். "நாதா! இவ்வுலகில் அண்ட சராசரங்கள் அனைத்தும் எவ்வாறு இயங்குகின்றன? அதனைத் தாங்கள் தெரிவிக்க வேண்டும்!" என்று வேண்டினாள்.

"தேவி, நிமித்தம் - துணை - உபாதானம் என்ற மூன்றினாலேயே உலகங்கள் இயங்கி வருகின்றன. நிமித்தம் என்பது நான்; துணை என்பது நீ; நமது சக்தியாகும். உபாதானம் என்பது மகாமாயை. இம் மூன்றினுள் துணைக் காரணமாகிய சக்தி நீயே தான்!" என்றார்.

அதைக் கேட்ட ஈஸ்வரியின் மனத்தில் ஆர்வம் தோன்றியது. "சுவாமி! சக்தி என்பது நான் என்றால் தங்களது உடலும் உருவமும் நானேயாகிறேன். என் அசைவினால் தான் உலகத்திலுள்ள அனைத்தும் இயங்குகின்றன" என்றாள்.

சக்தியின் அகம்பாவமான பேச்சைக் கேட்டதும் சிவபெருமான் கோபம் கொண்டு "தேவி! என் சக்தியை நீ அறிந்திருந்தும் எனக்கு முன்னாலேயே உனது சக்தியை நீயே புகழ்ந்து பேசுகிறாய். நானின்றி எதுவுமேயில்லை என்பதை இப்போதே நான் நிரூபித்துக் காட்டுகிறேன்'" என்று கூறி சகல உலகங்களிமுள்ள சக்திகள் அனைத்தையும் தம்முள்ளே ஒடுக்கினார். உடனே சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச் சுடர்களும் இல்லாமற் போயின. இ னால் இரவும் பகலுமின்றி எத் தொழில்களுமே நடைபெறாமல் உலகம் எங்கும் இருள் சூழ்ந்தது. அதைக்கண்ட உமாதேவி தன் செயலுக்கு இறைவனிடம் மன்னிப்பு வேண்டி உலகங்களையெல்லாம் மீண்டும் உண்டாக்க வேண்டினாள்.

யாவுஞ் செயலற்று மீண்டும் படைக்கப்பெற்றவுடன் திருமால் முதலிய தேவர்கள் தமது கடமைகளிலிருந்து தவறியதற்காக தங்கள் குற்றங்களை மன்னிக்கும் படி சிவபெருமானிடம் வேண்டினர்.

"அன்பர்களே இந்தக் குற்றம் உமாதேவியின் அகம் பாவத்தால் விளைந்தது! எனவே பரிகாரம் எதுவும் இல்லை. நீங்கள் உங்கள் கடமைகளை நிறைவேற்ற லாம்!"

அப்போது உமாதேவி 'சுவாமி எனது அகம்பாவத்தை முன்னிட்டு தாங்கள் சகல உலகங்களையும் இருளில் ஒடுக்கினீர்கள். நான் செய்த பாவத்தைப் போக்கும் பரி காரத்தை உணர்த்த வேண்டும்!' என்று வேண்டி னாள்.

"தேவி, யமுனை நதிக்கரையில் மரீசி முனிவர் ஆசிர மம் உள்ளது. அந்த நதியில் நீ சங்கு வடிவம் கொண்டு இரு. மரீசி முனிவரின் பார்வை பட்டதும் சங்கு வடி வத்தை மாற்றிக் கொண்டு அழகான பெண் குழந்தையாக நீ உருமாறிவிடு அம் முனிவர் உன்னை எடுத்துச் சென்று தனது புதல்வியாக வளர்த்து வருவார். அப்போது நீ என்னை நினைத்து ஏகாட்சர மந்திரத்தை இடைவிடாமல் தியானித்துக் கொண்டிரு உனது பன்னிரண்டாவது வய தில் நான் அங்கு வந்து உன்னை மணப்பேன் இதுவே உன் பாவத்துக்கு பிராயச்சித்தமாகும்!" என்றார்.

உமாதேவியும் யமுனா நதியை அடைந்து அங்குள்ள தாமரை மலர் ஒன்றில் சங்கு வடிவம் பெற்றிருந்தார். ஏழாம் மாதம் மகநட்சத்திரத்தில் மரீசி முனிவரும் அவர் மனைவியும் யமுனை நதிக்கு நீராட வந்தனர். அப்போது அழகியதொரு தாமரை மலரின் மத்தியில் சங்கு ஒன்று இருப்பதைக் கண்டதும் அவர் அந்தச் சங்கை எடுக்க அந்த மலரின் அருகே சென்றார். அப்போது அந்தச் சங்கு

அழகான பெண் குழந்தையாக உருமாறியது. மரீசி முனிவர் அந்தக் குழந்தையை தம்மிரு கைகளாலும் வாரி யெடுத்து தம் மனைவியிடம் கொடுத்தார். தம்பதி இருவரும் அந்தக் குழந்தைக்கு 'வல்லபை' என்று பெய ரிட்டு தமது ஆசிரமத்துக்கு எடுத்துச் சென்று அன்புடன் வளர்த்து வந்தனர். அந்தக் குழந்தை வளர்ந்து ஐந்து வயதாகியது. மரீசி முனிவரை நோக்கி "தந்தையே நான் சிவபெருமானை குறித்து தவம் செய்ய விரும்புகிறேன். அதற்கு ஏற்ற ஒரு தவச்சாலையை எனக்கு அமைத்துத்தர வேண்டும்!" என்று கேட்டாள். மரீசி முனிவர் தன் மகளின் விருப்பப்படியே தவச்சாலை ஒன்றை அமைத்து அவ ளுக்குப் பணிவிடைகள் செய்ய சில தோழியர்களையும் நியமித்தார்.

வல்லபை தேவிக்குப் பன்னிரண்டு வயதாகியது. அப்போது அவள் மனவிருப்பத்தை நிறைவேற்றவும் மரீசி முனிவருக்குத் தாம் கொடுத்த வாக்கைப் பூர்த்தி செய்யும் விருப்பம் கொண்ட விநாயகர் பரமசிவனை புறப்படுமாறு வேண்டினார். சிவபெருமானும் அந்தண வேடம் தரித்து வல்லபையின் தவச்சாலைக்குச் சென்றார். வல்லபை அவரை வரவேற்று உபசரித்து "சுவாமி! என் சாலையைத் தாங்கள் நாடிவந்த காரணம் என்ன?" என்று கேட்டாள்.

அதற்கு அந்தணர் வடிவிலிருந்த சிவபெருமான் புன்னகை செய்து "பெண்கள் திலகமே! உன்னை திருமணம் செய்துகொள்ளும் ஆவலோடுதான் நான் இங்கு வந்திருக்கிறேன்'' என்றார்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட வல்லபை "சிவ சிவ" என்று கூறி தன்னிரு காதுகளையும் பொத்திக்கொண்டு

கோபத்துடன் அவரை நோக்கி "மூடனே சர்வேஸ்வர னையே கணவனாக அடைவதற்காக நான் இத்தனை காலமாக தவம் செய்து வருகிறேன். என் உள்ளத்தில் அவரைத் தவிர வேறு எவருக்கும் இடமில்லை. உடனே இங்கிருந்து போய்விடு!" என்றாள். அதற்கு அவர் "பெண்ணே! எத்தனைக் காலம் தவமிருந்தாலும் சர்வேஸ் வரனை உன் பதியாக நீ அடைய முடியாது. என்னை மணந்துகொள்ள சம்மதித்துவிடு" என்றார். வல்லபை மிகவும் கோபத்துடன் அவரை அங்கிருந்து வெளியேறும் படி கட்டளையிட்டாள்.

அந்தணரோ அமர்ந்த இடத்தைவிட்டு அசைய வில்லை. அதனால் வல்லபை தானே அங்கிருந்து வெளி யேற அடியெடுத்து வைத்தவுடன் அந்தணராக வந்த சிவ பெருமான் தமது சுய உருவத்துடன் கணேசமூர்த்தியின் வடிவில் மயில் வாகனத்தில் காட்சியளித்தார். அவரைக் கண்டதும் வல்லபை பேராச்சர்யம் அடைந்து அவரை வலம் வந்து வணங்கி "ஆண்டவனே! அறியாமையால் யான் செய்த தவறை மன்னித்தருள வேண்டும்" என்றாள்.

"வல்லபையே நீ விரும்பும் வரங்களைக் கேள். தருகிறோம்!'' என்றார் கணேசர்.

"சுவாமி தங்களுடைய வலது பாகத்தில் நான் அமர்ந்து எப்போதும் தங்களைப் பிரியாமலிருக்கும் வரத் தைத் தரவேண்டும்" என்று வல்லபை வேண்டினாள். இறைவனும் அவள் கோரிய வரத்தை அளித்தார்.

இந்தச் செய்தியை அறிந்த மரீசி முனிவர் தவச் சாலைக்கு வந்து கணேசரை வணங்கி தம் புதல்வியை

மணம் செய்து கொள்ளும்படி வேண்டினார். அவரும் இசைந்தார். உடனே திருமணக் காரியங்கள் விரைவாக நடந்தன.

தேவர்கள் அனைவருக்கும் திருமண அழைப்புகள் அனுப்பப்பட்டன. திருமணப் பந்தல்களும் திருமண மண்டபங்களும் வேகமாக உருவாக்கப்பட்டன. தேவாதி தேவர்களும் முனிவர்களும் புடைசூழ கணேசமூர்த்தி வல்லபையின் திருக்கரத்தைப் பற்றி விவாகம் செய்து கொண்டார். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். அச் சமயத்தில் மகாவிஷ்ணுவும் இலட்சுமியும் தமது புத்திரி களாகிய மோதை, பிரமோதை, சுமகை, சுந்தரி, மனோரமை, மங்கலை, கேவினி, காந்தை, சாருராசை, சுமத்திமை, நந்தினி, காமத்தை என்னும் பன்னிரு பெண் களையும் கணேசமூர்த்தியின் எதிரில் அழைத்துவந்து "சுவாமி! எங்கள் புதல்வியராகிய இந்தப் பன்னிரண்டு கன்னிகளையும் தாங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்!'' என்றனர். விநாயகரும் ஏற்றுக் கொண்டார்.

பின்னர் மரீசி முனிவர் முதலிய முனிவர்களுக்கு அவர் கள் கோரிய வரங்களையெல்லாம் விநாயகர் அளித்து விட்டு மணித்தீபத்திற்குச் சென்று அங்கு வல்லபேஸ்வரர் என்ற பெயருடன் விளங்கலானார்.

''பிள்ளையாரின் இந்த அவதாரக் கதைகளைப் படிப் பவர்களும் படிக்கக் கேட்பவர்களும் விநாயகரைப் பிள்ளை யாராக வழிபடுபவர்களும் எல்லாவிதமான நற்பேறுகளை யும் அடைந்து இறுதியில் பேரின்ப முக்தியை அடை வார்கள்.

இவ்வாறு சூதபுராணிகர் கூறியதும் நைமிசாரண்ய முனிவர்கள் அனைவரும் அவரை வணங்கி ''மகாத்மாவே!

நாங்கள் செய்த தவத்தின் பயனாக தாங்கள் இந்த வனத்துக்கு வந்து பதினெண் புராணங்களில் ஒன்றாகிய பிள்ளையார் புராணத்தை நாங்கள் எளிதாக உணரும் வகையில் எடுத்துரைத்தீர்கள். இதனால் மனிதப் பிறவியில் அடையவேண்டிய பயன்களையெல்லாம் நாங்கள் அடைந்தவர்களானோம்!" என்று போற்றினார்கள்.

ஓம் ஸ்ரீ மகா கணபதியே நமః

(நிறைவு பெற்றது)

ஆ. ந—— ராசா
மன்னார்குடி,

மணிமேகலைப் பிரசுரம்
சென்னை - 600017

Wrapper Printing
Om Vinayaga Printers Madras-33.